ஜநவிநோதினி

XIX

3418

(முதற் பாகம்)

சென்னை மேரி யரசி கலாசாலைத் தமிழ்ப் பண்டிதரும்
'நல்லாசிரியன்' பத்திராதிபரும் ஆகிய
கா. நமச்சிவாய முதலியார்
பதிப்பித்தது

ACL TDD
00157

திருவள்ளுவர் நூல் நிலையம்

சென்னை :
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
1922
விலை ரூபாய் ஒன்று

பொருள் அடக்கம் :

எண்		பக்கம்
1.	செல்வ நிலையாமை	1
2.	உலகத்திலுள்ள விருட்சங்களுக்குள் மஹா பெரிய விருட்சம்	12
3.	அபிப்பிராய பேதம்	13
4.	விடாமுயற்சி	19
5.	வாய்மை மனிதனுக்கு இயல்பான குணம் என்பதும், ஜனசமூக வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்பதும்	27
6.	விவேகத்தினால் ஆகாததில்லை	38
7.	கோபமும் அதனாலாகிய தீமைகளும்	44
8.	இந்தியாவில் காகிதம் செய்வது	51
9.	விவசாயம்	60
10.	மூளையினால் ஆகத்தக்க வேலையும் அதை நடத்தும் விதமும்	72
11.	உலுத்த குணம்	74
12.	கைத்தொழில்களும் கல்விபயின்ற இந்துக்களும்	78
13.	மூளையின் ஓர்வித விசித்திரம்	86
14.	காலமும் அதை அளக்கும் கருவிகளும்	89
15.	வணிகனும் அவன் பொருளும்	94
16.	சூரிய பிம்ப லக்ஷணம்	107
17.	தருமம் என்பது யாது ?	114
18.	சந்திர பிம்ப லக்ஷணம்	124
19.	கோழியும் அதன் முட்டையும்	132
20.	காலானுகூலத்தில்தான் காரிய சித்தியாகும்	138
2 .	பூர்வீக இந்துக்களும் பெண்கல்வியும்	146
22	நிலக்காற்று கடற்காற்று உண்டாவது எப்படி	160
23.	‘கொடிது கொடிது வறுமை கொடிது’	164
24.	இந்துக்களின் சங்கீத சாஸ்திரம்	170
25.	இந்து தேசத்துப் பூர்வீக அரசர்களும் அவர்களுடைய நீதியும்	184
26.	லிபியின் பூர்வ உற்பவமும் அதன் அபிவிருத்தியும்	202

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

ஜநவிநோதினி

செல்வ நிலையாமை

உலகத்திலுள்ள எவ்வகைப்பட்ட அருமையான பொருள்களையும் நாம் எளிதில் அடைவதற்குச் சாதகமாயிருப்பது செல்வமேயாம். பெறுதற்கரிய மானிடப் பிறவியை எய்தப்பெற்ற ஒவ்வொருவனும் அடையற்பாலதாகிய தருமார்த்த காம மோட்சமென்னும் சதுர்வித புருஷார்த்தங்களுள் முன்னைய மூன்றாகிய தருமம் (அறம்), அர்த்தம் (பொருள்), காமம் (இன்பம்) என்பவற்றுள் நடுவணதாகிய பொருள் ஒன்றைமாத்திரம் ஒருவன் அடையப் பெறுவானேயாயின் அவனை ஏனைய அறமும் இன்பமும் தாமே வந்தெய்தும். இக்கருத்தை யமைத்தே,

> ‘வடுவிலா வையத்து மன்னிய மூன்றின்
> நடுவண தெய்த இருதலையும் எய்தும்.’

என்று அறிஞர் கூறியுளார். உலகத்தில் எவ்வகைப்பட்ட அறத்தைப் புரிவதற்கும் எத்தகுதிய இன்பத்தை அனுபவிப்பதற்கும் இன்றியமையாததாகிய கருவியாயுள்ளது செல்வமென்பதை ஒருவரும் மறுக்கார். அறம் புரியாவிடத்து வீடு அடைதல் துர்லபமாதலின், அவ்வறத்துக்குச் சாதகமாய்நிற்கும் பொருள் வீட்டுக்கும் சாதகமாயுள்ளதென்பது சொல்லாமே அமையும். ஜகதீசனது திருவடிச் செல்வமொன்று நீங்கலாக, உலகத்திலுள்ள அரும் பொருள்கள் யாவும் இமைப்பொழு-

தில் மாய்ந்துவிடத் தக்கன என்று மேலோர் கூறிய சித்தாந்தத்துக்கு இலக்கியமாய் நிற்பவை யாக்கை, இளமை, செல்வம் முதலியன. உலகத்தில் பெறுதற்கு அரியனவாய் நிலையாமையிற் சிறந்தனவாயுள்ள எல்லாப் பொருள்களிலும் யாக்கை, இளமை, செல்வம் என்னும் இம்மூன்றும் சிறந்தன. அவற்றுள் நிலையாமையில் மிகச்சிறந்தது செல்வமேயாம். புருட ஆயுள் நூறுவயதென்றும் இளமைப்பருவம் முப்பது வயதென்றும் அறிஞர் யாக்கைக்கும் இளமைக்கும் ஓர் காலவரையறை நிர்ணயித்திருக்கிறார்கள். அங்ஙனம் செல்வத்துக்கு ஒரு காலவரையறை எவரேனும் ஏற்படுத்தியிருப்பதை நாம் யாண்டுங்கண்டதில்லை. ஏனைய எல்லாப் பதார்த்தங்களைவிட, செல்வத்தினிடத்து நமக்கு அதிக அவா இருப்பதற்கு இரண்டு காரணங்களுள: முதலாவது—மேலே எடுத்துக்காட்டியபடி ஏனைய எவ்வகைப் பட்ட பதார்த்தங்களையும் எய்துவதற்குச் செல்வம் பெருங்கருவியாயிருக்கிறபடியினால் அதனிடத்து ஆன்மாக்களுக்கு அதிக விருப்பமுண்டாகின்றது ; இரண்டாவது — கிடைத்த செல்வம் நீடித்து நம்மிடத்து நிற்குமாயின் அதனிடத்து வாஞ்சை குறையும் ; அது வெகு சீக்கிரத்தில் உடையானை விட்டகலும் இயல்பினையுடையதாதலின் அதனிடத்துண்டாகும் அவா பெரிதாயிருக்கின்றது. எந்தப் பொருளானது அதிசீக்கிரத்தில் அகலுந் தன்மையதோ அது மிக்க அவாவை நமக்கு விளைக்கின்றது என்பது அனுபவசித்தம். மனோதத்துவ சாஸ்திரமும் இது விஷயத்தைப்பற்றி சாட்சி பகரத்தக்கது. மாதர் இன்பத்தை மகமேருவைப்போல் நம்மை நினைக்கச் செய்வதும் அதை

அடிக்கடி அவாவும்படி நம்மைத் தூண்டுவதும் எது? அவ்வின்பத்தின் நிலையாமையே யாம். அது க்ஷண நேரத்தில் லயப்படுகின்றபடியினாற்றான் அதை மீண்டும் அடையவேண்டு மென்னும் பேரவா ஆன்மாக்களிடத்தில் உண்டாகின்றது. இதுபோலவே செல்வத்தின் அநித்தியமே அதனை நாம் அவாவுதற்குக் காரணமா யிருக்கின்றது. செல்வம், தரித்திரம் என்னும் பதங்கள் வடமொழிகளே யாயினும் சில தமிழ்ப்புலவர்கள் அவற்றைத் தமிழ்ப் பதங்கள்போல் பிரயோகித்து அவற்றிற்கு வேடிக்கையார்த்தமாய் ஒரு வியப்பான உரை கூறுகின்றனர். செல்வம் தன்னை உடையானைக் கண்டு எப்போதும் செல் (வோம்) வம் (யாம் உன்னை விட்டுப் போவோம்)என்றும்,தரித்திரம் தன்னை உடையானை நோக்கி எப்போதும் தரித்தி(ரோம்) ரம் (யாம் உன்னிடத்தில் எப்போதும் தரித்து இருக்கமாட்டோம்) என்றும் கூறுவதாக அப்புலவர் உரைப்பர். இந்த உரை வேடிக்கையார்த்தம் கூறப்பட்டதேனும் அதில் யதார்த்தம் மாத்திரம் இனிது விளங்குகின்றது.

இறுதியில் காரியமாயுள்ள இன்பத்தினிடத்து நாம் கொள்ளற்பாலதாகிய ஆசையானது, அந்த இன்பத்தை அடைவதற்குக் கேவலம் கருவியாகமாத்திரம் இருக்கும் செல்வத்தினிடத்தில் பொருந்தியிருப்பது மனிதனுடைய மனோதத்துவ லட்சணமா யிருக்கிறது. காரியத்தை மறந்து கருவியினிடத்தே பேரவாக் கொண்டிருப்பது மனதுக்கு அடுத்த ஒருவித இயற்கை என்பது மனோதத்துவ சாஸ்திரிகளின் கருத்து. ஆகையினாலேதான் அநேகர் அறத்தைப் புரிந்து, இன்பத்தை நுகர்ந்து, கடைசியில் வீட்டை அடைவ-

தற்கு வேண்டிய காரியங்களைச் செய்யாமல் அவற்றிற்குக் கருவியாயுள்ள பொருளினிடத்தே லயப்பட்டு வாணாளை வீணாளாக்கி மரிக்கின்றனர். செல்வம் வந்த காலத்துக் காலதாமத மின்றி, நமக்கும் பிறர்க்கும் பெரும் பயனைத் தரத்தக்க கருமங்களை வெகுசீக்கிரத்தில் நாம் செய்து முடிக்கவேண்டியதென்கிற எண்ணத்தைக்கொண்டே ஜகதீசன் அதற்கு அவ்வளவு நிலையாமையைத் தந்திருக்கின்றார். இதனை உணர மதியிலாச் சிலர்,

'உடாஅது முண்ணாதுந் தம்முடம்பு செற்றுங்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கொடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர் வான்றோய் மலைநாட
உய்த்தீட்டுந் தேனீக் கரி.'

என்னும் அமுதவாக்குக்கு உதாரணமாகின்றார்கள். செல்வத்தினிடத்து மனிதர்களுக்கு உண்டாயிருக்கும் பேரவாவைக்குறித்து ஒரு சிறுகதை சொல்லப்படுகின்றது. அதாவது:

ஒரு ஊரில் தனபாலகன் என்றொரு வணிகன் இருந்தான். அவன் மேலும்மேலும் பொருளை ஈட்டுதலிலேயே அவாக்கொண்டிருந்தானேயன்றி அதில் எவ்வளவையும் பிறர்க்கு வழங்குவதுமில்லை, தானும் அனுபவிப்பதுமில்லை. நன்றியில் செல்வம் என்று மூதறிஞரால் இகழ்ந்துரைக்கப்பட்ட தன்மையை நச்சுமரம் பழுத்தது போன்ற அவனுடைய செல்வம் பெற்றிருந்தது. அறிவில்லாதவன் தன் பொருளை என்னது என்னது என்று சொல்லிக்கொண்டிருக்கின்றான், அவனுடையபொருளை யானும் என்னது என்னது என்று சொல்லிக்கொண்டிருப்பேன்; அப்பொருள் என்ன-

தன்று, தன்னது தானென்று அவன் கூறுதற்கு நியாயமில்லை; ஏனெனில், அப்பொருள் அவனதா யிருக்குமாயின் அவன் அதனைப் பிறருக்கு எடுத்துக்கொடுப்பான், தான் அனுபவிப்பான், அங்ஙனம் அவன் செய்வதில்லை, யானும் அவனிடத்துள்ள அப்பொருளைப் பிறருக்கு வழங்குவதுமில்லை, அனுபவிப்பதுமில்லை ; ஆதலின், அப்பொருளை என்னதென்று யானும் சொல்லிக்கொண்டு திரியலாமே என்னும் அருமைக் கருத்தமைந்த,

> 'எனதென தென்றிருக்கும் ஏழை பொருளை
> எனதென தென்றிருப்பேன் யானுந் - தனதாயின்
> தானும் அதனை வழங்கான் பயன்றுவ்வான்
> யானும் அதனை யது.'

என்னும் அற்புதகவி அவ்வணிகன் பொருட்டுத்தானோ செய்யப்பட்டது! மேலும் மேலும் செல்வம் தனக்குச் சேரவேண்டுமென்று ஏக்கங்கொண்டு அவன் செல்வ நாயகியாகிய இலட்சுமியை அல்லும் பகலும் பிரார்த்தித்துவந்தான். அப்பெருமாட்டி அவனுடைய நல்வினைக்கீடாக அவனுக்குச் செல்வத்தை விருத்திசெய்துகொண்டே வந்தனள். இப்படியிருக்கையில் தனபாலகன் தன்னுடைய செல்வத்தையெல்லாம் ஒருநாள் பார்த்து, 'ஐயோ, இது ஒரு காலத்து என்னைவிட்டகலுமோ!' என்று துக்கித்து அன்று இலட்சுமிப்பிராட்டியை நோக்கி அதிவினயத்துடன் பிரார்த்திக்கவே, அவள் பிரசன்னமாகி உனக்கென்னவரம் வேண்டுமென்று வணிகனை வினவினள். 'அம்மே, ஒன்று வேண்டும், இந்தச் செல்வம் என்னிடத்திருப்பதற்கு என்னிடத்து நீ தங்கி யிருப்பதே காரணமாகும், நீ என்னைவிட்டு அகலுங் காலத்து இச்செல்வமும் என்னைவிட்டகலும்,

நீ என்னைவிட்டு வேறொருவனிடத்தில் போவதாயிருந்தால் இன்னதினத்தில் உன்னைவிட்டகலுவேன் என்று என்னிடத்து முன்பாகச் சொல்லவேண்டியதோடு, போகும் தருணத்திலும், "அப்பா, போகின்றேன்" என்று என்னை நேரில் கண்டு சொல்லிவிட்டுச் செலவு பெற்றுக் கொண்டும் போகவேண்டியது' என்று குறையிரந்தான். தனபாலகன் நெடுங்காலமாய்த் தன்னிடத்தில் அதிக பக்திபாராட்டி வந்தானாதலின் அம்மையாரும் அவ்வேண்டுகோளின்படி, 'அப்படியே ஆகட்டும்' என்று உறுதிமொழி கூறி மறைந்தனள். சிலகாலஞ் சென்ற பின்பு வணிகன் அடியில் வருமாறு தனக்குள் யோசிக்கலாயினான். 'திருமகள் என்னைவிட்டு அகலும்போது என்னை நேரில் கண்டு, போகின்றேன் என்று சொல்லி, என்னிடத்தில் விடைபெற்றுக்கொண்டு ஏகுவதாய் உறுதிமொழி கூறினள். அத்தேவியார் சொல்தவறாள், நான் உயிரோடிருந்தாலல்லவா என்னை நேரிற்காண்பாள், நான் இறந்து போவேனேயாகில் தன் வாக்குத்தத்தப்படி என்னைப்பார்க்க அவளுக்கு இசையாது, என்னிடத்தில் சொல்லாமலே அவள் என் வீட்டை விட்டகலக் கூடாதல்லவா ? ஆகவே இச்செல்வம் என் இல்லத்தை விட்டகலுவதற்கிடமிராது' என்று குயுக்திபண்ணிக்கொண்டு ஒரு பாழ்ங்கிணற்றில் வீழ்ந்திறந்தான்.

நிலையிலாச் செல்வத்தினிடத்து அப்புல்லறிவாளனுக்கிருந்த பேரவா அவனுடைய அகாலமரணத்துக்கு ஏதுவாயிருந்தது. 'செல்வமொன் றுண்டாக வைக்கற்பாற் றன்று' என்று பெரியோர் கூறிய பொய்யாமொழியை உணராது அவன் வீணாக மரித்தனனே; பரிதாபம்! பரிதாபம்!

ஸோலனும் கிரீஸஸும்.

செல்வ நிலையாமையைக்குறித்து கிரீஸ்தேச சரித்திரத்திலிருந்து அடியிற்கண்ட விஷயம் எழுதப்படுகின்றது :

கிரிஸ்து பிறக்கச் சுமார் 550 ஆண்டுகளுக்கு முன்னர் கிரீஸ் தேசத்தைச் சேர்ந்த லிடியா என்னும் பிரதேசத்தை அரசாண்டுவந்த கிரீஸஸ் என்னும் மன்னன் பெருத்த சம்பத்துடையவனா யிருந்தான். திரண்ட செல்வமுடையவனை இந்துக்கள் குபேரனென்று வழங்கிவருவதுபோல் ஐரோப்பியர்கள் நாளைக்கும் கிரீஸஸ் என்று வழங்கிவருகிறார்கள். புராதன கிரீஸ்தேசத்திய மஹான்களிலொருவராகியும் சட்ட நிருபணகர்த்தராகியுமிருந்த ஸோலன் என்பவர் கிரீஸஸ் கொலுவீற்றிருந்த ஸார்டியா என்னும் பட்டணத்துக்கு அம்மன்னனைக் காணப்போயிருந்தார். அந்த மஹானுடைய குணாதிசயங்களுக்கும் பாண்டித்தியத்துக்கும் ஏற்றபடி அரசன் அவரை நன்குமதித்து முகமன்கூறி அவருக்குத் தகுந்த உபசாரங்களைச் செய்தான். அரசனுடைய செல்வப்பெருக்கத்தையும், மாடமாளிகை கூடகோபுரங்களின் எழில் நலத்தையும், நவரத்னங்கள் இழைத்த சிங்காசனத்தையும், மேனகை திலோத்தமை ஊர்வசி முதலிய அரம்பையர்களையொத்த ரூபலாவண்ணியம் பெற்ற வனிதையர்களின் பரத நாட்டியத்தையும் ஸோலன் பொருளென மதியாமலும் வியக்காமலும் மேல்நோக்காயிருந்தார். இதைக்கண்ட அரசன் அதிசயித்துத் தன்னுடைய மாளிகையிலிருந்த அளவிறந்த நவரத்னத்திரள்களையும், ஆதவன் ஒளியை மழுங்கச்செய்யும் அருமையான பீதாம்பர உடைகள் முதலியவற்றை-

யும், ரத்னங்களிழைத்த ஆபரணாதிகளையும், வாகனாதிகளையும், சிற்பவேலைத்திறங்களையும் மற்றுமுள்ள விசித்திரங்களையும் அந்த மஹானுக்கு ஒவ்வொன்றாகக் காட்டுவித்தான். பிறகு அரசன் ஸோலனைப் பார்த்து, 'ஐயா, என்னிலும் அதிக சவுக்கியவான் எவனாவது உலகத்திலுண்டா?' என்றுவினவ, அதற்கு அவர், 'ஆதென்ஸ் என்னும் நகரத்தில் டெல்லஸ் என்னும் ஒரு சத்புருஷனுண்டு, அவன் மஹாதரித்திரனாயிருக்கினும் தேசாபிமானம் பூரணமாகப்பெற்றுத், தன்னால் இயன்றவரையில் மனமொழி மெய்களினால் தன் தேசத்தவர்களின் க்ஷேமத்துக்கான பற்பல அருமையான கருமங்களைப்புரிந்து, உலகினர், "இவன் தந்தை என்னோற்றான் கொல்" என்று கூறி வியக்கத்தக்க சத்குணங்கள் வாய்ந்த புத்திரர்களையும் பவுத்திரர்களையும் கண்ணாரக்கண்டு, இறுதியில் தன்னுடைய தேசத்தின் பாதுகாப்பின் காரணமாக அமர்க்களத்தில் வலசை வாங்காமல் இறந்தான். அவனைவிட மனச் சந்துஷ்டியையும் புகழுடம்பையும் இன்ப நுகர்ச்சியையும் அடைந்தவர்யாவர்!' என்று ஸோலன் விடைபகர்ந்தார். இதைக்கேட்ட அரசன் தன்னை அந்த மஹான் சவுக்கியவான்களில் டெல்லஸ் என்பவனுக்குப் பின் இரண்டாவதாகவேனும் மதிப்பாராக்கும் என்று நினைத்து, 'ஐயா, என்னிலும் அதிக சவுக்கியமுடையவன் இன்னும் எவனாவது உலகத்திலுண்டா?' என்று வினவ, அதற்கு அவர், 'ஆர்கஸ் என்னும் பிரதேசத்தில் இரண்டு உத்தமச் சிறுவர்கள் உளர்; அவர்கள் ஒரு தாய்வயிற்றுப் புத்திரர்களாயிருந்து ஒருவரை ஒருவர் சகோதரவாஞ்சையோடு நேசித்து, "உடன்பிறந்தார்

சுற்றத்தா ரென்றிருக்கவேண்டா.” என்னும் மூதுரையின் கருத்தைப் பொய்யாக்கினவர்கள்; தங்களுடைய தாயினிடத்து அதிக பரிவு பாராட்டினவர்கள்; அவர்களுடைய தாயார் ஜஷ்டோ என்னும் தேவதேவி வீற்றிருக்கும் ஆலயத்தில்அர்ச்சகத்தொழில் பூண்டவளானபடியால், ஒருநாள் ஆலயத்துக்கு அவள் அதி விரைவாய்ப் போகவேண்டியதாயிருந்தபோது, அவள் வழக்கமாய் ஏறிச் செல்வதற்குரிய வண்டிக்குப் பூட்டப்படும் எருதுகள் சித்தமாயிராதபடியினால் அச்சகடத்தை அச்சிறுவர்கள் இழுத்துக்கொண்டுபோய்த் தாயாரை ஆலயத்தில் விட்டார்கள்; இவ்வற்புதமான செய்கையைக் கண்டு மனமகிழ்ந்த தாயார் அம்மையாரை நோக்கி, ‘என் அருமைப் புதல்வர்களுக்கு உயர்ந்த பதவிதந்து அவர்களை ஆட்கொள்ளவேண்டும்’ என்று குறையிரக்க, அம்மையார் கருணைகூர்ந்து அவ்விருவரையும் மரணவேதனையிலிருந்து தப்புவித்துத் தம் அடிச்செல்வத்தைத் தந்தனள் ; ஆகையால், அச்சிறுவர்கள் மிக்க சவுக்கியவான்க ளென்பதற்கு ஐயம் யாது ?’ என்று விடைபகர்ந்தார் அதற்கு அரசன் மனவருத்தத்துடன், ‘ஐயா, யான் சவுக்கியவானல்லனோ?’ என்று கேட்டான். ‘என்னுடைய அளவிறந்த சம்பத்தையெல்லாங் கண்ணுரக்கண்ட தேவரீர் என்னை ஏன் சவுக்கியவானென்று சொல்லவில்லை?’ என்று வினவினன். அதற்கு அந்த மஹானுபாவர் அடியில் வரும் கருத்தமைதியை உபந்நியசித்தனர்:

‘இவ்வுலக இன்பமும் ஒரு இன்பமாகுமா? நமது தேகமே அநித்தியமானால் அதைக்கொண்டு நாம் இவ் வுலகத்தில் அடையத்தக்க இன்பங்களை

நித்தியமாகச் சொல்வது சரியா?

" மணமகனே பிணமகனாய்
மணப்பறையே பிணப்பறையாய்
அணியிழையார் வாழ்த்தொலிபோய்
அழுகையொலி யாய்க்கழியக்
கணமதனிற் பிறந்திறுமிக்
காயத்தின் வரும்பயனை
உணர்வுடையார் பெறுவர் உணர்
வொன்றுமிலார்க் கொன்றுமிலை."

மணமகனாயிருந்தவன் மணச்சடங்கு முடிவதற்கு முன்னரே உயிர் நீங்கிய பிணமகனாகவே, மணத்துக்காகவந்த வாத்தியங்கள் பிணத்துக்காக ஒலிக்கப்படும் வாத்தியங்களானதையும், மங்களவாழ்த்து செய்து கொண்டிருந்த ஸ்திரீகள் முறையோ முறையோ என்று அலறியழுவதையும் யாம் பிரத்தியட்சமாய்க்கண்டிருக்கின்றோம்; ஒரு நொடியில் தோன்றி அழியும் இந்தத் தேகத்தினால் அடையத்தக்க பிரயோஜனத்தை அறிஞர் அடைவார்கள்; உணர்விலிகள் அதனைச் சதமென்று எண்ணி, நமனார் வரும்போது மதிமோசம் போவார்கள் என்று மேலோர்கூறியதை நீ ஞாபகத்தில் வைப்பாயாக, இப்போதிருக்கும் வாழ்வும் செல்வமும் அரை நொடியில் என்னாமோ? ஆதலின் எவனொருவன் மரணமடைகிறவரையில் ஒருபடித்தாய்ச் செல்வம் பெற்று மனச்சந்துஷ்டியடைகிறானோ அவனைத்தான் சவுக்கியவானென்று கூறுவது சரி; அன்றியும் ஒருவனுடைய இன்பத்துக்குச் செல்வமொன்றே காரணமாகாது, அது அவனுடைய மன அமைதி முதலிய இன்பத்துக்குச் சில விஷயங்களில் பெருத்த இடையூறாயிருப்பதைக்

கண்கூடாகக் காண்கிறோம்; கிடைத்தமட்டில் திருப்தியடைந்து மேலானகருமங்களைப் புரிந்துவந்து கடைசிமட்டும் மனக்கவலை யற்றிருப்பவனைத்தான் சவுக்கியவானென்று கூறவேண்டும்; ஆதலால் உன்னைச் சவுக்கியவானென்று வீணாய் மதித்துக்கொள்ளாதிருப்பாயாக.'

இந்த உபந்நியாசத்தைக் கேட்டபோது அரசன் ஒருவாறு அருவருப்பெய்தி ஸோலனுக்கு விடைதந்து அனுப்பிவிட்டான்.

ஸோலன் இவ்வண்ணமாகக்கூறிச்சென்ற அற்புத வசனங்களின் உண்மையினைச் சில நாளையில் கிரீஸஸ் அனுபவப் பிரசித்தமாகக் கண்டறிந்தான். பெர்ஷியா தேசத்து ராஜாதிபதியாகிய ஸைரஸ் என்பவன் படையெடுத்துவந்து கிரீஸஸ் என்பவனை வென்று அவனுடைய இராஜ்ஜியத்தைக் கைப்பற்றிக்கொண்டதுமன்றி, அவனையும் கொல்லத்துணிந்தான். அபஜயமடைந்த மன்னனை பெருந்தீமூட்டி உயிரோடு அதில் வீழ்த்த எண்ணி ஸைரஸ்என்னும் ஜயவீரன் அவனைக்கொண்டுவந்து நிறுத்துகையில், அத் தௌர்ப்பாக்கியனான மன்னன், ஸோலன் என்னும் மஹான் தனக்குச் செல்வ நிலையாமையைப்பற்றிச் செய்த உபந்நியாசம் ஞாபகத்துக்குவர, 'ஓ ஸோலனே, ஸோலனே, ஸோலனே,' என்று கண்ணீருங் கம்பலையுமாய்க் கூவிக் கதறியழுதான். இதைக் கேட்டமாத்திரத்தில் அவன் அவ்வண்ணம் ஸோலனுடைய பெயரை நினைத்துக் கூவியதற்குக் காரணம் யாதென்று ஸைரஸ் வினவ, ஆதியோடந்தமாக நிகழ்ந்த விருத்தாந்தங்களைத் தீயில் வீழ்ந்திறக்கநின்ற கிரீஸஸ், மனமுருகுமாறுசொல்லி முடித்தவுடனே, ஸைரஸ் என்பவனுக்கு ஞானோதயமாகி,

நிலையிலாத இவ்வுலகியல்பை உணர்ந்து, கிரீஸஸ் என்பவனுக்கு யாதொரு தீங்கும் புரியாது அவனை உபசரித்து ஒழுகிவந்தான்.

பெறுதற்கரியதாய் யாவற்றிற்கும் கருவியதாயுள்ள செல்வத்துக்கு நிலையாமையை ஜகதீசன் தந்தை யோசிக்கையில், செல்வம் பெற்றக்கால் பின்னாவதென்று பிடித்திராமல் அதனாலாய பரோபகாரம் முதலிய புருஷார்த்தங்களை அதிவிரைவில் ஆன்மாக்கள் செய்து ஈடேற வேண்டியதென்பதே இணையில்லாத ஞான பூரணனது கருத்தென்பது தெள்ளிதிற் புலப்படுகின்றது. ஆகையால்

‘அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்.’

என்னும் அற்புத வசனத்தைச் செல்வர்கள் ஞாபகத்தில் வைப்பாராக.

---

2. உலகத்திலுள்ள விருட்சங்களுக்குள் மஹா பெரிய விருட்சம்

அமெரிக்கா கண்டத்தில் காலிபோர்னியா என்னும் பிரதேசத்தில் சில ஆண்டுகளுக்கு முன்னர் பிரமாண்டமான விருட்சமொன்று கண்டுபிடிக்கப்பட்டது. அது கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில் அதன் மேற்பாகம் ஒடிந்துபோயிருந்தும் அவ்விருட்சம் 240 அடி உயரமிருந்தது. முறிந்திருந்த பாகம் சுற்றளவில்? 40 அடியும் குறுக்களவில் 12 அடியும் இருந்தது. அவ் விருட்சத்தின் அடிப்புறத்தில் சுற்றளவு 111 அடியும்

குறுக்களவு 37 அடியுமிருந்தது. அதற்கு இரண்டு கிளைகளிருந்தன; அவை சுற்றளவில் முறையே 30 அடியும் 37 அடியும் இருந்தன. அந்த விருட்சத்தின் வயது 4,000 வருஷத்துக்குக் குறைவு படாதென்று விருட்ச லட்சண சாஸ்திரிகளால் கணக்கிடப்பட்டது. முறிந்துபோன மேற்பாகம் அந்தப்படியே இருந்திருக்குமாயின் விருட்சத்தின் உயரம் 400 அல்லது 450 அடிக்குக் குறையாம லிருந்திருக்குமென்று யூகிக்கலாயிற்று. சில பிரபுக்கள் இப்போதிருக்கிற அடித்தண்டின் மேல்முனையைக் குறுக்காய் அறுத்து உள்ளிருந்ததைக் குடைந்தெடுத்துவிட்டு நியூயார்க் என்னும்பட்டணத்துக்குக் கொண்டுபோய் அதை ஒரு சபாமண்டபமாக உபயோகித்து வருகிறார்கள். அதில் அநேக தட்டுமுட்டு சாமான்களும் நாற்காலி மேஜை முதலிய வஸ்துக்களும் அமைக்கப்பட்டு இருக்கின்றன. ஏக காலத்தில் 150 பெயருக்குக் குறையாமல் வசதியாய்க் கூட்டங் கூடுவதற்கு அது யோக்கியதை யுள்ளதாயிருந்து வருகிறது. பரமகருணா நிதியின் சிருஷ்டியில் என்னென்ன விசித்திரங்க ளிருக்கின்றன!

---

3. அபிப்பிராய பேதம்

ஏனைய ஜீவராசிகளைவிட மனிதன் சிறந்தவனானது அவனுடைய பகுத்தறிவினால் தான். விதிவிலக்குகளை உணரச்செய்யும் அறிவுக்கே பகுத்தறிவு என்றுபெயர். மனிதன் நீங்கலாக ஏனைய ஜீவராசிகளுக்குள்ளே அந்தந்தப் பிராணிகள் தத்தம் இனத்தின் பொதுலட்சண-

மாயிருக்கும் இயற்கையறிவுக் கேற்றபடி கருமங்களைச் செய்து வருகின்றன. மனிதனோ தன்னுடைய பகுத்தறிவுக்கேற்றபடி காரியங்களைச் செய்து வருகிறான். அவரவர்களின் பகுத்தறிவின் இயக்கத்துக் கேற்றவாறு அபிப்பிராயங்களும் அமைகின்றன. பகுத்தறிவின் இயக்கத்தை அதிகமாய் அடையப்பெறாதவர்கள் பெரும்பாலும் நாகரிகமற்ற மிலேச்சர்கள். அவர்களின் செய்கைகளெல்லாம் வெகுவாய் விலங்கு புள் இவற்றைப்போல் தாங்கள் சேர்ந்திருக்கும் இனத்தின் செய்கைகளா யிருக்கும். மனிதனுடைய பகுத்தறிவின் இயக்கம் அவன் சார்ந்திருக்கும் இனத்துக்கேற்றபடியே யிருக்கிறதென்றும், அவனுக்கு இயற்கையில் பகுத்தறிவென்பது கிடையாதென்றும் சில மனோதத்துவ லட்சண சாஸ்திரிகள் வாதிக்கிறார்கள். அவர்கள் அங்ஙனம் கூறுவது பொருந்தாது. ஆயினும், அவர்கள் உரைப்பது முற்றும் அபத்தமென்று கூறுவதற்கும் இடமில்லை. மனிதனுடைய இயற்கையறிவு வெகுவாய் இனத்துக்கேற்றபடி திருந்துவதாயிருக்கிற தென்பது வாஸ்தவந்தான். இது காரணமாகத்தான், சீர்பட வேண்டிய ஒவ்வொருவனும் சாதுசங்கத்தை மேவ வேண்டுமென்றும், நல்லாரோடு இணங்கவேண்டுமென்றும், தீயாரைவிட்டு அகலவேண்டுமென்றும் ஆன்றோர் கூறியுளார். பகுத்தறிவு பழக்கத்துக்கேற்றபடி திருந்துகிற காரணத்தினாலேயே பகுத்தறிவென்னும் ஒரு பொருள் இயற்கையில் மனிதனிடத்து இல்லையென்று சாதிப்பது வாதத்துக்கு நில்லாது. ஏனெனில், ‘இணக்கமறிந்திணங்கு’ என்று கூறிய நற்போத வசனத்தின்படி, இன்னதை நல்லிணக்கமென்றும் சங்கமென்று

இன்னதை அஃதன்றென்றும் பிரதமத்தில் அறிந்து கொள்வதற்குப் பகுத்தறிவு அத்தியாவசியமாக ஒவ்வொருவனுக்கும் வேண்டியதாயிற்றே. பகுத்தறிவு முற்றுமேயில்லை, சார்பினாற்றான் பகுத்தறிவு உண்டாகின்றதென்று வாதிப்பார் ஆதியில் மனிதனுக்கு பகுத்தறிவு எப்படி உண்டாயிற்றோ அதைவிளக்கிக் காட்டுவாராக. ஆதியில் மனிதன் உற்பவமானபோது தான் சேர்ந்தொழுகுவதற்கு ஒருவருங் கிடையாத காலத்தில் அவனுக்குப் பகுத்தறிவு எங்ஙனம் உண்டாயிற்று ? அன்றியும் எல்லாஜீவராசிகளிலும் மனிதன் தான் உலகத்தில் செய்யும் சகல கருமங்களுக்கும் கர்த்தருடைய சந்நிதானத்தில் உத்தரவாதஞ் செய்ய வேண்டியவனாயிருக்கிறானென்றும், அவன் இவ்வுலகத்தில் புரியும் நற்காரியங்களுக்காக ஆண்டவனிடத்திலிருந்து ஒருவித பரிசு பெறுகிறானென்றும், தீக்காரியங்களுக்காக ஒருவித தெண்டனை அடைகிறானென்றும் ஒவ்வொரு மதவாதியும் ஒப்புக்கொள்ளுவான். ஆகவே இயற்கையில் விதிவிலக்குகளைப்பகுத்தறியும் சக்தியைக் கர்த்தர் அவனுக்கு அளித்திராவிட்டால் அவன் புரியும் காரியங்களைக் குறித்து இன்னது சரி, இன்னது சரியன்று என்று தீர்மானஞ்செய்வது அவருக்கு நியாயமல்லவே; அது தருமமாகாதே. தெய்வ நம்பிக்கையில்லாதவர்களும் பகுத்தறிவு மனிதனுக்கு இயற்கையில் கிடையாதென்று வாதிக்கிறவர்களுமாகிய நாஸ்திகசோதரர்களும் பொய் களவு முதலிய தீயகாரியங்களைச் செய்பவர்களைத் தெண்டிப்பார்களே. அவர்கள் என் செய்வார்கள் ? தாங்கள் சார்ந்த இனத்தால் அவர்கள் அந்தப்படி தீய காரியங்களை இழைத்தார்கள் என்று

அவர்களை மேற்படி நாஸ்திக சோதரர்கள் சும்மா விட்டுவிடுவார்களோ? மனிதன் செய்யும் சகல காரியங்களும் அவன் சேர்ந்த இனத்துக்கு ஏற்றபடியே யிருக்கின்றனவென்று சாதிப்போமாகில் நல்லவனென்று ஒருவனைப் பூஷிப்பதும் தீயவனென்று ஒருவனைத் தூஷிப்பதுங் கிடையாதே. அது நிற்க.

மேலே பகுத்தறிவென்று கூறிவந்த மனோதத்துவ சுபாவ உணர்ச்சி, நாகரிகம் அதிகரிக்க அதிகரிக்க அதிகமாய் இயங்கிக்கொண்டுவருகிறது; ஆகவே அபிப்பிராயங்களும் பேதித்துக்கொண்டு வருகின்றன. மவுடீக ஜாதியாருக்குள் விவாதத்துக் கிடமான பெருத்த விஷயத்தைக் குறித்தும் வெகுசாய் ஒரேவிதமான அபிப்பிராயந்தான் இருக்கும். நாகரிகம்பெற்று புத்திவிசாலங் கொண்ட ஜாதியாருக்குள் சாதாரண விஷயத்தைப்பற்றியும் அபிப்பிராய பேதங்களிருக்கும். ஆகையினால், நாகரிகமானவர்கள் ஒருவிஷயத்தைக்குறித்து முடிவான தீர்மானத்துக்கு வரவேண்டியதாயிருந்தால் அவர்களில் பெரும்பான்மையோருடைய அபிப்பிராயத்தையே சரி யென ஒப்புக்கொள்ளுகிறார்கள். சங்கங்களும் சபைகளும் நாகரிகர்களுக்குள்ளேயன்றி மிலேச்சர்களுக்குள் கிடையாது. ஆகையால், நாகரிகம்பெற்ற தேசத்தில் உயிர்வாழ்ந்து வரும் எவனும் தனக்குமாறாகத் தன்னுடைய சகோதரர்கள் கொள்ளும் அபிப்பிராயத்துக்காக அவர்களை வெறுக்காமலும் அவர்கள்மீது சினங் கொள்ளாமலும் இருக்கவேண்டியது. அவனவனுடைய பகுத்தறிவுக் கேற்றபடி அபிப்பிராயமும் இருக்குமாதலின், யாவரும் ஏககாலத்தில் ஒருவிஷயத்தைப்பற்றி ஒரேவிதமான அபிப்பிராயத்தைக் கொள்ளுவார்க

ளென்று நாம் எண்ணுவது அறியாமை. அநேகர் தம்முடைய சோதரர்கள் சில விஷயங்களைக் குறித்து மாறான அபிப்பிராயம் உடையவர்களா யிருப்பதைக் கண்டு, அவர்களை வெறுத்துத் தீராப்பகை பாராட்டி வருகிறார்கள் ; அது பெரும் பிழை. அவர்கள் மானிட மனோதத்துவ லட்சணத்தை உணராதவர்கள்.

ஜெர்மெனி தேசத்துச் சக்கிரவர்த்தியாகிய 5 ஆம் சார்லஸ் என்பவர் ஜனங்கள் தம்முடைய அபிப்பிராயப்படி சில ராஜரீக விஷயங்களில் ஒத்துவாராததைக் கண்டு, அதிக அருவருப்படைந்து, அரச வாழ்க்கையைத் துறந்து, ஸெண்டு ஜூஸ்ட்டு என்னும் பெயர் போன மடாலயத்தைச் சேர்ந்தார்; அங்கு உலகவாழ்க்கையை ஒழித்து மனக்கவலை யற்று நிம்மதியா யிருந்து நாள்கழிக்கலாமென்று போன அந்தப் பெருந்தகையார் பொழுதுபோக்காகச் சிற்சில கைத்தொழில் வேலைகளில் பயின்றுவந்தார். அவர் கடிகார வேலையிலே பழகி வருகையில், 'அசேதனப் பொருள்களாய் என்னால் சிருஷ்டிசெய்யப்பட்டு, நான் இயக்க இயங்கும் இந்த இரண்டு கடிகாரங்கள் நான் என்ன பாடுபட்டாலும் என் அபிப்பிராயப் பிரகாரம் ஒருபடித்தாய் காலங் காட்டமாட்டோம் என்கின்றனவே, சேதனப்பொருள்களாகப்பிறந்து,பகுத்தறிவு பெற்றவர்களாயிருந்து,தாமே இயங்கும் தன்மையுடையவர்களாயுள்ள அநேக ஜனங்களை ஏககாலத்தில் என் ஒருவனுடைய அபிப்பிராயப்படி அபிப்பிராயங் கொள்ளவேண்டியதென்று விரும்பி, அதற்காகப் பெருங்கட்சி கட்டிக்கொண்டு அளவிறந்த செல்வத்தை யழித்ததுமேயன்றி, எண்ணிறந்த உயிர்களையுங் கொன்று, உதிர வெள்ளத்தில் நீந்தினேனே!

என் அறியாமை இருந்தவாறு என்னே! என்னே!’ என்று ஒரு நாள் துக்கித்துப் பிரலாபித்தார்.

ஆகையால், ஒரு விஷயத்தைக்குறித்துப் பலரும் நம்மைப்போலவே அபிப்பிராயங் கொள்ளவேண்டியது என்று நாம் கோருவது பெரும் பிழை. அபிப்பிராய பேதத்துக்காக ஒருவரை நாம் வெறுத்தல் மானுஷீக தருமமன்று. ஒரு விஷயத்தைப்பற்றி நாம் நம்முடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்போது இன்னதைச் சொன்னால் இன்னாருக்கு மனவருத்தமா யிருக்கும், இன்னதைக் கூறினால் நம்முடைய இன்ன சுயப் பிரயோசனம் கெட்டுவிடும் என்னும் இவைபோன்ற அற்பகுணங்களை அறவே ஒழித்து, நடுவுநிலைமையுடன் நம்முடைய கருத்தை வெளியிடுவதே மனோதைரியம் ஆகும்.

‘நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே யொழிய விடல்.’

நடுவுநிலைமை யில்லாமையினால் வரும் செல்வம் நன்மையைத் தருவதாயிருக்கினும் அதை அப்பொழுதே ஒருவன் விடக்கடவனென்று பொருள்படவும்,

‘கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்.’

ஒருவனுடைய மனம் நடுவுநிலைமையினின்றும் நீங்கி எப்போது பக்ஷபாதங்களைச் செய்யத் தலைப்படுகின்றதோ அப்போது அதுபின்பு அவனுக்கு வரும் தீமைகளை முன்னறிவிக்கும் உற்பாதமென அவன் அறியக்கடவன் என்று பொருள்படவும் ஆன்றோர் கூறியுளார்.

4. விடாமுயற்சி

இவ்வுலகத்தி லுள்ள சகல ஜீவராசிகளுக்கும் வேண்டியதாயிருக்கிற பற்பல பொருள்களும் ஜகதீசனால் அமைக்கப்பட்டிருக்கினும் எவ்வகைப்பட்ட அற்பமான பதார்த்தமும் எந்தப் பிராணிக்கும் முயற்சியின்றியே கிடைப்பது அரிதாயிருக்கிறது. எறும்பு தேனீ முதலிய அற்பஜெந்துக்களும் மெய்வருந்தி விடாமுயற்சியுடன் பாடுபட்டு உழைக்கின்றன என்பது பிரசித்தமான விஷயம். எல்லா ஜீவராசிகளிலும் தான் மேம்பட்டவன் என்றும், ஐயறிவுடையவன் என்றும், தனக்கு ஏனைய உயிர்வர்க்கங்கள் பணிவிடை செய்துவரவேண்டியது என்றும் இறுமாந்திருக்கும் மனிதன் முயற்சியின்றி வாளா இருப்பானேயாயின் எவ்வித சொற்பகாரியமும் அவனுக்குச் சித்தியாவது துர்லபம். நாம் அடைந்த மானிடப்பேற்றா லாகிய பெரும்பிரயோஜனத்தை க்ஷணமேனும் வீண்போக்காது சீக்கிரத்தில் அடைவதற்காக விடாமுயற்சி செய்துகொண்டே வரவேண்டும் என்று கருதித்தானோ கடவுளானவர் காலம் அதிவேகமாய்ச் சென்றுகொண் டிருப்பதை நமக்குப் பிரத்தியட்சமாய்க் காட்டுங் குறிகளாக அனேக அடையாளங்களை உலகில் அமைத்துவைத்திருக்கின்றார். தினம் சூரியோதயமுதல் பகலும் இரவும் க்ஷணத்துக்கு க்ஷணம் கால இயல்பு பேதித்துக்கொண்டே வருவதைப் பால் மணம் நீங்காத பாலகனும் உலகத்திலறியக் கூடியதாயிருக்கிறதல்லவா ! இந்தப்படி காலபேதத்தின் இயல்பை நமக்குக் கடவுள் உணர்த்திக்கொண்டு வருவதை யோசிக்கையில், நமது வாழ்நாள் வெகு சீக்கிரம்

போய்க்கொண்டிருக்கிறது என்பதையும், க்ஷணநேரத்தையும் நாம் வீண்போக்காதிருத்தல் வேண்டும் என்பதையும் அவர் நமக்குச் சதா உணர்த்திக்கொண்டே வருகிறார் என்பது தெள்ளிதின் உணரற்பாலது. காலை மத்தியானம் மாலை இரவு நள்ளிருள் உஷத்காலம் என்னும் கால பேதங்களினாலும், வாரம் மாதம் வருஷம் என்னும் காலபேதங்களினாலும், சீதோஷ்ண காலபேதங்களினாலும் காலமென்னும் சக்கரம் சதா சுழன்றுகொண்டே வருகின்றதென்பது யாவர்க்கும் பிரத்தியட்சமாகத் தெரியவருகிறது. இந்தக் கருத்தை அமைத்தே,

'தோற்றஞ்சால் ஞாயிறு நாழியா வைகலும்
கூற்ற மளந்துநுந் நாளுண்ணும்.'

என்று மூதறிஞர் கூறியுளார். மேற்கண்டபடி நமது வாழ்நாள் பறப்பதை நமக்குப் பல முகத்தாலும் கருணாகரக் கடவுள் எச்சரிக்கை செய்துகொண்டுவந்தும், நாம் முயற்சியின்றிச் சோம்பித்திரிந்து வாழ் நாளை வீழ் நாளாக்குவது என்ன அவிவேகம்! ஒருவனுக்குச் சகல சம்பத்தும் அமைந்திருந்தபோதிலும் அவன் மெய் வருந்தி முயற்சிசெய்யானாயின் அந்த சம்பத்தினாலாகிய பயன் அவனுக் கில்லாமற்போய்விடும். எவ்வகைப்பட்ட அற்ப ஸ்திதியிலுள்ளவனாயிருக்கினும் மெய்வருத்தமும் விடாமுயற்சியும் உடையானாயின் அவன் அடையும் சௌக்கியமே சௌக்கியமாகும். இந்த உண்மைகளைப் பூரணமாக உணர்த்தும்பொருட்டுத் திருவள்ளுவ நாயனார் தமது பொதுமறையாகிய திருக்குறளில் ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினையுடைமை, இடுக்கணழியாமை என்னும் நான்கு அருமையான

அதிகாரங்களை அடுத்தடுத்து அமைத்துவைத்தனர். ஊக்கமுடைமை என்பது-தொழில் செய்கையில் உண்டாயிருக்கவேண்டிய மனவெழுச்சி ; மடியின்மை என்பது தொழில்களைச் செய்யும்போது சோம்புதல் இல்லாமை; ஆள்வினையுடைமை என்பது-சோம்பலில்லாவிடத்தும் மேலும் மேலும் முயற்சி இருந்தாலன்றிக் காரியம் முடியாதாகையால், இடைவிடாமுயற்சி ; இடுக்கணழியாமை என்பது-தொழிலிலே முயல்பவன் பொருளின்மையினாலாவது மெய்வருத்தத்தினாலாவது துன்பம் நேரிட்டவிடத்து மனம் கலங்காமை. இவ்வொரே விஷயத்தை எதிர்மறையினாலும் உடன்பாட்டினாலும் வற்புறுத்திக் கூறியிருக்கும் அருமையைப் பார்க்குமிடத்து, அது மனிதனுக்கு அத்தியாவசியம் என்பது விசதமாகத் தோன்றுகிறது. பெருஞ்செல்வமுடையாரும் உலாவுவது, குதிரைசவாரி செய்வது முதலிய தொழிலற்றவிடத்து அவர்கள் அருந்தும் அன்ன பானாதிகள் அவர்களுக்குப் பயன்படுதல் இல்லை. முயற்சியில்லாவிடத்து நம் உயிரும் உடம்பும் ஒன்றியிருத்தலே துர்லபமாய் முடியும். இவற்றையெல்லாம் யோசித்துப்பார்க்கையில் முயற்சி நமது தேக மனோ தத்துவங்களுக்கு இன்றியமையாததென்றும், முயற்சியின்மை நம்முடைய இயல்புக்கு விரோதமென்றும் நன்றாய் விளங்குகின்றது. ஒரு தொழிலையுஞ் செய்யாது சும்மா இருப்பதைவிடக் கஷ்டமான வேலை வேறொன்றுமில்லையென்பது நம் ஒவ்வொருவருக்கும் தெரிந்தவிஷயம் ; ஆகவே, தொழிலற்றுச் சோம்புற்று இருப்பது நமது இயல்புக்கே விரோதமென்று தெரிய வருகிறது. விடாமுயற்சி என்னும் ஒன்றுமாத்திரம்

இருக்குமாயின் மனிதனுக்கு அசாத்தியம் என்று சொலற்பாலது ஒன்றுமில்லை. நெபோலியன் என்னும் மஹாசுத்தவீரன், 'அசாத்தியம் என்பது அவிவேகிகளின் சொல்' என்று உலகத்தார்க்குப் பறையறைவித்தான்.

கிரீஸ்தேசத்துப் புராதன சரித்திரத்தை வாசித்து உணர்ந்த ஒவ்வொருவரும், பிரசங்கத்தில் மஹா பிரசித்தியடைந்த டிமாஸ்தெனிஸ் என்னும் பெரு நாவலருடைய பெயரைக் கேட்டிருப்பார்களன்றோ. அவர் அவ்வளவு மஹா பிரசித்தி யடைந்ததற்கு விடா முயற்சியே காரணமாயிருந்தது. கலிஸ்திரேடஸ் என்னும் ஒரு பெரு நாவலர் ஜனங்கள் வியக்குமாறு பிரசங்க விஷயத்தில் பெயரெடுத்தார். அவருக்கு ஜனங்கள் செய்துவந்த மரியாதைகளைக்கண்டு வியந்த டிமாஸ்தெனிஸ் என்பவர் தாமும் அந்தப்படி ஆகவேண்டும் என்கிற மனவெழுச்சி கொண்டு பிரசங்கிக்கத் தலைப்படுகையில் பிரதமத்திலே அவரை ஒருவரும் ஒரு பொருளென மதியாது, யாவரும் கைகொட்டிச் சிரிக்க ஆரம்பித்தார்கள். இந்த அவமானத்தால் டிமாஸ்தெனிஸ் துக்க சாகரத்தில் மூழ்கினாரேயாயினும், மனம் தளர்ச்சியடையாமல் தம்முடைய குறைகளை யெல்லாம் நிவர்த்தித்துக்கொள்ள முயன்றார். அவர் இயற்கையில் பெரும் தெற்றுவாயர். சொற்களின் உச்சரிப்பு மஹா அவலட்சணமாயிருந்தது. மூச்சுபிடித்து விடாமல் பேசும் சக்தி அவருக்குக் கிடையாது. பேசிக்கொண்டே வரும்போது அவர் வாக்கியங்களின் இடையில் இரண்டு மூன்று நிமிஷங்களுக்கு ஒருதரம் நிறுத்தி நிறுத்திப் பேசவேண்டியதாயிருந்தது

பிரசங்கத்துக்கு அத்தியாவசியமாய் வேண்டிய அம்சங்களில் ஒன்றையேனும் அவர் இயற்கையில் அமையப்பெற்றிலர். ஆயினும், தாம் பிரசங்கத்தில் மிகுந்த பெருநாவலராக வேண்டும் என்னும் எண்ணம் அவரிடத்தில் பூரணமாய்க் குடிகொண்டிருந்தபடியால், அது நிறைவேறுவதற்காக அவர் செய்துவந்த விடாமுயற்சியின் அளவை ஒருவரும் நம்புவதற்கும் இடமிராது. தெற்றுவாயை நீக்கிக்கொள்வதற்காகக் கோளாங் கற்களை வாயில்போட்டுக்கொண்டு உரத்தசப்தத்துடன் சமுத்திரதீரத்தில் சில சிறந்த கிரந்தங்களை வாசித்து வந்ததுமன்றி, அவற்றை முகபாடஞ்செய்து சமுத்திரத்தை நோக்கி உரத்த சப்தத்துடன் ஒப்பித்தும் வந்தார். கோளாங்கற்களை வாயிற்போட்டுக்கொண்டு பேசிவந்தபடியினால் நன்றாய்த் திருந்தியது மன்றி, வசனிப்பதற்கு இன்றியமையாதனவாகிய நரம்புகளும் சரிப்பட்டுவந்தன. கிரீஸ்தேசத்தில் அக்காலத்திலே வெற்றவெளியான இடத்தில் கோடிக்கணக்காக ஜனங்கள் கேட்கும்படி பிரசங்கித்தல்வழக்கமாயிருந்தபடியினால், டிமாஸ்தெனிஸ் உரத்த சப்தத்தோடு சமுத்திரத்தின் பேரிரைச்சலுக்கு மேற்பட்டுத் தம்முடைய செவிக்குத் தாம் சொல்வது நன்றாயும் தெளிவாயும் கேட்கும்படி பேசிப் பழகிவந்தது, பின்பு அவர் வெற்றவெளியில் அளவிறந்த பிரஜைகள் கேட்டு உவக்கப்பிரசங்கிப்பதில் மஹா பிரசித்தியடைவதற்குப் பெருத்த அனுகூலமாயிருந்தது. அவருடைய சுவாசப்பை மிகவும் பலஹீன ஸ்திதியி லிருந்தபடியினால் மூச்சுபிடித்துப்பேச அவர் சக்தியற்றவராய் வாக்கியங்களின் இடையிடையே பல தடவைகளிலும் நிறுத்தி

நிறுத்திப் பேசவேண்டியதாகவல்லவோ இருந்தது! இதற்காக அவர் செய்த அருமையான பிரயத்தனங்கள் நாம் வியக்கத் தக்கனவா யிருக்கின்றன. அவர் செங்குத்தாயும் ஏறுவதற்குக் கஷ்டமாயும் உள்ள மலைகளின்மீது ஏறப் பழகிவந்தார். இது அவருடைய சுவாசப்பையைப் பலப்படுத்தியது; அது பலப்படவே, அவர் மூச்சுபிடித்துப் பெரிய வாக்கியங்களை இடைவிடாமல் சொல்லி முடிப்பதற்குக் கூடியவராய்விட்டனர். பிரசங்கத்தில் வல்லவராவதற்கு அத்தியாவசியமான அபிநயங்களிலும் அவர் இயற்கையில் அதிக அவலட்சணமுடையவராயிருந்தார். இது விஷயத்தில் அவர் எடுத்துக்கொண்ட பிரயாசைஅவருடைய மனச்சாட்சிக்குத்தான் தெரியும். அவர் ஓர் பெரிய நிலைக் கண்ணாடியை வீட்டில் வைத்துக்கொண்டு, தாம் அதை பார்த்துப் பிரசங்கித்துவந்தார். அபிநயங்களில் எதெது அவலசட்ணமாயிருந்ததோ அதைஅந்தக் கண்ணாடியே அவருக்குக் காட்டியது. அவரிடத்தில் ஒரு துர்வழக்கம் இருந்தது; அது பேசும்போது அடிக்கடி இருந்து இருந்து தோளை நெளித்து நெளித்துக் குலுக்குவதேயாம். அது மஹா அவலட்சணமென்பதை அவருக்கு ஆசாரியராயிருந்த கண்ணாடி இடித்திடித்துப் பலமுறை கூறியும் அவ்வழக்கம் அவரைவிட்டுச் சீக்கிரத்தில் அகலவில்லை. தாம் பிரசங்கிக்கும்போது தமது தோளுக்கு நேராகக் கூர்மையான ஈட்டி ஒன்றைத் தொங்கவிட்டுவைத்தார். தாம் மறந்து எப்போதாவது தோளை உயர்த்திக் குலுக்கும்போது ஈட்டியின் முனை அவருடைய தோளை உதிரம்பெருகும்படி காயப்படுத்தி அவரைத் திருத்திவந்தது ; ஈட்டி என்கிற இக்கொடிய

ஆசிரியர் அவரை வெகு சீக்கிரத்தில் சீர்படுத்திவிட்டனர். பிறகு வெகு நாள்வரையில் அவ்வாசிரியருடைய கொடுந்தொழிலின் குறிகளாகிய வடுக்கள் பிரசங்கியாருடைய புஜங்களைவிட் டகலவில்லை. நயம்பட அநேக உதாரணங்களுடனும் மேற்கோள்களுடனும் பிரசங்கிப்பதற்காக அவருக்குமுன்னிருந்த வித்துவான்களுடைய கிரந்தங்களை யெல்லாம் வாசித்து அவற்றின் சாராம்சங்களை ஞாபகத்தில்வைக்கவேண்டிய அவசிய மிருந்தபடியினால், அவற்றை யெல்லாம் அவர் அயர்விலா ஊக்கத்துடன் வாசித்து உணரத்தலைப்பட்டார். இந்தப்படி வாசிக்கையில் மனம் ஒருமைப்பட்டு வேறு விஷயங்களில் நாடாமலிருப்பதற்காக நிலஅறை ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு அவ்விடத்தில் கூச்சல் முதலியது கேளாதபடி நிம்மதியாய் வாசித்துவந்தார். சில மாதங்கள் வரையில் இப்படி அப்படி வெளியே போகாமல், விடாது வாசித்துக்கொண்டே இருப்பதற்கு அவர் ஒரு தந்திரம் செய்தார். இது யாவரும் வியக்கத் தக்கது. அவர் தம்முடைய முகத்தையும் சிரசையும் அவலட்சணமாய்ப் பாதிவரையில் சவுளம் செய்து கொண்டார். பார்ப்பதற்கு இப்படி அவலட்சணமாயிருக்கும்படி முகத்தையும் சிரத்தையும் செய்துகொண்டபடியால் என்ன அவசியமான வேலையிருந்தபோதிலும் வெளியே போவதற்குக் கூடாமையாயிருந்து, வாசிப்பு ஒன்றிலேயே அவர் மனதைச் செலுத்தக்கூடியவரா யிருந்தார்.

'முயற்சிதன் மெய்வருத்தக் கூலிதரும்.'

என்கிற பிரமாணம் பொய்யாகா தானபடியால், அவர் விரும்பியபடி பிரசங்க விஷயத்தில் மஹா பிரசித்தியை

அடைந்தது மன்றிச் சொல்வன்மையில் அவருக்குச் சமானாதிகம் ஒருவரும் கிடையாதென்கிற பெரும் புகழையும் அடைந்தனர்.

பலரும் கேட்டு வியக்குமாறு பிரசங்கிப்பதில் பிரசித்தியடைய அவாக்கொள்ளுவோர் இப் பெருநாவலரது சரித்திரத்தை நன்கு உணர்ந்து அறிந்துகொள்வது யுக்தம். ஒருகாரியம் செய்யத் தொடங்குகையில் எவ்வளவு பிரதிகூலங்கள் பிரதமத்தில் உண்டாகின்றனவோ அவ்வளவு நமக்குப் பின்பு பெருத்த இன்பத்தைப் பயப்பதற்கான நற்குறிகளென்றெண்ணி அவற்றிற்குப் பின்னிடாமல் கருமத்தில் முயல்வதுதான் மானுஷிம்-

'இன்னாமை யின்ப மெனக்கொளி னாகுந்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பு.'

ஒருவன் தொழில் செய்யுமிடத்து இடையூறாக வரும் துன்பத்தைத் தனக்கு இன்பாக நினைத்துக் கொள்ளுவானாயின் அதனால்தன்னுடைய பகைவர்களும் நன்கு மதிப்பதற்கு ஏதுவாகிய பெரும் புகழுண்டாகும் என்று பொருள்பட நாயனார் கூறிய அமுதத் திருவாக்குக்கு டிமாஸ்தெனிஸ் என்னும் புலவர் சிகாமணி தக்க உதாரணமாயினார்.

இந்து தேசத்துப் புராதன சரித்திரங்களையும் வாசித்தறியுமிடத்து ஊக்கமுடைமையும் மடியின்மையும் பூரணமாகப் பெற்ற சத்புருஷர்கள் தாங்கள் எண்ணியவிஷயம் அருமையினும் அருமையதாயிருக்கினும் அதனை இறுதியில் எய்தப் பெற்றார்களென்பது இனிது விளங்குகிறது.

'ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
துதாழா ஞற்று பவர்.'

விடாமுயற்சி செய்பவர்கள் ஊழ்வினையையும் புறங் காண்பார் என்றுரைத்த முதுமொழிகளுக்கு ஏற்க, மார்க்கண்டேயர் காலனை வென்றதும், பகீரதன் ஆகாச கங்கையைக் கொண்டுவந்ததும் உலகு அறிந்த விஷயங்களாகும். 220

---

5. வாய்மை மனிதனுக்கு இயல்பான குணம் என்பதும், ஜனசமூகவாழ்க்கைக்கு இன்றியமையாதது என்பதும்

எவ்வகைப்பட்ட பெருஞ்செல்வத்தையும் ஒருவன் அடையப்பெற்றானே யாயினும், பிறருடைய உதவி யில்லாவிடத்து, அவன் உலகத்தில் தனித்து இருந்து இல்வாழ்க்கையினாலாகிய இன்பத்தை நுகர்ந்து உயிர் வாழ்வது அரிது. பெருஞ்செல்வமுடையான் பிறருடைய உதவி யில்லாமலே எத்தகுதிய இன்பத்தையேனும் நுகரக்கூடாதோ என்னின், நுகருதல்கூடாதென்பதே அறிஞர் துணிபு. பெருஞ் செல்வமுடையான் அதிக இன்பத்தை நுகர அவாக்கொள்ளுங்காலத்துத் தனது செல்வத்தைப் பலருக்கும் பிரதிபலனாகத்தந்து அவர்களுடைய உதவியைப் பலமுகத்தாலும் பெற்றுவருகின்றான் என்பதை நாம் அனுபவசித்தமாகக் காண்கிறோம். அங்ஙனம் பிறருக்குச் செல்வத்தைப் பிரதிபலனாக வழங்குவதற்குச் சக்தியற்றவன் அவர்களுடைய உதவியைப் பெறாமல் இன்பத்தை இழக்கின்றான். இதுதான் செல்வமுடையானுக்கும் வறியவனுக்கும் உள்ள பேதம். இதனால் நமது உலகவாழ்க்கை இன்பத்துக்கு

ஏனையோருடைய உதவி அத்தியாவசியமென்பது கரதலாமலகம்போல் விளங்குகின்றது. உலகவாழ்க்கையை விட்டொழிந்த துறவிகள் முதலிய தூயோர்க்குப் பிறருடைய உதவி வேண்டுவதில்லையே என்போமாகில், அவர்களும் தேக உபாதைகளை நிவர்த்தித்துக் கொள்வதற்காக இல்வாழ்வானது துணையை நாடுகின்றார்கள் என்பது,

'துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் துணை.'

என்னும் பொதுமறை வாக்கியத்தால் இனிது விளங்குகிறது. ஏகசக்ராதிபதியாய்த் தனி அரசுசெய்யும் மஹா ராஜன்முதல் கடைப்பட்ட குடியானவன் ஈறாகவும், நுண்ணறிவுபெற்ற கல்விமான்முதல் மந்தமதியினனாகிய கயவன் ஈறாகவும், உலகவாழ்க்கையை முற்றத்துறந்த தவசிமுதல் உலகவாழ்க்கையையே சதமென மதித்திருக்கும் உலோகாயிதன் ஈறாகவும், புஜபல பராக்கிரமம் பெற்றசுத்தவீரன்முதல் அதிபலஹீனன் ஈறாகவுமுள்ள யாவரும் பரஸ்பர உதவியினாலேயே உலகத்தில் உயிர் வாழ்ந்து வரவேண்டியதா யிருக்கிறது. இப்படிப்பட்ட வாழ்க்கைக்குத்தான் ஜனசமூகவாழ்க்கை என்று பெயர். மேற்கண்ட அனைவரையும் ஒருங்கு சேர்த்து ஒருவருக்கொருவர் உதவிபுரிந்துவரும்படி செய்வதற்கும், ஜனசமூகவாழ்க்கை நடைபெற்று ஓங்குவதற்கும் தக்கதோர் கருவி வேண்டியதல்லவா ? வாய்மை என்னும் ஒன்றையே ஜகதீசன் அக்கருவியாக அமைத்து வைத்திருக்கின்றனர். வாய்மை என்பது மெய்மையாம். வாய்மை என்னும் பதம் வாயினிடத்து உண்டாதல் என்று பொருள்படும். அந்தப் பதம் மெய்மை அல்லது

உண்மையென்னும் அர்த்தத்தில் ஆன்றோரால் உபயோகிக்கப்பட்டு வருவதை யோசித்துப் பார்க்கையில், மனிதனுடைய வாயில் இயற்கையி லுண்டாகி வெளிப் படுவது மெய்மையே யன்றிப் பிறிதன்று என்பது தெளிவாய் விளங்குகிறது. ஆகவே, மெய்யுரைத்தல் நமது இயற்கைக்கு ஏற்றதென்றும், பொய்யுரைத்தல் நமது இயற்கைக்கு ஏற்றது அன்றென்றும், வாயைக் கொண்டு நாம் வசனிக்கும் ஒவ்வொரு வார்த்தையும் மெய்யாகவே இருத்தல் வேண்டுமென்றும் மானிடலட்சண சாஸ்திரிகள் அபிப்பிராயங்கொள்ளுகிறார்கள். நம்முடைய இயற்கைக்கு ஏற்றதைச்செய்வது அதிக சுலபமென்பதையும், ஏலாதவற்றைச் செய்வது அதிக கஷ்டமானதென்பதையும் எவரும் மறுக்கார். இரண்டு காலால் நடப்பது ஒவ்வொருவனுக்கும் இயற்கை; இரண்டுகால்களையும் மேலே தூக்கிக்கொண்டு இரண்டு கரங்களினாலும் கழைக்கூத்தர்களைப்போல் நடப்பது நமது தேகதத்துவலட்சணத்துக்கு விரோதமாதலின், அது எவ்வளவு கஷ்டமான காரியமா யிருக்கிறதோ அதுபோல், மனித இயல்புக்கு விரோதமாய்ப் பொய் உரைக்கும்போது இன்னாரின்னாரிடத்தில் இன்னின்ன சமயத்தில்இன்னின்னபொய்யை இன்னின்னவிதமாகக் கூறியிருக்கின்றோம் என்பதை யெல்லாம் ஞாபகத்தில் பதித்துவைத்து வருத்தமுற்றுப் பெரும்பயனை அடைவதைக்காட்டினும், மானிட இயற்கைக்கு ஏற்றவாறு சுலபமாய் உண்மையைப்பேசிச் சொற்பபயனை யடைந்து சுகித்துவாழ்வதே அதி உத்தமம் என்பதை எப்படிப்பட்ட பெரும் பொய்யனும் ஒருகாலத்தில் ஒப்புக்கொள்ள நேரிடும். ஆகவே உலகத்தில் மனமொழி

மெய்களினால் வருந்திப்பாடுபட்டுப் பயனையடையத்தக்க சகல தொழில்களிலும் பொய்யுரைத்துச் சீவிப்பது மஹா கஷ்டமானதொழில் என்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைப்பாராக. இயற்கையில் மனிதன் பொய்யுரைப்பவனென்றே வாதிக்கும் சில மனோதத்துவ சாஸ்திரிகளை மறுக்க இன்னும் இரண்டொரு நியாயங்களைக் காட்டுகிறோம்:

மெய்யுரைத்தல் மனிதனுக்கு இயற்கை என்பதற்கு அனேக திருஷ்டாந்தங்களுள.

'துன்று பிணியோர் துறந்தோர் அடங்காதோர்
கன்றுஞ் சினமனத்தோர் கல்லா தவரிளையோர்
ஒன்று முறைமை யுணரா தவர்மகளிர்
என்றிவர்மந் தணத்திலெய்தப் பெறாரே.'

பெரும்பிணியாளர்கள் மனவலியற்றவர்களானபடியாலும், துறவிகள் ஒருவருடைய தயவை எதிர்பாராதவர்களானபடியாலும், அடங்காதவர்கள் வரையறைக்கு உட்படாதவர்களானபடியாலும், பெருங்கோபமுடையவர்கள் தம்மை மறந்தவர்களானபடியாலும், கல்லாதவர் இதாகிதந் தெரியாதவர்களானபடியாலும், இளைஞர்கள் மனோதிடமற்றவர்களானபடியாலும், விவகாரவுணர்ச்சியற்றவர்கள் இன்னதைச்சொன்னால் இப்படியாகுமென்பதை உணராதவர்களானபடியாலும், மாதர்கள் பேதைமையை அணிகலமாகக் கொண்டவர்களானபடியாலும் உண்மையை மறைக்காமல் சொல்லிவிடத்தக்கவர்களாகையால் மேலைய எண்மரும் இரகசியம் பேசும் ஆலோசனை சபையில் இருத்தல்கூடாதென்று ஐந்தாம் வேதமாகிய ஸ்ரீபாரதத்தில் கூறப்பட்டிருக்கிறது. இதை யோசிக்குமிடத்து, உண்மையை மறைப்பதற்கு ஒருவன்

மனவலியைக்கொண்டு அதிக பிரயாசைப்படவேண்டியதாயிருக்கிறதென்றும், மனவலி நீங்கியவிடத்து உண்மை இயற்கையால் வெளிப்படுமென்றும் தெளிவாய் விளங்குகிறது.

சுலபமான தொழில்கள் அநேகமிருக்கப் பொய்யுரைத்தல் என்னும் மகா அருமையான தொழிலைச் செய்யத் தலைப்படுகிற ஒருவனை நாம் பேதை என்று பரிதபிப்பதேயன்றி அவனிடத்திற் சினங்கொள்ளுவதற்கு இடமில்லை. ஏனெனில், இவ்வளவு அருமையான தொழிலைச் செய்தும் அவன் தான் எண்ணியவாறு இறுதியில் பயனையாவது அடைகின்றானா! அந்தோ! இல்லையே, இல்லையே! இயற்கைக்கு விரோதமாகக் காலை மேலேதூக்கிக்கொண்டு கரங்களினால் நடப்பவன் தன்னை மறந்து அயர்ந்து வீழ்ந்து வருந்துதல்போல் மானிட லட்சணத்திற்கு ஏலாத பொய்யுரைத்தலை மேற்கொண்டொழுகுபவன் தலைதடுமாறிவீழ்ந்து அவமானப்படுவதை நாம் உலகிற் கண்கூடாகப் பார்க்கின்றோம்.

ஒரூரில் ஒரு தனிகன் இருந்தான். அவ்வூரில் எவனெவன் எந்தெந்தச் செய்கையில் ஏனையோரைக் காட்டினும் மிகச் சிறந்தவனோ அவனுக்குப் பரிசு அளிப்பதாக அத்தனிகன் பொதுவாய் விளம்பரம் பிரசித்தஞ்செய்து யாவரையும் ஒரு பெருஞ் சபாமண்டபத்தில் கூட்டிவைத்தான். அவ்விளம்பரத்தின்படி, கல்வி, சங்கீதம், கைத்தொழில் முதலிய சத்விஷயங்களில் அதிக பாண்டித்தியம் பெற்ற சன்மார்க்கர்களும், கொலை, களவு முதலிய தீயகாரியங்களில் மிக வல்ல துன்மார்க்கர்களும் வந்து மேற்படி சபாமண்டபத்தில் ஒருங்குகூடித் தத்தம் பிரதாபங்களை உரைக்கலாயினர்.

அங்குக் கூடினவர்களுக்குள் நற்செய்கைகள், தீச்செய்கைகள் ஆகிய இவ்விருவகைச் செயல்களில் மிகச் சிறந்தவராயிருந்தவர்களுக்குத் தக்கபடி அக்கனவான் பரிசளித்து அனுப்பிக்கொண் டிருக்கையில், ஒருவன் எழுந்து, ' ஓ தனிகரே, பொய்யுரைப்பதில் என்னிலும் மிக்கார் ஒருவருமிலர், யான் புத்தி தெரிந்தது முதல் இதுகாறும் பொய்யுரைத்தே ஜீவித்து வருகிறேன்; ஆகையால் அந்தச்செய்கையில் பரிசுபெறுதற்குரியவன் யானே' என்று தன் பிரதாபத்தைக் கூறினான். இதைக் கேட்டமாத்திரத்தில் அந்தத் தனிகன் அவனைப்பார்த்துப் 'பேதாய்,இதுகாறும் நீ பொய்யுரைத்துவந்ததெல்லாம் இப்போது அவலமாய் முடிந்ததே! புத்தி தெரிந்ததுமுதல் இது காறும் நீ பொய்யுரைத்தே ஜீவித்து வந்தாயென்கிற ஒரு மெய்யை இப்போது உரைத்தனை; ஆகையால், நீ பரிசுபெறுதற்கு உரிய காலத்தில் உன் பாண்டித்தியம் பாழ்பட்டது' என்று அவனை ஓட்டித் துரத்தினான். அங்கிருந்த யாவரும் அவன் பேதமைக்காகப் பரிதபித்துக் கைகொட்டி நகைத்தனர். ஆகவே, எந்தத் தீச்செய்கையை ஒருவன் செய்து தப்பித்துக் கொண்டுவந்தாலும் வரலாம், பொய்யன் மாத்திரம் தப்பிப் பிழைப்பது அரிதரிது. அதற்குக் காரணம் பொய்யுரைத்தல் மானிட லட்சணத்துக்கு எவ்வளவும் ஏற்றதல்லாமையே யாம்.

வாய்மை மானிடலட்சணத்துக்கேற்ற இயற்கைக் குணமென்பதற்கும், பொய்மை மானிடலட்சணத்துக்கு ஏலாத செயற்கைக்குணமென்பதற்கும், மெய்மையைப் பேசுவது மஹா சுலபமென்பதற்கும், பொய்யுரைப்பது மஹா கஷ்டமானதென்பதற்கும் சில நியாயங்களை

எடுத்துக் காட்டினோம். வாய்மை ஜனசமூக வாழ்க்கைக்கு இன்றியமையாத தென்பதற்குச் சில ஹேதுக்களை இனி எடுத்துக் கூறுவோம்:

ஜனசமூகவாழ்க்கைக்கு வாய்மை இன்றியமையதாதென்பதற்கு அநேக நியாயங்களுள. மெய்யுரைத்தலை மனிதனுடைய இயற்கைக் குணமாக ஜகதீசன் அமைத்து வைத்தார் என்பதினாலும், மனிதன் உலகவாழ்க்கை யின்பத்தை நுகருவதற்கு ஜனசமூகத்தில் சேர்ந்திருக்கவேண்டியதே கடவுளின் கருத்தென்பதினாலுமே ஜனசமூகவாழ்க்கைக்கு மெய்மை இன்றியமையாத தென்பது தெளிவாய் விளங்குகிறது. இதை அதிகமாய் விரிக்கவேண்டிய அவசிய மில்லை. வண்ணான் அம்பட்டன் தோட்டிமுதலான கடைப்பட்ட தொழிலாளிகள் நம்மினும் எத்தனையோமடங்கு தாழ்ந்தவர்களாயும், நாம் சொற்பகூலி கொடுக்க வாங்கி ஜீவிக்கத்தக்கவர்களாயும் இருந்தபோதினும், அவர்கள் நம்மிடத்து எதார்த்தத்தைப்பேசி வேலையைச் செய்யாமற் போவார்களாகில், அவர்கள் நமக்காகச் செய்துவரும் வேலைகளையெல்லாம் நாமே செய்துகொள்ளவேண்டியதல்லவா நேரிடும்? அதனால் நமக்கு உண்டாகும் கஷ்டநிஷ்டூரங்களை என்னென்று உரைப்பது? வாய்மையில்லாவிடத்து அக்கடைப்பட்டவர்களின் கூட்டுறவு ஒழிவதனாலேயே நமக்கு அவ்வளவு பெருந்துன்பம் நேரிடுமானால், நம்முடன்கூடிச் சற்றேறக்குறைய ஒரேநிலைமையில் வாழ்கின்றவர்களிடத்தில் வாய்மையில்லாவிடத்து நம்வாழ்க்கை என்னாகும்? மனிதன் சில தீயவிலங்காதிகளைப்போல் தனித்திருந்து உலக இன்பத்தை அடையக்கூடாதென்பதும், ஏனையோருடைய கூட்டுறவினா-

லேயே அந்தப்படி இன்பத்தை அடையவேண்டுமென்பதும் கர்த்தாவின் கருத்தாதலின், மனிதன் பிறருடைய கூட்டுறவுகொண்டு ஜனசமூகவாழ்க்கை நிலைத்திருக்கப் பார்ப்பதற்கு சத்தியம் என்னும் ஒரு பொருளை விடாமற் கைப்பற்றவேண்டியது. பத்துப்பெயர் ஒன்று கூடி உலகத்தாரை வஞ்சித்துப் பொய்பேசியே ஜீவிக்க வேண்டும் என்று கட்டுப்பாடு செய்துகொண்டார்கள் என்று வைத்துக்கொள்வோம்; அந்தப் பதின்மரும் தங்களுக்குள்ளே மெய் பேசினாலன்றி அவர்களின் சங்கம் நிலைபெறாது. அவர்களுக்குள் ஒருவனை ஒருவன் வஞ்சிக்கப் பொய்பேசுவானாகில் அவர்களின் கட்டுப்பாடு கெட்டு, அச்சங்கத்தின் கருத்து நிலைகுலைந்து அழியும். பொய்யர் பதின்மர் சேர்ந்த அச்சிறு சங்கம் நிலைத்திருப்பதற்கும் வாய்மை அத்தியாவசியமாயின் ஜனசமூகவாழ்க்கை நிலைத்திருப்பதற்கு வாய்மை இன்றியமையாத தென்பது சொல்லாமே அமையும். இக் கருத்தைக்கொண்டே, உலகமுய்ய அவதாரஞ்செய்த அரிச்சந்திரன் முதலிய செந்நெறிச் செல்வர்கள்,

'இம்மை யம்மைவீ டெனமறை புலங்கொள இயம்பும்
மும்மை யுந்தரு முறையுடைத் தெனுநிலை முரணி
எம்மை யாழ்வயிற் றடக்கிமீட் டுமிழ்கலா எரிவாய்
வெம்மை கூர்நர குய்க்கினும் மெய்ம்மையை விடேமால்.'

என்று கூறி, நம்மனோர் ஈடேறுவதற்கான நன்னெறி இஃதெனக் காட்டினார்கள். 'எந்தத் தேசத்தவர்கள் பொய்பேசுதலைப் பெருத்த அவமானமாகிய செய்கையாய் மதிக்கவில்லையோ, அந்தத் தேசத்தவர்கள் நாளாவர்த்தியில் தம்முடைய வல்லமைகெட்டுத் தமது ஸ்வயேச்சை முற்றுமே குன்றி, மெய் பேசுவதையே

பெரும் விரதமாகக்கொள்ளும் மற்றொருதேசத்தவர்களுக்கு ஐக்கியப்பட்டு அடிமைகளாவார்கள்' என்று ஒரு சிறந்த மனோதத்துவ லட்சண சாஸ்திரியார் கூறுகிறார். மெய்யைப் பேசி அதனாலுண்டாகும் துன்பங்களுக்குப் பின்னிடாத மனோதைரியம் அற்றவர்களே மனங்கூசாது பொய்பேசத் துணிகின்றவர்களானபடியாலும், எதுவரினும் வருக, எதுபோகினும் போக என்னும் திடசித்தத்துடன் மெய் பேசப் பின்னிடாதவர்கள் மனோதைரியம் பூரணமா ய்மையப்பெற்றவர்களானபடியாலும், மனோதைரியம் ஒன்றே ஒரு தேசத்தைக் கைப்பற்றுவதற்கும், மனோதைரியம் இன்மையே ஒரு தேசத்தை யிழப்பதற்கும் காரணமாயிருக்கிறபடியாலும், மேற்கண்ட மனோதத்துவ சாஸ்திரியார் அந்தப்படி அபிப்பிராயங் கொள்ளலாயினர். ஆங்கிலேயர்களுக்குள்ளே பொய்யன் என்னும் சொல் வசைச் சொற்கள் யாவற்றினும் அக்கிரகண்ணியமாய் இருக்கின்றதென்று அவர்களின் நடையுடை பாவனைகளைக் காட்டும் சரித்திரங்கள், கிரந்தங்கள் முதலியவற்றால் தெளிவாய் விளங்குகின்றது. இவ்வொன்றே அவர்கள் மனோதைரியம பெற்றவர்கள் என்பதற்குச் சாட்சிபகரத் தக்கது. ஆகையால், 'பிரட்டன் தேசத்தைச் சேர்ந்த பிரதேசங்களில் சூரியன் ஒருபோதும் அஸ்தமிக்கிறதில்லை.' என்கிற புகழை மனோதைரியம் பெற்ற ஆங்கிலேயர் பெற்றனர் என்பதும் ஒருவியப்போ ! உலகத்தில் மஹாசுத்தவீரர்கள் என்று பெயர்பெற்ற பராக்கிரம சீலர்கள் பொய்யை மறந்தும் பேசியதில்லை என்று இந்தியா, இங்கிலாந்து, ஜெர்மனி, ஸ்காட்லாண்டு முதலிய தேசசரித்திரங்களால் தெரியவருகிறது.

'பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.'

பொய்பேசாமையாகிய ஒரு விரதத்தையே ஒருவன் இடைவிடாது அநுசரித்துக்கொண்டு வருவானாயின் வேறு தருமத்தை அவன் எவ்வளவும் செய்யாதிருத்தலே நன்று என்று பொருள்படத் தெய்வப்புலவர் கூறிய அமுதவாக்கை ஆழ்ந்து பார்க்கையில், பல அறங்களையும் மேற்கொண்டு செய்வது ஒருவனுக்குச் சாத்தியமாகாதென்பதும், அந்தப்படி செய்ய முயலுகையில் சில தவறுமாயின் குற்றம் நேரிடுமென்பதும், பிற அறங்களெல்லாம் தரும்பயனை வாய்மை என்னும் ஒன்றே தரவல்லதென்பதும், அவ்வொரு அறத்தை ஒருவன் குறைவறச் செய்துமுடித்தலே அவன் ஈடேறுவதற்குப் போதுமானதென்பதும் அவருடையகருத்தென்று தெளிவாய் விளங்குகிறது.

'வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்.'

யாதொரு தீமையையும் எவருக்கும் தராதிருப்பதாகிய சொல் எதுவோ அதுதான் மெய்மையென்று சொல்லப்படுவது என்று பொருள்படவும்,

'பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.'

எவருக்கும் தீமைவிளையாமல் ஒருவருக்கு நன்மையை விளைக்குமானால் பொய்மொழியும் மெய்மொழியின் தன்மையதாகும் என்று பொருள்படவும் தெய்வப்புலவர் தமது உத்தரவேதமாகிய திருக்குறளில் கட்டளையிட்டிருக்கின்றார். இவற்றின் உள்ளுறையை அறியாத சிலர் தாம் மனங்கூசாது உரைக்கும் பொய்க்கு இதை-

அடிக்கடி பிரமாணமாகக் காட்டுகின்றார்கள். வாஸ்தவத்தில் நடந்த யாதொருசங்கதியைச் சொல்வதனால் மொத்தத்தில் தீமைவிளையுமாகில் அது பொய்மையின் தன்மையதென்றும், வாஸ்தவத்தில் நடந்த யாதொரு சங்கதியைச் சொல்லாதிருப்பதனால் மொத்தத்தில் நன்மை விளையுமாகில் அது மெய்மையென்றும் மேலே இரண்டு குறட்பாக்களாலும் தெரியவருகிறது. இன்னது, ‘தீமையிலாத சொலல்’ என்பதையும், இன்னது, ‘புரைதீர்ந்த நன்மை பயக்கும்’ என்பதையும் நிச்சயித்தறிவது திரிகால உணர்ச்சியுடைய ஞானிகளுக்கே சாத்தியமானதாகையாலும், துறவறத்தில் நிற்கும் சுசீலர்களுக்கு அருளுடைமை அத்தியாவசியமானபடியாலும் அவ்விரண்டு குறட்பாக்களும் அவர்களுக்கே உரியதென நாம் அறியவேண்டும். வாய்மை என்னும் அதிகாரத்தைத் துறவற இயலில் நாயனார் வைத்தபடியால் அது இல்வாழ்வானுக்குப் பொதுவகையாலும் துறவிக்குச் சிறப்புவகையாலும் சொல்லப்பட்டதென்று கொள்வதேமரபு. எவ்வகைப்பட்ட தீங்காயினும் அதை ஒருவன் செய்யத் தலைப்படும்போது அவனுக்கு அது தீங்காத்தோன்றாமல் ஏதோ நன்மை விளைப்பதாகவே தோன்றுகிறது மனோதத்துவலட்சணமாகையால், எப்படிப்பட்ட பொய்யுரையும் புரைதீர்ந்த நன்மை பயப்பதாகவும் யாதொன்றும் தீமையிலாததாகவும் ஒவ்வொருவனுக்கும் தோன்றும். ஆகவே, அருள் நிறைந்து எதிர்கால உணர்ச்சியைப் பூரணமாகப்பெற்ற ஞானிகள்முதலிய துறவிகளுக்கு அக்குறட்பாக்கள் கூறப்பட்டனவன்றி அவ்வுணர்ச்சியற்ற இல்வாழ்வானுக்குக் கூறப்பட்டன அன்று.

6. விவேகத்தினால் ஆகாததில்லை

உலகத்தில் விவேகத்தைவிட உயர்ந்த பொருள் ஒன்றுமேயில்லை. பொன் நவமணி முதலிய விலையேற்றமுள்ள சகல வஸ்துக்களும் இதற்குச் சமானமாகா. விவேகமொன்றினால் விலங்கு பறவை ஊர்வன நீர்வாழ்வன முதலிய சமஸ்த ஜீவராசிகளுள்ளும் மனிதர் மேம்பட்டு விளங்குகின்றனரே யல்லாமல் வேறொன்றினாலும் அன்று. விவேகம் ஒன்று மாத்திரம் இல்லாவிட்டால் ஒருவன் மனிதனாகப் பிறந்தும் இம்மை மறுமைகளில் அடையவேண்டிய பிரயோசனங்களை ஒரு சிறிதும் பெறமாட்டான். மின்சாரதபால், நீராவியந்திரம் முதலான மிக்க அற்புதமான பொருள்களெல்லாம் அவற்றைக்கண்டுபிடித்தவர்களுடைய அறிவின் மேன்மையை விளக்கிக் காட்டுகின்றனவே யன்றி, அவர்களுடைய குலம் பொருள் முதலியனவற்றைச் சிரேஷ்டமாகத் தெரிவிக்கவில்லை. ஆதலால், அறிவே பிரதான வஸ்துவன்றி மற்றவை அவ்வளவுசிறப்புடையனவல்ல. விவேக விளக்கம் பெற்றவனுக்குச் சொந்ததேசம் என்றும் அந்நியதேசம் என்றும் இல்லை; எல்லாம் சுயதேசமே. பகைவ ரென்றும் சிநேக ரென்றும் அவனுக்கில்லை. அவன் அவரவர்களுக்குத் தக்கபடி நடந்துகொள்ளும் புத்தி சாதுரியத்தால் யாவரும் அவனுக்கு நட்பினராகவே யிருப்பார். அறிவாளனாகிய ஒருவனுடைய நட்பை யாவரும் விரும்புவர். அரசனும் அவனுடைய சிநேகத்தை அபேக்ஷித்து அவனுக்கு வேண்டியவற்றைச் சன்மானிப்பான்.

' அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும் '

என்று பெரியோர் கூறியுள்ளார். அறிவுடையோன் எப்படிப்பட்ட ஆபத்துவரினும் தப்பித்துக்கொள்ளுவான்; யாவரையும் உபாயத்தால் வெல்லுவான். அவனை வெல்லுதற்கு ஒருவராலும் முடியாது. அறிவின்கூர்மையால் ஒருவர்த்தகன் ஒரு பூதத்தையும் வென்று மிக்க பிரயோசனமடைந்தனன். அது எப்படியென்றால்?

ஒரு பட்டணத்தில் தனஞ்சயன் என்னும் ஒரு வர்த்தகன் இருந்தனன். அவன் வழக்கமாய் இராக்காலங்களில் வெளியூர்ச் சரக்குகளைத் தானிருக்கும் பட்டணத்திற்குக் கொண்டுவந்து விற்றுவருவான். அவ்வாறு இராக்காலத்தில் சரக்குகள் கொண்டுவருபவன் தன் பட்டணத்து ஆயத்துறைவழியாய் வந்தால் சுங்கம் கொடுக்க வேண்டுமென்று எண்ணி, அவ்வழி வாராமல் வேறொரு கள்ளமார்க்கமாய்ப் பட்டணத்துக்குச் சரக்குகளைக் கொண்டுபோய் வர்த்தகம் பண்ணி ஜீவனஞ் செய்துவந்தான். இவ்வாறு நெடுநாள் செய்துவருகையில் ஒரு நாள் அர்த்தராத்திரியில் வெளியூரினின்றும் சரக்குகள் கொண்டு, தான் வழக்கமாக வரும் கள்ளவழியாய்ச் செல்லுகையில் அம்மார்க்கத்திலுள்ள ஒரு பெரிய ஆலவிருக்ஷத்தினின்றும் ஒரு பூதம் கீழேகுதித்து அவனைத் துரத்திக்கொண்டுவர, அவன் காலடி புட்டத்திற் படும்படி மிகவும் விரைந்து ஓடியும், தலைமேலுள்ள மூட்டையின் பாரத்தாலும், பருத்துச்சரிந்த தொந்தியின் பளுவாலும் மிக்க ஆயாசமடைந்து நின்று, ஓர் சமயோசித யுக்தியால் பயம் ஒழிந்து தைரியங்கொண்டு, பின்தொடர்ந்து துரத்திவரும் பூதத்தை நோக்கி, கல கல வென்று சிரித்துக் கைகொட்டி, 'நீயா துரத்திவருகின்றாய்! அந்தோ! நான்

தெரியாமல் வீணே கால்கள் நோக இவ்வளவுதூரம் ஓடிவந்தேனே!' என்று மிகவும் அலக்ஷிய பாவமாகச் சொன்னான். அது கேட்ட பூதம் திடுக்கிட்டு, 'இவன் நமக்கு இரையாகத்தக்க சாமானிய மனிதன்; அப்படி யிருக்க, நம்மிடத்தில் சிறிதும் பயமில்லாமல் மிகவும் அலக்ஷியமாகச் சிரித்துப் பேசுகின்றானே, இதன் காரணத்தை அறிவோம்' என்றெண்ணி, அந்த வர்த்தகனை நோக்கி, 'நீ என்னை வேறு யாரென்றெண்ணி இவ் வளவுதூரம் ஓடிவந்தனை!' என்று கேட்க, 'இப்பட்டணத்திலுள்ள ஆயக்கார னென்றெண்ணி இவ்வளவு தூரம் பயந்து வந்தேனே யல்லாமல், நீ துரத்தி வருகின்றா யென்று தெரிந்தால் ஓரடியும் அப்புறம் எடுத்து வைக்கமாட்டேனே' என்று அவன் சொன்னான். இதைக் கேட்டுப் பூதம் வியப்பும் பயமும் கொண்டு அவனை நோக்கி, 'அந்த ஆயக்காரன் என்னிலும் மிக்க வல்லவனா?' என்று கேட்டது. வர்த்தகன் அந்த ஆயக்காரனுடைய வல்லமைக்கும் கொடுமைக்கும் அளவு ஏது! அப்படிக்கு இல்லாவிட்டால் யாருக்கும் அஞ்சா நெஞ்சமுடைய நான் இவ்வளவு திகில்கொண்டு ஓடி வருவேனோ!' என்று மிகவும் வற்புறுத்திக் கூறினன். 'அப்படியானால் எனக்கு அந்த ஆயக்காரனைக் காட்டு' என்று பூதம் கேட்க, 'இப்படி வந்தால் நீ அவனைக் காணமாட்டாய், இந்தச் சரக்கைக் கொண்டுபோய் என் வீட்டில் சேர்த்துவிட்டு, மறுபடியும இந்தக் கோணியைக் கொண்டுவந்தால், நான் உன்னை இந்தக் கோணிப் பையில் போட்டுக் கட்டிக்கொண்டு போகிறேன், அப்போது நீ அவனுடைய வல்லமையையும் கொடுமையையும் காண்பாய்' என்று அவன்கூற, பூதம்

அதற்கிசைந்தது. பின்பு வர்த்தகன் அந்தப் பூதத்தைக் கோணிப்பையிற் போட்டுக் கட்டி மூட்டைபோல் தலையில் வைத்துக்கொண்டு ஆயத்துறைவழியே செல்லுகையில், ஆயக்காரன்வந்து, 'நீயார்? இந்த மூட்டையில் இருப்பது என்ன?' என்று வினாவலும், தனஞ்சயன் ஒன்றும் பேசாது மௌனமாய்ச் சென்றமையால், ஆயக்காரன் கோபித்துவந்து தலைமீது இருந்த மூட்டையைக் கீழேதள்ளிக் காலால் பலதரம் உருட்டி உதைத்துத் தன் கையிலுள்ள எழுத்தாணியால் பல இடங்களில் குத்திப் பார்த்து, 'இது என்ன சரக்கு?' என்று வர்த்தகனைக் கேட்டான். அவன் 'இது புளிமூட்டை' என்று ஆயக்காரனிடத்தில் சொல்ல, அவன் அது புளியோ அல்லவோ என்பதைக் கண்டறியும்படி பின்னும் எழுத்தாணியால் மூட்டை முழுவதும் குத்திக்குத்திப் பார்த்தான். பிறகு, தனஞ்சயன் அதற்குரிய சுங்கத்தைக் கொடுத்துவிட்டு, அம்மூட்டையை எடுத்துக்கொண்டு கொஞ்சதூரம் போய், அதனை அவிழ்த்துப் பூதத்தை வெளியேவிட, அது அவனைப் பார்த்து, 'அப்பா! நீ சொன்னவை யாவும் உண்மையே, அந்த ஆயக்காரன் மிகக் கொடியவன், அவன் என்னை உதைத்து எழுத்தாணியால் குத்தினபடியால் என் சரீரமெல்லாம் சல்லடைக் கண்கள் போலாயிற்று; அவனை நினைத்தால் இன்னம் என் உள்ளம் நடுங்குகிறது, கர்ப்பம் கலங்குகிறது; நீ என்னைத் தூக்கிக்கொண்டு வாராமல் இன்னும் சிறிதுநேரம் அங்கு வைத்திருப்பையேயானால் நான் செத்தேபோயிருப்பேன்; நீ அந்தச் சமயத்தில் செய்த நன்றிக்கு நான் என்ன கைம்மாறு உனக்குச் செய்யப் போகிறேன், எனக்குப் பிராணபிச்சை தந்த உனக்கு

இம்மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் பரிசாகக் கொடுத்தாலும் அந்த நன்றிக்குச் சமானமாகாது; ஆயினும் என்னால் கூடிய உதவி யேதாவது நான் செய்தலே வேண்டும். நான் போய் இந்த நகரத்து அரசன் மகளைப் பிடித்துக்கொள்ளுகிறேன்; எவ்வளவு வல்லமையுள்ளமாந்திரிகன் வந்து ஓட்டினாலும்போகேன், நீவந்து “ஆயக்காரன்” என்று கூறியமாத்திரத்தில் விட்டுப் போவேன், நீ அரசனிடம் வேண்டிய பொருள் பெற்றுச் சுகித்து வாழ்ந்திரு’ என்று பூதங் கூறிப்போய் அரசன் மகளைப் பிடித்துக்கொண்டது. மாந்திரிகத்தில் வல்லவர்கள் பலர் வந்து தங்களால் கூடியமட்டில் ஓட்ட முயன்றும் அதுபோகாமையைக் கண்டு, அரசன் பெருந் துயருற்று, ‘இப்பூதத்தை ஓட்டுபவர்கட்குப் பதினாயிரம் பொன் தருகிறேன்’ என்று பறையறைவிக்க, வர்த்தகன் போய், அரசன் அனுமதியின்மேல் இராஜபுத்திரியருகிற் சென்று, ஆயக்காரன் என்னும் பெயர் கூறிய மாத்திரத்தில் அப்பூதம் விட்டுப்போய்விட்டது. அது கண்ட அரசன் அளவிறந்த மகிழ்ச்சியடைந்து, தான் முன்சொல்லியிருந்தபடி பதினாயிரம் பொன்னையன்றி இன்னும் வேண்டிய பரிசுகளையும் அவனுக்குத் தந்து அனுப்பினான். பிறகு அப்பூதம் வேறொரு அரசன் மகளைப் பிடித்துக்கொண்டது. வர்த்தகனை அவ்வரசன் பிடிக்கவே அங்கும்போய் ‘ஆயக்காரன்’ என்றுசொல்ல, அப்பூதம், ‘நீ ஏன் இங்கு வந்தாய்?’ என்று கோபித்துக் கேட்க, ‘ஆயக்காரன் உன்னைத் தேடிக்கொண்டுவருகின்றான், அது கூறும்பொருட்டு இங்குவந்தேன்’ என்று சொல்லவே பூதங்கேட்டு, ‘நல்லகாரியஞ்செய்தனை, இனிமேல் நானிருக்கும் இடத்து எங்கும் வாராதே’ என்று

கூறி அவ்விடம்விட்டு நீங்கி மற்றொரு தேசத்தரசன் மகளைப்போய்ப் பிடித்துக்கொண்டது. வர்த்தகன் அரசனிடத்தில் மிகுந்த பொருள் பெற்றுக்கொண்டு திரும்பினான். சுற்றுப் பக்கங்களிலுள்ள பிரதேசங்களெங்கும் தனஞ்சயன் பூதம் ஓட்டுவதில் மஹா வல்லவனென்று பெயர் வந்தபடியால், இம் மூன்றாவது அரசனும் தன்னைப் பலவகையாலும் பீடித்தபடியாலே, மறுபடியும் பூதமிருக்கும் இடத்தை நாடிச்சென்று, அங்கும் ஆயக்காரன் என்னும் பெயரை அவன் கூறியபோது, பூதம் கோபாவேசங் கொண்டு, அவ்வர்த்தகனைக் கொல்ல வரலும், அவன் ஆயக்காரன் இறந்துபோய்விட்டனன், அச்சுபசேதி கூறவந்தேன்’ என்று மொழிந்தனன். பூதம் கோபந்தணிந்து, ‘இன்றோடு என் பீடையொழிந்தது; நீ இவ்வரசனிடத்தில் வேண்டிய நிதி பெற்றுக்கொண்டு போய் வாழ்க’ என்று கூறியது. அதற்கு வர்த்தகன், ‘ஒன்று வேண்டும், நீ இனிமேல் இந்தப் பிராந்தியத்திலிராமல் நூறு யோசனைக் கப்புறமுள்ள யாரையாவது போய்ப் பிடித்துக்கொள்ளவேண்டியதேயன்றி, அதற்கு உள்ளேயிருக்கும் எவரையும்பற்றி யலைக்கக்கூடாது; இதுதான் நீ எனக்குச் செயற்பால தாகிய கடைசி உதவி’ என்று அதைக் குறையிரக்க, அது, ‘அப்படியே ஆகட்டும்’ என்று கைபோட்டு வாக்குதத்தஞ் செய்து, அந்தப் பிரதேசத்தை விட்டொழிந்தது. பிறகு தனஞ்சயன் திரண்டபொருள் பெற்றுக் குபேரனைப்போல் சுகித்து வாழ்ந்திருந்தனன். வர்த்தகன் தன் அறிவின் நுட்பத்தால் பொல்லாத பூதத்தினிடத்தி லிருந்து தப்பித்துக்கொண்டது மல்லாமல், அதைக்கொண்டே பெருஞ்செல்வனும் ஆயினன். ஆகையால், அறிவினும்

சிறந்தபொருள் உலகத்தில்யாதுமில்லை. அறிவினாலாகாத காரியம் திரிலோகத்தும் கிடையாது. ஆகவே, அதை அபிவிருத்திசெய்ய ஒவ்வொருவரும் முயலவேண்டும்.

---

7. கோபமும் அதனாலாகிய தீமைகளும்

பிறர் நம்மிலும் மிக்கவரா யிருக்கினும், நமக்குச் சமானமானவரா யிருக்கினும், நம்மிலும் குறைந்தவரா யிருக்கினும் ஒரு காரியத்தைச் செய்தவிடத்து அது நம்முடைய மனதுக்கு ஒவ்வாவிட்டாலும் நமக்குத் தீங்கை விளைத்தாலும் அவர்களை அந்தக் காரியத்துக்காகத் தண்டிக்க நம்மைத் தூண்டும் துர்க்குணமே கோபம் என்று சொல்லப்படும். இந்தக்குணம் எப்படிப்பட்ட சத்புருஷனுக்கும் ஒரு காலத்தில் உண்டாகும் என்றுமனோதத்துவலட்சணசாஸ்திரிகள்கூறுகிறார்கள். சகல உணர்ச்சிக்கும் மூலாதார ஸ்தானமாகிய மூளையினின்றும் பற்பல நரம்புகள் தேகமுழுவதும் வியாபித்திருக்கின்றன. இந்நரம்புகள் ஆன்ம நிலையாகிய மூளைக்கு உணர்ச்சி உண்டாகும்படி விஷயங்களை உள்ளுக்குக் கொண்டுபோய்த் தெரிவிக்கும் நரம்புகளென்றும் மூளையினிடத்துண்டாகும் உணர்ச்சியை வெளிக்குத் தெரிவிக்கும் நரம்புகளென்றும் இருவகையாயுள்ளன. ஒருவன் நம்மைத் திடீரென்று தோளில் குத்தினான் என்று வைத்துக்கொள்வோம். நம்மை அந்தப்படி குத்தினவனை மறுபடியும் நாம அதேமாதிரியாய்க் குத்த வேண்டியதென்று நாம் எண்ணங்கொள்ளுவதற்குமுன்னமே அவனைக் குத்தவோ வேறே எதற்கோ வெகு

சீக்கிரத்தில் நம்முடைய கையெழுகின்றது. இதற்குக் காரணம் யாது? அவன் நம்மைக் குத்தியவுடனே அதி சீக்கிரத்தில் அவ்விஷயத்தை ஆன்மநிலையாகிய மூளைக்குச் சில நரம்புகள் தெரிவிக்கின்றன. அங்கு நிகழும உணர்ச்சியை வெளிக்குத்தெரிவிக்கும் வேறே சில நரம்புகள் அதி அற்புதமான வேகத்துடன் இயங்கி, நம்முடைய கரத்தைத் தூக்குகின்றன. ஸ்மரணை தப்பித் தூங்கிக்கொண்டிருக்கும் ஒருவனுடைய கரத்தை நாம் கிள்ளினால் அவன் தன்னுடைய கரத்தை உடனே மடக்கிக்கொள்ள வேண்டுமென்கிற எண்ணங்கொள்ளாதிருந்தும் அவனுடையகரம உள்ளுக்கு வாங்கிக்கொள்வதையாகிலும், முன்னிருந்த நிலையிலிருந்து வேறே நிலைக்குத் திரும்புவதையாகிலும் நாம் பிரத்தியக்ஷமாகக் காண்கிறோம்; உணர்ச்சியுண்டாகும்படி விஷயங்களை உள்ளுக்குக் கொண்டுபோய்த் தெரிவிக்கும் நரம்புகள் மூளையினிடத்து உண்டாகும் உணர்ச்சியை வெளிக்குத் தெரிவிக்கும் நரம்புகள் என்னும் இருவகை நரம்புகளின் அதிவேகமான இயக்கமே மேலெடுத்துக் காட்டப்பட்டதற்குக் காரணம். ஒருவன் தன் மொழிகளினாலாவது செய்கைகளினாலாவது நமக்கு அருவருப்பான உணர்ச்சியை உண்டாக்குங் காலத்து உடனே அவனைத் திட்டவாகிலும் அடிக்கவாகிலும் வேறே யாதொரு தீங்கைச் செய்யவாகிலும் எழும் மனநிலைமைக்குத்தான் கோபம் என்று பெயர். மேற்கண்ட இருவகையான நரம்புகளின் இயக்கமே அதற்குக் காரணம். ஒவ்வொருவனுக்கும் அவ்விருவகையான நரம்புகளும் அமைந்திருக்கிறபடியினால் ஒவ்வொருவனுக்கும் கோபம் என்பது இயல்பில் உதிக்கத்தக்கதோர் குண-

மாயிருக்கிறது. இவ்விருவகையான நரம்புகளும் தாழ்ந்த ஜீவராசிகளுக்கும் அமைந்திருக்கிறபடியால் அவற்றிற்கும் கோபம் என்னுங் குணம் இயற்கையாயிருக்கிறது. இக்குணத்தை முழுவதும் போக்குவது சாத்தியமல்லாத காரியமாயிருக்கினும் ஒவ்வொருவனும் அதைத் தன்னுடைய புத்தியினால் அடக்குதல் கூடும். அந்தப்படி அதை அடக்காதுவிடுவோமாயின் பெருத்த தீமைகள் நமக்கும் ஏனையோர்க்கும் சதா உண்டாய்க்கொண்டேவரும். நம்மைச் சூழ்ந்திருப்பவர்கள் தத்தம் மனதுக்கிசைந்தவாறு பற்பல காரியங்களைச் செய்துகொண்டு வருகையில் அபிப்பிராய பேதத்தினால் நம் மனதுக்கு அவை ஒவ்வாவிடத்து நம்மிடத்தில் கோபம் பிறந்துகொண்டேயிருக்கும். அதைக் கூடுமானவரையில் அடக்க முயலவேண்டியது நம்முடைய கடமை. அறுவது (முழுவதும் அற்றுப்போவது) சினம் என்று கூறாமல், ஆறுவது (தணியத்தக்கது) சினம் என்று ஔவையார் கூறிய அருமையை யோசித்துப் பார்க்கையில், மனிதனுடைய மனோதத்துவலட்சணத்துக்குச் சினம் இயற்கையான குணம் என்பதையும், அதை அறவே போக்குவது எப்படிப்பட்டவனுக்கும் அசாத்தியமென்பதையும், அதைஒவ்வொருவனும்தன்னுடைய மனோதிடத்தைக்கொண்டு தணிக்க வேண்டியதென்பதையும் அறிவிக்கவே அம்மாது சிரோமணி அங்ஙனம் கட்டளையிட்டிருக்கிறதாகத் தெரியவருகிறது. ஒரு பெரியவர் ஒரு ஊரில் யார் என்ன சொன்ன போதிலும் கோபிக்கிறதேயில்லையென்று பிருதுகூறிக்கொண்டிருந்தார். அதைக் கேள்வியுற்ற ஒரு அகசியக்காரன் அவரிடத்திற் சென்று, 'சுவாமீ, தங்களுக்கு எப்போ-

தும் கோபம் வருகிறதேயில்லையா ?' என்றான். அவர் அவனைநோக்கி, அதிசாந்தமாய், 'அப்பா, எப்போதும் வருகிறதேயில்லை' என்றார். மறுபடியும் அவன் அப்படியே கேட்டான். அவர் அதற்கும் அதேமாதிரியாய் விடை பகர்ந்தார். மீண்டும் மீண்டும் முப்பது நாற்பது தரம் அவன் அதே கேள்வியைத் திருப்பித் திருப்பி மூச்சுவிடாமல் கேட்டுக்கொண்டேயிருந்தான். அப்போது அப்பெரியவர், 'சீ ! சீ ! நீ முட்டாளாயிருக்கின்றாய், எத்தனை தடவை உனக்கு நான் உத்தரவு சொல்லுகிறது! போ' என்று முகங்கடுத்துக் கூறினார். இதைக் கண்ட மாத்திரத்தில் அவன், 'சுவாமீ, இதோ தங்களுக்கு கோபம்பிறந்ததே, எப்போதும் கோபிப்பதில்லை என்னும் பிரதாபம் வெட்ட வெளிச்சமாயிற்றே' என்று பரிகாசம் செய்துகொண்டே போய்விட்டான். ஆகையால், எப்படிப்பட்டவனிடத்தும் ஒருகாலத்தில்கோபம் தன்னையறியாமலே உதிக்கும். காமக் குரோதாதிகளை அறவே விட்டொழிந்த துறவிகளுக்கும் சினம் ஒவ்வொருகாலத்தில் உண்டாதலியற்கை; ஆனால், அவர்களுடைய கோபம் பிறருக்கு நன்மையையே விளைக்கும் என்றும், ஆதலால் அதை மறக்கருணை யென்றும் சாஸ்திரம் கூறுகிறது.

கோபம் பொரும்பாலும் மனோதிடம் அற்றவனுக்கும் அகங்காரிக்குமே அடிக்கடி உண்டாகும. பாலியர்களுக்கும் வயோதிகர்களுக்கும அடிக்கடி சொற்ப விஷயங்கள் காரணமாகவும் கோபம் உண்டாகின்றதை யோசிக்கையில், கோபத்தை அடக்குவதற்கு மனோதிடமும் தேகதிடமும் அத்தியாவசியம் என்று தெரியவருகிறது. கோபம் உண்டாகும்போது மாத்-

திரம் அதைச் சற்றே அடக்கிவிட்டால் அதின் வேகத்துவம் வெகுசாய்க் குன்றும். 'ஒருவரைக் கோபிக்க மனம் எழும்போது நெடுங்கணக்கை ஒருவிசை முகபாடமாகச் சொல்லிவிட்டுப் பிறகு கோபித்துக்கொள்' என்று ஒரு சாஸ்திரியார் கூறுகிறார். அதை ஒரு தரம் சொல்லி முடிப்பதற்குள்ளாகக் கோபம் தணிந்தே போய்விடுமென்பது அனுபவப் பிரசித்தம்.

'கோபமே பிறவியைக் கொடுக்குங் கொள்கையாம்
கோபமே யறிவினைக் குறைக்குங் குட்டநோய்
கோபமே தாயையுங் கொல்லுந் திண்படை
கோபமே தவத்தினைக் குலைக்கும் பேயரோ.'

'கோபத்தாற் கௌசிகன் தவத்தைக் கொட்டினான்
கோபத்தால் நகுடனும் கோல மாற்றினான்
கோபத்தா லிந்திரன் குலிசம் போக்கினான்
கோபத்தா லிறந்தவர் கோடி கோடியே,'

என்று கோபத்தால் விளையும் பெருங்கேட்டைக் குறித்து மூதறிஞர் பலவாறாகக் கூறியுள்ளார். உலகசரித்திரமும் அதற்குச் சாக்ஷி பகரத்தக்கதா யிருக்கிறது.

ஒருவன் நமக்கு யாதொரு தீங்கான காரியத்தைச் செய்கையில் அவனை அதற்காகத் தண்டிக்க வேண்டும் என்கிற எண்ணங் கொண்டல்லவா நாம் அவனைக் கோபிக்கின்றோம்! நாம் அந்தச் சமயத்தில் கோபியாது பொறுமையுடன் சும்மா இருந்துவிடுவோமாயின் நமது பொறையுடைமையே, அவன் மனச்சான்றுடையவனா யிருந்தால், அவனது மனதை யறுக்கும்; இது மனோ தத்துவலட்சணம். அந்தச் சமயத்தில் நாம கோபித்துக் கொண்டு அவனுக்குப்பிரதிபலனாக யாதொரு தீங்கைச்

செய்வோமானால் அப்போது எவ்வளவு நமக்கு மனச் சந்துஷ்டி உண்டாகுமோ அதைவிட ஆயிரமடங்கு அதிகமாய்ப் பொறையுடைமையாற் பெருமகிழ்வு பின்பு உண்டாகும். இக்கருத்தை யமைத்தே,

'மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்.' என்றும்,

'ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.' என்றும்

தெய்வப்புலவர் தமது தமிழ் மறையில் கூறியுள்ளார். அன்றியும் மனிதனிடத்திலுள்ள ஒவ்வொரு துர்க்குணமும் பிறர்க்கும் தனக்கும் தீமையைத் தரத்தக்கனவா யிருக்கின்றன. அவற்றுள் சில தனக்கே பெருத்த ஹானியைக்தரத்தக்கனவாகவும், மற்றும் சில பிறர்க்கே பெருத்த ஹானியைத் தரத்தக்கனவாகவும் இருக்கின்றன. இவ்விரு வகைக் குணங்களுக்குள் தனக்கே பெருத்த ஹானியைத் தரத்தக்கனவற்றி லெல்லாம் கோபம் நடுநாயகம். ஆகையினால்தான்,

'தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லும் சினம்.'

என்று நாயனார் தமது உத்தரவேதத்திற் கட்டளை யிட்டிருக்கின்றனர். தன்னிலும் மிக்காரிடத்தில் ஒருவன் கோபங்கொள்ளக் கூடா தென்று நாம் வற்புறுத்திக் கூறவேண்டுவதில்லை; ஏனெனில், அதனால் விளையும் பலப்பிராப்தியே அவனுக்கு வெகுசீக்கிரத்தில் புத்தி கூறத்தக்கது. ஒருவன் தன்னிலும் கல்வி, செல்வம், பலம் முதலியவற்றில் குறைந்தவனிடத்துச் சினங் கொள்ளா திருத்தலே பெருமை யாகும். அதுதான்

பொறையுடைமைக்கு அழகு. 'எல்லாம் ஒறுக்கும் மதுகை யுரனுடையாளன் பொறுக்கும் பொறையே பொறை.' என்று மேலோர் கூறியிருக்கின்றார்கள்.

இவ்வளவு தீயதான ஓர்குணத்தை ஜகதீசன் மனிதனிடத்து ஏன் அமைத்து வைக்கவேண்டும்? என்னும் வினா நம் ஒவ்வொருவரிடத்தும் ஒவ்வோர் காலத்தில் நிகழக்கூடும் அல்லவா? லௌகீகதருமத்தை நடத்திக் கொண்டுவரும் ஒருவனிடத்தில் கோபம் முற்றுமே இல்லையென்று வைத்துக்கொள்வோம். அவன் கூட்டுறவு கொள்ளும் ஏனையோரிடத்துப் பொய், களவு, கொலை முதலிய தீக்குணங்களிருக்கிறபடியினால் அவற்றினின்றும் அவன் தப்பிப் பிழைப்பதற்காவது அவற்றை அவர்களிடத்தில் இராமல் ஓட்டுவதற்காவது அவனிடத்தில் சிறிது சினம் இருத்தல் அத்தியாவசியம். ஒருவன் தன்னுடைய அருமைப்புதல்வன் தீயகாரியங்களைச் செய்யக் கண்டகாலத்து உடனே அவனைத் தண்டிக்க வேண்டியது தந்தையாகிய தன்னுடைய பெருங் கடமையல்லவா? அவனை அந்தப்படி தண்டிப்பதற்குச் சினம் சிறிது வேண்டியதல்லவா? அவனிடத்தில் சினம் முற்றுமே இல்லையானால் அப்புதல்வனைத் தண்டிக்க அவனுக்கு மனம் எழுதல் அரிது. இவ்விதமான சினத்தைத்தான் பெரியோர் **மறக்கருணை** என்பார். ஆகவே நடுவுநிலைமையுடனிருந்து இந்த விஷயத்தை யோசித்துப் பார்க்குமிடத்து, சினம் வரம்பு கடந்து சென்றால் ஜனசமூக வாழ்க்கைக்கும் சினங் கொள்வோனுக்கும் பெருங் கேட்டைத் தருமென்றும், ஏனைய தீக்குணங்க ளிருக்கிறபடியினால் அவற்றை அளவுகடக்க வொட்டாமைக்குச் சினம் சிறிது இருத்-

தல் ஜனசமூக வாழ்க்கைக்குக் கேடல்லவென்றும், எப்படிப்பட்ட சாதுவினிடத்திலும் சினம் முற்றுமே யில்லாமற் போகாதென்றும், அதைக் கூடியவரையில் தணித்துக்கொண்டே வருவதுதான் உத்தம புருஷனுடைய குணமென்றும் தெரியவருகிறது.

3418

---

8. இந்தியாவில் காகிதம் செய்வது

நம்முடைய கருத்தை நெடுந்தூரத்திலிருப்பவர்களுக்குத் தெரிவிப்பதற்கும், நமக்குப்பின் நெடுங்காலம் வரையில் உலகத்தாருக்கு நம்முடைய கருத்தை அறிவிப்பதற்கும் அனுகூலமானது எழுத்தேயாம். எழுத்து மூலமாக விவேகிகளுடைய அபிப்பிராயங்கள் ஏககாலத்தில் நாற்புறமும் பரவி, யாவருக்கும் பயன்படுவதற்கு அச்சுயந்திரமே தக்க துணைக்கருவியாயிருக்கின்றது. அச்சுயந்திரம் கண்டுபிடிக்கப்படுவதற்குமுன் உலகத்தார் அடைந்திருந்த அபிவிருத்திக்கும், அது கண்டுபிடித்தபின்பு அவர்களடைந்துவரும் அபிவிருத்திக்கும் உள்ள பேதத்தைப் பகுத்தறிவுபெற்ற ஒவ்வொருவரும் எளிதில் அறிந்துகொள்ளக்கூடும். அச்சுயந்திரம் கண்டுபிடித்ததற்குமுன் அந்தந்தத் தேசங்களில் இங்குமங்கும் சிற்சில விவேகிகள் அத்திபூத்தது போல் தோன்றி மஹாபண்டிதர்களென்று பெயரெடுத்தார்கள். அந்தத் தேசங்களிலுள்ள ஏனையோர் அக்கல்விமான்களுடைய அற்புதமான அபிப்பிராயங்கள் அடங்கிய கிரந்தங்களை எளிதில் வாசித்துணருவதற்கு அச்சுயந்திரம்போன்ற தக்கதோர் கருவி அமையப் பெற்றிலராதலின் அவ்விவேகிகளுடைய கல்வியும்

மதிநுட்பமும் அவர்களோடே அழிந்தன. அவற்றால் ஏனையோர் பயன் அடைந்திலர். அச்சுயந்திரம் உண்டாகி, அதனால் உலகத்தார் பயன்பட்டு வரும் இக்காலத்தில் நாற்புறமும் கல்வி பரவுவதற்கு அனுகூலம் உண்டாயிருக்கிறபடியால் சராசரியில் எல்லோருமே ஒருவாறாகக் கல்விமான்களாயிருந்து வருகிறார்கள். ஜன சமூகவாழ்க்கைக்குக் கல்வியைக் கரைகண்டுணர்ந்த மஹாபண்டிதோத்தமன் ஒருவன் இருப்பதைக் காட்டிலும் சராசரியில் எல்லோருமே அவசியமாய்த் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்களைத் தெரிந்து கொண்டுசாதாரணக்கல்விமான்களாயிருப்பதேஉத்தமம். ஜனங்கள் நாகரிகமடைந்து மேன்மேலும் அபிவிருத்தியாவதற்கு அச்சுயந்திரம், மேற்காட்டப்பட்ட ஹேதுவினால், தகுந்த கருவியா யிருக்கிறதென்று நிச்சயித்த பிறகு, அந்த அச்சுயந்திரம் என்னும் அருமையான கருவி நன்றாய் இயங்கி யாவருக்கும் பயன்படுவதற்கு இன்றியமையாததா யிருக்கிற மற்றொரு வஸ்துவைப் பற்றி யோசிக்கவேண்டியது அவசியம். அந்த வஸ்து காகிதம் என்பதேயாம். ஆகவே உலகத்தின் மேன்மேலுயர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் மூலகாரணமாயிருப்பது காகிதமென்றே துணிந்து கூறலாம். முற்காலத்தில் ஜனங்கள் காகிதத்திற்குப் பிரதியாகப் பிராணிகளின் சருமங்களையும் சில விருட்சங்களின் பட்டைகளையும் ஓலைகளையும் உபயோகித்து வந்தார்கள்; நிரந்தரமா யிருக்கவேண்டிய சாசனங்கள் முதலியவற்றைச் சிலைகளிலும் செப்பேட்டிலும் எழுதிவந்தார்கள்.

காகிதம் உண்டாக்கும் விதத்தைப் பிரதமத்தில் கண்டு பிடித்தவர்கள் சீனாதேசத்தவர்களென்று தெரிய-

வருகிறது. ஐரோப்பாகண்டத்தில் அதை உற்பத்தி செய்யும் விதத்தைக் கண்டுபிடித்ததற்கு அநேக நூற்றாண்டுகளுக்குமுன்னமே அது சீனாதேசத்தவர்களுக்குத் தெரிந்திருந்தது. அதிநுட்ப புத்தியுள்ள சீனா தேசத்தவர்கள் பஞ்சு, சணல், வைக்கோல், கம்பளி கொண்டான் அல்லது முசுக்கட்டைச் செடி, மூங்கிற் செடியின்பட்டை ஆகிய இவற்றைக்கொண்டு காகிதம் செய்கிறார்கள். ஜபான்தேசத்தவர்களும் காகிதம் செய்வதில் அதிக பிரசித்தியடைந்தவர்கள். அந்தத் தேசத்தில் 262 விதமான காகிதங்கள் செய்யப்பட்டு வருகின்றன. அவற்றில் அநேகம் விசிறி, குடை, புஷ்பம், மெழுக்குவர்த்திமுதலியவற்றிற்காகவும், கைக்குட்டை, லாந்தர் முதலியவற்றிற்காகவும், தண்ணீர் படாமல் பாதுகாப்பா யிருப்பதற்கான உடைகளுக்காகவும், கயிறு திரிப்பதற்காகவும், ஐரோப்பாகண்டத்தைச் சேர்ந்த தேசங்களில் காகிதத்தைக்கொண்டு என்னென்ன வேலைகள் செய்யப்பட்டு வருகின்றனவோ அவைகள்யாவற்றிற்காகவும் உபயோகமாகிவருகின்றன. சீனாதேசத்தவர்களும் ஜபான்தேசத்தவர்களும் செய்து வரும் பலவகைமாதிரியான காகிதங்கள் யாவற்றையுங் குறித்துப் பூர்த்தியாய் எழுதப்புகுந்தால் மிகவும் பெருகும்; இவ்விரண்டு தேசத்தவர்களும் காகிதம் செய்வதிலும், அதற்கு ஏற்ற வஸ்துக்களைச் சேகரிப்பதிலும், அவற்றைத் தக்கபடி பொருத்தி உபயோகிப்பதிலும் யாவரும் வியக்கத்தக்க மகா நுட்பபுத்தி உடையவர்கள்.

ஐரோப்பாகண்டத்தில் காகிதம்செய்யும் வேலையில் ஜனங்கள் பதினான்காம் நூற்றாண்டிலே முதல் முதல்

பழகத்தலைப்பட்டார்கள். 1588-ம் வருஷம் இங்கிலாந்தில் காகிதயந்திரத்தை ஜர்மன் தேசத்துக் கனவான் ஒருவர் ஏற்படுத்தினார். அதற்காக அக்காலத்து மகா ராணியாயிருந்த எலிஜபத் என்னும் சீமாட்டி அவருக்கு நயிட் என்னும் பட்டம் தந்தனர்; அன்றியும், பத்து வருஷம் வரையில் காகிதம் செய்வதற்காக வேண்டிய கந்தைத்துணிகள் முதலியவற்றைச் சேகரிக்க அவருக்கே சுவதந்தரம் கொடுக்கப்பட்டது. அதுமுதல் காகிதயந்திரம் இளம்பிறைபோல் அபிவிருத்தியடைந்து வந்தது. பெரும்பாலும் கையினாலேயே பிரதமத்தில் செய்துவந்தபோது மூன்று வாரத்தில் எவ்வளவு காகிதம் உற்பத்தியாயிற்றோ அவ்வளவும் இப்போது யந்திர இயக்கத்தின் வேகத்தினால் மூன்று நிமிஷத்தில் உற்பத்தியாகின்றது. ஒரு நிமிஷத்தில் 25 சதுர அடியுள்ள திவ்வியமான காகிதத்தைச் செய்துவிடலாம்; எனவே, பத்துமணி நேரத்துக்குள் 15,000 சதுர அடியுள்ள காகிதத்தை உற்பத்தி செய்யலாம். காகிதமோ ஒரு அங்குலத்தில் ஆயிரத்தில் ஒரு பகுதி எவ்வளவோ அதிலும் மிகக் குறைந்த கனமும் இல்லாத அவ்வளவு சன்னமாகவும் இருக்கக்கூடும்.

இங்கிலாந்து தேசத்தில் காகிதம் செய்வதற்காகக் கிழிந்துபோய் எறிந்துவிடப்பட்ட கந்தைகளையே வர்த்தகர்கள் முக்கியமாய் உபயோகித்துவருகிறார்கள். இந்த வேலைக்கன்றி அந்தக் கந்தைகள் மற்றொன்றுக்கும் உதவியில்லை. உதவியற்றதென்று நாம் நினைத்துக்கொண்டிருக்கும் வஸ்துவும் உதவியாகிறதல்லவா? ஆகையால், கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட தாவர சங்கம வஸ்துக்களுக்குள் எவ்வளவு அற்பமானதையும்

நாம் திரஸ்கரிக்கலாகாது. யாவற்றையும் கடவுள் பெருத்த நன்மைக்காகத்தான் சிருஷ்டி செய்திருக்கிறார் என்பதற்கு வேறு பிரமாணமும் வேண்டுமோ? காகிதம் செய்வதற்காக வருஷந்தோறும் இங்கிலாந்து தேசத்துக்கு 15,000டன் எடை கந்தைத்துணி வேண்டியதாயிருக்கிறது. இதை ஏனைய தேசங்களிலிருந்து அத்தேசத்தவர்கள் ஏற்றுமதி செய்துகொள்ளுகிறார்கள். சில வருஷங்களுக்குமுன்னர் குதிரை லத்தியினால் செய்யப்பட்ட ஓர்வித காகிதத்தைக் கொண்டு ஸ்வீடன் தேசத்தில் சமாசாரபத்திரிகை ஒன்று அச்சிடப்பட்டு வந்தது. அமெரிக்கா கண்டத்தில் தக்ஷிண பாகத்தாருக்கும் உத்தரபாகத்தாருக்கும் யுத்தம் நேரிட்டிருந்தபோது கந்தைத்துணி அகப்படாமற்போன சமயத்திலே வேறு என்னென்ன வஸ்துக்களைக் கொண்டு காகிதம் செய்யக்கூடும் என்று விவேகிகள் வெகுசாய் ஆராய்ச்சி செய்யத்தொடங்கினார்கள். மரத்தைக்கொண்டும் காகிதம் செய்யப்பட்டுவந்தது. மரத்தைக்கொண்டு காகிதம் செய்வதில் அதிக பிரசித்தி அடைந்தவர்கள் அமெரிக்காதேசத்தில் ஓர்கம்பெனியார். கிரேட்பிரட்டன், அயர்லாண்டு ஆகிய இவ்விரண்டு ஐக்கியப் பிரதேசங்களிலும் 1873-ம் வருஷத்தில் 812-க்கு அதிகமாய்க் காகித யந்திரசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. அந்தச் சாலைகளுக்குள் ஒன்றில் உதவியற்ற கந்தைத் துணிகளைக்கொண்டு சராசரி நாளொன்றுக்கு நாற்பதுமைல் நீளமும், ஐந்து அடிக்கு அதிகப்பட்ட அகலமுமுள்ளகாகிதம் செய்யப்பட்டுவரும் அருமைப் பாட்டை யோசித்துப் பார்க்கையில், சீமையிலே காகித யந்திரங்கள் இயங்கும் அற்புதக் காட்சியைக்

குறித்தும் அதனால் விளையும் பயனைக் குறித்தும் என்னென்று கூறுவது ?

இந்துதேசத்தில் குடிஜனங்கள் விஸ்தாரமாயிருக்கிறார்கள். அவர்கள் நாள்தோறும் தத்தம் புறக்கடைகளிலும் குப்பைத்தொட்டிகளிலும் வீதிகளிலும் ஜலதாரைகளிலும் உதவியற்றதென்று எறிந்துவிடும் கந்தைத் துணிகளுக்கு அளவுகிடையாது. அவைகளெல்லாம் தேசக்ஷேமத்துக்கும் விவேக அபிவிருத்திக்கும் மூலாதாரமான கல்வியை நாற்புறமும் பரவும்படி செய்வதற்கு இன்றியமையாததா யிருக்கும் காகிதத்தைச் செய்வதற்கு அதிக உபயோகமானவைகள். இந்த விஷயத்தை நம்மனோர் நெடுங்காலம் வரையில் அறிந்துகொள்ளாமல் அல்லல்படுவது, வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கும், நதியில் நின்று கொண்டு தண்ணீருக்கும் ஏக்கங்கொள்வதை ஒக்கும். கந்தைத்துணி ஒன்றுதானா ? காகிதம் செய்வதற்கு உபயோகமாகத்தக்க மற்றும் அளவிறந்த வஸ்துக்களும் இந்தியாவில் ஏராளமாய் நாற்புறமும் எடுப்பாரின்றிக் கிடக்கின்றன. ஐரோப்பியர்கள் தங்களுடையநுட்பமதியைக் கொண்டு பற்பல பண்டங்களைச் சேகரித்து யந்திரங்கள் சகிதமாய் விலை சரசமாகக் காகிதம் செய்வதற்காக வேண்டிய யந்திரங்களை ஏற்படுத்திச் சொற்பசெலவிலே அதிக பிரயாசையில்லாமல் தாங்களும் உலகத்தாரும் பயனடைந்து சுகித்தற்கு வேண்டிய காரியங்களைச் செய்து வருவதுபோல் இந்து தேசவாசிகளாகிய நம்மனோர் ஏன் செய்தல்கூடாது ? முதல் முதல் காகிதம் செய்யத்தலைப்பட்டவர்கள் பலவிதமான பழங் கந்தைத் துணிகளையும் கெட்டுப்போன காகிதங்களையுமே

ஆதாரமாகக் கொண்டிருந்தார்கள். உலகத்தில் காகிதம் எவ்வளவுவேண்டியதாயிருக்கிறதோ அவ்வளவுக்கு இவ்வஸ்துக்களைக்கொண்டு காகிதஞ்செய்வது போதாமலிருந்தபடியினால், பிற்காலத்தில் அவர்கள் பச்சை நார்களையும் பற்பல புல் பூண்டு முதலிய வஸ்துக்களையும் தேடவேண்டியதாயிற்று. இவ்வாறு சில காலங் கழிந்த பின் இந்த வஸ்துக்களும் போதாமற்போயின. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் காகிதம் செய்து விற்கும் வியாபாரத்தை மேற்கொண்ட வர்த்தகர்கள் புல் பூண்டு மரம் முதலாகிய பற்பல தாவரவஸ்துக்களைத் தேடத் தலைப்பட்டார்கள். இதையெல்லாம் யோசித்துப் பார்க்கையில், உலகத்திலே நாகரிகமும் விவேகமும் கல்வியும் அபிவிருத்தி யாய்க்கொண்டு வருந்தோறும் காகிதம் எவ்வளவு அத்தியாவசியமான பொருளாக மதிக்கப்பட்டு வருகின்றதென்பதை நாம் கரதலாமலகம் போல் அறிந்துகொள்ளலாம். இந்து தேசத்தவர்கள் தங்களுடைய தேசத்தில் காகிதம்செய்வதற்கு உபயோகமாகத் தக்க பலவேறுமாதிரியான நார்களைத் தரத்தக்க விருட்சங்களும் செடிகளும் எங்கும் ஏராளமா யிருந்தும், காகிதம் செய்வது என்னும் பரோபகாரார்த்தமான வேலையில் எவ்வளவும் நாட்டம் வைப்பதில்லை. காகிதம் செய்வதற்குவேண்டியமேற்கண்டவஸ்துக்கள் இந்தியாவில் ஏராளமாய் அமைந்துகிடப்பதுபோல் உலகத்தில் வேறு எந்தத்தேசத்திலும் இல்லையென்றே சொல்லலாம். சில புத்திமான்கள் இந்தியாவில் விளையும் நார்மயமான தாவரவஸ்துக்களில் பலவற்றை ஆராய்ச்சிசெய்து பார்த்ததில், சகலவிதமான காகிதங்களையும் செய்வதற்கு அதிக விலைசரசமானதாகவும் வேலைக்கு மிக்க உபயோ-

ஆகரமானதாகவும் உள்ள வஸ்துக்களைக் குறைவின்றி எக்காலத்தும் இந்தியாதேசத்தில்தான் அடையக்கூடும் என்று தீர்மானித்தார்கள். காகிதம் செய்வதற்கு மிகவும் உபயோகமாகும் நார்களைத் தரத்தக்க செடிகளுக்குள்ளே இந்தியாதேசத்திலேயே உற்பத்தியாகும் முக்கியமான சிலவற்றை அடியில் காட்டுகிறோம்:

பண்டை, துத்தி, நார், காசினி அல்லது புளிச்சை, சணல்நார், கெஞ்ஜாச்செடி, தென்னைமட்டை, பனைமட்டை, ஈச்சஞ்செடி, கமுகமரம், தாழஞ்செடி, அன்னாசிச்செடி, சாதாரண வாழைமரம், மருள், கற்றாழை, பற்பல மூங்கில்கள், பிரம்புகள், கருப்பஞ்செத்தை, அரரூட்டு மஞ்சள் இஞ்சி ஆகிய இவற்றின் தண்டுகள், இலைகள், வைக்கோல், பற்பல புல் பூண்டு முதலியவை.

இந்தத் தேசத்தில் அநேக இடங்களிலே கருப்பஞ் செத்தைகளும் வாழைமட்டை முதலியவைகளும் ஏராளமாயிருக்கின்றன. அவைகளெல்லாம் பயனின்றி அழுகிப்போகின்றன, அல்லது எரிகரும்பாய்ச் சுட்டு எரிக்கப்பட்டு வருகின்றன; அல்லது நிலத்துக்கு எருவாய் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. அவைகளில் நமக்கு வேண்டியவற்றைக் காகிதம் செய்வதற்காக உபயோகித்துக் கொண்டும், மிகுந்ததை ஐரோப்பாவுக்கு ஏற்றுமதிசெய்தும் நம்மனோர் பயன் அடையலாமே! இந்தப்படி அளவிறந்த வஸ்துக்கள் இமயமலைமுதல் சேதுபரியந்தமிருந்தும் நாம் அவற்றைத் தகுந்தபடி உபயோகிக்கத் தெரிந்துகொள்ளாதபடியினால் அவை வீணாய் மண்ணுக் கிரையாகின்றன. பூத பௌதிக சாஸ்திரங்களில் நன்றாய்க் கல்விபயின்றும், கூடியமட்டில் செல்வப் புதல்வர்களாயு மிருக்கப்பெற்ற இந்துக்கள்

உத்தியோகம் என்னும் சேவகத்தை ஒருபொருளென மதியாது காகிதயந்திரசாலை வைப்பது முதலிய ஸ்வயேச்சையான வாழ்க்கையையே விரும்புவாராக. காகிதம் செய்வதற்கு அத்தியாவசியமாக வேண்டிய அரும் பொருள்களில் மிகவும் வறியவர்களே யாயினும் இங்கிலாந்து தேசத்தவர்கள் அதிக பிரயாசைப்பட்டு மிக்க பொருள் விரயஞ்செய்து அப்படிப்பட்ட வஸ்துக்களை இந்தியாவிலிருந்தும் வேறே பிரதேசங்களிலிருந்தும் அயர்விலா ஊக்கத்துடன் தேடிக்கொண்டுபோய் திவ்வியமான காகிதவகைகளை உண்டாக்கி இந்துதேசவாசிகளாகிய நமக்கும் ஏனைய தேசத்தவர்களுக்கும் கொடுத்துக்கொண்டு வருகின்றார்களல்லவா! அதனால் அவர்கள் எவ்வளவு பயனடைகிறார்கள்! மேற்படி வஸ்துக்கள் யாவும் நம்முடைய தேசத்திலே இயற்கையில் உற்பத்தியாகத்தக்கவைகளாகவும், நாம் எவ்வளவும் மெய்வருந்தாமலே அதிக சொற்பவிலைக்கு இருந்த இடத்திலிருந்தே அடையத் தக்கவைகளாவுமிருந்தும், நாம், 'பிழைப்பில்லை, பிழைப்பில்லை, என்செய்வோம், என்செய்வோம்' என்று சொல்லித் திரிவது தகுமா? சென்னை பச்சையப்ப முதலியாருடைய கல்விச்சாலையில் கல்வி பயின்றுவரும் வித்தியார்த்திகளைநோக்கி ஆர்பத்னட் ஹவுஸைச் சேர்ந்த கனம்பொருந்திய ..-மகென்ஜி என்னும் துரையவர்கள் செய்த உபந்நியாசத்தில் அவர் அடியில் வருமாறு கூறுகிறார்:

'காகிதம் என்னும் ஒரு வர்த்தகத்துக்காக மாத்திரம் இந்தியா தேசமானது ஐரோப்பாகண்டத்துக்கு வருஷந்தோறும் சற்றேறக்குறைய ஐம்பது லட்சம் ரூபாய் செலுத்துகிறது. அந்தத் தொகையில்

ஒவ்வொரு ரூபாயையும் இந்துக்கள் இந்தியாவிலேயே வைத்திருக்கவேண்டும். இந்தியாதேசத்துக்கு எவ்வளவு காகிதம் வேண்டியதாயிருக்கிறதோ அதற்கு அதிகமாய் அதைச் செய்வதற்கேற்ற வஸ்துக்கள் உங்களுடைய காடுகளிலும், புலங்களிலும் தெருப்பக்கங்களிலும் அழுகி வீணாய்க் கெட்டுப்போகின்றன. இந்து தேசவாசிகள் அக்காகிதத்தைப் பிறரிடத்திலிருந்து வாங்குவதை விடுத்துத் தாங்கள் பிறருக்கு அதனை விற்பனை செய்யவேண்டியது. நான் இப்போது உங்களுக்கு எடுத்துச்சொல்லக்கூடிய இதுபோன்ற மற்றும் அநேக வஸ்துக்களிருக்கின்றன; அவற்றையெல்லாம் இங்கு விவரித்து உரைக்க எனக்கு இப்போது நேரமுமில்லை, இது தகுந்த சமயமும் அன்று.'

---

9. விவசாயம்

பெறுதற்கரிய மானிடப் பிறவியைப்பெற்ற ஆன்மவர்க்கங்கள் இவ்வுலகத்தில் உயிர் வாழ்ந்து சுகிப்பதற்கேற்ற தொழில்கள் பலவற்றுள்ளும் விவசாயமே சிறந்தது. அதற்கு அறிஞர் உழவு என்னும் பெயரிட்டிருக்கின்றனர். உழவு என்பதற்கு வருந்தி முயலுதல் என்பது பதப்பொருள். ஏர் உழுதல், பரம்படித்தல், நிலந்திருத்தல், புழுதியாக்கல், சேடை செய்தல், விதை விதைத்தல், நாறு நடுதல், நீர்பாய்ச்சல், களைகட்டல், ஓம்புதல், விளைவறுத்தல், போர்வேய்தல், பிணையடித்தல், சேர்த்தல், பாத்தல் என்னும் பலவகைத் தொழில்களும் விவசாயத்துக்கு உறுப்பாக அமைந்திருக்கின்ற-

படியாலும், இத்தொழில்கள் பலவற்றிற்கும் வருந்தி முயலுதல் அத்தியாவசிய மானபடியாலும் விவசாயத்துக்கு உழவு என்னும் பொதுப்பெயரை மேலோரிட்டு வழங்கினுர்கள்.

எவ்வகைப்பட்ட தொழிலில் நாம் பிரவர்த்தித்து எவ்வகைப்பட்ட பெருஞ் சம்பத்தை வரையாது பெற்ருேமாயினும்,

'எல்லாம் யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பதும்
உறங்குவது மாகமுடியும்'

என்று ஆன்ருேர் கூறியபடி, தேக உபாதைகளுள் விடுதற்கு அரியதா யுள்ள பசிதீர உண்டு சுகித்தலே அச்செல்வத்தின் பெரும் பயன் என்பதற்கு ஐயமில்லை. ஒருவனுடைய பசியை நேராய்த்தணிக்கும் ஆற்றல் பெருஞ் செல்வத்துக்கு எவ்வளவுமின்று. அப் பசியைத் தணிக்கத் தக்கன பூமியில் விளையத்தக்க தானியவகைகள் முதலியன அன்றிப் பிறிதன்று. பசி யென்னும் தேக உபாதையை நேராய் நீக்கத் தக்க உழவுத் தொழிலை விடுத்துப் பிறதொழில்களிலெல்லாம் ஒருவன் மெய்வருந்தி உழலுவது நெற்குத்தி உண்ணுது உமிகுத்திக் கையிளைத்தலேயும், கறவைப்பசு இருக்க மலட்டுப் பசுவைக் கறந்து எய்த்தலேயும், கரும்பிருக்க இரும்பு கடித்து அலேவதையும், விளக்கிருக்க மின்மினித் தீக்காய்ந்து ஏக்கமுறுவதையும் ஒக்கும். இந்த விஷயத்தைக் குறித்து இவ்வளவு தூரம் வற்புறுத்திக் கூறுவது எவ்வளவும் உபசாரத்திஞல் அன்று.

மனிதன் ஆதியில் காய், கனி, கிழங்கு முதலியவற்றைப் புசித்துக்கொண்டே வருகையில் அவை தன்னுடைய உணவுக்குப் போதாமையைக் கண்டவிடத்து

அவன் அவற்றை உண்டாக்கிக்கொள்ள வேண்டுமென்னும் எண்ணங்கொண்டவனாகி, நிலத்தைப் பண்படுத்தத் தொடங்கினான். இவ்வாறு உழவுத்தொழிலில் பிரவேசிக்கத் தலைப்பட்டவன் கலப்பை செய்வதற்காக மரத்தை வெட்டுதற்குரிய கோடரி, கொழு, சால், ஏற்றம் முதலிய சகல உபகரணங்களையும் தேடவேண்டியதாயிற்று. ஆகவே உழவுத்தொழிலே ஆதியில் பஞ்ச உலோகங்கள் முதல் சகலபொருள்களையும் மனிதர்கள் தேடுவதற்கும், ஏனைய தொழில்களைப் புரிவதற்கும் காரணமாயிருந்தது. உலகத்தில் பகுத்தறிவு பெற்ற ஆன்மவர்க்கங்களாகிய மானிடர் செய்யுந் தொழில்கள் யாவும் உடலும் உயிரும் ஒன்றுபட் டிருக்கும்வரையில் சுகித்து வாழ்வதற்கே யாகையாலும், உழவுத்தொழில் ஒன்றே அவற்றுள் சிறந்ததாகையாலும் அவ்வொன்றுக்கே ஏனைய யாவும் உபகரணமாயிருக்க வேண்டியது இயல்புதானே. பிருதிவி லட்சண சாஸ்திரம், ரசாயன சாஸ்திரம், தாவரலட்சணசாஸ்திரம், விலங்கு லட்சண சாஸ்திரம், வானசாஸ்திரமுதலிய சகல சாஸ்திரங்களும் மற்றுமுள்ள பூதபௌதிக சாஸ்திரங்கள் யாவும் விவசாய சாஸ்திரம் ஒன்றுக்கே பெருங் கருவியாயிருக்கின்றன. ஒருவன் நிலத்தைத் தகுந்தபடி பண்படுத்தி அதனாலாகிய பயனைப் பூரணமாயடைய வேண்டுமானால், மேற்கண்ட இத்தனை சாஸ்திரங்களின் உணர்ச்சியைப் பெற்றிருக்கவேண்டியது அத்தியாவசியம். தற்காலத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய பிரதேசங்களில் உழவர்களாயிருப்பவர்கள் மேற்கண்ட சாஸ்திரங்களில் மஹா பண்டிதர்களாயிருக்கிறார்கள். ஆகையாற்றான், அவ்விடங்களில் உழவு

அவமானமாகிய தொழிலென்று திரஸ்காரஞ் செய்யப்படவில்லை. இந்தியாவிலே சிலகாலமாய்ப் பண்ணையாட்களென்று பெயர்பெற்ற விவேக சூனியர்களே பெரும்பாலும்உழவுத்தொழிலைக் கையாண்டுவருகிறார்களாகையால் அந்தத்தொழில் அவிவேகிக்கே யுரியதோர் தாழ்ந்த தொழிலென்று இந்துக்களுக்குள் பெரும்பான்மையோர் மதிமயக்கத்தினால் கருதுவதற்குஇடமிருக்கிறது. இந்தியாவுக்கு ஆதியில் வந்த பெருமைக்கெல்லாம் குடிகள் உழவுத் தொழிலை விசேஷமாகக் கொண்டதே முக்கிய காரணமென்பதையும், இப்போது அதற்கு நேரிட்ட சிறுமைக்கெல்லாம் அவ்வுழவுத்தொழிலைக் குடிகள் திரஸ்காரஞ்செய்வதே முக்கிய காரணமென்பதையும் ஒருவரும் மறுக்கார். இந்தியாவில் இப்போது விவசாயத்தை அலட்சியஞ்செய்து அதை அவமானமாகிய தொழில் என்று நினைப்பவர்கள் தங்களுடைய இந்துதேசத்தின் புராதன நிலைமையை அறியப்பெறாதவர்கள். தம்முன்னோராகிய மேலோர் உழவுத் தொழிலைக்குறித்து வியந்து உரைத்த அற்புத வசனங்களை அவர்கள் அறியார்போலும்.

'பூமி திருத்தி யுண்.' 'சீரைத்தேடின் ஏரைத் தேடு.' 'உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர், பழுதுண்டு வேறோர்பணிக்கு' என்றும்,

'சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.'

உலகத்தார் உழவால் வரும் வருத்தம் முலியவற்றிற் கஞ்சி, வேறுவேறு தொழில்களிற் பிரவர்த்தித்துத் திரிந்தும் அவையெல்லாம் நிலையானபயனைத் தராமையினால் கடைசியாக உழவர்கள்பின் செல்லவேண்டியதாய்

நேரிடுகிற காரணத்தினாலே உலகத்திலுள்ள எல்லாத் தொழில்களிலும் சிறந்தது உழவே என்றும், மேலோர் கூறிய அமுதவாக்கு காலத்திரயத்தும் பொய்யாகாது. உலகத்திலுள்ள பற்பல தேசசரித்திரத்தைச் சற்றே நிதானித்துப் பார்ப்போம். வெனிஸ், ஜினோவா, போர்ட்சுகல், ஸ்பெயின்முதலிய தேசங்கள் தத்தம் காலமுறையிலே வர்த்தக முயற்சிகளினால் மஹா பிரசித்தியடைந்திருந்தன. இப்போது அவற்றின் செல்வமும் பெருமையும் எங்கேபோயின! அத்தேசத்தவர்கள், தம்மைவிட வர்த்தகத்தில் அதிக முயற்சியும் கால அநுகூலமும் எய்தப்பெற்ற வேறு தேசத்தவர்கள் ஓங்க ஓங்க, மெல்லமெல்ல நாளாவர்த்தியில் க்ஷீணித்துப் போய்விட்டார்கள். விவசாயத்தில் அந்தத் தேசவாசிகளுக்குச் சிரத்தையில்லாமற்போனதே அவர்களுடைய க்ஷீணத்துக்குக் காரணம். உலக முழுவதையும் தன்னடிப் படுத்தித் தனியரசாண்டுவந்த உரோமாபுரி விவசாயத்தில் நாட்டம்வைத்து அதனை அபிவிருத்தி செய்துகொண்டு வந்தவரையில் அது செழித்து ஓங்கிக் கொண்டேவந்தது. அவ்வற்புதத்தொழிலை அசட்டை செய்து வேறு வகைகளினால் பொருள், கீர்த்தி முதலியவற்றை ஈட்டத் தலைப்பட்டது முதல் அது தேய்பிறை போல் க்ஷீணித்தது; குடி ஜனங்களுக்கு விவசாயத்தின் அருமையினையும் ஆவசியகத்தினையும் காட்டி அதில் அவர்களை முயலுவிக்கக் கருதியே இப்போதும் வருஷத்துக் கொருதடவை சீனாதேசத்துச் சக்கிரவர்த்தியார் தாமே கலப்பையைப் பற்றி நிலத்தைச் சிறிது நேரம் உழுகின்றாராம். இங்கிலாந்து தேசத்தவர்கள் நெடுங்காலம் வரையில் பயிர்த் தொழிலின் அருமைப்

பாட்டை யறியாதவர்களா யிருந்தார்கள். 1790-ம் வருஷத்தில் விவசாய அபிவிருத்திக்காக ஓர் சங்கம் அங்கு ஸ்தாபிக்கப்பட்டது. வானசாஸ்திரிகளும் ரசாயன சாஸ்திரிகளும் தாவரசாஸ்திரிகளும் பிரிதிவுலட்சண சாஸ்திரிகளும் மற்றுமுள்ளபூதபௌதிகசாஸ்திரிகளும் அச்சங்கத்தைச் சேர்ந்து தத்தம் சாஸ்திர உணர்ச்சியினால் விவசாயத்தில் பயிலத் தலைப்பட்டார்கள். விவசாய சாஸ்திரத்துக்கு மேற்கண்ட அத்தனை சாஸ்திரங்களும், அனலுக்கு வெப்பத்தைப் போலவும், நீருக்குத் தண்மையைப் போலவும், பூவுக்கு மணத்தைப் போலவும் ஒற்றுமையாயிருக்கும் விசித்திரத்தைக் கண்டு அந்த சாஸ்திரிகள் யாவரும் வியந்தார்கள்.

இவ்வுண்மையை யறியாக் கொடுமையினால் அல்லவோ விவசாயத்தைக்கேவலம் மந்தமதிகளின் தொழிலென்று சிலர் மயங்குகிறார்கள். அமெரிகா கண்டத்தில் பிரபுக்களென்று பெயர்பெற்றிருக்கிறவர்களுக்குள் பெரும்பான்மையோர் உழவர்களேயாம். நீராவி எந்திரங்களைக்கொண்டும் திவ்வியமான குதிரைகளைக்கொண்டும் மற்றும் பற்பல விலையுயர்ந்த உபகரணங்களைக் கொண்டும் அங்கு நடத்தப்படும் உழவுத்தொழிலின் விசித்திர வேலைப்பாட்டின் காட்சியைக் காணப்பெற்றோர் காலத்திரயத்தும் உழவுத் தொழிலைக் கனவிலும் இகழார். அவ்வற்புதக் காட்சியைக் கண்டுகளிக்கப் பெற்றவர்கள் பிரிதிவு முதலாய ஐம்பெரும் பூதங்களும் பஞ்ச உலோகங்களும் தாவர வஸ்துக்களும் உலகத்திலுள்ள ஏனையதொழில்களும் உழவுத்தொழில் செய்துவரும் கிருஷிகனுடைய ஏவற்பணிவிடைகளைச் செய்துகொண்டு கிடப்பதையும், உலகத்தி லுள்ள மற்-

றெல்லாத் தொழில்களைக் காட்டினும், 'உழவே தலை' என்றபடி, உழவே மகா கௌரவமான தென்பதையும், அதுவே ஸ்வயேச்சையான வாழ்க்கையென்னும் புதல்வனை அருமையாகவளர்த்தெடுக்கும் செவிலித்தா யென்பதையும் கண்கூடாகக் காணலாம் இது வரையில் விவசாயத்தைக் குறித்துப் பொதுவாய்க் கூறிமுடித்தோம். இனி இந்தியாவின் புராதன தற்கால விவசாய அபிவிருத்தியைக்குறித்து விரித்துரைப்போம்:

புராதன இந்துக்கள் உழவுத்தொழிலை உலகத்திலுள்ள எல்லாத் தொழில்களிலும் மிகச் சிறந்ததாகக் கொண்டார்க ளென்பதற்கும், அதனையே புருஷ லட்சணத்துக்குரிய தொழிலாக நன்குமதித்து வந்தார்கள் என்பதற்கும், ஏனைய எல்லாத் தொழில்களும் அதன் சார்பை நாடவேண்டிய தென்றும் அது ஏனைய தொழில்கள் யாவும் தலையெடுத்து ஓங்குவதற்கு இன்றியமையாததென்றும் கருதி யிருந்தார்க ளென்பதற்கும் அளவிறந்த பிரமாணங்களுள.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.'

யாவரும் உண்ணும்படி உழவுத் தொழிலைச்செய்து அதனால் தாமும் உண்டு வாழ்வார் எவரோ அவரே தமக்குரியராய் வாழ்கின்றவராவார்கள் என்றும், ஏனையோர் யாவரும் பிறரைத்தொழுது அதனால் உண்டு ஸ்வயேச்சை வாழ்க்கையற்று அவர் பின் செல்பவர் ஆவார்களென்றும், தாமும் மனிதராய்ப் பிறந்திருந்தும் தம்மையொத்த பிறரைத்தொழுது அவர் சிலவற்றைக் கொடுக்க அவற்றைக்கொண்டு தம் உயிர்காத்து அவர் பின் போகின்றவர்கள் அவர்க்குரியவர்களே யன்றித்

தமக்குரியவர்களல்ல ரென்றும் பொருள்படத் தெய்வப் புலவர் தமது உத்தரவேதத்தில் இக்குறட்பாவைக் கூறியுளார். ஔவையார் என்னும் மாதுசிரோன்மணியும் இக்கருத்தையமைத்தே, 'தொழுதூண்சுவையினுழுதூணினிது.' என்றும், 'மேழிச்செல்வங் கோழைபடாது' என்றும் கட்டளை யிட்டிருக்கின்றார். உழவுத்தொழிலை இவ்வளவு விசேஷமானதாக வற்புறுத்திக் கூறிய புராதன இந்துக்கள் பூதபௌதிக லட்சண சாஸ்திரங்களிலும், காலபேத லட்சணசாஸ்திரங்களிலும்,பிரிதிவு-அப்பு-தேயு-வாயு-ஆகாயம் என்னும் இவற்றின் லட்சண சாஸ்திரங்களிலும், வான சாஸ்திரங்களிலும் உழவர்கள் பயின்று பாண்டித்தியம் பெற்றிருப்பது அத்தியாவசியமென்பதைப் பலவாறாகக் காட்டியும் கூறியுமிருக்கின்றார்கள். தமிழ்நாடு செய்த தவப்பேற்றால் திருவவதாரஞ் செய்தனரென்று பெரியோரால் வியந்துரைக்கப்பட்ட மகாகவியாகிய கம்பர் உலகோபகாரமாகச் செய்தருளிய ஏரேழுபது என்னும் நூலில் உழவுநாட்கோடல், கரம்புதிருத்தல், வரம்பு கோலுதல், சேறுசெய்தல், பரம்படித்தல், வித்துவிளைத்தல், நாறுபறித்தல், நீர்பாய்த்தல், பயிர்விளைத்தல் முதலிய பற்பல தொழில்களைக் குறித்தும் கூறியிருக்கும் அருமையைப் பார்க்குமிடத்துக் கிருஷிகன் மேற்கண்ட சாஸ்திரங்களின் உணர்ச்சியைப் பெற்றிப்பது அத்தியாவசியமென்று தெரியவருகிறது. கம்பர்முதலிய வித்துவான்கள் ஏனைய வருணத்தாரைவிட வேளாளரைப் பலவாறாகச் சிறப்பித்துக் கூறியதற்குக்காரணம் அவர்கள் அம்மரபாரிடத்தில் வைத்த அபிமானந்தானென்று இப்போது சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள்; ஆனால்

உழவுத்தொழில் நீங்கலாக மற்றத் தொழில்களைக் கையாண்டுவரும் ஏனைய வருணத்தாரைக்காட்டிலும் உழவுத் தொழிலையே ஆதாரமாகக் கொண்டிருக்கும் வேளாளர்கள் அத்தொழிலால் தம்முடைய தேசாபிவிருத்திக்கும், தம்மினும் மேற்பட்ட வருணத்தாருடைய உயிர்வாழ்க்கைக்கும் ஆதாரமா யிருக்கிறார்களென்பதை மேற்கண்ட புலவர்கள் சத்தியமாய் அறிந்தகாரணத்தினால்தான் வேளாண் மரபினரை அங்ஙனம் புகழ வேண்டிவந்தது. அம்மரபாரிடத்து வைத்த அபிமானத்தினால் அப்புலவர்கள் அவர்களை வியந்தார்களென்று கூறுவது எவ்வளவும் பொருந்தாது.

‘உழுவா ருலகத்தார்க் காணி யஃதாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து.’

உழவுதொழிலைச் செய்யமாட்டாமல் பிறதொழில்களிலே மேற்செல்வோர் யாவரையும் தாங்குதலால் உழவர்கள் உலகத்தாராகிய தேருக்கு அச்சாணியாவார் என்று பொருள்படப் பொய்யாமொழி பிறந்திருக்கின்றது.

உழவுத்தொழிலை இவ்வளவு விசேஷமாகக் கொண்டிருந்த இந்துக்கள் நெடுங்காலமாய் வேற்றரசருடைய படையெழுச்சியினாலும், கொடுங்கோன்மை யினாலும், ஸ்வயேச்சை வாழ்க்கை குன்றியதனாலும், மன அமைதி கெட்டதனாலும், விவசாயத்தைப்பற்றிய அளவிறந்த சாஸ்திரங்கள் கையாளுவாரற்று நாளாவர்த்தியில் க்ஷீணித்தமையாலும், விவசாயத்தில் சிரத்தை குன்றி வேறுவகையான தொழில்களில் பிரவர்த்திக்கத் தலைப்பட்டார்கள். உழவர்கள் நிலத்தைப் பண்படுத்தி அதனாலாகிய விளைவைப் பெறுமளவும் அதற்கேற்ற மற்றத்

தொழில்களை அந்தந்த காலத்தில் செய்து முடிப்பதற்காக அந்நிலத்திற்குச் சமீபமான ஓரிடத்திலேயே குடியிருப்பது அத்தியாவசியம். மகமதியர்கள் முதலிய வேற்றரசர்களும் உள்நாட்டுக் குறுநில மன்னர்களும் இந்துதேசத்தின் குடிகளை அல்லும் பகலும் இம்சித்து வந்தபடியால், அவர்கள் இன்ன ஊர்வழியாக வருகிறார்களென்னும் செய்தியைக் கேட்டமாத்திரத்தில் செவியில் நாராசம் பட்டதுபோல் துக்கித்துத் திகில் அடைந்து மனம் திகைத்துத் தடுமாறித் தம்முடைய பெண்டுபிள்ளைகள் பண்டு பதார்த்தங்களோடு குடிகள் உடனே அவ்வூரைவிட்டு ஓடவேண்டியவர்களாயிருந்த காரணத்தினாலே உழவுத்தொழிலை அவர்கள் எங்ஙனம் இருந்த இடத்திலிருந்து மன அமைதியுடன் நடத்துதல் கூடும்! இதுபோன்ற அளவிறந்த காரணங்கள் உழவுத் தொழிலுக்கு இடையூறாயிருந்தன என்பதற்கு இந்துதேச சரித்திரம் சாட்சி பகரத்தக்கது. இந்தப்படி உழவுத்தொழிலைக் கைவிட்ட இந்துக்கள் நன்றாய் வாசித்தும் சேவகம் முதலியவற்றில் பிரவர்த்திக்கத் தலைப்பட்டார்கள். வாசித்தவர்களெல்லாம் வெகுசாய்ச் சேவக உத்தியோகத்தையே நாடிவந்தபடியாலும், சாஸ்திர உணர்ச்சியில்லாத பண்ணையாள்கள் முதலிய விவேக சூனியர்களே நாட்டுப்புறங்களில் பிற்காலத்து உழவுத்தொழிலில் பிரவர்த்தித்து வந்தபடியாலும், புராதன இந்துக்களுடைய சித்தாந்தத்தையும் விவசாய சாஸ்திரங்களையும் முற்றும் அறியாதவர்களாய்த் தற்காலத்திய இந்துக்கள் விவசாயத்தைத் திரஸ்காரம் செய்கிறார்கள். சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் உழவுத் தொழிலுக்கு இடையூறா

யிருந்த வேற்றரசர் படையெழுச்சி, கொடுங் கோன்மை முதலியவை இப்போது இராமையினாலும், நிலத்தை ஆழமாய் உழுது பயிர்செய்வதற்கு ஏற்ற பற்பல கலப்பைகளும் நீராவி எந்திரங்களும் மற்றும் தகுந்த உபகரணங்களும் ஆங்கிலேயர்களால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறபடியினாலும், விவசாயத்துக்கு இன்றியமையாதனவாகிய பூதபௌதிக முதலிய சாஸ்திரங்களை நம்முடைய தேசத்துச் சிறுவர்கள் கல்விச்சாலைகளில் ஐயந்திரிபற உணர்ந்து வருகிறபடியினாலும் நம்மவர்கள் வெகுலேசாய் உழவுத்தொழிலை இனியேனும் அபிவிருத்திசெய்யலாமே. மேற்கண்ட கலப்பைகள் முதலிய உபகாரணங்களை விலைக்குவாங்குவதற்கு மூலதிரவியம் இல்லாத வறியவர்களாய் நம் தேசத்துக்குடிகள் இருக்கிறார்களே, அவர்கள் விலையுயர்ந்த அப்படிப்பட்டவைகளை எப்படி வாங்குதல் கூடும்? என்று சிலர் கேட்கிறார்கள். அது நியாயந்தான். நம்முடைய துரைத்தனத்தார் அப்படிப்பட்ட குடிகளுக்கு முன்னதாகப் பொருளுதவி செய்துகொண்டு வரச் சித்தமாயிருக்கிறார்க ளென்றும், அப்படி சகாயமாக வாங்கிய தொகை பூர்த்தியாய்ச் செல்லாகிறவரையில் குடிகள் குறிக்கப்பட்ட தவணைகளில் தங்களுடைய நிலத்தீர்வையோடு சேர்த்துக் கொஞ்சம் கொஞ்சமாக அதைத் தீர்த்துக்கொண்டு வரலாமென்றும் இப்போது சட்டம் ஏற்பட்டிருப்பதை நம்மனோர் அறியார்போலும். இந்தப்படி துரைத்தனத்தா ரிடத்திலிருந்து முன்னதாகப் பொருளுதவி பெற்றுக்கொள்ள வேண்டுமானால் குடிகள் பற்பல நிர்ப்பந்தமான நிபந்தனைகளுக்கு உட்படவேண்டியதாயிருக்கிறதே? என்று

சிலர் ஆட்சேபிக்கிறார்கள். அவர்கள் செய்யும் ஆட்சேபனைகள் சரியானவைகளாகத் தோன்றவில்லை. ஒன்றுமில்லாத குடிகளை நம்பி முன்பணம் கொடுப்பவர்கள் அத்தொகை தங்களுக்கு மறுபடியும் செல்லாவதற்காகவும், அந்தத் தொகை எதற்கென்று வாங்கப்படுகிறதோ அந்த வேலைக்காகவே அது உபயோகிக்கப் பட்டுவருகிறதாவென்று பார்ப்பதற்காகவும் வேண்டிய ஏற்பாடுகளையும் நிபந்தனைகளையும் துரைத்தனத்தார் செய்வது நியாயந்தானே. இந்தப்படி உதவி பெற்றுக்கொள்ள விருப்பமில்லாத பட்சத்தில் அந்தந்த கிராமத்திலுள்ள குடிகள் ஒன்று சேர்ந்து தொகுப்புத் தொகுப்புகளாகப் பங்குவிகிதம் ஏற்படுத்திக்கொண்டு மொத்தத்தில் சேரும் தொகைக்கு மேற்கண்ட விலையுயர்ந்த உபகரணங்கள் முதலியவற்றை வாங்கிச் சத்தியத்தைக் கைசோரவிடாது ஒருவரை ஒருவர் வஞ்சிக்காமல் சகோதரவாஞ்சையுடன் உழவுத்தொழிலில் பிரவர்த்திப்பார்களாகில் அவர்களுக்கும் அவர்களுடைய தேசத்துக்கும் க்ஷேமம் உண்டாகும் என்பதற்கு எவ்வளவும் சந்தேகமில்லை. இதற்கு முக்கியமாய் வேண்டியது ஒற்றுமையேயாம். அதைவளர்க்க நம்மவர்கள் பலமுகத்தாலும் முயலவேண்டும். முயற்சி ஒன்றுமாத்திரம் இருக்குமாகில் இவ்வுலகத்தில் ஆகாததும் உண்டோ?

> 'இலமென் றசைஇ யிருப்பாரைக் காணி
> னிலமென்னு நல்லா ணகும்.'

பொருள் எம்மிடத்து இல்லையே, என் செய்வோம் என்று சொல்லிக் கொண்டு சோம்பித் திரிபவர்களைக் கண்டால் பூமி என்னும் பெண் சிரிப்பாள் என்று

பொருள்படும் பொதுமறைவாக்கியத்தை நம்மனோர் பலகாலும் சிந்தித்து முயற்சியைக் கைசோரவிடாது ஒற்றுமையுடன் விவசாயத்தில் பிரவர்த்திப்பாராக.

---

10. மூளையினால் ஆகத்தக்க வேலையும் அதை நடத்தும் விதமும்.

தேகத்திலுள்ள எல்லா உறுப்புகளும் இயங்குவதற்கும், இவ்வியக்கத்தினால் நமக்கு உண்டாகும் சகல உணர்ச்சி பேதங்களுக்கும் மூளையே பிரதானமானது. அதை ஆன்மாவின் நிலையென்று மனோதத்துவ சாஸ்திரிகள் கூறுவர். தேகத்திலுள்ள கரணங்கள், தத்துவங்கள் முதலிய யாவற்றினும் அது மிகவும் சிறந்ததென்பது, தேகத்தின் எல்லாப் பாகங்களினும் மிகவும் திண்ணியமண்டைஓடு அல்லது கபாலத்துக்குள் கடவுள் அதை அமைத்து வைத்திருக்கும் அருமையினாலேயே தெளிவாய் விளங்குகிறது. 'நான் நினைக்கிறது நெஞ்சில் இருக்கிறது, வாயில் வரவில்லை,' 'அவன் வயிற்றைக் கிழித்தால் வாரடைக்கும் அக்ஷரங் கிடையாது.' என்னும் சாதாரண பழக்கச் சொற்களை ஆதாரமாகக் கொண்டு, மூளையினுடைய அருமைப் பாட்டையும், சகல எண்ணங்களுக்கும் அதுவே உற்பத்தி ஸ்தானம் என்பதையும் புராதன இந்துக்கள் அறிந்திலரென்று சில நவீன சாஸ்திரிகள் கூறுகிறார்கள். லலாடஸ்தானம், பிரம்மரந்திரம், துவாதசாந்தம் என்னும் பதப்பிரயோகங்களையும், 'எண்சாணுடம்புக்கும் சிரசேபிரதானம்' என்னும் பழமொழியின் தத்துவார்த்தத்தையும், சகல

வியாதிகளுக்கும் தைலவர்க்கங்களைக்கொண்டு சிரசில் பிரயோகிக்க வேண்டியதென்று இந்துக்களின் ஆயுள் வேதம் முறையிடும் உண்மைகளையும் அவர்கள் உணர்ந்திலர்போலும். ஏனைய எல்லா உறுப்புக்களையும் இயக்கத்தக்க ஆன்மநிலையும், உணர்ச்சி ஸ்தானமும் எண்ணமுதிக்கும் ஆதி பீடமும் சிரசு என்பதை அறிந்தே நம்மனோர் சிரசைப் பிரதானமாகக் கொண்டார்கள்.

விடாது வருந்தி வாசிப்பதினால் மூளையின் சக்தி அதிகரித்துப் புத்தி விசாலப்படுகிறது. அதனால் மூளை எவ்வளவுங் கெட்டுப்போகிறதில்லை; தேக அசௌக்கியத்தினாலும், மனோவியாகூலங் களினாலும், பயம் திகில் முதலிய சங்கடங்களினாலுமே மூளைவெகுசாய்க் கெட்டுப் போகின்றது.

புரூசே என்பவர் சொல்லுகிற சங்கதியாவது:— சேனையில் காப்டெனா யிருந்த தாவர்னீர் என்பவர், தேகாரோக்கிய ஸ்திதியில் இருக்கையில், கெட்ட சமாசாரமடங்கிய ஒரு கடிதத்தை வாசிக்கையிலே இடி விழுந்தாற் போல் அசைவற்று நின்று, பாரிசவாய்வு கண்டு, பேசச் சக்தியற்றவரானார். சில நாளைக்குப் பின்பு சொஸ்தமாகி வருகையில், அவருடைய மனைவியினிடத்திலிருந்து ஒரு கடிதம் வந்தது; அதை வாசித்தவுடனே உதிரம் தலைக்கேறிப் பேச்சற்று, அசைவற்று, அறிவுகெட்டு மூன்று தினத்தில் இறந்து போனார். அவருடைய தலையைப் பரிசோதித்துப் பார்க்கையில், தலையிலுள்ள இரத்த நாடிகளில் உதிரம் அடைத்துக்கொண்டு மூளையில் சிறு கட்டிகள் எழும்பி யிருந்தன.

இத்தியாதி அனுபவப் பிரசித்தமான காரியங்களை வாசிக்கும்போது மூளை கெட்டுப் போவதற்குக் காரணம் மனோ வியாகூலத்தை விளக்கத்தக்க தோற்றங்களென்றே தெரியவருகிறது. நாம் வருந்தி வாசிப்பதினாலேயே மூளை கெட்டுப்போகிறதென்பது சாஸ்திர அயுக்தம். தேகத்தை ஆரோக்கிய ஸ்திதியில் வைத்துக்கொண்டும், போஜனம் உட்கொண்டவுடனே ஒருமணி நேரம்வரையில் மூளைக்கு அதிக வேலை தராமலும் மாத்திரம் இருப்போமாகில் எவ்வளவு பிரயாசைப்பட்டு நாம் வாசித்தல் முதலிய மனோவேலைகளைச் செய்துகொண்டுவந்தாலும் மூளை கெட்டுப்போவதற்கு இடமிராது. காலக்கிரமம் தப்பிப் போஜனம் உட்கொள்ளுவதினாலும், அமிதமாய்ச் சாப்பிடுவதினாலும் சாப்பிட்டவுடனே ஆசோதையின்றி மனோ வேலையில் பிரவர்த்திப்பதினாலும், வியாகூலங்கள் முதலிய சஞ்சலங்கள் மனதைக் கவரவொட்டுவதினாலுமே தான் மூளை கெட்டுப்போய் அகாலமரணம் நேரிடுகிறது.

11. உலுத்த குணம்.

ஒருவன் புண்ணியவசத்தால் செல்வத்தைப் பெற்றவிடத்துத் தானும் அனுபவிக்காமலும் பிறருக்குக் கொடாமலும் அதைப் பூதம் போல் காத்திருப்பதனாற் பயனென்! அதைத் தான் நன்றியில் செல்வம் என்று விவேகிகள் வெறுப்பது. உலுத்தன், அதிக செலவாளி ஆகிய இவ்விருவரும் ஒருவிதத்தில் குற்றமுடையவர்களே யாயினும் அதிக செலவாளியின் பொருள் நாற்புறமும் பரவுகிறபடியால் அர்த்தசாஸ்திர

சித்தாந்தப்படி, தான் கெட்டாலும் அவனால் ஏனையோர் புலனடைவதற்கு இடமிருக்கிறது. ஜனசமூகவாழ்க்கைக்கு உலுத்தனைப்போல் உதவியற்றவன் எவனும் இல்லை.

> 'ஈத்துவக்கு மின்பம் அறியார்கொல் தாமுடைமை
> வைத்திழக்கும் வன்காணவர்.'

தம்முடைய பொருளைப் பிறருக்கு வழங்காமல் அதனாலாகிய பிரயோசனத்தை யிழக்கும் அருளற்றவர்கள் ஈகையினால் விளையும் மகிழ்ச்சியை அறியமாட்டார்கள் போலும்! என்று பொருள்பட தெய்வப்புலவர் கூறியுள்ளார். தன்னுடைய தேகத்துக்குப் பெருங் காப்பாயிருந்த கவசகுண்டலங்களையும் ஆன்மாவுக்கு அருந் துணையாயிருந்த பெரும் புண்ணியத்தையும் ஈகையாக வழங்கிய கர்ணனும், 'பொல்லா வறுமுலைச் சுவைதொறும் சுவைதொறும் பால்காணாமற் குழவி தாய்முக நோக்க மனைவி யென்முக நோக்க யானும் நின்முக நோக்கி வந்தனன் குமணா.' என்று தன்னை வந்தடுத்த வித்துவானுக்குத் தன் இன்னுயிரையுங் கொடுக்கப் பின்னிடாத குமணனும், சுக்கிராசாரியாகிய மந்திரி வேண்டா மென்று கூறியதையுந் தடுத்து, 'இன்னுயிரேனுங் கொள்ளுநரீது கொடுப்பது நன்றால்.' என்று துணிந்து பூதானங் கொடுத்த மஹாபலியும் ஈத்துவக்கும் இன்பத்தை அறிந்தவர்களென்றே தெரியவருகிறது.

ஓரூரில் பரம உலுத்தனொருவனிருந்தான். அவனுடைய உலோபத்தன்மையை அறியாமல் அவனிடத்தில் ஒரு சங்கீதவித்துவான் பரிசுபெறக் கருதி ஒரு

நாள் காலையில் சென்றான். அவனைக் கண்டமாத்திரத்தில் உலுத்தன் முகமன்கூறி, அவனை ஒருபுறம் இருத்தி, 'ஐயா, பாடலாம்' என்றான். அப்புலவன் வஞ்சனையின்றி சங்கராபரணம், காம்போதி, தோடி, தன்னியாசி, பியாகடை முதலிய அருமையான இராகபேதங்களைக்கொண்டு கல்லுங் கரைந்து உருகுமாறு, அன்று சூரிய அஸ்தமனவரையில்பாடி நெஞ்சுவறண்டு இளைத்தான். உலுத்தனோ இடையிடையே எழுந்து அகத்துக்குட்சென்று ஆகாராதிகளை அருந்திவந்து பாட்டைச் செவியார விடாது கேட்டுக்கொண்டிருந்தான். அவ்வித்துவான் இளைத்துச் சோர்வதைக்கண்ட வன்னெஞ்ச உலுத்தன் தன்னுடைய வேலைக்காரனை விளித்து, 'அடா, ஒரு பெரியதட்டில் ஆயிரம் பூவராகனையும் ஜோடு சால்வையையும் எடுத்துவை' என்றான். இதைக்கேட்ட புலவன் மனவெழுச்சியுடன் பைரவி, கல்யாணி, பூபாளம் முதலிய இன்னும் மஹா அருமையான இராகங்களைக்கொண்டு இராத்திரி பன்னிரண்டு மணிவரையிலும் பாடி மெய்சோர்ந்தான். அதுவரையிலாவது போதும் என்று சொல்லாமல் உலுத்த சிகாமணி தன் வேலைக்காரனை மீண்டும் விளித்து, 'அடா, அந்தத் தட்டில் நான்கு காசிப்பீதாம்பரங்கள், இரண்டு ஜதை கடகங்கள், இருபது கல்லிழைத்த பதக்கங்கள், பத்துமோதிரங்கள், இவற்றையும் எடுத்து வை' என்று கூவினான். இதைக்கேட்ட புலவன் அயர்வுநீங்கி சூரியோதயம்வரையில் மூச்சு பிடித்துக்கொண்டு மனக்களிப்புடன் கேதாரகௌளம் முதலிய இன்னும் சிறந்த இராகங்களைப் பேராசையால் பாடி மூர்ச்சையானான். பிறகு எழுந்து புலவன், 'தனவானே, இனி என்னால்

முடியாது, எனக்கு விடைதரவேண்டும்' என்றான். அதற்கு உலுத்தன்,* 'ஐயா, தாங்கள் அதிகபிரயாசை எடுத்துக்கொண்டீர், நல்லது, போய்வாரும்' என்றான். இதைக்கேட்டு, நிற்கவும் சக்தியற்ற புலவன் பிரமித்து ஒன்றுந் தோன்றாமல் தெருவாயிற்படிவரையில் உலுத்தன் முன்னும் தான் பின்னுமாகச் சென்றபோது, உலுத்தன், 'நல்லது, போய்வாரும்' என்று மீண்டும் சொல்லித் திரும்பினான். இதைக்கேட்ட சங்கீதவித்துவான் வெட்கத்தையும் விட்டு, 'மகாப்பிரபு, ஒன்றுமில்லாமல் அனுப்பிவிடுகிறீரே, பெரியதட்டும் சால்வைகளும் பூவராகனும் ஆபரணங்களும் என்னாய் முடிந்தன!' என்று வாடியமுகத்தோடு கேட்டான். அதற்கு அந்தப் பரம உலுத்தன் 'ஓய், நீர் என்ன எனக்குச் செய்தது!என்காதுக்கு இனிப்பாய் ஏதோ சிலவற்றை நீர் சொன்னீர்,உம் காதுக்கு இனிப்பாய் ஏதோ சிலவற்றை நான் சொன்னேன்; நான் உமக்கு வாரிக்கொடுக்க நீர் என்ன எனக்கு வாரிக்கொடுத்தது! போம், போம்' என்று துரத்திக் கதவைச் சாத்திக்கொண்டான்.

ஆகையால், உலுத்தனிடத்தில் அன்பு, அருள் ஆகிய இவை மருந்துக்கும் கிடையா ; ஈகை உள்ளானிடத்து அவை பூரணமாய்க் குடிகொண்டிருக்கும் ; ஏனெனில்,

> " அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
> என்பும் உரியர் பிறர்க்கு. "

12. கைத்தொழில்களும் கல்விபயின்ற இந்துக்களும்.

கைத்தொழில்கள் மனிதனுக்கு அத்தியாவசியமானவை. உலகத்தில் அதிக மிலேச்சத்தன்மை பெற்றவர்களுக்கும் நாகரிக மடைந்தவர்களுக்கும் அத்தொழில்கள் இன்றியமையாதன. ஒருவன் எவ்வகைப்பட்ட சம்பத்துடையவனா யிருக்கினும், கல்விமானா யிருக்கினும், அவனைப் பசி, தாகம், குளிர் முதலியவை பீடிக்காமல் விட்டகலா. இவற்றை நிவர்த்தித்துக்கொள்ள மனிதனுக்குக் கைத்தொழில்கள் அத்தியாவசியமானவை. சகலஜீவராசிகளிலும் மனிதன் இயற்கையில் ஆதரவற்றவன் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். பிற உயிர்கள் தம்மை வருத்தும்போது தமக்குப் பாதுகாப்பாயிருக்கும்படி கொம்பு முதலிய கருவிகளையும், குளிர் வெய்யில் மழை முதலியவற்றால் சங்கடம் நேரிடாதபடி சருமம் உரோமம் இறகுமுதலியவைகளையும் விலங்காதிகளுக்குக் கடவுள் அமைத்திருப்பதுபோல் மனிதனுக்கு அவர் யாதொன்றும் அமைத்து வைக்கவில்லை; ஆகவேபுறத்துறுப்பின் லக்ஷணத்தை ஆராய்ந்து பார்க்கையில் எல்லாப்பிராணிகளிலும் மனிதன் மிகவும் ஆதரவற்றவன் என்று தெரிய வருகிறது. ஆகையால், மனிதன் தன்னுடைய பாதுகாப்புக்காக வேண்டிய சகல அம்சங்களையும் தன்னுடைய விவேகத்தைக்கொண்டு கரசரணாதி அவயவங்களைத் தக்கபடி உபயோகித்துக் கொள்ளவேண்டியதென்பதே கடவுளின் கருத்தென்பதற்கு ஐயமில்லை. ஏனைய பிராணிகளுக்குப் பகுத்தறிவு என்னும் அருங் குணத்தைக் கடவுள் அமைத்து வைத்திலராதலின்,

அவை தம் பாதுகாப்புக்காக வேண்டியன இன்னின்ன என்பதை உணரச்சக்தியற்றிருக்கிறபடியினாலே அவைகளுக்கு இயற்கையில் அத்தகையகருவிகளை ஈசுவரன் அமைத்து வைப்பது நியாயந்தானே? தனக்கு வேண்டியவற்றை உணர்த்தி அவற்றைச் சவதரித்துக் கொள்வதற்கான வகையைக் காட்டத்தக்க பகுத்தறிவைக் கொடுக்கப்பெற்ற மனிதனுக்கு அப்படிப்பட்டகருவிகளை இயற்கையில் கடவுள் அமைத்து வைப்பது அனுவசியந்தானே ? மேற்காட்டப்பட்ட நியாயங்களினால், மனிதன் தன் பகுத்தறிவைக்கொண்டு கரசரணாதி அவயவங்களினாலேவேலைசெய்வதுஎவ்வளவும்அவனுடைய கவுரவத்துக்கு ஹானியைத் தரத்தக்கதல்ல என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளவேண்டிவரும். இவ்வுண்மையை உணரப்பெறாத சிலர் மெய்வருந்தி வேலைசெய்யும் உழவர்கள் முதலிய தொழிலாளிகளை அலட்சியம் பண்ணுகிறார்கள். மெய்வருந்தி உழைத்து வேலைசெய்வதினால் அல்லவா கரம்பான காடுகளெல்லாம் சிங்காரத் தோட்டங்களாகத் திருந்தி ரமணீகரமாகின்றன? உழவுத் தொழிலினாலல்லவா நமக்குப் பிராணாதாரமாயிருக்கும் நெல், கோதுமை, முதலிய சகல தானியங்களும் விளைந்து களஞ்சியத்தில் வந்து சேருகின்றன ? உழைப்பினாலல்லவா காட்டிலுள்ள பஞ்சும் ஆட்டின்மீதிலுள்ள மயிரும் பட்டுப்பூச்சிகள் தரும் பட்டும் திவ்வியமான ஆடைகளாகவும் கம்பளங்களாகவும் மெத்தைகளாகவும் அரசன்முதல் யாவருக்கும் உபயோகமாகிவருகின்றன ? பொடிப்பொடியாய் உதவியற்றிருக்கும் அற்பப் புழுதிகள் திண்ணிய செங்கற்களாவதும், அரசன் கொலு வீற்றிருக்கத்தக்க மாடமாளிகை கூடகோபுரங்களாக

அமைவதும் உழைப்பினாலல்லவா ? புழுதிமயமாயிருக்கத்தக்க பஞ்ச உலோகங்களும் வெளிப்பட்டுத் தம் நிஜ சொரூபத்தோடு பற்பல எந்திரங்களாவதும் நாணயங்களாவதும் ஒளிவீசும் ஆபரணங்களாவதும் உழைப்பினாலல்லவா ? ஆரணியங்களிலுள்ள விருட்சங்கள் நாம் கடல்மார்க்கமாய் உலகெங்கும் உலவுவதற்கான நாவாய்களாய் அமைவதற்கு உழைப்பல்லவா காரணம் ? மனிதன் மெய்வருந்தி வேலைசெய்வதினால் ஆகாதகாரியமும் உண்டோ? மஹாவிருட்சங்களையும் பட்டணங்களையும் அழித்துக்கொண்டு வரும் மகத்தாகிய நதிகளைப் பாலங்கள் மூலமாய் மனிதன் கடக்ககூடியவனாயிருப்பதற்கும், காற்றும் நுழைவதற் கிடமிராத பர்வதங்களை அவன் ஊடுருவிக்கடப்பதற்கும் காரணமாயுள்ளதெது? உழைப்பன்றோ? பிரிதிவி, அப்பு, தேயு, வாய்வு, ஆகாசம் என்னும் ஐந்து பூதங்களும் மனிதனுக்கு ஆட்பட்டு அவனுடைய குற்றேவல்களைச் செய்து வருகின்றன அல்லவா! பிராணாதாரத்துக்கு அத்தியாவசியமாய்வேண்டிய காற்று நுழைவதற்கிடமிராத பூமியின் அடிப்புறத்தில் சென்று உலோகங்களிலிருக்கும் கனிகளைச் சோதிப்பதும், பெருநதி, சமுத்திரம் இவற்றிற்கும் அடிப்புறமாகப் பிராண ஹானியின்றி ஜனங்கள் புகைவண்டித் தொடரில் ஏறி ஒருநொடியிற் போவதும்,சமுத்திரத்தின் அடிப்புறத்திலுள்ள முத்து முதலிய நவரத்தினங்களையும் வாரிக் கொண்டுவந்து குவிப்பதும், பர்வதாகாரமான புகைவண்டி முதலிய எந்திரங்களை நீராவி இயக்குவதும், ககனமார்க்கமாய் ஒரு கண்டத்திலிருந்து மற்றொரு கண்டத்துக்குப் புகைக்கூடு மூலமாய்ப் போவதும் எதனால்! எல்லாம்

உழைப்பினால்தான். பிராணனுக்குப் பெருந் தீங்கு விளைக்கத்தக்க கொடிய விஷம் அப்பிராணனைக் காப்பதற்கான சஞ்சீவிபோன்ற ஔஷதமானது எதனால்? உலகத்தில் உதவியற்றதாகத் தோன்றுகிற புல், பூண்டு, சருகு, மலம், சாக்கடைஜலம் முதலிய யாவும் மனிதனுடைய ஜீவாதாரத்துக்கு ஏற்ற வஸ்துக்களாக்கப்படுவது எதனால்! உழைப்பினாலே தான். பஞ்ச பூதங்களினிடத்தும் சர்வஜீவதயாபரன் ஆன்மாக்களின் உபயோகத்துக்காக அமைத்து வைத்திருக்கும் அளவிறந்த பயன்களுக்குள் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினனாகிய மானிடன் இப்போது அடைந்து வரும் பயன்கள் மிகச் சொற்பமானவைகளே. இன்னும் நாம் அறிந்து அனுபவிக்கவேண்டியபயன்கள் யாவற்றையும் நமக்குச் சித்திபெறச் செய்வதற்கு உழைப்பு என்னும் கருவியேயன்றி வேறு சாதகம் திரிகாலத்தும் கிடையாது.

விவேக விளக்கமில்லாத சாதாரணஜனங்கள் மெய் வருந்தி வேலைசெய்வதைக் காட்டினும் கல்வி தேர்ச்சியினால் அறிவு விளக்கம் பெற்றவர்கள் அந்தப்படி வேலைசெய்யத் தலைப்படுவார்களாகில் அவர்களுக்கும் அவர்கள் தேசத்தாருக்கும் பெருத்த நன்மை விளையும் என்பதற்கு ஐயமில்லை. கல்வி பயின்ற ஒவ்வொருவரும் நியாயவாதி, நியாயாதிபதி முதலிய உத்தியோகங்களையே நாடித் திரிவாராகில் பிராணாதாரத்துக்கும் தேகாரோக்கியத்துக்கும் இன்றியமையாதனவாகிய கைத்தொழில்வேலைகள் முதலியவை போம் வழியாது? அந்தப்படி கல்விமான்கள் கைத்தொழில் முதலிய வேலைகளில் பயின்று வாராததற்குக் காரணம் அவர்கள் அவற்றின் அருமைப்பாட்டை உணராது

அலட்சியம் பண்ணுவதேயாம். உலகத்திலுள்ள பற்பல தேச சரித்திரங்களையும் நாம் வாசித்துப் பார்க்கையில், எந்தத் தேசத்தவர்கள் கைத்தொழில் வேலைகளில் அயர்விலா ஊக்கத்துடன் பாடுபட்டு வருகின்றார்களோ அவர்கள், அவ்வப்பியாசம் அமையப் பெறாத தேசத்தவர்களைத் தமக்கு நாளாவர்த்தியில் ஆளாக்கி அரசாண்டு வருகிறார்களென்று நிதரிசனமாகத் தெரிய வருகிறது. நமது இந்துதேசத்தையும் இங்கிலாந்து தேசத்தையும் பிரஸ்தாப விஷயத்துக்காக உதாரணங்களாய் எடுத்துக்கொண்டு, அவ்விரண்டு தேசங்களையும் ஒத்திட்டுப் பார்ப்போமாக.

அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னர் உலகத்திலுள்ள ஏனைய எல்லாத்தேசங்களும் ஒளிமழுங்கி அங்குள்ள ஜனங்கள் நாகரிகம் அற்றவர்களாயிருந்தபோது இந்துக்கள் நெய்தற்றொழில், சிற்பவேலை, விவசாயம், முதலியவற்றில் சிறந்திருந்ததாகவும், அதனால் நமது தேசம் குன்றிலிட்ட சுடர்விளக்கைப்போல் நாற்புறமும் ஒளிவீசிய தென்றும், அதுகாரணமாகப் புறத்தேசத்தவர்கள் இத்தேசத்திலுள்ள அளவிறந்த செல்வத்தைக் கவரும் நிமித்தம் அடிக்கடி படையெடுத்து வந்தனர் என்றும் சரித்திர பூர்வமாய் நாம் அறிகிறோம். ஒரு காலத்தில் உலகமுழுவதும் தனியரசு புரிந்துவந்தவர்கள் உரோமர்களென்றும், அவர்களுடைய ராஜதானிப்பட்டணம் உரோமாபுரி யென்றும், அவர்களுக்குச் சக்கிரவர்த்தியாயிருந்தவர் ஜூலியஸ் சீஸர் என்றும், அவர் கொலுவீற்றிருக்கையில் தம்முடைய தேகம் அணிபெறத் தரித்துக்கொண்ட அங்கிக்கு அழகு தந்தது நமது இந்து தேசத்துச் சரிகையே

என்றும் புராதன உரோமசரித்திர கிரந்தகர்த்தர் ஒருவர் வியந்து கூறுகின்றார். இவ்வளவு பெருமையுடன் விளங்கிய இந்துதேசம் இப்போது ஒளியழுங்கி வேற்றரசருடை நகைப்புக்கு இலக்காய் நிற்பது யாது காரணத்தினால்! கல்வி கற்கப் புகுந்தவர்கள் மெய் வருந்தி வேலை செய்யவேண்டிய உழவு முதலிய தொழில்களை அவமானமானவைகளென்று திரஸ்காரம் பண்ணி உத்தியோகமென்னும் சேவகத்தையே பெரும் பொருளாக வியந்துவருதே அதற்குக்காரணம்.

பன்னிரண்டாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் ஒன்றுக்கும் உதவாததாய்க் கேவலம் ஏழ்மையான ஸ்திதியிலிருந்த இங்கிலாந்துதேசம் இளம்பிறைபோல் நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளர்ந்து சோடசகலைகளுடன் இப்போது எங்கும் ஒளிவீசி நிற்கின்றதல்லவா! நாமும் நமது தேசமும் அபிவிருத்திக்காக அச்சீர்மையின் தண்ணளியையன்றோ எதிர்பார்க்கின்றோம்! இந்த நிலைமைக்கு அந்தத் தேசம் வந்தது வர்த்தகம், கைத்தொழில் முதலியவற்றில் சிறந்ததினாலல்லவா! அறுநூறு வருஷத்திற்குள்ளாக அந்தத் தேசம் அடைந்த அபிவிருத்தி ஒன்றே, கைத்தொழிலினால் ஒரு தேசத்துக்கு விளையும் நன்மையின் பெருக்கத்துக்குச் சாட்சி பகரத்தக்கதாயிருக்கின்றது. இந்துதேச வாசிகளாகிய நாம் இப்போது உடுக்கும் ஆடைகளுக்காகவும், எழுதும் காகிதங்களுக்காகவும், உபயோகிக்கும் மற்றும் பற்பல பொருள்களுக்காகவும் வேண்டிய சகல மூலவஸ்துக்களும் நமது தேசத்தில் நாற்புறமும் வீழ்ந்துகிடக்க, அவற்றை எடுத்து உபயோகிக்கத் தெரியாமையினாலும், உபயோகிப்பது அக-

வுரவமென்றும் தம்முள் சிலர் நினைக்கின்றபடியினாலும் அவற்றிற்கெல்லாம், புயல் என்னும் வாரிவளத்தை ஏக்கத்தோடு பார்த்திருக்கும் பைங்கூழ்போல நமது தேசம் இங்கிலாந்தின் வள்ளன்மையை எதிர்பார்த்து வாடிநிற்கின்றது. இவ்வுண்மையையறிந்து துயரப்படாத விவேகியும் உண்டா!

இந்தியாவில் இப்போது சர்வகலாசாலைகளிலும், ஏனைய வித்தியா சாலைகளிலும் கல்விபயின்றுவரும் சிறுவர்கள் ஆகாயத்தில் ஊனக்கண்ணுக்குப் புலப்படாத நட்சத்திரங்களின் இயக்கத்தைப்பற்றிக் கணக்கிடவும், மானதபதார்த்தசொரூபலட்சண சாஸ்திரங்களின் உண்மைகளை எளிதில் அறியவும் வல்ல மஹா பண்டிதோத்தமர்களா யிருந்தும் ஒருவனிடத்தில் சேவகம் செய்தல் என்னும் உத்தியோகம் ஒன்றைப் பெறுதற்கரிய பேறென்று நினைத்து மதிமயங்கித் தங்களுடைய ஸ்வயேச்சைக்கும் தேசத்தின் க்ஷேமத்துக்கும் ஏற்றதான விவசாயம், கைத்தொழில் முதலிய வேலைகளை அலட்சியஞ்செய்து வருகிறார்கள். புருஷலட்சணத்துக்குரிய வேறே எந்த வேலைக்கும் உதவாதவன்தான் சேவகமென்னும் உத்தியோகத்தை நாடுகிறவன் என்றும், ஏனைய வர்த்தகம், விவசாயம் கைத்தொழில் முதலியவற்றைக் கையாண்டு வருபவனே புருஷலட்சண முடையவனென்றும் ஆங்கிலேயர்கள் அபிப்பிராயங் கொள்ளுகிறார்கள். நம்மவர்களோ அதற்கு நேர்மாறான அபிப்பிராயங் கொள்ளுகிறார்கள். இதுதான் இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் உள்ள பெருத்த வித்தியாசம். கூடியவரையில் பங்காளத்தவர்கள் ஸ்வயேச்சையான வாழ்க்கையையே

விரும்புகிறார்கள். இங்கிலாந்தின் பெருமையையும் இந்தியாவின் சிறுமையையும் தற்காலத்தில் பிரத்தியட்சமாய்க் காண்பவர்களுக்கு மேலைய இரண்டு அபிப்பிராயங்களுக்குள் சரியானது இன்னதென்பது தானே தெளிவாய் விளங்கும். 'இந்தியாவுக்குத் தேவையானவை' என்னும் தலைப்பெயர் சூட்டிய தமது புத்தகத்தில், டாக்ட்டர் மர்டாக் என்கிற துரை எழுதுகிறதாவது:

'இந்தியாவில் கைத்தொழில் வேலை திரஸ்காரம் செய்யப்பட்டு வருகிறது. இறகையும் மையையும் கொண்டு எழுதிச் சேவிப்பதென்னும் உல்லாசமான உத்தியோகத்திலமர்ந்திருப்பதே புருஷலட்சணத்துக்கு உரித்தானதும் மனிதன் அவாவுதற்கு ஏற்றதுமான தொழிலென்று சிறுவர்கள் நினைக்கிறார்கள். கிளாட்ஸ்ட்டன் என்கிற சீமானும் இந்தப்படியே அபிப்பிராயங் கொள்ளுகிறார். போஜனத்துக்கு வேண்டிய பண்டங்கள், உடுப்பதற்காகவேண்டிய ஆடை முதலியவைகள், வெய்யில், மழை முதலியவற்றால் தேகத்துக்கு உபாதை உண்டாகாதபடி பாதுகாப்பா யிருப்பதற்குத்தக்க வீடு முதலியவைகள், ஆகிய இவற்றின் விஷயமாய் இந்துதேசத்தில் பெரும்பாலும் கல்விமான்களுடைய நிலைமை எப்படி யிருக்கிறதென்றால், அவற்றை வேறே எவராவது சேகரித்துக் கொடுத்தால் தாங்கள் நோவாமல் அனுபவிக்கத்தக்கவர்களாகமாத்திரம் இருக்கிறார்களேயொழிய தாங்களே மெய்வருந்தி அவற்றை உற்பத்தி செய்யத்தக்கவர்களாயில்லை. ஆங்கிலேய பாஷையில் நன்றாய்க் கல்விபயின்றும் அநேகர் சோம்பேறிகளாய் நமக்குப் பிழைப்பெப்படி என்று ஏக்கங்-

கொண்டிருப்பதைக் காண அதிக வியசனகரமாயிருக்கிறது. கைத்தொழில், விவசாயம், வர்த்தகம் முதலியவற்றில் ஆங்கிலேயர்கள் பெரும்பாலும் பழகிவருகிறபடியினால்தான் இங்கிலாந்து தேசம் அபிவிருத்தி யடைந்து சீர்மை என்னும் பெயர்பெற்றது. இந்துக்கள் அவற்றை அறவே கைவிட்டதே அவர்களுடைய க்ஷீணத்துக்கு முக்கியகாரணம்.'

ஆகையால், இந்து தேசத்தில் கல்விமான்களா யிருக்கும் கனவான்களும் ஏனையோரும் தேசபிமானம் பெற்றிருப்பது வாஸ்தவமா யிருந்தாலும், தங்கள் தேசம் எவ்விதத்திலும் முன்னிருந்த நிலைமைக்கு வரவேண்டு மென்னும் எண்ணங் கொண்டிருந்தாலும் பிறருடையதயவை எதிர்பாராமல் தாமே தமக்குவேண்டிய சாதகங்களைச் சேகரித்துக் கொண்டு ஸ்வயேச்சையாய் உயிர்வாழ்வதே புருஷலட்சணமும் மானிடதருமமும் என்பதை வாஸ்தவத்திலுணர்ந்தவர்களா யிருந்தாலும் கைத்தொழில் முதலியவற்றையும், கிருஷிகன், சிற்பி, தச்சன், கம்மாளன், தட்டான் முதலிய தொழிலாளிகளையும் இழிவுபடுத்தாமல் இருப்பாராக.

---

13. மூளையின் ஓர்வித விசித்திரம்.

மத்தியதரைக் கடலில் நேரிட்டிருந்த ஓர் கப்பற் சண்டையிலே அதிவீராவேசத்துடன் போர்புரிந்து கொண்டிருந்த ஒருவன் சிரசில் குண்டு ஒன்று தாக்கியது. உடனே அவன் பிரக்ஞையற்றுக் கீழே விழுந்தனன். பிராணன் முற்றும் நீங்கிய பிரேதம்போல் அவன்

இருந்திருப்பானாயின் அவனை உடனே அடக்கஞ்செய்ய காவாய்களிலிருந்தர்வகள் பிரயத்தனப்பட்டேயிருப்பார்கள். சுவாசப்பை, இரத்தாசயப்பை முதலியவற்றின் இயக்கக்குறிகள் வெளியே காணப்பட்டபடியால் அவனை அங்கிருந்த இராணுவ வைத்திய பரிசீலகர்கள் ஜிப்ரால்டருக்கு அனுப்பினார்கள். அவ்விடத்தில் தேகதத்துவ சாஸ்திரத்திலே மிகவும் பாண்டித்தியம்பெற்ற சிலவைத்தியர்கள் பலவாறாக முயன்றும் அவன் அதேஸ்திதியில் இருந்தான். பிறகு அப்பிணியாளனை வைத்தியபரிசீலகர்கள் இங்கிலாந்துக்கு அனுப்பினார்கள். அவ்விடத்திலே சில மாதம் வரையில் சரீர அங்கதருமங்கள் மாத்திரம் இயங்கிக்கொண்டிருந்தும் அவன் பிரக்ஞைதப்பின நிலையிலேயே இருந்தான். இந்நிலைமையிலேயே ஒருவருஷத்துக்கு மேற்பட்டு அவனிருந்தும் எவ்வகைப் பட்ட சிகிச்சையும் அவன் விஷயத்தில் பயன்பட்டிலது. இந்தப்படி யிருக்கையில் கபாலலட்சணவித்தையிலே அதிக பாண்டித்திய மடைந்து நுட்பபுத்தி யமையப்பெற்ற இரண வைத்தியர்ஒருவர் அப்பிணியாளியின் கபாலத்தைச்சோதித்துப்பார்க்கையில் அவனுடையமூளையில் ஓர் எலும்புத்துண்டு அழுந்திக்கிடந்ததைக் கண்டார். அவர் அதனை அதற்கேற்ற இரணவைத்தியக் கருவியைக் கொண்டு மெல்லத் தூக்கிவிட்டவுடனே அவனுக்குப் பிரக்ஞைவந்தது. அப்போது அருகிலிருந்த யாவரும் வியக்கத்தக்க அற்புதம் ஒன்று நிகழ்ந்தது. மேற் கண்டபடி அப்பிணியாளியின் கபாலத்தில் குண்டு தாக்கியபோது அவன் தன் கூட்டாளி ஒருவனை நோக்கிச் சத்துருக்களின் மரக்கலங்களில் சிலவற்றைப் பிடிப்ப

தற்கேற்ற வழிவகைகளைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தான். அவன்வசனித்துக் கொண்டிருந்த வாக்கியத்தைப் பூர்த்திசெய்வதற்கு முன்னர் இடையில் குண்டு தாக்கியகாரணத்தால் அவனுடைய மூளைக்குப் பங்கம் நேரிட்டபடியினாலே அவ்வாக்கியம் முடிவுபெறாமல் அம்மட்டிலேயே நின்றிருந்தது ; மூளையை அழுத்திக் கொண்டிருந்த எலும்புத்துண்டுமேற்கண்டபடி எடுபடலும், அப்பிணியாளி அவ்வாக்கியத்தின் எஞ்சியபாகத்தைச் சொல்லி முடித்தான். அவ்வாக்கியத்தில் எஞ்சி நின்ற பாகம் அவன் வாய்விட்டு வெளிப்பட்டதுதான் பிரக்ஞைவந்தவுடனே அவனிடத்து உண்டாகிய முதற் செய்கை. இதை யாவரும் வியந்தார்கள். இடையில் ஒருவருஷத்துக்கு மேற்பட்டுக் காலங்கழிந்ததைக் குறித்தும், அவனுடைய தேகத்துக்கு விளைந்தனவற்றைக்குறித்தும் அவனொன்றும் அறிந்திலன். இடையில் விட்டுப்போன வாக்கியத்தை முடிக்குந்தொழிலையுடைய மூளைநரம்புகள் விட்ட குறையை ஒருவருஷமாகியும் மறவாதிருந்தது ஆச்சரியம்.

சரீரத்தைச் சார்ந்த ஏனைய அங்கங்கள் எவ்வளவு நன்றாய் இயங்கிக்கொண்டிருந்தாலும் சகலதோற்றங்களுக்கும் உணர்ச்சிக்கும் மூலாதார பீடமாகிய மூளை மாத்திரம் நல்ல ஸ்திதியில் இராவிடில் மனிதன் பிரேதத்துக்குச் சமானமாவான். மனிதனுடைய மனோதத்துவ இயக்கத்துக்கு மூளை இன்றியமையாததாயிருக்கிற காரணத்தைப்பற்றியே சிலர் ஆன்மாவே மூளையென்றும் மூளையே ஆன்மாவென்றும் மயங்குகிறார்கள். தேகத்தின் பற்பல அவயவங்களை இயக்குவதற்கும், பிறபதார்த்தங்களின் இலட்சணங்களை மெய் வாய்

கண் மூக்குச் செவி மூலமாய் உணருவதற்கும் ஆன்மாவுக்குத் தனிப்பெருங் கருவியாயிருப்பது மூளை ஒன்றேயாம். அத்தகுதிய தனித் துணையாகிய மூளை க்ஷீணித்த விடத்துச் சூட்சும ரூபமாயுள்ள ஆன்மா என் செயற்பாலது ? கூரியதோர் வாளோடு போர் புரிந்துவரும் ஒருவன் ஏதோகாரணத்தினால் நிராயுத பாணியாய் நின்ற காலத்து முன் போல் பூரண ஆற்றலையுடையவனாயிராத காரணத்தினாலும், அவனிடத்து ஆயுதமிராத காரணத்தினாலுமே முதலாளியையே இல்லையென்று சொல்லுதல் பொருந்துமா ? எவ்வளவும் பொருந்தாது. அதுபோல் மூளையென்னுந் தனிப் பெருங் கருவி எந்த ஹேதுவினாலாவது க்ஷீணித்த காரணத்தினாலும், அதனால் ஆன்மாவுக்கு ஆற்றல் குறைந்த காரணத்தினாலுமே ஆன்மா என்னும் ஒரு முதலில்லையென்று வாதிப்பது தருமமாகாது. மேலே எடுத்துரைக்கப்பட்ட பிணியாளியின் சரித்திரமே இதற்குச் சாட்சி பகரத்தக்கது.

---

14. காலமும் அதை அளக்கும் கருவிகளும்

உலகத்திலுள்ள எவ்வகைப்பட்ட அருமையான பதார்த்தங்களையும் நாம் நேரில் அடையாவிடினும் கண்கூடாகக் காணாவிடினும் ஒருவாறாக மனதினால் யூகித்தறிவதற்குச் சாத்தியமாயிருத்தல் கூடும். காலம் என்னும் பொருளினிடத்து ஓர் விசித்திரமிருக்கிறது. அதை அறிவது மானிடமனோதத்துவ லட்சணத்துக்கு எட்டாச் செய்கையா யிருக்கிறது. உலகத்தில் ஒவ்வொரு பதார்த்தமும் ஒரு ஆதியையும் ஒரு அந்தத்-

தையும் உடையது. காலமோ ஒரு ஆதியையாவது அந்தத்தையாவது உடைத்தாயிருக்கிறது என்பதை மனதினால்நினைக்கவும் நமக்குச்சாத்தியமாயில்லை. இன்ன சமயத்தில் காலம் என்னும் பொருள் ஆரம்பித்தது, இன்னசமயத்தில் அது போய்முடியும் என்று நாம் ஒரு கணக்கிட்டுக்கூறுவோமாயின் அந்த சமயத்துக்குமுன் காலமில்லையோ? அந்த சமயத்துக்குப் பின் காலமிராதோ? என்னும் வினாவைச் சிறுகுழந்தையும்கேட்கும்; ஆகவே காலத்துக்கு ஆதியந்தத்தை ஏற்படுத்துவது மானிட மனோதத்துவ லட்சணத்துக்கு எவ்வளவும் இசையாத செய்கை. ஆதியந்தமற்றதாய் என்றைக்கும் உள்ளதான பொருளாகக் காலத்தை யூகித்துப்பார்ப்போமென்றால் அதுவும் மகா நுட்பபுத்தியுடையவனுடைய மனோதத்துவத்துக்கும் எட்டாதவிஷயமாயிருக்கிறது. இது என்ன விசித்திரம்! ஆதியந்தம் உள்ளதாகவும் ஆதியந்தம் அற்றதாகவும் கருத மனோதத்துவத்துக்கு எட்டாத அருமையான லட்சணமுடைய பொருள் காலமென்னும் ஒன்றேயல்ல. அதற்குத்துணை மற்றொன்றுண்டு. அது வெளிப்பரப்பு. மேற்காட்டிய லட்சணத்தைக் காலத்தைப் போலவே வெளிப்பரப் என்னும் பொருளும் பெற்றிருக்கிறது. மனோதத்துவ லட்சண சாஸ்திரத்தில் இவ்விரண்டுபொருள்களும் அதி விசித்திரமானவைக ளென்று கூறப்பட்டிருக்கின்றன. காலம் ஆதியந்த மற்ற பொருளாயிருக்கிறபடியினால் அதையே கடவுளென்று கூறும் காலமதவாதிகள் என்னும் ஒருவித சித்தாந்திகள் உளர். அதுநிற்க.

மானிடர் உலகத்தில் பற்பலகாரியங்களில்பிரவர்த்திப்பதற்குக் கால அளவைகள் அத்தியாவசியமாக

வேண்டியிருக்கிறபடியினால் ஆதியிலேயே மனிதர்கள் தங்களுடையகல்வி ஆராய்ச்சிபுத்தி இவற்றிற்கேற்றபடி பற்பல கால அளவைகளை ஏற்படுத்தியிருந்தார்கள். சூரியன் உதயமாவதையும் அஸ்தமிப்பதையும் வரையறைகளாக ஏற்படுத்தி ஜனங்கள் ஆதியில் நாள்களைக் கணக்கிட்டுவந்தார்கள். பிறகு ஒருநாளையில் செய்து முடிக்க வேண்டிய பற்பல வேலைகளுக்கு ஏற்ற பற்பல கால அளவைகளை ஏற்படுத்தவேண்டிய அவசியம் நேரிட்டது. காலை மத்தியானம் மாலை என்னும் மூன்று பிரிவுகள் தவிர வேறே கால அளவைகள் அவர்களுக்குத் தோன்றவில்லை. ஆராய்ச்சியினால் நாளாவர்த்தியில் புத்திவிசாலப்பட, பகற்காலத்திலே ஆகாயத்தில் கீழ்த்திசையிலிருந்து மேற்றிசைக்குச் சூரியன் இயங்கி வருவதற்கு ஏற்றபடி விருட்சங்கள் முதலியவற்றின் நிழல் நீளுவதையும் குறுகுவதையும் அவர்கள் கண்டபோது அதையே ஆதாரமாகக்கொண்டு சூரிய நிழற்கடிகாரங்களை ஏற்படுத்திக்கொண்டார்கள். இதை ஆதியில் கண்டு பிடித்தவர்கள் எகிப்து (ஈஜிப்ட்டு) தேசத்தவர்களென்று தோன்றுகிறது. கோடைகாலத்தில் பகற்காலப்பொழுது நீடித்தும் மாரிகாலத்தில் குறைந்துமிருக்கிறகாரணத்தினாலும்,மேகத்தினால் சூரியகிரணம் நன்றாய்த்தோன்றாதபோது நிழல்தெரியாதகாரணத்தினாலும் அச்சூரியநிழற் கடிகாரங்கள் பயனிலவென்று ஜனங்கள் கண்டறிந்தார்கள். ஆயினும் வேறே வகையில்லாதபடியால் அம்மட்டில் திருப்தி யடையவேண்டியதாயிருந்தது. கிறிஸ்துபிறக்க அவர்கள் 740 வருஷங்களுக்குமுன்னர் அரசாண்டுவந்த ஜூடாதேசத்து மன்னனுடைய சரித்திரத்தில் மேற்படி சூரியநிழற் கடிகாரத்தைக்குறித்து முதலில் சொல்லப்

பட்டிருக்கிறது. பகற்காலத்தையும் இராக்காலத்தையும் பன்னிரண்டு சமபாகங்களாக ஏற்படுத்தியவர்கள் முதல் முதல் பாபிலோனியா தேசத்தவர்கள். அவர்களிடத்திலிருந்துதான் ஏனையோர் அதைக் கற்றுக் கொண்டார்களாம். மேற்கண்டகாரணங்களினாலே சூரியநிழற்கடிகாரங்கள் தக்க கால அளவைக்கருவிகள் அல்லவென்று தெரிந்துகொண்டபிறகு ஜனங்கள் நீர்க்கடிகாரங்களை உண்டாக்கிக்கொண்டார்கள். ஒரு சிறு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து அதை நன்றாய் மூடி அதன் ஓர்புறத்தில் ஒருசிறுதுவாரத்தை உண்டாக்கி அப்பாத்திரத்தை மேலும், தண்ணீர் இல்லாத அதேமாதிரியான மற்றொரு பாத்திரத்தைக் கீழுமாகவைத்து, அந்தச் சிறுதுவாரத்தின் மூலமாய்த் தண்ணீர் இறங்குவதற்குப் பிடிக்கும் நேரத்தைக்கொண்டே கால அளவைக் கணக்கிட்டுவந்தார்கள். இதைக்கண்டமற்றும் சிலர் ஓர்பாத்திரம் நிறையத் தண்ணீர்வார்த்து அதில் வேறொரு வெறும் பாத்திரத்துக்குச் சிறுதுவாரம்செய்து அதை அத்தண்ணீரில் அமிழ்த்தி அந்த துவாரத்தின் வழியாக அவ்வெறும் பாத்திரத்தில் தண்ணீர் ஏறுவதற்குப் பிடிக்கும் காலத்தைக்கொண்டு மணிநேரங்களைக் கணக்கிட்டுவந்தார்கள். கிறிஸ்துபிறந்தசிலவருஷங்களுக்குப் பின்பும் இந்த நீர்க்கடிகாரங்களே உபயோகப்பட்டுவந்தன. அக்காலத்தில் ஜனங்கள் சூரியோதய காலத்தை ஒருமணியென்று நிர்ணயித்து அங்கிருந்து இரண்டு மூன்று நான்கென்று கணக்கிட்டு வந்தார்கள். உலகமுழுவதும் தனியரசு புரிந்துவந்த உரோமாபுரி அரசர்களும் அக்காலத்தில் நீர்க்கடிகாரங்களைத்தான் உபயோகித்து வந்தார்கள். கோடைகாலத்தில் உஷ்ணமிகுதியால் தண்ணீர் வெகு

சீக்கிரத்தில் ஆவியாய்ப்போகிறகாரணத்தினாலே, நீர்க் கடிகாரங்களைக்கொண்டுகோடைகாலத்திற்கணக்கிடப்படுங் காலஅளவைக்கும் மாரிகாலத்திற் கணக்கிடப்படுங்கால அளவைக்கு முண்டாயிருந்தபெருத்தவித்தியாசத்தினால் மேற்படி நீர்க்கடிகாரங்களும் நாளாவர்த்தியில் உதவியற்றன வென்று தெரியவந்தது. அதற்குப்பின்பு ஜனங்கள் தண்ணீருக்குப் பிரதியாகச் சிறு மணலை உபயோகித்து வந்தார்கள். நாளைக்கும் மணற் கடிகாரங்கள் அநேக இடங்களில் உபயோகமாகி வருகின்றன.

பளுவான இருப்புக் குண்டுகளைக் கீழே ஓர் கம்பியின் மூலமாகத் தொங்கவிட்டு அக்குண்டுகள் கீழே இறங்க இறங்க முள்ளுகள் அசைவதென்கிற ஏற்பாடுடைய ஒருவித கடிகாரங்களை ஐரோப்பாகாண்டத்தில் கி. பி. 1000 வருஷத்திற்குப் பிற்பாடு ஜனங்கள் வழங்கிவந்தார்கள். இட்டலிதேசத்திலே கி. பி. 1300-ம் வருஷத்தில் முதல் முதல் கடிகாரம் மணியடிக்கத் தலைப்பட்டது. 1600-ம் வருஷத்தில் கலிலியோ என்பவர் நாழிகை வட்டத்தை இயக்கும் தூக்காகிய பெண்டுல ஏற்பாட்டைக்கண்டுபிடித்து அதை அநுசரிக்கத் தலைப்பட்டார். அது முதற்கொண்டு இப்போது வழங்கி வருகிற கடிகார ஏற்பாடு தினே தினே அபிவிருத்தியடைந்து வந்தது. வாகனாதிகளில் ஏறிப்போகும் போதும் வேறேசந்தர்ப்பங்களிலும இலேசாய் நினைத்த மாத்திரத்தில் உபயோகப்படும் கைக்கடிகாரங்கள் இப்போது வழங்கிவருகின்றன. இவைகளை நியூரெம்பெர்க் என்னும் தேசத்து பீடர் ஹீல் என்னும் கனவானொருவர் 1500-ம் ஆண்டில் கண்டு பிடித்தார். இவை

முதலில் கண்டு பிடிக்கப்பட்டபோது நியூரெம் பெர்க் தேசத்து முட்டைகளென்று பரிகாசமாய் ஜனங்கள் இவற்றை வழங்கிவந்தார்கள். அது முதல் இது வரையில் கைக்கடிகாரங்கள் அதிவிசித்திர வேலைப்பாடுகளுடன் வெகு சிறு ரூபங்களாகச் செய்யப்பட்டு உலகெங்கும் உலவிவருகின்றன.

ஆதியில் உதவியற்ற சூரியநிழற் கடிகாரங்களை உபயோகித்து வந்த ஜனங்களுக்கும், இப்போது வருஷம், மாதம், வாரம், தேதி, மணி, நிமிஷம், வினாடி முதலிய சகலகால உறுப்புகளையும் இம்மியும் பிசகாது கண்ணிமைப் பொழுதிற் காட்டவல்ல விசித்திர வேலைப்பாடுடைய கடிகாரங்களை உபயோகித்து வரும் நமக்கும் எவ்வளவு வித்தியாச மிருக்கின்றது!

15. வணிகனும் அவன் பொருளும்

முற்காலத்தில் குடிகள் தாம் அருமையாகத் தேடிய பொருளிற் செலவிட்டதுபோக எஞ்சிநின்றதைச் சேமித்துவைப்பதற்கு வகையறியாதவர்களாய்ப் பூமியில் புதைத்து வைத்துப் பிறகு ஒருவருக்கும் சொல்லாமல் மரிப்பதும், பிறரை நம்பி அவர்கள் கையில் கொடுக்க அவர்கள் ஏமாற்றியபோது ஏக்கங்கொண்டு வீணாய்த் துயருறுவதுமே பெரும்பாலும் இயல்பாய் இருந்துவந்தது. இப்போது அவ்வவ்விடங்களில் பூமிக்குள் அகப்படுகிற நிதிகளே பூர்வகாலத்தில் பொருளைச் சேமித்து வைக்க அனேகருக்கு வேறேவகை தெரியவில்லையென்பதை நிதரிசனமாகக் காட்டுகின்-

றன. பணமென்றால் பிணமும் வாய்திறக்குமாகை-யால் எப்படிப் பட்டவனையும் அவனிடத்துப் பிறர்தந்த பொருளை அபகரிக்கப் பொருளாசை தூண்டாமற் போகாது. ஆகவே பிறரிடத்தில் நம்பிப்பொருளைத்தந்து வைப்பது தகுதியன்று. 'தன்னாயுதமும் தன்கையிற் பொருளும் பிறன்கையிற் கொடுக்கும்பேதையும்பதரே.' என்றும், 'புஸ்தகம் வனிதா வித்தம் பரஹஸ்தம் கதம் கதம், அதவாபுனராயாதி ஜீர்ணம் பிரஷ்டாச கண்டசஹ:.' புஸ்தகத்தையும், ஸ்திரீயையும், பொரு-ளையும் மற்றொருவர் கையில் கொடுத்தால் அவை போ-னது போனதுதான். ஒருவேளை அவை தப்பி மீண்டும் நம்கைக்கு வருமாயின் முறையே கெட்டுப் போயும், பிரஷ்டமடைந்தும், குறைந்தும் போய்விடு மென்றும் சாஸ்திரப் பிரமாணமிருக்கிறது. இக்காலத்தில் கௌ-ரவமான பலகனவான்களால் ஏற்படுத்தி ஆதரிக்கப்-பட்டு வரும் நிதிகள்-பாங்கு என்று சொல்லப் பட்ட திரவியக்ஷேமசாலைகளைப்போன்றஏற்பாடுகள் பூர்வத்தில் இல்லைபோலும். அப்படிப்பட்ட ஏற்பாடுகளினால் ஒரு-வனுடைய பொருள் தினே தினே வட்டி சகிதமாய் விருத்தியடைந்துகொண்டே வருவதுமன்றி அப்பொ-ருள் ஏனையோர்க்கு அவசரகாலங்களில் பலமுகத்தால் உபயோகமாகியும் வருகின்றது. மேலும் தேச க்ஷேமத்-துக்கு இன்றியமையாத 'பெருத்தவர்த்தக விஷயங்க-ளுக்கு அத்தகுதிய ஏற்பாடுகளினால் மேற்கண்டபடி பலரும் கொடுத்து வைத்த பொருள் உபயோகமாகி வருகின்றது. நடுவுநிலைமையாயிருந்து பார்க்குமிடத்து இக்காலத்துக்கும் பூர்வகாலத்துக்கும் எவ்வளவு பேதமிருக்கிறது! ஒருவணிகன் முற்காலத்தில் தன்னு-

டைய திரவியத்தைக் காப்பாற்றிவைக்க வகைதேடி அல்லற்பட்டதை அடியில் வருவதனாலறியலாம்:—

சண்பகாபுரம் என்னும் பட்டணத்திலிருந்த மணிபத்திரனென்னும் வணிகனொருவன் ஏதோ முக்கிய காரியத்தின் நிமித்தம் தன்னூரைவிட்டுத் தூரதேசத்துக்குப்போய்ச் சிலநாள் அங்கிருந்து வரவேண்டியதாயிருந்தது. அவன் பதினாயிரம் வராகன் வைத்திருந்தானாகையால் அதைக் காப்பாற்றிவைத்துப்போக நம்பிக்கை யானவர்களைத் தேடத் தொடங்கினான். அவனுக்குத் தன் ஊரிலுள்ளவர்கள் யாரிடத்தும் நம்பிக்கையில்லை. அடுத்த ஊருக்குப் போய் அங்காவது தக்க யோக்கியதை யுள்ளவர்களைக் கண்டு பிடிப்போம் என்று கருதி, அவ்வூரை யடைந்து கடை வீதியிற் போய், அங்கு பலசரக்கு வியாபாரஞ் செய்யும் ஒரு வர்த்தகனுடைய கடைக்குச் சமீபமாய் உலாவிக்கொண்டிருந்தான். அந்த வர்த்தகன் மிகவும் தந்திர சாலியாகையால்உலாவிக்கொண்டிருக்கும் மணிபத்திரனுடைய உள்ளக்கருத்தைக் குறிப்பினால் ஒருவாறு உணர்ந்து அவனிடத்திலுள்ளபொருளைத்தகுந்த உபாயத்தால் அபகரிக்கச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தான். அப்போது அவ்வூரிலுள்ள ஒருகிழவியினுடைய வேலைக்காரி அந்தக்கடைக்கு நெய்வாங்க வர அந்த வர்த்தகனுடைய சம்பள ஆள் வழக்கப்படி பணம் வாங்கிக்கொண்டு நெய்கொடுத்து அனுப்பினான். அவ் வேலைக்காரி சிறிது தூரம் போன பிறகு, வர்த்தகன் சம்பள ஆளை நோக்கி, ‘அடா ! பையா ! அந்தக் கிழவி வீட்டு வேலைக்காரி என்ன வாங்கினாள் ? நீ எப்படி கொடுத்தாய்!’ என்று கெட்டனன். சம்பள ஆள், ‘ஐயா!

அவள் ஒரு பணம்கொடுத்து நெய்வார்க்கச் சொன்னாள், நான் ஐந்து பலம் வார்த்து அனுப்பினேன் என்று மறுமொழி கூறினன். அது கேட்ட வர்த்தகன், 'சிவ! சிவ!' என்று செவிகளை மூடிக்கொண்டு, அந்த சம்பள ஆளைக் கோபித்து, 'நீ என்ன காரியஞ் செய்தனை? இப்படி வர்த்தகஞ்செய்தால் நம்மிடத்து யார் வருவார்கள்? அப்பால் என்ன பேரம் நடக்கும்? நாம் பணத்துக்கு ஆறரைப்பலம் விழுக்காடுகொண்டோம், அரைப் பலம் லாபம் வைத்துக்கொண்டு ஆறுபலம் பணத்துக்கு விற்றால்போதாதா? அதிக ஆசைப்படலாமா? "காணி யாசை கோடிகேடு" என்னும் பழமொழி தெரியாதா? இனிமேல் நீ இவ்வாறு வர்த்தகஞ் செய்யப்பார்த்தால், அல்லது பிறரால் நான் கேள்விப்பட்டால் உன்னை உத்தியோகத்தி லிருந்து தள்ளிப்போடுவேன்' என்று மணிபத்திரன் கேட்கும்படி கண்டிப்பவன் போல் நடித்துக்காட்டி, ஓர் ஆளை அனுப்பி அந்தக் கிழவியின் வேலைக்காரியை வரவழைத்து, அந்த ஒரு பல நெய்யையும் அவளுக்கு வார்க்கச் சொல்லி அனுப்பினான். இதைப் பார்துக்கொண்டிருந்த மணிபத்திரன் மிகவும் அதிசயம் அடைந்து, இவனைப்போலும் யோக்கியதையும் தருமசிந்தையும், பேராசையின்மையும் உடையவர்களை நாம் எங்கும் கண்டதும் கேட்டதும் இல்லை. இவ்வர்த்தகன் பிறர் பொருளை அபகரிக்கக் கனவிலும் கருதான், நாம் எண்ணிவந்த காரியம் இங்கேதான் நிறைவேறவேண்டும், நம்முடைய பொருளை இவனிடத்தில் வைத்துப் போனால் யாதும் நஷ்டமின்றி மறுபடியும் அடையலாம் என்று திடசித்தம் கொண்டிருந்தனன். இது இப்படி யிருக்க, நெய் வாங்கிக்

கொண்டு போன வேலைக்காரி வீட்டுக்குச் சென்றவுடனே, ஔவையார் நெய்யைப் பார்த்து அது அன்று காலையில் வாங்கிக்கொண்டு வந்ததைக் காட்டினும் அதிகமாயிருத்தலால் இதென்ன மிகுதியாயிருக்கிறதே யென்று தன் வேலைக்காரியைக் கேட்டாள். அவள் நடந்த விஷயங்களை யெல்லாம் சொன்னாள். அந்த ஔவையார் மிகவும் புத்திக் கூர்மையுள்ளவளாகையால் வேலைக்காரியை நோக்கி, 'அப்போது கடையண்டை யிருந்தவர்கள் யார்?' என்று கேட்க, அவள், 'அம்மா, அயல் தேசத்தானாகிய ஒரு வணிகன் அங்கு உலாவிக்கொண்டிருந்தான், அவனைப்பார்த்தால் மிகவும் செல்வனாகத்தோன்றுகிறது' என்று சொல்ல, இது ஏதோ தந்திரமா யிருக்கிறதென்று அக்கிழவி யூகித்தறிந்து, வேலைக்காரியை நோக்கி, 'பிறருடைய சொத்து நமக்கு எவ்வளவும் வேண்டாம், உடனே இந்த நெய்யைக் கடைக்காரனிடம் கொண்டுபோய், வழக்கமாய் வார்ப்பதுபோல் ஐந்து பலம் கொடுத்தால் வாங்கிக்கொண்டு வா, இல்லாவிட்டால் நெய்யைக் கொடுத்துவிட்டுப்பணம் பெற்றுக்கொண்டு விரைவில் வந்து சேர்க' எனக் கண்டிப்பாய்ச் சொல்லியனுப்பினாள். அவ்வாறே அந்த வேலைக்காரி கடைக்காரனிடத்தில் போய்த் தன் எஜமாட்டி கூறியவண்ணம் சொல்ல, கடைக்காரன் சம்மதியாமையால் நெய்யைக் கொடுத்துவிட்டுப் பணம் பெற்றுக்கொண்டு சென்றனள். இதனை அங்கு உலாவியவண்ணம் பார்த்துக்கொண்டிருந்த மணிபத்திரன் மிகவும் அதிசயித்து, 'நாம் இந்தக்கடைக்காரனை பிறர் பொருளுக்கு ஆசைப்படாத உத்தமனென்று எண்ணி யிருந்தோம், இவனிலும் இந்த ஔவையார் பரமயோக்-

இயதை யுள்ளவளாய்க் காணப்படுகின்றனளே, இவள் பெண்பாலாயிருந்தபோதிலும் அதிகதருமசிந்தையுடையவளாயிருக்கின்றாள், ஆயினும் இன்னும் பார்ப்போம்' என்று அவ்வேலைக்காரியைப் பின் தொடர்ந்து அக்கிழவியின் வீட்டண்டைபோய் அங்கு உலாவிக்கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் ஒரு பரதேசி பிக்ஷைக்காக அக்கிழவி வீட்டுக்கு வந்தான். அவள் தன் வீட்டண்டை மணிபத்திரன் உலாவிக்கொண் டிருப்பதைப் பார்த்து, முன்னமே கடைக்குப் போய்வந்த தன் வேலைக்காரியால் தனவானென்று தெரிந்துள்ளவளாகையால், அவனிடத்துள்ள பொருளை உபாயத்தால் அபகரிக்க எண்ணி, வேலைக்காரியை நோக்கி, 'இந்தப் பரதேசிக்கு ஒரு முறத்து நிறைய அரிசியும் அதற்கு வேண்டிய சம்பாரங்களும் பதார்த்தவகைகளும் நாலணாவும் கொடுத்து அனுப்புவாய், நெடு நேரம் நிற்கவையாதே, பிக்ஷைக்குவந்த பரதேசிகள் தலைவாசலில் நெடும்பொழுது காத்துக்கொண்டிருக்கப் பார்ப்பது பாவத்துக்கிடமாம், அவர்கள் காரியத்தை முன்னே முடித்துவிட்டுப் பிறகு நம்வேலையைப் பார்த்தல் வேண்டும், பரதேசிகளுக்கிடாமல் நாம் அன்னம் புசித்தல் ஆகாது, "ஐயமிட்டுண்" என்று என் அம்மையாரும் கட்டளையிட்டிருக்கவில்லையா ? கடவுள் நமக்குக் கொடுத்திருக்கும் பொருளெல்லாம் பரதேசிகளுக்கு உபகாரஞ் செய்வதற்கே யன்றி மற்றெதற்கும் அன்று, அவர்களுக்குச் செய்யும் தருமமொன்றே நமக்குமறுமைக்குத் துணையாய்வரும், மற்றவையொன்றும் வாராது' என்று அக்கள்ளக்கிழவி மணிபத்திரன் கேட்கும்படி கூற, வேலைக்காரி எஜமாட்டியின்

கட்டளைப்படியே முறத்தில் அரிசியும் அணாநாலும் மற்றவையும் கொண்டுபோய்ப் பரதேசிக்குக் கொடுக்க வந்தாள். அப்பரதேசி வியப்படைந்து, 'நாள்தோறும் நாம் இந்தக்கிழவி வீட்டுக்குப் பிக்ஷைக்கு வருகிறோம், ஒரு நாளாவது ஒருபிடி அன்னமும் போடாத இந்த உத்தமி இன்றைக்கு இப்படிக் கொடுப்பதற்குக் காரணம் ஏதாவது இருக்கவேண்டும், இதை அறியவேண்டும்' என்று, அவன் கள்ளப்பரதேசியாகையால் நாற்புறமும் சுற்றிப் பார்த்துச் சமீபத்தில் உலாவும் வணிகனைக் கண்டு, இவன் பொருளாளி போல் தோன்றுகிறது, இவனுடைய பொருளை அபகரிக்கும் பொருட்டுத்தான் இந்தக்கிழவி இத்தனை ஜாலவித்தை செய்கின்றனள் என்றறிந்து, நல்லது, நாம் இதற்குத்தக்க உபாயஞ் செய்து அப்பொருளை அபகரிப்போம் என்று தனக்குள் தீர்மானித்து, வேலைக்காரியை நோக்கி, 'அம்மா, இவைகளெல்லாம் எனக்கு ஏன்? ஒரு பிடி அன்னம் எனக்குப் போதுமானது, நான் வீடுகள் தோறும் போய் அங்கங்கு ஒரு பிடி அன்னம் வாங்கிப் புசித்துக் கையைத் துடைத்துவிட்டுக் கடவுளைத் தியானித்துக்கொண்டு உறங்கிக் காலம் கழிப்பேன்; இவற்றிற்கு நான் ஆசைவைப்பேனால் சமுசாரம் மேலிட்டு உலகப்பற்று விபரீதமாய் என்னை மூடிக்கொள்ளும்; அம்மா, இவைகளெல்லாம எனக்குவேண்டியதேயில்லை, ஒருபிடி அன்னம் இடு' என்று அவ்விடத்திலேயே வாங்கிப் புசித்துக் கையைத் துடைத்துக்கொண்டு போய்விட்டான். இக் கபட நாடகத்தையெல்லாம் பார்த்துக்கொண் டிருந்த மணிபத்திரன் பேதையாகையால் பரதேசியின் செய்கையை உண்மை

யென்றே நினைத்து, 'அக்கிழவியைவிட இப்பரதேசி உத்தமன், இவன் உலகப்பற்றொழிந்தவன், பணத்தில் ஆசையற்றவன், இப்பரதேசியி னிடத்தில்தான் நம்முடைய பொருளை அடைக்கலப் படுத்தி வைக்க வேண்டும்' என்று கடைசியாய்த் தீர்மானித்து, அவன் பின்னே சென்றான். பரதேசி தானிருக்கும் மடத்துக்குப் போனவுடனே, மணிபத்திரன் அவ்விடம் போய், அந்தப் பரதேசியினுடைய பாதங்களில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து பணிந்து எழுந்து, கைகட்டிக்கொண்டு நின்று, 'சுவாமீ, அடியேன் விண்ணப்பத்தைச் செவியேற்றருளல் வேண்டும்; நான் தூரதேசத்துக்குப் போய்ச் சில காலம் அங்கிருந்து வர வேண்டியிருப்பதால், என்னிடத்திலுள்ள பதினாயிரம் வராகனையும் யாரிடத்தில் வைத்துப்போனால் மறுபடியும் சேதமில்லாமல் எனக்கு அப்பொருள் சரியாய்ச் சேருமென்று நெடுநாளாகத் தேடிக்கொண்டிருந்தேன், தேவரீர் பர சொத்தை இச்சியாத பரமோத்தமரென்றும் பிரபஞ்ச வைராக்கியம் பெற்றவரென்றும் நான் கண்டபடியால் என்பொருளை உம்மிடத்தில் வைத்துப்போகலாமென்று மனோதிடம் கொண்டிருக்கின்றேன்; தேவரீர் திருவுளத்தில் கருணைகூர்ந்து, என் வேண்டுகோளை அங்கீகரிக்க வேண்டும்' என்று மிகவும் பணிவோடு மொழிந்தனன். அதுகேட்டு அந்தத் திருட்டுப்பரதேசி இரண்டு காதுகளையும் கைகளால் பொத்திக்கொண்டு, 'சிவ! சிவ! ஆட்கொல்லியாகிய பணத்தின் விஷத்தைப்பற்றி என்னிடத்தில் பேசவேவேண்டாம், நான் அதைக் கையாலும் தொடமாட்டேன், தொட்டால் பிரபஞ்சப்பற்று அதிகரிக்கும்; நான் மண், பெண், பொன் என்னும் மூன்று

ஆசைகளையும் பற்றற வொழித்துத் தலை மூழ்கிவிட்டு அல்லல் அற்றிருக்கின்றேன், இந்தப் பீடை மறுபடியும் எனக்கு யாதுக்கு? இதனால் ஆகவேண்டிய பிரயோசனம் எனக்கு ஒன்றுமேயில்லை, இப்போது எனக்கு இப் பொருள் துரும்பைப்போ லிருக்கிறது; நான் ஓடும், பொன்னும் சமதிருஷ்டியாய்ப்பார்க்கிறேன், இத்தகைய மேலான பரிபாகதசையில் இருக்கிற யான் நீ கொண்டு வந்த பொருளைப் பார்க்கவும் ஸ்பரிசிக்கவுமாட்டேன்' என்று மறுத்துவிட்டனன். அது கேட்ட களங்கமற்ற மனதுடையமணிபத்திரன் மனவருத்தமடைந்து, கண்ணீர் விட்டழுது, அந்தப் பரதேசியினுடையபாதங்களை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு, 'சுவாமீ, இப்பொருள் நான் மிகவும் பாடுபட்டுச் சம்பாதித்தது, உம்மிடத்திலன்றி வேறெங்கும் வைத்துப்போக எனக்குச் சம்மதமில்லை, தேவரீர் என் குறைக்கு இரங்காவிட்டால் நான் உம்மைவிட்டுப்போகேன்' என்று உறுதியாய்க் கூறித் தீர்க்கதெண்டம் சமர்ப்பித்தான். அது கேட்ட பரதேசி, 'நம்முடைய யோகமே யோகம், இப்படியும் பொருள் இடந்தேடி வலிய வருவது உண்டா!' என்று தன்னையறியாப் பெருங்களிப்படைந்து மணிபத்திரனை நோக்கி, 'நீ படுந் துயரத்தைப்பார்த்தால் எனக்கு மனம் சகிக்கவில்லை, உடல் எடுத்ததற்கு எவ்விதத்திலும் உயிர்களுக்கு உபகாரமே செய்யவேண்டும்; ஆகையால் உன் விண்ணப்பத்தை முற்றிலும் மறுக்கக்கூடவில்லை; இந்த மடத்தில் உனக்குச் சம்மதமான ஒரு இடத்திலே புதைத்துவிட்டுப் போய்,மறுபடியும் உனக்கிஷ்டமானபோது வந்து எடுத்துக்கொள்' என்றுசொன்னான். மணிபத்திரன் சந்தோஷங்கொண்டு, அம்மடத்தின் ஓர்

புறத்தில் தன்பொருளைப் புதைத்துவிட்டு மறுபடியும் பரதேசியினிடத்தில் விடைபெற்றுப்போய்த் தன் கருமங்களை முடித்துக்கொண்டு சில காலங் கழிந்தபின்பு மீண்டும் பரதேசியிடம் வந்து தான் புதைத்துவைத்துப்போன இடத்தில் தோண்டிப்பார்த்தான். இதற்கு முன்னமே பரதேசி அப்பொருளை அப்புறப்படுத்திவிட்டபடியால், அங்குப்பொருளைக்காணாமல் மணிபத்திரன் பரதேசியைநோக்கி, 'சுவாமீ, நான் புதைத்த இடத்தில் பொருளைக் கண்டிலேன், என்ன செய்வேன்?' என்று கேட்க, 'அப்பா, நான் அதைக் கையாலும் தொடமாட்டேனென்று அப்போதே சொல்லவில்லையா ? நீ புதைத்ததைக் கூட நான் பார்க்கவில்லையே, நன்றாய்ப் பார்' என்றுசொன்னான். அதைமணிபத்திரன்மெய்யேஎன்று நம்பிப் பல இடங்களில் தோண்டிப்பார்த்தும் காணாமல், பரதேசியை மறுபடியுங் கேட்கப்பயந்து சிந்தாகுலத்தனாய் ஔவையார் வீட்டண்டைபோய் முகவாட்டத்துடன் உலாவிக்கொண்டிருந்தான். அந் நரைமூதாட்டி கண்டு அவனை உள்ளே வரவழைத்து, 'நீ சில நாளைக்கு முன் இங்கு வந்ததுபோலிராமல் இப்போது முகம் வேறுபட்டிருப்பதற்குக்காரணம் யாது?' என்றுகேட்க, மணிபத்திரன் பரதேசியினிடத்தில் தான் மோசம் போன வரலாறு முழுதுஞ்சொல்லி யழுதான். 'நான் அப்பொருள் முழுவதும் உனக்கு வருவித்துத்தந்தால் எனக்கு நீ யாது கொடுக்கின்றனை?' என்று அக்கிழவி கேட்க,'ஆயிரம்பொன்தருகிறேன்'என்றுமணிபத்திரன் ஆணையிட்டுக் கூறினன். 'அதற்கு அவள் அப்படியானால், நான் இன்று சாயங்காலம் பரதேசியிருக்கும் மடத்துக்குப் போகிறேன், நீ சுமார் ஐந்துமணிக்கு

அங்குவருவையேல் உன்பொருளை உனக்குத் தருவிக்கிறேன்' என்றனள். மணிபத்திரன் மலடி பிள்ளைபெற்றது போலும் பரம சந்தோஷங் கொண்டு, 'அவ்வாறே செய்கிறேன்' என்று சொல்லிப் போயினன். பிறகு அக் கிழவி தன்னிடத்தில் உள்ள இரத்தினாபரணங்களை எல்லாம் ஒரு தாம்பாளத்தில் வைத்து வஸ்திரத்தால் மூடிக்கொண்டு வேலைக்காரியைநோக்கி, 'நான் பரதேசி மடத்துக்குச்செல்கின்றேன், நீ சிறிது நேரம்சென்றபின் அங்குவந்து, "அம்மா, ஊருக்குப்போன உன்னுடைய குமாரர் வந்து சேர்ந்தனர், உன்னை உடனே அழைத்து வரச் சொன்னார்" என்று விரைந்தோடிவந்து என்னிடத்திற் சொல்லென்று கட்டளையிட்டுத் தாம்பாளத்தை யெடுத்துக் கொண்டு பரதேசியினிடம் போய் அவனை வணங்கி, 'சுவாமீ, என்னுடைய அருமைப் புதல்வன் காசிப்பட்டணத்துக்குப் போய் இரண்டு வருடகாலம் ஆயிற்று, இதுவரையிலும் கடிதம் எழுதிக்கொண்டு வந்தான், இப்போது மூன்றுமாதமாகக் கடிதம் வரக் காணேன்; நான்போய்ப்பார்த்து அவனை இங்கு அழைத்து வரவேண்டும், இந்த ஆபரணங்களைத் தக்கவர்களிடத்தில் அடைக்கலமாகவைத்துப்போக எண்ணங்கொண்டிருக்கிறேன். உம்மைப் பார்க்கிலும் நம்பிக்கையுள்ளவர்கள் வேறு யாரும் இவ்வூரிலில்லை, தேவரீரே இந்த இரத்தினாபரணங்களைக் காப்பாற்றித் தரவேண்டும்' என்றுசொல்லித் தாம்பாளத்தின்மேல் மூடியிருந்தவஸ்திரத்தை யெடுத்துக்காட்டினள். அதைக் கண்டமாத்திரத்தில் பரதேசிக்கு நெஞ்சம்பூரித்து, 'நமக்கு ஏதோ நல்லகாலமிருக்கிறது, சுக்கிரதசையிருந்தால் இப்படி யிருக்கவேண்டும்' என்று மனங்குதூகலித்து, 'அம்மா,

நல்லது அப்படியே ஆகட்டும் உனக்கிஷ்டமான இடத்தில்புதைத்துவைத்து வேண்டியபோதுவந்து எடுத்துக் கொண்டு போகலாம்' என்று சொல்லிக் கொண்டிருக்கையில் மணிபத்திரன் வந்து, 'சுவாமீ' என்று வணங்கி நின்றனன். அவனை அக்கள்ளப்பரதேசிநோக்கி ஒன்றுமறியாதவன்போல், 'நீயார்?' என்றுகேட்க, 'நான் மணிபத்திரனென்னும் வணிகன், தங்களிடத்தில் வைத்துப் போன பதினாயிரம் பொன்னையும் வாங்கிக்கொண்டுபோக வந்தேன்' என்றான். பரதேசி திடுக்கிட்டு, 'இதென்ன வம்பாய் முடிந்தது! நாம் இவன் தந்த அற்பத்தொகையான பதினாயிரம் பொன்னுக்கு ஆசை வைத்தால் கைக்கெட்டிய லக்ஷக்கணக்காய் விலையேறப் பெற்ற இரத்தினாபரணங்களை இழந்து விடுவோம்' என்றெண்ணி, அவனைப் பார்த்து, 'அப்பா, உன் பொருள் அதோ புதைக்கப் பட்டிருக்கிறது, தோண்டி யெடுத்துக்கொண்டுபோ' என்று சொல்ல, மணிபத்திரன் அதிக சந்தோஷத்துடன் போய்த் தன் பொருளைத் தோண்டி யெடுத்துக்கொண்டு அங்கே நிற்கையில், வேலைக்காரி ஓடிவந்து, 'அம்மா, உன் செல்வப் புதல்வர் ஊரிலிருந்து பரிசனங்கள் வாகனாதிகளோடும் வந்து இருக்கிறார், உன்னைப் பார்க்க அதிக ஆவல்கொண்டு என்னை அனுப்பி, தக்ஷணமே அழைத்து வரச்சொன்னார்' என்று சொன்னாள். ஔவையார் அது கேட்டுப் பரதேசியை நோக்கி, 'சுவாமீ என் குழந்தை வந்துவிட்டது; நான் போகிறேன்' என்று இரத்தினாபரணங்கள் வைத்துள்ள தாம்பாளத்தை வஸ்திரத்தால்மூடி எடுத்து வேலைக்காரி கையில் கொடுத்து, ஆனந்த பரவசமடைந்தவள் போல் நின்று கூத்தாடினாள். பக்கத்திலிருந்த

மணிபத்திரனும்கூட ஆடினான். அதைக்கண்ட பரதேசியும், கைக்கெட்டியது வாய்க்கெட்டாமற் போய்விட்டதே என்னும் பெருந்துக்கம் உள்ளே யிருந்தாலும் அதைவெளியே காட்டாமல் தானுமவர்களோடு ஒக்க ஆடினான். அதைக் கண்ட வேலைக்காரி பரதேசியைப் பார்த்து, 'சுவாமீ, என் எஜமாட்டி தூரதேசம் போய் நெடுநாள் சென்றுவந்த தன் செல்வக்குமாரன் நல் வருகையைக் கேட்டு ஆனந்த மேலீட்டால் ஆடுகிறாள், இவ்வணிகர் இழந்த பதினாயிரம் பொன் மறுபடியும் கைக்குவந்ததுபற்றிக் களித்து ஆடுகிறார், தேவரீர் ஏன் வீணே கால்நோவ ஆடுகிறீர்?' என்று கேட்டனள். அதற்குப் பரதேசி, 'விழுந்தவன் சிரிப்பது வெட்கத்துக்கு ஆற்றாமல்' என்னும் பழமொழி நீ கேட்டதில்லையா! என்று சொன்னான். பிறகு மணிபத்திரன் தான் கூறிய வண்ணம் அத் தந்திரசாலி யாகிய கிழவிக்கு ஆயிரம்பொன் கொடுத்துவிட்டுத் தன் ஊருக்குப் போய்ச்சேர்ந்தான்.

ஆராய்ச்சிசெய்து பாராமல் கேட்டதெல்லாம் மெய், கண்டதெல்லாம் உண்மை யென்று எண்ணி நம்பிக்கை வைத்து மணிபத்திரன் மிகவும் சங்கடப்பட்டது இக் கதையால் நன்கு விளங்குகிறபடியால், எந்த விஷயத்திலும் ஆராய்ச்சியும் நம்பிக்கையும்இணைபிரியாத் துணைவர்களா யிருத்தல்வேண்டும். ஒருவன் வருந்தித்தேடிய பொருளைக் காப்பாற்றிவைப்பதற்கு இப்போதிருப்பது போல் திரவியக்ஷேமசாலைகள், நிதிகள் முதலியவை அக்காலத்திருக்குமாயின் மணிபத்திரன் மேற்கண்டபடி அல்லற்பட்டிரானே!

16. சூரியபிம்ப லக்ஷணம்

இப்பூமியிலுள்ள யானை முதல் எறும்பீறான சகல உயிர்வர்க்கங்களும் புல்பூண்டுமுதலிய தாவரவர்க்கங்களும் மற்றுமுள்ள சேதனாசேதனங்களும் இவைகள் யாவற்றிற்குமேலான மானிடர்களும் சுகித்து வாழ்வதற்குச் சூரியன் அத்தியாவசியமானது. வானசாஸ்திரிகள் நெடுங்கால ஆராய்ச்சியினாற் கண்டறிந்த சில அற்புதமானவிஷயங்களை இங்கெடுத்துக் காட்டுகிறோம்:

சூரியபிம்பம் குறுக்களவில் 7,63,000 மைலிருக்கிறது. நாம் வசிக்கும் இப்பூமியின் குறுக்களவோ 7,950 மைலுக்கதிகமாயில்லை. ஆகவே இப் பூமியைப் பார்க்கிலும் சூரியபிம்பம் 1,392,500 மடங்கு பெரிதாயிருக்கிறது. சூரியனையும் இப்பூமியையும் ஒத்திட்டுப் பார்க்கையில் சூரியனை ஒரு கிச்சிலிப்பழமாகவும் பூமியை அதன் மீதுள்ள ஓர் சிறுமணலாகவும் சொல்லலாம். வாஸ்தவத்தில் இவ்வளவு பெரிதாயிருந்தும் சூரியன் இப்பூமிக்குச் சற்றேறக்குறைய ஒன்பதுகோடியே இருபதுலட்சம் மைல் தூரத்திலிருக்கிறபடியால் நமக்கு அது ஒரு சிறு உருண்டைபோல் தோன்றுகின்றது. இவைபோன்ற பெருத்தகிரகங்களின் பருமன் முதலியவற்றைக் கணக்கிட்டு நிச்சயமாயறிதல்கூடும். இவை யாவற்றையும் தன்னுளடக்கிக்கொண்டிருக்கும் ஆகாய வெளிப்பரப்பை அளவிட்டுக்கூற ஒண்ணாது. அது காலத்தைப்போல் ஆதியந்தமற்றது. இப்பூமியிலிருந்து சூரியமண்டலம் வரையில் ககனமார்க்கமாய் இருப்புப் பாதை ஒன்றை ஏற்படுத்தி, அதன் மூலமாகப் புகைவண்டியிலேறி, விடாது யாத்திரைசெய்வோமாகில் சூரியமண்டலத்தைப் போய்ச் சேருவதற்குச் சற்றேறக்

குறைய நானூறு வருஷம்பிடிக்கும். ஒரு நிமிஷத்தில் சுமார் எட்டு மைல் வீதம் போகத்தக்க வேகத்துடன் ஒரு பீரங்கிக்குண்டை இங்கிருந்து சூரியமண்டலத்துக்குச் செலவிடுப்போமாகில் அது சூரியனைப்போய்த் தாக்குவதற்குச் சுமார் இருபத்திரண்டுவருஷம் பிடிக்குமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஓர் சூரியகிரணம் பூமியிலுள்ள நம்மைத் தாக்குவதற்குச் சற்றேறக் குறைய எட்டுநிமிஷம் பிடிக்கிறது. ஆகவே சூரியன் உதயமாவதாக நமக்குத் தோன்றுகிற காலத்துக்கு எட்டு நிமிஷத்துக்கு முன்னரே அது வாஸ்தவத்தில் உதயமாயிற்றென்று நாம் அறிந்துகொள்ளவேண்டியது.

நம்முடைய ஊனக்கண்ணினால் பார்க்கமுடியாத அவ்வளவு பிரகாசமாய்ச் சூரியனிருக்கிறபடியினாலே அதன் பிம்பலட்சணத்தை நாம் கண்டறியவேண்டுமாயின், மங்கலான பச்சைக்கண்ணாடியமைந்த தூரதிருஷ்டிக் கருவியைச் சகாயமாய் வைத்துக்கொள்ளவேண்டியது. அதைக்கொண்டு சூரியபிம்பத்தைக் காணுகையில் அதில் சில விசித்திரங்கள் தோன்றுகின்றன. சூரியபிம்பத்தைச்சுற்றிலும் ஒரு பெரும் சமுத்திரத்தைப்போல அக்கினி சூழ்ந்திருக்கின்றது, அன்றியும் அளவிறந்த உலோகங்கள் கொடிய உஷ்ணத்தினால் உருகி ஆவியாய் எழும்ப அந்த ஆவி சூரியபிம்பத்தை நாற்புறமும் சுற்றிக்கொண்டிருக்கிறது. தூரதிருஷ்டிக் கண்ணாடியைக்கொண்டு வானசாஸ்திரிகள் சூரிய பிம்பத்தை ஆதியில் பார்த்தகாலத்திலே அதனிடத்துக் கறுத்த புள்ளிகள் இருப்பதைக்கண்டு வியந்தார்கள். அக்கறுப்புக் குறிகளைச் சில நாள்வரையில் விடாது தினம் பார்த்துக்கொண்டே வந்தபோது, அவை கீழ்த்

திசையினின்றும் மேற்றிசையாகச் சுழன்றுகொண்டு வந்து, சில நாள்வரையில் அவர்கள் கண்ணுக்குப் புலப்படாமலேயிருந்து, மறுபடியும் கீழ்த்திசையில் தோன்றின. இதனால், பூமியைப்போலவே சூரியனும் சுழன்றுகொண்டே வருகிறதென்றும், அது அந்தப்படி ஒரு விசை சுழலுவதற்கு நம்முடைய கணக்குப்படி இருபத்தைந்து நாளாகிறதென்றும் வானசாஸ்திர பண்டிதர்கள் கணக்கிட்டார்கள். இதை யோசித்துப் பார்க்குமிடத்து, சூரியன் நின்ற நிலையிலிருந்து தன்னிடத்து யாவற்றையும் இழுத்துக்கொள்ளும் சக்தியினால் பூமிமுதல் ஏனைய கிரகங்கள் தன்னைச் சுற்றிவரச் செய்துகொள்ளுகிறது போலவே, அச்சூரியனைப் போன்ற அநேக சூரியர்கள் தன்னைச் சுற்றிவரச் செய்துகொள்ளுகிற பெருத்த மத்திய சூரியபிம்பம் ஒன்று ஆதியந்தமில்லா வெளிப்பரப்பில் இருக்கவேண்டியது என்று எண்ணுவதற்கிடமிருக்கிறதல்லவா! அம்மத்திய சூரியன் எதுவோ! அது எவ்விடத்திலிருக்கின்றதோ! சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினனாகிய மானிடனுடைய மனதுக்கு அது எவ்வளவும் எட்டவில்லையே!

சூரிய பிம்பத்தின் மேற்புறம் மேற்கண்டபடி அக்கினி மயமான ஓர் பெருத்த சமுத்திரத்தில் முழுகி இருக்கிறபடியினாலே, நீர்மயமான சாதாரண சமுத்திரத்தில் பிரசண்ட மாருதத்தால் ஜலம் நெடுந் தூரம் வரையில் நாற்புறமும் கொந்தளித்து எழுகின்றதுபோல் அவ்வக்கினிக்கடலும் ஒவ்வோர்காலத்தில் ஆரவாரித்தெழுகின்றது. அந்தச் சமயங்களில் சூரிய பிம்பத்திலிருந்து எழுகின்ற அக்கினிக் கொழுந்து

சில நிமிஷங்களுக்குள்ளே இரண்டு லக்ஷம் மைல் தூரம் வரையில் மேலெழுந்துபாய்கின்றது. சில சமயங்களில் மேற்கண்ட அக்கினி மயமான சமுத்திரம் இடையிடையே விலகிவிலகித் தோன்றுதலினால் உட்புறத்துள்ள சூரியபிம்பத்தின் எதார்த்தமான கருநிறம் நமக்குப் புலப்படுகின்றது. பகற்காலத்தில் மேகங்கள் ஆகாசத்திலே இடம்விட்டுச் சற்றே பெயர்கையில் அந்த இடைவெளிமூலமாக அதற்கு மேலிருக்கும் ஆகாசத்தின் நீலநிறம் நமக்குத் தோன்றுவதுபோல் மேற்கண்ட அக்கினிக்கடலின் இடைவெளி மூலமாகச் சூரியபிம்பத்தின் இயற்கைக் கருநிறம் வெளியே தோன்றுகின்றது. இந்த இடைவெளிகள்தான் மேலே சொல்லப்பட்ட கறுத்த புள்ளிகளாகத் தோன்றுகின்றன என்று சில வானசாஸ்திரிகள் அபிப்பிராயப் படுகிறார்கள். இவைகளில் சில வெகுசீக்கிரத்தில் மாறுகின்றன. மற்றும் சில இரண்டு மூன்று வாரங்கள்மட்டும் அப்படியே இருக்கின்றன. பூமியைச் சுற்றிலும் வாயு இருப்பதுபோல் சூரிய பிம்பத்தைச் சுற்றிலும் நெடுந்தூரம்வரையில் அக்கினிசொரூபமான ஒளி வீசும் ஓர்விதப் புகை சூழ்ந்திருக்கின்றது. பகற்காலத்தில் நாம் நட்சத்திரங்களை எப்படிக் காணக்கூடாதோ அதுபோல், சூரியனைச் சூழ்ந்திருக்கும் மேற்படி அக்கினிமயமான புகையை நாம் சாதாரணமாய்ப் பார்க்க முடியாது. ஆயினும் கிரகணகாலங்களில் சந்திர பிம்பத்தினால் சூரிய ஒளி தடைபடும்போது அவ்வக்கினி மயமான புகைகள் சூரிய பிம்பத்துக்கு இட்ட ஜோதிமயமானமணிமகுடம்போல் காணப்படுகின்றன. பெரும் புயல் அடிக்குங்காலத்துச் சமுத்திரத்தின் அலைகள்

கொந்தளித்து மேலெழுந்து கீழே விழுவதுபோல் ஓர்வித அக்கினிப் பிரவாகம் சூரிய பிம்பத்தைச் சதா சூழ்ந்துகொண்டு இருக்கிறபடியினால் அதிலிருந்தும் கொழுந்துவிட்டு அக்கினி நாற்புறமும் மேலெழும்புவதும் அடங்குவதுமாயிருக்கிறது. சூரியனைச்சுற்றிலும் இந்தப்படி யிருக்கும் அக்கினிக்குக் காரணம் இஃதென்பதை வானசாஸ்திர பண்டிதர்கள் சரியாய்க் கூறவில்லை. அவர்களுக்குள் வெகுசாய் இது விஷயத்தைக் குறித்து அபிப்பிராயபேதம் உண்டாயிருக்கிறது. ஆயினும், பாரமான சில பெருத்த பொருள்கள் சதா சூரியபிம்பத்திலே நாற்புறமும் அதி வேகத்துடன் வந்து வீழ்ந்துகொண்டே யிருக்கிறபடியினாலே மேலே விவரித்தபடி அபாரமான அக்கினி சூரியபிம்பத்தைச் சூழ்ந்து உண்டாகின்றதென்று சில வானசாஸ்திரிகள் அபிப்பிராயப் படுகிறார்கள். இவர்கள் இங்ஙனம் கூறுவது சரியாகத்தோன்றுகிறது. ஏனெனில் இவ்வளவு பெருத்த உஷ்ணத்தைச் சூரியன் இயற்கையில் உடைத்தாயிருக்கினும் நாற்புறமும் வெளிப்பரப்பிலே உஷ்ணம் ஆவியாய்ப் பரவிப்போய்க் கொண்டிருக்கிறபடியால் நாளாவர்த்தியில் உஷ்ணம் குறைந்து ஒருகாலத்தில் சூரியன் தணிந்து போக வேண்டிவரும். குறைவு பட்டுக்கொண்டுவரும் உஷ்ணத்தைப் பூர்த்தி செய்துகொண்டே வருவதற்கு எவ்விதத்திலேனும் அதற்கு உஷ்ணவருவாய் இருத்தல்வேண்டும். ஆகையால் பாரமான சில பொருள்கள் சூரியனது கிராஹிய சக்தியினாலிழுக்கப்பட்டு சதா சூரிய பிம்பத்தில் வந்து தாக்கிக்கொண் டிருப்பதினாலே உஷ்ணக் கொதிப்பு குறைவுபடாமல் மேலும் மேலும் உண்டாய்க்-

கொண்டேவருகிற தென்னும் சித்தாந்தம் சரி யென்றே தோன்றுகின்றது. ஆகாயத்தி லுள்ள அளவிறந்த நட்சத்திரங்களென்னும் அண்டங்களுக்குள்ளே சூரியன் இப்பூமிக்கு மிகவும் சமீபமானதாகையால் அது நமக்கு அவ்வளவு பெரிதாகவும் பிரகாசமுள்ளதாகவும் தோன்றுகிறது. சூரியன் தன்னிடத்து ஜெகதீசன் அமைத்துவைத்த பேராற்றலால்தான் இப்பூமண்டலமும் ஏனைய கிரகங்களும் தன்னைச் சூழ்ந்து வரும்படியாகச் செய்து அவற்றில் வசிக்கும் சகல உயிர் வர்க்கங்களுக்கும் ஜீவாதாரமா யிருந்துகொண்டும், அவ்வண்டங்களெல்லாம் தத்தம் நிலையில் திரியாமல் நிறுத்திச் செலுத்திக்கொண்டும் வருகின்றது. இப் பூமண்டலத்திலுள்ள சகல உஷ்ணத்துக்கும் விளக்கு முதலிய வெளிச்சங்களுக்கும் சூரியனே ஆதிகாரணமாயிருக்கின்றது. உஷ்ணமிராவிடில் ஜலம் ஆவியாய் எழும்பி மேகமாவது காலத்திரயத்தும் இல்லை. மேகம் இல்லாவிடத்து மழை எங்ஙனம் உண்டாகும்! மழை யில்லாவிடத்து உலகத்துக்கு நேரிடும் அனர்த்தத்தை அளவிட்டுக் கூறவொண்ணாது.

'நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும்.'
'தானந் தவமிரண்டுந் தங்கா.'
'விரிநீர் வியனுலகத் துண்ணின் றுடற்றும் பசி.'

இதுகாறும் கூறப்பட்ட விஷயங்கள் யாவற்றையும் ஐரோப்பிய வானசாஸ்திரிகள் நெடுநாளைய ஆராய்ச்சியினாலும் நுட்பபுத்தியினாலும் அயர்விலா ஊக்கத்துடன் கண்டுதெளிந்து உலகத்துக்கு உபகாரார்த்தமாகத் தெரிவித்திருக்கிறார்கள். சூரியன் உலகத்தில் உள்ள சேதனாசேதனங்களுக்கு இன்றியமையாத்

துணையாயும் மகத்தாகிய ஜீவாதாரமாயும் இருக்கிற காரணத்தை இந்துக்கள் உணர்ந்தே சூரியனைக் கடவுளுக்கு இருப்பிடமாகக் கொண்டு, அதை வழிபட்டு வருகிறார்கள். சைவர்கள் அதனிடத்துச் சதாசிவப்பிரமம் இருப்பதாகவும், வைணவர்கள் நாராயணமூர்த்தி இருப்பதாகவும் கூறுநிற்பர். அதன் பிம்பலக்ஷணத்தையும், அதற்கும் இந்தப்பூமிக்கும் உள்ள தூரமுதலிய விவரங்களையும், மற்றும் விசித்திரங்களையும், ஐரோப்பியர்களைப்போல், புராதன இந்துக்கள் ஏன் அறிந்திலர்? என்று வினவி, அவர்கள் கேவலம் அவிவேகிகளானபடியால் இத்தகைய அற்புதமான விசித்திரங்கள், ஐரோப்பியர்களுக்கு விளங்கியதுபோல, புராதன இந்துக்களுக்கு விளங்கவில்லையென்று இப்போது சிலர் ஏளனஞ் செய்கிறார்கள். புராதன இந்துக்களில் கல்வி, நுட்பபுத்தி முதலிய விசேஷங்கள் சால அமையப் பெற்ற சாதுக்கள் ஞானிகளாய் உலகப்பற்று ஒழிந்தவர்களாகிக் கடவுளின் திருவடி ஒன்றையன்றி ஏனையவற்றைப் பொருளென மதியாதிருந்த படியினாலும், இவ்வகிலாண்டத்தையும் அதற்குள் ஒடுங்கிய ஆதித்தன் முதலிய அண்டங்கள் யாவையும் நிலையில்லா மாயாகாரியங்க ளென்னும் சித்தாந்தத்தைக் கொண்டிருந்தபடியினாலுமே, அவர்கள் மஹா புத்திமான்களாயிருந்தும், இவைபோன்ற விஷயங்களில் மனதைச் செலுத்தாமற் போய்விட்டார்கள்.

‘எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல்பக லெங்கண் மற்றொன் றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.’

என்று இந்துக்களுக்குள் விவேகத்தில் சமானாதிக மில்லாத மஹான் ஒருவர் கூறுகின்றார். அவர்கள் கொண்ட சித்தாந்தத்துக்கு ஏற்க அவர்கள் அந்தப்படிதானே யிருக்கவேண்டியது? ஆகையால் அவர்களை எவ்வளவும் அவிவேகிகளென்று நிந்திப்பது தருமம் அன்று. உலகத்தையும் அதைச் சார்ந்த பொருள்களையும் நித்தியமானவைகள் என்னும்சித்தாந்தத்தை அவர்கள் கொண்டிருந்தால் மேலே காட்டப்பட்டனவற்றை ஒத்த அளவிறந்த விசித்திரங்களை அவர்களும் கண்டுபிடித்தேயிருப்பார்கள். ஏன் அங்ஙனம் கூடாது? விவேகமும் ஆராய்ச்சியுந்தானே இப்படிப்பட்டனவற்றை யறிவதற்குக் காரணம்?

---

17 தருமம் என்பது யாது?

ஒவ்வொருவனும் தன் இன்னுயிரைப் போல் ஏனைய உயிர்களைக் கருதி அவற்றிற்கு நேரிடும் இடுக்கண்களைத் தனக்கே நேரிடும் இடுக்கண்களாகப் பாவித்துத் தன்னாலியன்ற வரையில் மனமொழி மெய்களினால் உதவி புரிந்து வரவேண்டியது. அங்ஙனம் செய்தல் மானிட இலக்கணம் பெற்ற ஒவ்வொருவனுடைய கடமையாகும்; அதுதான் தருமம் எனப்படும். எவ்வகைப்பட்ட பெருஞ்சம்பத்தை ஒருவன் எய்தப் பெற்றானே யாயினும், அவன் பிறருடைய உதவி யில்லாவிட்டத்து உலகத்தில் சுகித்து வாழ்வது அரிது. யாவரும் பரஸ்பர உதவி புரிந்து கொண்டுவந்தால்தான் ஜனசமூக

வாழ்க்கை நடைபெறும். இது நம் ஒவ்வொருவருக்கும் அனுபவசித்தம். இதைத் தீர்க்கமாய் ஆலோசித்துப் பார்க்குமிடத்து, ஒவ்வொருவனும் தன்னா லியன்றவரையில் பிறருக்கு உதவிபுரிதல் வேண்டுமென்பதே கடவுளின் கருத்தென்று தெளிவாய் விளங்குகிறது. ஆகவே, தருமசிந்தை யென்பது எப்படிப்பட்டவ னிடத்தும் சிறிதேனும் இராமற் போகாது. ஜீவகாருண்ணியம், தெய்வபக்தி முதலிய அருங்குணங்கள் விருத்தி ஆக ஆகத் தருமசிந்தையும் மனதில் அதிகரிக்கும். இயற்கையில் மனிதன் முற்றும் சுயப்பிரயோசனத்தையே கருதுபவனென்றும், பரோபகார சிந்தை அவனிடத்துச் செயற்கையால் உண்டாகிறதென்றும், அந்தப்படி செயற்கையாலுண்டாகும் பரோபகார சிந்தையும் ஒருவித சுயப் பிரயோசனத்தையே தனக்குக் காரணமாகக் கொண்டிருக்கிறதென்றும் மாண்டேவில் என்பவர் முதலாய சில மனோதத்துவ லக்ஷணசாஸ்திரிகள் கூறுகின்றனர். ஒருவன் ஒரு ஏரிகரைவழியாய்ப் போய்க் கொண்டிருக்கையில் அக்கரைக்குச் சமீபமாகத் தண்ணீரில் விழுந்து தத்தளித்துக் கொண்டிருக்கும் ஒரு சிறுகுழந்தையை அவன் கண்டகாலத்து, அதிவிரைவாய் ஓடித் தன்னாலாகிய உதவிபுரிந்து, அக்குழந்தையை வெளியே யெடுத்து விடுகின்றான்; அவன் அங்ஙனம்,புரிந்த அற்புதமான செய்கைக்காக அவனைக் கைகொட்டி வியப்பவர் அருகில் ஒருவருமில்லை; அவனுக்கு வேறுவகையினால் எவ்வித பரிசினையும் யாவரும் கொடுப்பாரில்லை; அங்ஙன மிருந்தும், அவனை அந்தக் காரியத்தைச் செய்யத் தூண்டியது எது? இயற்கையில் அவனிடத்துப் பரோபகார சிந்தை யென்னும் தருமகுணம் இராவிடில்

அவன் ஏன் அந்தக் காரியத்தைச் செய்யவேண்டும்? அந்தக் காரியத்தை அவன் செய்ததில் எவ்வித சுயப்பிரயோசனத்தையும் அவன் எதிர்பார்த்திலனே! என்று நாம் கேட்போமானால், அப்படியல்ல, தன்னாலியன்ற ஓர் உபகாரத்தை அக்குழந்தைக்குச் செய்து அதனைத் தப்புவித்ததனால் அவனுடைய மனதில் ஒருவித திருப்தியும் மகிழ்ச்சியும் உண்டாகின்றன; அங்ஙனம் செய்யாவிடில் ஒருவித அதிருப்தியும் துக்கமும் அவனுடைய மனதில் உண்டாகின்றன; அத்தகுதிய மகிழ்ச்சியைப் பெறும் பொருட்டும், துக்கத்தைப் போக்கிக்கொள்ளும் பொருட்டும் அவன் அக்காரியத்தைச் செய்கிறானாகையால் அவன் சுயப்பிரயோசனத்தையே நாடி அந்தக் காரியத்தைச் செய்கிறானென்று மேற்கண்ட மனோதத்துவலட்சண சாஸ்திரிகள் வாதிக்கிறார்கள். மானிட இயல்பை இவ்வளவு கேவலப்பட்டதாகக் கருதுகிற அந்த சாஸ்திரிகளின் அபிப்பிராயத்துக்காக நாம் பரிதாபங் கொள்ளுகிறோம். அப்படிப்பட்ட நற்காரியத்தைச் செய்தல் ஒருவித திருப்தியும் மகிழ்ச்சியும், அதனைச் செய்யா தொழிந்தவிடத்து ஒருவித அதிருப்தியும் துக்கமும் மனிதனுடைய மனதில் ஏன் தோன்ற வேண்டும்? அத்தகுதிய நற்காரியத்தைச் செய்தபோது துக்கமும், செய்யா விடத்து மகிழ்ச்சியும் ஏன் மனிதனுடைய மனதில் இயற்கையிலே தோன்றுதல் கூடாது! முற்கூறிய வண்ணம் தோன்றுவது அவனுக்கு இயற்கை யென்றும், பிற்கூறியவண்ணம் தோன்றுவது அவனுக்கு இயற்கையன்றென்றும் மேற்காட்டிய சாஸ்திரிகள் ஒப்புக்கொள்ள வேண்டிவரும்.

ஆகவே, பரோபகாரசிந்தையாகிய தருமகுணம் மனிதனிடத்து இயற்கையில் அமைந்துகிடக்கின்றது என்றே ஏற்படுகிறது. அப்படிப்பட்ட குணம் இயற்கையில் மனிதனிடத்துள்ளது என்பதைக் குறித்தும், இல்லதென்பதைக் குறித்தும், அது கேவலம் சுயப்பிரயோசனத்தையே காரணமாகக் கொண்டிருக்கிறது என்பதைக் குறித்தும், அங்ஙன மின்றி அது தானே உதித்து வேறொன்றின் துணையின்றியே இயங்குகின்றது என்பதைக் குறித்தும் அபிப்பிராயங்கள் பலவாறாகப் பேதப்பட்டிருக்கினும், அத் தகுதிய குணம் மனிதனிடத்து உண்டென்பதைமாத்திரம் யாவரும் நிராட்சேபணையாய் ஒப்புக்கொள்ளுவார்கள் என்பதற்கு ஐயமில்லை.

இந்துக்களுக்குள் உதாரகுண சீலர்கள் என்று பெயரெடுத்த பிரபுக்களெல்லாம் தம்மை வந்தடைந்தவர்கள் எந்தக்காலத்தில் எதைக் கேட்கினும் அவர்களுக்கு அதனை எவ்வளவும் முகஞ்சுளியாது, 'இன்னுயிரேனுங் கொள்ளுதல்தீது கொடுப்பதுநன்றால்.' என்னும் கோட்பாட்டைக் கடைப்பிடித்து எவ்வகைப்பட்டபிரதிபலனையும் நாடாது கொடுத்துக்கொண்டு வந்தார்கள். கர்ணன், மாபலி, சிபி, ததீசி, குமுணன் முதலானோர் வரையாது வழங்கி வள்ளலென்னும் பெயர் எய்தப்பெற்றவர்கள். அவர்கள் செய்த அற்புதமான காரியங்கள் அவர்களுடைய சரித்திரத்தால் முறையே விளங்கும். அவற்றை ஈண்டு விரிக்கிற் பெருகும். மறுமைப் பயன் முதலியவற்றைக் கருதியாவது ஏற்போனிடத்து ஏதோ சில பிரதிபலன் முதலியவற்றை எண்ணியாவது ஒரு பொருளை ஈதல் எவ்வளவும் ஈகையாகமாட்டாது.

அதை ஒருவித வர்த்தக மென்றே ஆன்றோர் திரஸ்காரஞ் செய்துளார். அது எவ்வளவும் தரும சிந்தையின் காரியமாகாது.

'வறியார்க்கொன் றீவதே யீகை மற்றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.'

என்றார் தெய்வப்புலவர்.

தருமசிந்தையின் பயனாகிய ஈகையைக்குறித்து விசேஷமாகக் கூறிய பெரியோர் ஏற்பதைக் குறித்து இழிவாகப் பேசியுளார். 'ஏற்ப திகழ்ச்சி.' 'ஐயமிட்டுண்." என்னும் இரண்டு அற்புத வாக்கியங்கள் அடுத்தடுத்து அமைக்கப்பட் டிருக்கின்றன. இவை ஒன்றுக்கொன்று முரண்படுகிறதாகச் சிலர் மயங்குகிறார்கள். இம்மயக்கத்தால் விளைந்த விபரீதம் அம்மம்ம பெரிது பெரிது! 'ஏற்பதிகழ்ச்சி' என்னும் வாக்கியத்தின் உண்மையைக்கடைப்பிடித்து எவனும் ஏற்காதிருந்தால் மற்றொருவன் ஐயமிட்டு உண்ணுவது எப்படி? என்று தர்க்கித்து மேலைய இரண்டு வாக்கியங்களுக்குள் ஒன்றை மனங் கூசாது சில கனவான்கள் எடுத்து விட்டார்கள்.

'நல்லா றெனினுங் கொளறீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.'

நற்காரியத்தை உத்தேசித்தாலும் ஒருவரை அடுத்து, அவரிடத் தொன்றை ஏற்பது தீது என்றும், ஒருவன் மறுமைப்பயன் முதலியவற்றில் நம்பிக்கையற்றநாஸ்திகனாயிருக்கினும் பிறருக்கு ஈதலே நன்று என்றும் பொருள்பட தெய்வப்புலவர் ஒரு குறட்பாவிலேயே கூறிய கட்டுரைகளும் முரண்படுகின்றன என்று

கருதி மேற்கண்ட கனவான்கள் அதின் ஓர் பாகத்தை எடுத்து விடுவார்கள் போலும். ஈகை பரோபகார சிந்தையை எந்நாளும் வளர்க்கும் தாயாகையால் அதை மேலோர் அதிகமாய்ச் சிறப்பித்தார்கள். உதார குணமுள்ள ஒருவனை மற்றொருவன் ஒரு பொருளை யாசிக்கையில் அது அவனிடத்தி லில்லாவிடத்து அவன் படுகின்ற துன்பத்தை இவ்வளவு அவ்வளவு என்று ஒருவராலும் சொல்ல ஒண்ணாது.

'சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
மீத லிசையாக் கடை.'

ஒருவனுக்கு இறத்தலைப்போல் துன்பஞ் செய்வது ஒன்றுமில்லை, தன்னை வந்தடுத்தவனுக்கு அவன் கேட்பதைக் கொடுக்க முடியாவிடத்து அவ்விறத்தலும் இனிதாகும், எனவே, சாதலைவிட அதிக துன்பத்தை அது பயக்கும் என்பது சத்தியம். இரப்பவன் இத்தகைய பெருந்துன்பங்களை யெல்லாம் ஒருவனுக்கு விளைத்தலாலும், மானத் தோடு கூடிய ஸ்வயேச்சையான வாழ்க்கையை அவன் விட்டொழித்த லாலும், அவனால் சோம்பல் முதலிய தீக்குணங்கள் வளருவதற்கிட மிருத்தலாலும் இரவச்சத்தைக்குறித்து மேலோர் விசேஷமாய்க் கூறியிருக்கிறார்கள்.

'சென்று பலிபக்கல் செங்கைவிரித் தேற்றல்பழு
தென்றுகுன்றி நின்றா யிரங்கோசா-தன்றிதரும்
ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில்.'

அரங்கநாதா! மஹாபலியினிடத்து நீ சென்று மூன்றடி மண் யாசித்த காலத்தில் உன் தேகம் குன்றி வாமனனாய் நின்றாயே, யாசித்தல் அவமானமாகியகாரிய

மென்று கருதித்தானோ உன் தேகம் அப்போது குன்றியது! யாவருக்கும் நன்மையைத்தரத்தக்க பசுவுக்கு நீர் வேண்டுமென்று ஒருவரையாசித்தாலும் அப்படிப்பட்ட யாசகத்தினால் நாவுக்குவரும் அவமானத்தைப் போல வேறே எதனாலும் வராது என்று தெய்வப்புலவர் கூறிய குறட்பாவின் கருத்தை யான் நன்குணர்ந்தேன் என்று இரவினால் தேகம் குன்றும்படி ஒருவனுக்கு உண்டாகும் அவமானத்தைக் குறித்து ஒரு பெரியவர் நிந்தாஸ்துதியாகப் பாடியுள்ளார். யாசித்தல் ஒவ்வொருவனுக்கும் அவமானம் என்றும், ஐயமிடுதல் ஒவ்வொருவனுடையகடமை யென்றும் ஏககாலத்தில் சொன்னால் நாம் நடந்துகொள்ளும் வழிதான் யாது! என்னும் வினா நிகழும். வறியவர்களும் ஆதரவற்றவர்களும் இருக்கிற இடம் தேடிப்போய் நாம் உபகரிக்கவேண்டு மென்பதே மேலோருடைய கருத்தென்பது அவ்விரண்டு வாக்கியங்களினால் விளங்குகிறது.

"என்று முகம னியம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர் - துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழவோ
நாவிற் குதவு நயந்து."

என்று ஆன்றோர் கூறிய அமுதவாக்கே இக்கருத்தை நாட்டவல்லது. இந்த விஷயத்தைத் தற்காலத்தில் இந்துக்கள் அறிந்து கொள்ள வேண்டுமானால் இங்கிலாந்திலுள்ள ஆங்கிலேயர்களின் அப்பியாசங்களைச் சற்றே நிதானித்துப் பார்க்கவேண்டும். இங்கிலாந்தில் வெகுசாய்ப் பிட்சைக்காரர்கள் கிடையவே கிடையார். பிட்சை யெடுப்பது மானுஷிக தருமத்துக்கு முழுவதும் விரோதமென்றும், இரத்தல் பெரு-

த்த அவமானத்துக்கிடமென்றும உணர்ந்து ஆங்கிலேயர்கள் இங்கிலாந்தில் அங்கங்கு தரும வைத்தியசாலைகளையும் கைத்தொழிற்சாலைகளையும் ஏற்படுத்தி அவற்றிற்காகத் தம்மாலியன்ற வரையில் மாதந்தோறுமாவது வருஷந்தோறுமாவது பொருளுதவி செய்துகொண்டு வருகிறார்கள். முதலாவது, வியாதியினாலாகிலும் அங்க ஹீனமாய்ப் பிறந்ததினாலாகிலும் வயோதிகத்தினாலாகிலும் அசக்தனாய்த்தானே மெய்வருந்திப் பொருளீட்ட முடியாமையும், இரண்டாவது, வேலைசெய்யச் சக்தி யிருந்தும் வேலை கொடுப்பாரில்லாமையினால் பொருளீட்ட முடியாமையுமே ஒருவன் பிட்சை யெடுப்பதற்கு முக்கியகாரணங்கள். வியாதியஸ்தர்களுக்குத் தரும வைத்தியசாலைகளையும், வயோதிகர்கள் முதலிய அசக்தர்களுக்குத் தரும சத்திரங்களையும், வேலை வேண்டுமென்பவர்களுக்குக் கைத்தொழிற் சாலைகளையும், ஏற்படுத்திவிட்டால் எவனும் சோம்பேறியாய் யாசிப்பதற்கு இடமிராதல்லவா? ஆகவே, மேற்கண்ட அற்புதமான ஏற்பாடுகள் அமையப் பெற்றிருக்கிற காரணத்தினாலே இங்கிலாந்தில் பிட்சை யெடுப்பது இராஜதண்டனைக்கு உள்ளாகத்தக்கதோர் குற்றமாகவும் எண்ணப்படுகிறது. இந்த அற்புதமான ஏற்பாட்டினால் இங்கிலாந்தில் எவனும் சோம்பித்திரிவதற்கு இடமில்லை. பொருளுள்ளவர்கள் மேற்கண்ட சாலைகளுக்கு உதவிசெய்து வருவதே பெருந்த தருமமாகும். தங்களுடைய தேசத்தில் வறியவர்களாயிருப்பவர்கள் யாசகத்தினால் அவமானம் அடையாதபடிக்கும், தாங்கள் இயன்றவரையில் தருமம் செய்யும்படிக்கும் அனுகூலமான மேற்கண்ட ஏற்பாடுகளை உண்டாக்கிய ஆங்கிலேயர்களுடைய மதியே மதி!

இப்படியிருந்தும் இங்கிலாந்திலே ஒரு காலத்தில் நன்றாய் வாழ்ந்துகெட்ட உயர்ந்த குடும்பத்தைச்சேர்ந்த ஆண்பாலாரும் பெண்பாலாரும் கைத்தொழிற் சாலை முதலிய இடங்களிற் சென்று கூலிவேலை செய்வது தங்களுக்குக் கௌரவதோஷத்தை உண்டாக்குமென்று நினைப்பாராகில், பிறரை யாசிப்பது அதனிலும் கோடி மடங்கு அகௌரவம் எனக் கருதி நெருப்புக்குச்சு, சுருட்டு, பதுமைகள் முதலிய சுவல்ப விலையுள்ள பொருள்களை விற்பனை செய்பவர்களைப்போல் நடித்து, அப்பண்டங்கள் வாஸ்தவத்தில் எவ்வளவு விலைபெறுமோ அதற்கு ஏழெட்டுமடங்கு அதிகமாய் விலை கூறி வைத்துக்கொண் டிருப்பார்கள். இக்குறிப்பை அறிந்துகொண்டு பிரபுக்களும் கொடையாளிகளும் அப்பண்டங்கள் வாஸ்தவத்தில் தமக்கு வேண்டியிராவிடினும் அவற்றை அவர்கள் கூறும் விலைக்கு வாங்கிக்கொள்வது வழக்கம். இங்கிலாந்தில் நடந்தேறும் தந்திரமான இவ்வர்த்தகம் விவேகிகளால் வியக்கற்பாலது. ஏற்பது இகழ்ச்சியாதலால் வாழ்ந்து கெட்ட அவ்வறியவர்கள் ஏலாமலே பிறரிடத்திலிருந்து சகாயம் பெறுவதற்கும், பிறருக்குத் தருமசிந்தை காரணமாக உதவிபுரியத் தொடங்குகையில் சோம்பலை அவர்களிடத்து வளர்க்காதிருப்பதற்கும் மேற்கண்ட வர்த்தகம் அனுகூலமான வழி வகையாயிருக்கின்றது: பிக்ஷை யெடுத்தே வயிறுவளர்த்து வந்த ஒரு பைராகி சென்னைமாநகரத்தில் ஒரு வீட்டு வாயிற்படியண்டை நின்றுகொண்டு பெருங்கூச்சலிட்டு அரிசி பிக்ஷைகேட்டான். உள்ளேயிருந்த வீட்டுக்காரன் அதிசாந்தமாய், 'ஐயா, பெண்கள் வீட்டிலில்லை, இந்தவேளை தயவு

செய்து போய்வாரும்' என்றான். அதற்கு அதிகார பிக்ஷைகேட்ட அந்த பைராகி 'ஓய், உன் பெண்டுகளைக் கொடு என்று யான் கேட்கவில்லையே, அரிசி தானே பிக்ஷைகேட்டேன்! ஏன் பெண்டுகள் இல்லை என்கிறாய்!' என்று வீட்டுக்காரன் மனம் நோகச்சொன்னான். இப்படிப்பட்ட அகங்கார சொரூபிகளுக்குப் பிக்ஷை போடுவது எவ்வளவும் தருமமாகாது. வேலைசெய்யச் சக்தியுள்ளவர்களெல்லாம் அதிகார பிட்சைகேட்க, அவர்களுக்குப்பயந்து பிட்சைகொடுத்துச் சோம்பலை வளர்க்கும் நம்மனோர் நம்முடைய தேசத்தில் எவ்விடங்களிலும் கைத்தொழில் சாலைகளை ஏற்படுத்துவதென்னும் பெருத்த தருமத்தை ஆங்கிலேயரைப்போல் காலதாமதமின்றிச் செய்வாராக. வறியவர் பிழைக்க வழிகாட்டுவதைவிட வேறே தருமமுண்டா ? வறியவர்களுக்கு ஏராளமாய்ப் பொருள் முதலியவற்றை வழங்கி அவர்களைச் சோம்பேறிகளாக்குவதைவிட அவர்கள்பிழைப்பதற்கு வழிதேடிவைப்பதே பெருத்த தருமமாகும். பலவகையான எந்திரங்கள் நாள்தோறும் உண்டாய்க் கொண்டேவருவதனால் இப்போது இங்கிலாந்தில் கைத்தொழிற்சாலைகளெடுபடலும், பிழைக்க வகையறியாத வறியவர்கள் அனேகர் தினே தினே மரித்துக்கொண்டு வருகிறார்கள். பரிதாபம் ! பரிதாபம்! வறியவர்களுக்குப் பிழைப்பில்லாமற் போகுமென்று நினைத்துத்தானே நம் முன்னோர் இந்தியாவில் எந்திரங்களை உண்டாக்கி அவற்றைக்கொண்டு நெய்தல் உழவு முதலிய தொழில்களைச் செய்யாமலிருந்தார்கள் ! இல்லாவிடில், புத்திகோசரமும் கற்பனாசக்தியும் சால அமையப் பெற்றிருந்த நம் முன்னோர் இந்தியாவில் அந்தத் தொழில்-

களுக்கு எந்திரங்களை ஏன் உண்டாக்கி வைக்கவில்லை வறியவர்கள் பிழைப்பற்றுப்போய் விடுவார்களென்று கருதியே அவர்கள் அவற்றை ஏற்படுத்த முயலவில்லையென்று தெரியவருகிறது.

---

18. சந்திர பிம்ப லட்சணம்.

இரவில் நமக்கு ரமணீகரத்தை விளைவிப்பது சந்திரன். இப்பூமியிலுள்ள நமக்குச் சூரியபிம்பம் எவ்வளவுபெரிதாய்த் தோன்றுகின்றதோ அவ்வளவு பெரிதாகவே சந்திரனும் தோன்றுகிறபடியால் அவ்விரண்டும் ஒரே பரிமாணத்தை யுடையனபோல் தோன்றுகின்றன. சூரியமண்டலத்துக்கும் பூமிக்கும் எத்தனை மைல் தூரமிருக்கிறதாக முன்னே சொல்லியிருக்கின்றோமோ அதற்கு, பூமிக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரம் சற்றேறக்குறைய நானூறுமடங்கு குறைந்ததாயிருக்கின்றது. ஆகையினால் தான் சூரியனுக்கும் சந்திரனுக்கும் பரிமாண விஷயத்தில் பெருத்தபேதம இருக்கினும் இரண்டும் சமமாயிருப்பதாக நம்முடைய திருஷ்டிக்குத் தோன்றுகின்றன. இப்பூமிக்கும் சந்திரனுக்கும் 240, 000 மைல் தூரமிருக்கிறது. இப்பூமியிலிருந்து சந்திரமண்டலம் வரையில் ஆகாயமார்க்கமாய் இருப்புப்பாதை ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலமாகத் தூமசகடத்திலேறி விடாது யாத்திரை செய்வோமாகில் சந்திரமண்டலத்தைப்போய்ச் சேருவதற்குச் சற்றேறக்குறைய ஒருவருஷம் பிடிக்கும். ஆகாயத்திலுள்ள அளவிறந்த கிரகங்களுக்குள்ளே இப்பூமண்டலத்துக்கு அதிசமீபமாயுள்ளது சந்திரனேயாம். இப்

பூமி எவ்வளவு பரிமாண முள்ளதாயிருக்கிறதோ அதில் ஐம்பதில் ஒருபங்குதான் சந்திரனுடைய பரிமாணம். சந்திரன் இரவில் இருளை ஓட்டத்தக்க பிரகாசத்தை உடையதாயிருக்கினும் அது இயற்கையில் ஒளியற்றதோர்பொருள். சூரிய ஒளி சந்திரன்மீது பட்டுப் பிரதிபலிப்பதே சந்திரனுடைய ஒளியாகும். மற்றப்படி அதற்கு இயற்கையில் ஒளி கிடையாது. சந்திரனுக்கு இயற்கை ஒளி இருக்குமாயின் அது தேய்பிறைகள் வளர்பிறைகளின்றிச் சதா பூரண கும்பம் போல் ஒளிவீசிநிற்கும். வாஸ்தவத்தில் சந்திரனுடைய பரிமாணம் குறைவது இல்லை. அதன் எந்தப்பாகத்திலே சூரியனுடைய ஒளி தாக்குகின்றதோ அந்தப் பாகம் பிரகாசிப்பதாக நமக்குத் தோன்றுகின்றது. அங்ஙனம் சூரியனுடைய ஒளி பிரதிபலிக்காத பாகங்கள் நமக்குத் தோன்றுவதில்லை. அமாவாசை காலங்களில் சந்திர ஒளி நமக்கு எவ்வளவும் தெரியாதபடியினால் அது அன்றையத்தினம் உதிக்கின்றதே இல்லையென்று சாதாரண ஜனங்கள் நினைக்கிறார்கள். ஏனைய நாட்களைப் போலவே சந்திரன் அன்றையதினமும் உதயமாகிறான். ஆனால் சூரியனுடைய ஒளி தாக்கிப் பிரதிபலிக்காத சந்திரபாகம் நமக்குப் புலப்படுகிறதாகையால், சந்திர ஒளி அன்றையதினத்தில் நமக்குத் தோன்றுகிறதில்லை. ஆகவே பௌர்ணிமி காலத்தில் சூரியஒளிதாக்கிப் பிரதிபலிக்கும் பாகம் முழுமையும் நம்முடைய கண்ணுக்குப் புலப்படுகின்றமையால், அன்றையதினத்தில் அதன் பூரண ஒளி நமக்குப் பயன்படுகின்றது. அமாவாசை காலத்தில் இருட்டிய பிறகு சந்திரனை நிதானித்து உற்றுப்பார்ப்போமாகில் சூரிய

ஒளிதாக்கிப் பிரதிபலிக்காத அதன்பாகம் இப்பூமியின் ஒளிதாக்கிப் பிரதிபலிப்பதினாலே அதியற்ப ஒளியோடு ஒருவாறாகப் பிரகாசிப்பதை நாம் காணலாம். இப்பூமியிலுள்ள நமக்குச் சந்திரன் எப்படி பிரகாசத்தைத் தருகின்றதோ அதுபோல் சந்திரனிடத்து எவரேனு மிருக்கின் அவர்களுக்கு இப்பூமி பிரகாசத்தைத்தரும். இப்பூமிஇயற்கையில் ஒளியற்றபொருளாயிருக்க இதற்குப் பிரகாசம் எங்ஙனம் வரும்? இது சந்திரவாசிகளுக்குப் பிரகாசத்தை எங்ஙனம் தரும்? பூமி இயற்கையில்ஒளியற்றபொருள் என்பதற்கு அதில் வசிக்கிறவர்களாகிய நமக்கு இரவில் விளக்கு வெளிச்சங்களும் ஏனையகிரகங்களின் பிரகாசமும் அத்தியாவசியமாக வேண்டியிருப்பதே சாட்சி பகரத்தக்கதாயிருக்கிறதல்லவா? என்னும் வினாக்களைப் பலரும் ஆவலுடன் கேட்கவேண்டிவரும். சந்திரன் இயற்கையில் ஒளி யற்றபொருளாயிருந்தும் அது பிரகாசித்து இப்பூவாசிகளாகிய நமக்கு இரவில் ஒளியைத்தருவது என்ன காரணத்தினால் என்று முன்னே சொல்லியிருக்கின்றோமோ அதே காரணத்தினால் தான் இப்பூமியும் இயற்கையில் ஒளியற்றிருந்தும் சந்திரவாசிகளுக்கு இரவில் பிரகாசத்தைத்தருகின்றதென்று உணரவேண்டியது. சூரியஒளி இப்பூமியின்மீது தாக்கிப் பிரதிபலிப்பதே இப்பூமியின் ஒளிக்குக்காரணம். நாம்வசிக்கும் இப்பூமியைப்போன்ற எண்ணிறந்த அண்டங்களைப் பரம தயாநிதியாகிய ஜகதீசன் வெளிப் பரப்பில் அமைத்து அவற்றுள் ஒவ்வொன்றும் ஏனையவற்றிற்கு உதவியாயிருக்கும்படி வைத்த அருமைத்திறத்தை நோக்குகையில், இவ்வுலகத்திலுள்ள சேதனாசேதனங்-

கள் யாவும் ஒன்றுக்கொன்று உதவிபுரிந்து உயிர்வாழ்ந்துவர வேண்டும் என்பதே தன்வயத்தனாகிய பரமபிதாவின் கருத்தென்பது வெள்ளிடைமலை போல் புலப்படுகின்றது. ஒரு அண்டம் மற்றொரு அண்டத்துக்கு உதவிபுரிந்து கொண்டு வரவேண்டும் என்பதே அவருடைய திருவுளக் கருத்தாயின் ஒரே அண்டத்திலுள்ள சராசரங்கள் ஒன்றுக் கொன்று உதவி புரிந்து கொண்டு வரவேண்டுமென்பதும்கடவுளின் கருத்தென்பதற்கு ஐயமென்ன? ஒரு தேசத்திலுள்ளவர்கள் ஒருவருக்கொருவர் தம்மாலியன்ற வரையில் உதவிபுரிந்து சுயப்பிரயோசனத்தையே நாடுவதை அறவேவிட்டகல வேண்டு மென்பது கடவுளின் கருத்தென்பதுசொல்லாமே யமையும். ஆகவே எவ்வகைப்பட்ட தாழ்ந்த புல் பூண்டு விலங்காதிகளும் உயர்ந்த வஸ்துக்களுக்குப் பெருத்த உதவியாயிருக்கின்றனவென்பதை நாம் மறவா திருக்கவேண்டும். எதையும் பயனற்றதென்று இகழுதல் கூடாது. யாவும் தன்னுடைய பிரயோசனத்திற்காகத்தான் சிருஷ்டித்து வைக்கப்பட்டிருக்கின்றன வென்று சிற்றறி வினனாகிய மானிடன் எண்ணுதல் அந்தோ! அறியாமை. அதுநிற்க.

சந்திரபிம்பத்தைத் தூரதிருஷ்டிக்கண்ணாடியைக் கொண்டு பார்க்குமிடத்து அதில் பெருத்த பர்வதங்களும் விசாலமான வெளியிடங்களாகிய மைதானங்களும், நிழலுள்ள இடங்களும் இருப்பதாகத்தெரியவருகிறது. சந்திரபிம்பத்தில் சுத்தவெண்மையாய் ஒளி வீசிப்பிரகாசிக்கும் பாகங்களையெல்லாம் பர்வதங்களென்று கொள்ளவேண்டியது ; இவைகளின்மீதுசூரிய ஒளி எவ்வளவும் தட்டுத் தடையின்றித் தாக்கிப்பிரதி-

பலிக்கின்றபடியால் அந்தப்பாகங்கள் நமக்குநன்றாய் ஒளி வீசித்தோன்றுகின்றன. கொஞ்சம் கம்மலாகப் பிரகாசிக்கும் பாகங்கள் சந்திரமண்டலத்தில் வெளியிடங்களான மைதானங்கள். இந்துதேசத்துப் புலவர்களால் முயற்கறையென்று அலங்கரித்துக் கூறப்படுவதும், சிறுவர்களால் உண்டை சுட்டு விற்கும் கிழவி என்று சொல்லப்படுவதுமாகிய கறுத்தபாகம் சந்திர பிம்பத்தில் சூரிய ஒளிபடாத நிழலான இடங்களாம். சூரியப்பிரகாசம் எங்கெந்தப் பாகங்களில் எவ்வளவும் தடையின்றி நன்றாய்த்தாக்கக்கூடியதாயிருக்கின்றதோ அந்தப் பாகங்களெல்லாம் அவ்வொளியை நன்றாய்ப் பெற்றுப் பிரதி பலிக்கின்றனவென்பது இதனால் தெளிவாய்ப் புலப்படுகின்றது. இந்தப்பூமி சந்திரவாசிகளுக்குப் பிரகாசம் தருகிற விஷயத்தைக்குறித்தும் மேற் கண்ட காரண காரியங்களையே அமைத்துக்கொள்க. சந்திரனிடத்திலுள்ள பர்வதங்கள் வெகுசாய் இப்பூமியிலுள்ளனவற்றைப்போல் தொடர்ச்சியாயிராமல் பெரும்பாலும் தனித்தனியே மஹா உந்நதமாக நிற்கின்றன. சற்றேறக்குறைய சந்திரவட்டப் பரப்பு முழுவதிலும் எரிமலைகள் இருப்பதாகத் தெரியவருகிறது. ஆனால் அவைகளெல்லாம் அக்கினிநீர் முதலியவற்றை நீராவியின் இயக்கத்தினால் கக்குவது முதலிய தொழில்கள் இப்போது அறவே ஒழியப்பெறறன. நூறுமயிலுக்குக்குறையாத குறுக்களவுள்ள ஆழ்ந்த பெரும்பள்ளத்தாக்குகள் அநேகம் சந்திரனிடத்திலிருக்கின்றன. அதனிடத்திலுள்ள மலைகளில் சிலவற்றை அவற்றின் நிழலைக்கொண்டு அளந்து பார்க்கையில் அவை சற்றேறக்குறைய உயரத்தில் இமாசலத்துக்கு நிகரா-

யிருக்கின்றன. சந்திரமண்டலத்தில் இப்போது அப்பு-தேயு-வாயு ஆகிய மூன்றும் இல்லை என்றும்,ஒருகாலத்தில் அவை இந்தப்பூமியில் இப்போது இருப்பனபோலவே அங்கு இருந்தனவென்றும், இம்மூன்று பூதங்களே இப்போது இராதபடியால் கடல் - மழை - மேகம் முதலியவை அதில் இப்போது இல்லை என்றும், ஆகவே ஜீவராசிகளும் இல்லை என்றும், சந்திரமண்டல முழுவதும் ஜீவசூனியமான வெறும் பாழாகிய ஓர் பெரும் அண்டமாயிருக்கிறதென்றும் வானசாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். காற்றில்லாதபோது ஓசை கேட்பதற்கே இடமில்லை. நீரில்லா விடத்துப் புல் பூண்டும் முளைப்பதற்கிடமில்லை. மூன்று முக்கிய பூதங்களற்ற ஓர் அண்டம் எப்படியிருக்கும்! மேலே ஆழ்ந்த பள்ளதாக்குகளென்று கூறப்பட்ட இடங்களெல்லாம் ஒருகாலத்தில் சமுத்திரமா யிருந்த பாகங்களாம். சூரியனுடைய உஷ்ணம் இடைவிடாமல் பதினான்கு நாள் வரையில் சந்திரபிம்பத்தின் ஓர் புறத்தில் தாக்கிக் கொண்டேயிருக்கிற படியினால் அந்தப்பாகம் அளவிட்டுக் கூறமுடியாத அவ்வளவு அதிகமாய்க் கொதிப்பேறிவிடுகிறது. இந்தப்பூமியில் பூமத்திய ரேகைக்கு அணித்தாயிருக்கும் பிரதேசங்களிலுள்ள உஷ்ணத்தைச் சகித்துக் கொண்டு உயிர்வாழத்தக்க பிராணிகளும் சந்திரனிடத்திலுள்ள மேற்கண்ட உஷ்ணபாகத்தில் ஜீவித்தல் துர்லபம். உஷ்ணத்தையே சதாவிரும்பும் இயல்புடைய பிராணிகளும் அவ்வளவு கொதிப்பேறிய இடத்தில் சுகித்து உயிர்வாழுமென்று நினைப்பதற்கிடமில்லை. சூரியன் ஒளிவீசாமல் பதினான்கு நாள் வரையில் குளிர்ந்து கிடக்கும் மற்றொருபாகமோ

குளிர்ச்சியையே சதா அவாவும் இயல்புடைய பிராணிகளும் ஜீவித்திருப்பதற்கு யோக்கியதையில்லாத அவ்வளவு ஜில்லென்று போய்விடுகின்றது. இப்பூமியின் உத்தர தட்சண துருவ விருத்தங்களுக்கு அருகிலிருக்கும் பிரதேசங்களிலுள்ள சீதளத்தைவிட ஆயிரமடங்கு அதிகமாய், சந்திரனிடத்துப் பதினான்கு நாள் வரையில் சூரிய ஒளிபடாத மேற்படிபாகத்தில் குளிர்ச்சியுண்டாய் விடுகின்றது. ஆகவே, சந்திரனிடத்து எவ்வகைப்பட்ட பிராணியும் சுகித்து உயிர்வாழ்வதற்கு இடமில்லை என்று தெரியவருகின்றது. ஒருகாலத்தில் சமநிலையாய்ச் சந்திரமண்டலம் முழுமையும் பரவியிருந்த உஷ்ணம் நாளாவர்த்தியில் தணிந்துவிடவே அதிலுள்ள வாயு-அப்பு முதலிய யாவும் சந்திரபிம்பப் பிரிதிவுக்குள் ஐக்கியப் பட்டிருக்கவேண்டும். நாளாவர்த்தியில் இந்தப் பூமியின் உஷ்ணமும் குறைந்து கொண்டே வருகிறதென்றும், ஒரு காலத்தில் இந்தப் பூமியும் சந்திரனைப்போலவே ஜீவராசிகளிருப்பதற்கு யோக்கியதையற்றதாய் விடுமென்றும் சில சாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். அகண்டாகாரமான வெளிப் பரப்பிலுள்ள ஒவ்வொரு அண்டமும் உஷ்ணக்கொதிப்புடன் பிரதமத்தில் உருள ஆரம்பித்து நாளாவர்த்தியில் உஷ்ணம் குறையக்குறைய அதின் வேகமுங்குறைந்து கடைசியாக முற்றும் உதவியற்றதாய் விடுகிறதென்று வானசாஸ்திரிகள் கூறுகிறார்கள். இந்தப்படியே சூரிய பிம்பத்தின் உஷ்ணம் மாத்திரம் அவ்வளவாகக் குறைவதற்கிடமில்லை. ஏனெனில், சூரியன் சகல பதார்த்தங்களையும் தன்னிடத்தில் இழுத்துக்கொள்ளும் சக்தி அடையப் பெற்றிருக்கிறபடியால் சூரியபிம்பலட்சணத்-

திற் காட்டியிருக்கிறபடி பாரமான சில பெருத்த பொருள்கள் சதா சூரியபிம்பத்தின் எல்லாப் பக்கங்களிலும் அதிகவேகத்துடன் வந்து விழுந்துகொண்டிருக்கிற காரணத்தினாலே உஷ்ணக்கொதிப்பு ஏனைய கிரகங்களின் உஷ்ணத்தைப்போல் அவ்வளவு சீக்கிரத்தில் குறைவுபடுவதற்கிடமில்லை.

மனோ வாக்குக் காயங்களுக்குச் சாதாரணமா யெட்டாத இவ்வளவு விசித்திரங்களை ஐரோப்பியர்கள் தூரதிருஷ்டிக் கண்ணாடி முதலிய உபகரணத்தைக் கொண்டு அதிக நுட்ப புத்தியுடன் யூகித்தறிந்து இவற்றை உலகினருக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் உலகத்தாருக்குப் புரிந்த உதவி, செய்யாமற் செய்த உதவியேயாம். அவ்வுதவிக்கு "வையகமும் வானகமு மாற்றலரிது." வானசாஸ்திரத்தில் இந்துக்கள் நெடுங்காலத்துக்கு முன்னரே அனேக விசித்திரங்களை யெல்லாம் கண்டறிந்து தங்களுடைய கிரந்தங்களில் எழுதியிருக்கின்றார்கள். அந்தக் கிரந்தங்களில் அனேகம் பற்பல காரணங்களினால் இப்போது க்ஷீணித்துப் போய்விட்டன. பிற்பாடுதோன்றிய கல்விமான்கள் ஏன் அப்படிப்பட்ட கிரந்தங்களை அபிவிருத்திசெய்து மேலும் மேலும் மேற்கண்ட விசித்திரங்கள் போன்றனவற்றைக் கண்டறிந்து உலகத்தாருக்குத் தெரிவிக்கவில்லை! என்று கேட்டால், இந்துக்களுக்குள் புத்திமான்களாகவும் கல்விமான்களாகவும் இருந்தவர்களில் அனேகர் இவ்வுலகமும் இதைப் போன்ற ஏனைய உலகங்களும் மாயா காரியங்களென்றும், அவை எத்தனை காலமிருக்கினும் அழியத்தக்கனவென்றும், அவற்றால் ஆன்மாக்கள் ஈஸ்வரன் திரு-

வடியை யடைவதற்கு யாதொரு பயனும் விளையாதென்றுங் கருதிய ஞானிகளாயிருந்தபடியால் இப்படிப்பட்ட விஷயங்களில் அவர்களுக்கு ஆராய்ச்சி குறைந்தது. ஆகையால் அவர்கள் கொண்ட சித்தாந்தத்தை யோசிக்கையில் அவர்கள் அங்ஙனம் ஆராய்ச்சி செய்யாமல் இத்தியாதி விஷயங்களில் விசாரமற்றிருந்தது நியாயமென்றே தோன்றுகின்றது. ஆகவே அவர்களை நம்மனோர் அவிவேகிகளென்று நிந்தியாமலிருப்பாராக.

"உடைகோவணமுண்டுறங்கப் புறந்திண்ணையுண்டுணவிங்
கடைகாயிலையுண்டருந்தத் தண்ணீருண்டருந்துணைக்கே
விடையேறுமீசர் திருநாமமுண்டிந்த மேதியினில்
வடகோடுயர்ந்தென்ன தென்கோடிழிந்தென்ன
வான்பிறைக்கே."

என்று இந்துதேசத்து மஹானொருவர் கூறியிருக்கின்றார்.

---

19. கோழியும் அதன் முட்டையும்.

ஒரு கிராமத்தில் தெய்வபக்தி பூரணமாய் நிறையப்பெற்ற ஒரு நாயகனும் நாயகியும் கிரகாச்சிரம தருமத்தை நடத்திக்கொண்டு வருகையில் அவர்களுடைய தவப்பேறாக அவர்களுக்கு ஒரு புத்திரன் பிறந்தான். நாட்டுப்புறத்திலுள்ள சாதாரண பள்ளிக்கூடங்களில் அச்சிறுவனைக் கல்வி பயிலுவித்தால் அவன் விசேஷமாகச் சாஸ்திரங்களை நன்குணருவதற் கிடமிராதென்று நினைத்து அப்பெற்றோர் அவனைத் தூரத்திலிருந்த ஓர் நகரத்துக்கு அனுப்பி அங்குள்ள சர்வகலாசாலையில் கல்வி பயிலச்செய்தார்கள் இள-

மைப் பருவத்தில் ஈஸ்வரபக்தியை விளைப்பதற்கேற்ற எவ்வித பாடத்தையும் அக்கல்விச் சாலையில் உபாத்தியாயர்கள் அவனுக்குக் கற்பித்திலர். ஆயினும் லௌகிகத்துக்கு வேண்டிய உலகசம்பந்தமான பல நூல்களையே அவன் அக்கல்விச் சாலையில் சதாகற்றும், ஆன்மவிசாரணை-பரத்துவ நிச்சய முதலிய விஷயங்களைத் தெரிவிக்கத்தக்க நூல்களைக் கற்காமலும் வந்தானாதலின். அவன் மனம் நாஸ்திகச் சார்பு பெற்றிருந்தது. அக்கல்விச்சாலை விடுமுறை காலத்திலே ஒருநாள் அச்சிறுவன் தன் பெற்றோரைப்பார்க்கத் தன் தாயகமாகிய கிராமத்துக்குச்சென்றான். அப்போது அக்கிராமத்தில் அண்டை வீட்டுக்காரனொருவன் இச்சிறுவனுக்கு விருந்தளிக்க நினைத்து அவனைத் தன் வீட்டுக்கு முகமன் கூறி இட்டுக்கொண்டு போனான். அவ்வீட்டுக்காரனுடைய பெண் ஓர் அறையிலிருந்துகொண்டு கடவுள் விஷயமாய்ச் செய்யப்பட்டுள்ள சில தோத்திரப்பாக்களைப் பக்தியோடு வாசித்துக்கொண்டிருந்தாள். அச்சிறுவன் அதைக்கண்டு பெண்ணே! காலத்திரயத்தும் இல்பொருளாகிய கடவுள் பெயரைப் பலகாலும் நினைத்தும் கூறியும் வீண்காலம் ஏன் போக்குகிறாய்? உபயோககரமான நற்காரியம் எதையேனும் செய்யலாகாதா? என்று அதி புத்திமான்போல் வினவினான். இதைக்கேட்ட அச்சிறுமி திடுக்கிட்டுப் பிரமித்து, அப்பா! கடவுளிடத்து உனக்கு நம்பிக்கை இல்லையா? அவர் யாவற்றையும் படைத்து அளிப்பவர் என்று உனக்குத்தெரியாதா? என்று கேட்டாள். அதற்கு அவன் நாட்டுப்புறத்துக் கல்விக்கும் பட்டணத்துக் கல்விக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது! நான்

சர்வகலாசாலையில் வாசித்தறிந்த பூதபௌதிக சாஸ்திரம் - வானசாஸ்திரம் - கணிதசாஸ்திரம் - மனோதத்துவ லட்சணசாஸ்திரம் முதலியவற்றின் உணர்ச்சியினால் யாவும் இயற்கையே யன்றி அவற்றைப்படைக்க ஒருதனிமுதல் வேண்டுவதில்லை யென்றும், உலகத்திலுள்ள யாவும் காரணகாரிய ரூபங்களாகவே இருக்கின்றனவென்றும், அவற்றிற்கு ஓர் முதற்காரணம் உண்டென்று சொல்வது தர்க்கத்துக்கு நில்லாதென்றும் நான் நன்கு உணர்ந்தேன், இந்நாட்டுப்புறத்துக்கல்வி உனக்கு அவ்வளவு தெளிவை விளைவிக்காது என்று தன்னைவியந்து உரையாடினான். இதைக்கேட்ட அச்சிறுமி அண்ணா! இதோ இருக்கும் கோழிமுட்டை எங்கேயிருந்துவந்தது ? சொல் பார்ப்போம் என்றாள். அவன் பரிகாசம்செய்து ஸவாஸ்! பேதாய்! இவ்வளவு பெருத்தகேள்வியையா நீ என்னைக் கேட்கத்துணிந்தாய்! கோழிமுட்டை கோழியினிடத்திருந்துவந்தது, இது தெரியாதா ? என்றான். அதற்கு அச்சிறுமி கோழி எங்கேயிருந்துவந்தது ? என்றாள். அதைக் கேட்ட அவன் முட்டையிலிருந்து கோழிவந்தது என்றான். இதைக் கேட்டு நகைத்து அச்சிறுமி எது முன்னே உண்டாயிற்று ? கோழியா ? முட்டையா ? என்றாள். அவன் பசபசவென்று விழித்து அம்மா! கோழிதான் முன்னே உண்டாயிற்று என்றான். அதற்கு அவள் முட்டையிலிருந்து வெளிப்படாத ஒருகோழி ஆதியிலிருந்ததென்று நீ ஒப்புக்கொள்ளுகின்றாயா ? என்றாள். அதைக்கேட்டு அச்சிறுவன் இது என்ன வம்பாயிருக்கிறதென்று திகைத்துச்சற்றே நிதானித்து அம்மா! முட்டைதான் முன்னே உண்டாயிற்றென்றான். இதைக்

கேட்ட அச்சிறுமி பளா! பளா! நன்று! நன்று! என்று சொல்லிக் கைகொட்டி நகைத்து அப்பா! கோழியிடாத ஒருமுட்டை ஆதியில் இருந்ததென்று நீ ஒப்புக்கொள்ளுகின்றாயா? என்றாள். இதைக்கேட்ட சிறுவன் ஒன்றும் பேச வகையறியாது உதட்டை மென்று பல்லைக் கடித்துக்கொண்டு கோபித்து நின்றான். அப்போது அச்சிறுமி அவனைப்பார்த்து அடியில் வருமாறு கூறினாள்:—

சோதரனே! வயதில் என்னிலும் நீ மூத்தவன்.

“எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினுமப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.”

ஒரு விஷயத்தைக் கூறுவாருடைய வயது-குணமுதலியவற்றை நோக்காமல் அப்பொருளின் பயனை நோக்கி நல்லதைக் கிரகித்துத் தீயதைவிடுவதே உத்தம புருஷனுடைய கடமையென்று பொருள்பட நாயனார் கூறிய அமுதத்திருவாக்கை அனுசரித்து என்சொற்களுக்குச் சிறிது செவிசாய்ப்பாயாக. அற்பவஸ்துக்களாகிய கோழியும் முட்டையும் உண்டான விதத்தைச் சொல்ல வகையறியாத நீ அண்ட சராசரங்கள் யாவும் ஒரு முதற் காரணமின்றி இயற்கையில்தாமே அமைந்தன வென்று சாதிக்கத் துணிந்தது மிகவும் வியப்பாயிருக்கிறது. ஆதியில் உண்டானது கோழியோ? முட்டையோ? எனக்குந் தெரியாது, உலகத்தில் அதனை நிச்சயமாய்க் கூறுவது எத்தகுதிய சாஸ்திரிக்கும் முடியாது, அம்மட்டில் ஆஸ்திகரும் நாஸ்திகரும் சமந்தான்; ஆனால் கோழியையாவது முட்டையையாவது ஆதியில் உண்டாக்கின முதல்வனொருவனிருத்தல் வேண்டுமென்று

அனுமானுதி பிரமாணங்களினுல் ஆஸ்திகர் நிச்சயிக்கின்றுர்கள். ஆகவே முட்டையிலிருந்து வெளிவராத கோழியாவது கோழியிட்டிராத முட்டையாவது ஆதியில் சர்வவல்லமையுள்ள கடவுளால் படைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்று மனத்தெளிவு கொண்டிருக்கும் ஆஸ்திகர் இத்தகைய வினுக்களுக்குப் பச பச வென்று விழிக்கவேண்டியதில்லை. அர்த்தசாரமற்ற இயற்கை என்னும் பதத்தையே கதியாகக்கொண்டிருக்கும் நாஸ்திகர் இப்படிப்பட்டவினுக்களுக்கு விடை பகரமுடியாமல் அல்லற்படவேண்டிவரும். பரிதாபம்! ஒரு அரசனுடைய அரசாட்சிக் குட்பட்ட இரண்டு குடியானவர்களுக்குள்ளே ஒருவன் தனக்காகவும் ஏனையோர்க்காகவும் அவ்வரசன் செய்துவரும் அளவிறந்த நன்மைகளையும் இராஜாங்க ஏற்பாட்டின் ஒழுங்கையும் சட்ட நிரூபணமுதலிய விவரங்களையும் நன்ருயறிந்தவன்; மற்றவனே அவைகளில் எதையும் எவ்வளவும் உணர்ந்திலாக்கயவன்; இவ்விருவருக்குள் இராஜவிசுவாசம் யாரிடத்து அதிகமாயிருக்கும்? முன்னே சொல்லப்பட்டவனிடத்தே தான் இருக்குமென்பதற்கு எவ்வளவும் ஐயமில்லை. அதுபோல், உலகத்திலுள்ள பூத பௌதிக ஏற்பாடுகளின் விசித்திரங்களையும், சூரியன் சந்திரன் முதலிய அளவிறந்த உடுத்திரள்களின் இயக்கத்தைப்பற்றிய காலக்கிரமத்தையும், ஊனக்கண்ணுக்குப் புலப்படாத எண்ணிறந்த ஜீவராசிகள் அகண்டாகாரவெளியில் எங்கும் நிறைந்திருந்தும் அவற்றிற்கெல்லாம்

“கருப்பைக்குண் முட்டைக்குங் கல்லினுட் டேரைக்கும்
விருப்புற் றமுதளிக்கு மெய்யன்”

படியளக்கும் விசித்திரத்தையும் பேரருட்டிறத்தையும் சர்வ வல்லமையையும் சாஸ்திரங்களின் மூலமாகப் பூரணமாயுணர்ந்தவன் எவனோ அவனே அங்ஙனம் ஒரு சிறிதும் உணரப் பெறாதவனைவிட எண்ணில் மடங்கு தெய்வநம்பிக்கையும் பக்தியும் பெற்றிருக்க வேண்டியதல்லவா? ஆகையால், என்னிலும் நீ அதிக தெய்வ விசுவாசம் உள்ளவனா யிருத்தல்வேண்டும். இவ்வளவு வரையில் நீ வாசித்தும் அந்த இணையில் ஞான பூரணரைநினைக்கவும் எண்ணம் உதியாதது அம்மம்ம பரிதாபத்துக்கிடம்.

அச்சிறுமி இந்தப்படி சொல்லியான பிறகு, சாப்பிடலாம், வா, என்று அச்சிறுவனை இட்டுக் கொண்டு போனாள். இருவரும் அறுசுவையோடுகூடிய சாப்பாடு உண்டு வீட்டுக்காரன் களிக்க மனமகிழ்ந்தார்கள். அச்சிறுவன் கூடியவரையில் கல்விக்கு அணிகலமாகிய நடுவு நிலைமை யுள்ளவனானபடியால் அச்சிறுமி தனக்கு எடுத்துரைத்த வசனங்களின் உண்மையை அறிந்து அன்று முதல் கல்விச்செருக்கை அறவேவிட்டு நாளாவர்த்தியில் ஆன்றோருடைய அனுபவ வாக்கியங்களை வாசித்து வெகு சீக்கிரத்தில் தெய்வநம்பிக்கை எய்தப் பெற்றான். ஆகையால், ஒருவன் எவ்வளவு சாஸ்திரங்களை வாசித்துப் புத்திவிசாலம் அடையப் பெற்றானேயாயினும் இளமைப்பருவத்திலேயே தெய்வபக்தியை விளைப்பதற்கான நூல்களிலும் பயின்று வரவேண்டியது. ஏனெனில்,

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்."

20 காலானுகூலத்தில்தான் காரியசித்தியாகும்.

சகல காரிய சித்திக்கும் முயற்சியே காரணபூதமாயிருக்கிறதென்பது யாவரும் அறிந்த விஷயமேயாயினும் அம்முயற்சி ஈடேறுவதற்குக் காலமும் அனுகூலமாயிருத்தல் வேண்டும். சிலர் மெய்வருந்திப் பலவாறாக முயன்றும் காரியம் சீக்கிரத்தில் சித்தியாகவில்லையென்று அவசரப்பட்டு முயற்சியைத் திரஸ்காரம் பண்ணி அதனை அறவே கைவிட்டுச் சோம்பித் திரிகிறார்கள். இதுபெரும் பிழை.

"ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின்"

என்றார் தெய்வப்புலவர். ஒருவன் இவ்வுலக முழுவதையும் அடையக் கருதினும், அனுகூலமான காலம் வரையில் பொறுத்திருந்து அச்சமயம் வரும்போது காலதாமதமின்றித் தன் கருமத்தில் பிரவேசிப்பானாயின் அவனுடைய கருத்து இனிதுநிறைவேறுமென்பதற்கு ஐயமில்லை. இக்காலானுகூலத்தைத்தான் ஆகூழ் என்றும் காலப்பிரதிகூலத்தைத்தான் போகூழ் என்றும் சில மதவாதிகள் சொல்லுகிறார்கள்.

" அடுத்துமுயன்றாலு மாகுநாளன்றி
யெடுத்தகருமங்களாகா-தொடுத்த
உருவத்தானீண்ட வுயர்மரங்களெல்லாம்
பருவத்தாலன்றிப் பழா."

என்று ஔவையாரும் கூறியிருக்கிறார். ஒருவனுக்குக் காலானுகூலமிருக்கும்போது தான் எதிர்பாராதவெற்றிகளெல்லாம் தனக்கு அதிசுலபத்தில் அணி அணியாய்

வந்துகொண்டிருக்கும். அத்தகுதிய அனுகூலமான சந்தர்ப்பம் நேரிடாதபோது கரணங்கள்போட்டாலும் காரிய சித்தியாவதில்லை. என்ன விசித்திரம்! ஆகவே ஜகதீசன் ஆண்மாக்களுக்குத் தனு கரண புவன போகங்களை ஊட்டுவிக்கும் தந்திரத்தை யார் அறிவார்? இந்த விஷயத்தை அடியில் வரும் சிறு கதை நன்கு விளக்கும்:—

ஓர் ஊரில் ஒரு அரசன் பகைகடிந்து தனியரசு செலுத்திவரும் நாளில் ஓர் நாள் மந்திரியுடன் உப்பரிகையின் மேல் உலாவிக்கொண்டு மந்திரியைப் பார்த்து, மந்திரி! இவ்வுலகத்தில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டுள்ள சகல ஜீவராசிகளும் அவற்றின் முயற்சியினாலல்லவா உச்சீவிக்கின்றன! என்வரையில் நானும் விடா முயற்சியினாலல்லவா பகைவரை யெல்லாம் வென்று அவர்களிடத்துத் திறைபெற்றுத் தனியரசு புரிந்து வருகின்றேன்! என்றான். அதற்கு அவ்வமைச்சன் நகைத்து முயற்சியே சகல காரியசித்திக்கும் காரணயிருந்தபோமாதினும் காலானுகூலப்படி தான் அம் முயற்சி கைகூடும்.

> "பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
> வேந்தர்க்கு வேண்டும் பொழுது."

காகம் கோட்டானைப் பகலில் வெல்லும், அதுபோல் அரசர் பகைவரை வெல்லக் காலம் அவசியம் வேண்டு மென்றான். இதனைக்கேட்ட அவ்வரசன் காலானுகூலம் என்பது ஒன்றுண்டா! இதென்ன வீண்பேச்சு, அப்படி என் அனுபவத்தில் இதுவரையில் ஒன்றுங்காணேன். ஆகையால், நான் அதை ஒரு போதும் நம்பமாட்டேன் என்றான். இப்படி இவ்விரு-

வரும் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில், அவ்வூரிலே நார்க்கயிறு திரித்து விற்றுச் சொற்ப ஜீவனம் செய்து வரும் பிறவித் தரித்திரனொருவன் அவ்வீதிவழியே போய்க்கொண்டிருந்தான். அவனை அவ்வரசன் மந்திரிக்குச் சுட்டிக்காட்டி, மந்திரி! இதோ போய்க்கொண்டிருக்கும் இவ்வேழையை இன்னும் ஒருமாதத்திற்குள் என் முயற்சியினால் குபேரனாக்கிவிடுகின்றேன் பார் என்று சொல்லி அவ்வேழையை அழைத்து, அவனிடத்தில் ஐந்நூறு பொன் கொடுத்து, இதைக்கொண்டு உன் தொழிலை அபிவிருத்திசெய்து சுகமாய்வாழ்ந்திரு என்று விடை கொடுத்தனுப்பினான். அப்போது அவ் வமைச்சன் இப்பொருளொன்றினாலேயே அவன் அபிவிருத்தியாகமாட்டான், அவனுடைய அபிவிருத்திக்குக் காலானுகூலமும் ஒத்திருக்கவேண்டும் என்றான். நல்லது பார்ப்போமென்று அரசன் சும்மாவிருந்தான். அந்தஐந்நூறு பொன்னைப் பெற்றுக்கொண்ட அவ்வேழை மலடி பிள்ளை பெற்றதுபோல் மனமகிழ்ந்து அதில் பத்துப்பொன் எடுத்துக்கொண்டு மற்றதைத் தன் தலையில் கட்டியிருந்த கந்தைத்துணியில் முடிந்து தலையிலேயே சுற்றிக்கொண்டு கடைக்குப்போய் அந்தபத்துப்பொன்னுக்கும நார் வாங்கி வீட்டுக்கனுப்பி விட்டு, அதில் மிகுந்த சில்லறைக்குப் போஜனபதார்த்தம்வாங்கிக்கொண்டு திரும்புகையில், பருந்து ஒன்று வந்து அவன் கையிலிருந்த பதார்த்தம் கிட்டாமையால் தலையில் சுற்றியிருந்த கந்தைத் துணியைக் கௌவிக் கொண்டு போய்விட்டது. அதையறிந்த அவ்வேழை பலவாறு துக்கித்து வீட்டுக்கு வந்து மனைவியினிடத்து நடந்த சங்கதியைச்சொல்லி மீளவும் வருந்திப்

பிறகு ஒருவாறு மனந்தேறித் தன்கையிலிருந்த நாரைக் கொண்டு சொற்ப ஜீவனம் செய்துவந்தான். பின்பு ஒருநாள் அவ்வேழையின் க்ஷேமத்தைக் கண்டறியும்படி அரசனும் அமைச்சனும் அவனிடத்துவந்து விசாரித்து அவனால் நடந்த விருத்தாந்தத்தை ஆதியோடந்தமாகத் தெரிந்து கொண்டார்கள். அரசன் ஆயினும் ஆகுக, இன்னும் ஐந்நூறு பொன் கொடுத்துப் பார்ப்போமென்று மறுபடியும் முன்கொடுத்தது போலவே கொடுத்து, இதையாவது பத்திரமாகக் காப்பாற்றி அபிவிருத்திக்கு வருவாயென்று அத்தரித்திரனுக்குச் சொல்லிவிட்டு அமைச்சனுடன் அரண்மனைக்குவந்து சேர்ந்தான். அப்போதும் அமைச்சன் முற்கூறியபடியே கூறினான். அவ்வேழை அதனை எவ்விடத்தும் அஜாக்கிரதையாய் வைக்காமலும் தன் மனைவியிடத்தும் சங்கதியைக் கூறாமலும் வெகுபத்திரமாய்த் தன் வீட்டிலுள்ள தவிட்டுப்பானையில் மூடிவைத்துக் கடைக்குப் போனான். அந்தவேளையில் தவிடு வாங்குகிற ஒருவன் அவ்வேழையிருக்கும் வீதியில் தவிடு உண்டா? என்று கேட்டுக்கொண்டு வரும்போது, அவன் மனைவி தவிட்டை வெகு நாளாய்ச் சேர்த்து வைத்திருக்கின்றோமே, இதை யாரும் வாங்குவார் இல்லையே, விற்றாலும் செலவுக்கு உதவுமே என்று கருதி அத்தவிட்டுப்பானையை அப்படியே எடுத்துவந்து அவனுக்கு எதிரில் வைத்தாள். தவிடு அந்தப்பானை நிறைய இருந்தமையால் வாங்கவந்தவனுக்குப் பாத்திரமில்லாமையினாலே அம்மா! பானைக்குக் கிரயம் கொடுத்து விடுகிறேன், தவிட்டை இந்தப்பானையுடன் கொடுத்து விடு என்று கேட்டான்; அவள் அப்படியே எடுத்துக்

கொள் என்று சம்மதித்துப் பானையோடு தவிட்டைக் கொடுக்க அவன் தவிட்டுக்கும் பானைக்கும் கிரயங்கொடுத்து விட்டு அந்தப்பானையுடன் தவிட்டை எடுத்துக் கொண்டு போய்க் கடையில் பார்க்கும்போது, வெகு நாளாய்ச் சேர்த்துவைக்கப் பட்டிருந்தகாரணத்தினாலே அந்தத் தவிடு காரிப்போயிருந்தமையால் அதை ஒருவரும் வாங்கவில்லை. ஆகவே அதை அவன் ஒருபுறம் பானையுடன் போட்டுவைத்தான். பிறகு கடைக்குப்போயிருந்த அவ்வேழை அதிக ஆவலுடன் வந்துதவிட்டுப் பானையைத் தேடியபோது அதுகாணாமையால் திகிலடைந்துபிரமித்து ஐயோ! தவிட்டுப்பானை எங்கே? என்று மனைவியைக்கேட்டான். அவள் அதை விற்றுவிட்டேனென்று கூறக்கேட்டு அடிபாவி! அரசன் கொடுத்த ஐந்நூறுபொன்னையும் அதில் வைத்திருந்தேனே, என்று சொல்லித்துக்கித்தான். அவளும் என்னுடன் நீசொல்லாமற்போனாயே என்று மிகவும் பிரலாபித்தாள். இவ்வாறு இருவரும் துக்கித்துத் தேறிப் பிறகு பழையபடி ஜீவித்துவருகையில், மறுபடியும் அரசனும் அமைச்சனும்வந்து அவ்வேழைக்கண்டு நடந்தசங்கதியைத் தெரிந்து கொண்டு அரசன் நாணமுற்று, அமைச்சன்சொல்சரியாயிற்றே,நமது சபதம்நிறைவேறாமற்போயிற்றே என்றுவருந்திநின்றான். பிறகு அமைச்சன் அவ்விடத்திலிருந்தஒருஈயத்துண்டை எடுத்து அவ்வேழைகையிற்கொடுத்து, உனக்குக் காலானுகூலம் ஒத்திருந்தால்இதனாலேயே நீஅபிவிருத்தியாவாய்என்றுசொல்லி, அரசனை அழைத்துக்கொண்டுதிரும்பி அரண்மனைக்குப் போய்விட்டான். அன்று இராத்திரி அவ்வூர்ச் செம்படவன் ஒருவன் மறுநாட்காலையில் வலை வீசவேண்டி வலை-

யைச் சோதித்துப் பார்க்கையிலே, அதில் கட்டியிருந்த ஈயக்குண்டு இல்லாமையால் அது செய்யவேண்டி அந்த இராத்திரியிலேயே ஈயம் சம்பாதிக்க எண்ணி வீடு வீடாய் ஈயம் உண்டா? என்று கேட்டுக்கொண்டுவந்தான். அவனுக்கு ஈயம் எங்கும் அகப்படாமல் அந்த ஏழை வீட்டுக்கும் வந்துகேட்டான். அப்போது அந்த ஏழை தன்னிடத்தில் மந்திரி கொடுத்துவிட்டுப்போன ஈயத்துண்டைக் கொடுத்தான். அதைப்பெற்றுக்கொண்ட அச்செம்படவன் அந்த ஏழையை நோக்கி ஐயா! நீர் இந்த ஆபத்துக் காலத்தில் செய்த இப்பேருதவிக்காகப் பிரதியுபகாரம் ஒன்று உமக்குச் செய்கிறேன். நாளையத்தினம் காலையில் நான் வலை வீசினவுடன் முதலில் அகப்படும் மீனை உமக்குக் கொடுக்கின்றேன். என்று வாக்குத்தத்தஞ் செய்துவிட்டுப்போனான். பிறகு அந்த ஈயத்துண்டினால் தன் வலைக்குக் கட்டவேண்டிய குண்டுகளைச் செய்து கட்டிச் செம்படவன் மறுநாட் காலையில் வலை வீசினான். வீசினவுடன் முதலில் ஒரு பெரியமீன் அகப்பட்டது. அந்தமீனை உடனே அவ்வேழைக்குக் கொடுத்தனுப்பினான். அதை அந்த ஏழை மிகவும் மனக்களிப்புடன் பெற்றுக்கொண்டு சமைத்துச் சாப்பிடும்படி எத்தனித்து அதை அரியும்போது அதன் வயிற்றில் ஒரு மாணிக்கம் இருந்தது. அது மாணிக்கம் என்று அவன் அறியாவிடினும் அதன் பிரகாசத்தால் அதை அலட்சியஞ்செய்யாமல் பத்திரப் படுத்திவைக்க எண்ணிக் கையில் வைத்திருக்கையில், அண்டை வீட்டிலிருக்கும் இரத்தின வியாபாரியின் மனைவி அவன் வீட்டுக்கு நெருப்புக்குவந்து அந்த ஏழை கையில் வைத்திருக்கும் மாணிக்கத்தைப் பார்-

த்துவிட்டுத் தன் கணவனுக்கு அச்செய்தியை அறிவித்தனள். அவன் அவ்வேழையிடத்தில் வந்து, அந்தக்கல்லை எனக்குக்கொடு என்று கேட்டான். அப்போது அவ்வேழை நிதானித்து, இவன் இரத்தின வியாபாரியாகையாலும் இது உயர்ந்த இரத்தினமாகையாலும் இவன் இதன் அருமையறிந்து பீடித்துக் கேட்கிறானென்று யோசித்து, இதன் விலை இலட்சம் வராகன், அதைக் கொடுத்தால் இதைத்தருகின்றேன் என்று சொன்னான். அந்த மாணிக்கம் ஐம்பது லட்சம் பெறும் என்று இரத்தின வியாபாரிக்குத் தெரியுமாகையால் அவன் கேட்டபடியே லட்சம் வராகன் கொடுத்து அதைப் பெற்றுக்கொண்டான். பிறகு அவ்வேழை அந்த லட்சம் வராகனைக் கொண்டு தன் வர்த்தகத்தை விருத்திசெய்து வீட்டை அதிக விசாலமாகவும் உன்னதமாகவும் அலங்காரமாகவும் கட்டிக்கொண்டு அவ்வூரில் பெருத்த தனவந்தனாய் வாழ்ந்திருந்தான். பின்பு ஒருநாள் அரசனும் அமைச்சனும் ஒன்றுகூடி அந்த வர்த்தகனைக் காணும்படி வந்தார்கள். அவனுடைய வீடு அதி அலங்காரமான உப்பரிகையாய் விட்டமையாலும், அவனுடைய வர்த்தகம் விருத்தியாய் அவன் குபேரசம்பத்துடையவனாய் விட்டமையாலும் அடையாளம் தெரியாமல் அரசனும் அமைச்சனும் மயங்கி, அவன் பெயரினால் தெரிந்துகொண்டு அவ் வீட்டிற் சென்று அவனைக்கண்டபோது, உடனே அவன் இவர்களுக்கு மரியாதைசெய்து தன் வீட்டில் விருந்துசாப்பிடும்படி வேண்டிக் கொண்டான். அவ்வாறே அவர்கள் உடன்பட்டபின்பு, அவன் அதிக சம்பிரமமாக விருந்தளித்துத் தாம்பூலம் சந்தனம் முதலியதும்.

கொடுத்துத் தன்னுடைய பிள்ளைகளுடன் தோட்டத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் அவர்களுடன் சம்பாஷித்துக்கொண் டிருக்கையில், அவன் பிள்ளைகள், அங்குள்ள விருட்சத்தில் தொங்கியிருந்த காற்றாடியை எடுத்துக் கொடுக்கச் சொல்லித் தொந்தரை செய்தார்கள். உடனே அவன் ஓர் ஏவலாளியை மரத்தின் மீது ஏறச்சொன்னான். இதற்குள் அரசனும் அமைச்சனும் ஏறிவந்த இரதங்களிற் பூட்டிய எருதுகளுக்குத் தவிடு வேண்டுமென்று இரதசாரதிவந்து கேட்கையில் அவ்வர்த்தகன் உடனே மற்றொரு ஏவலாளியைத் தவிடு வாங்கிவரும்படி பணங் கொடுத்துக் கடைக்கனுப்பினான். முன்பு மரத்தில் ஏறியவன் ஒரு கந்தைத் துணியில் மாட்டித் தொங்கிக்கொண் டிருந்த காற்றாடியைக் கந்தைத்துணியுடன் இழுக்கும்போது அது அதிக பளுவாயிருந்தமையால், யாரோ கல்லைத்துணியிற் கட்டிப்போட்டிருக்கின்றார்கள், அக்கந்தையில் இக்காற்றாடி அகப்பட்டுக் கொண்டிருக்கிறதென்று அக்கந்தைத்துணியுடன் கொண்டுவந்து வைத்தான். தவிட்டுக்குப் போனவன் மொத்தமாய் வாங்கப்போனபடியால், காரிப்போயிருக்கிறதென்று விலையாகாமலிருந்த அந்தத் தவிட்டைப் பானையோடு உடையவன் கொடுத்துவிடப் பெற்றுக்கொண்டு அந்தப் பானையை அவர்கள் முன் கொண்டுவந்து வைத்தான். அந்த வர்த்தகன் கந்தைத்துணியும் தவிட்டுப் பானையும் தன்னுடையதென்று நன்றாய்த்தெரிந்துகொண்டு அரசனைப் பார்த்து, மகாப்பிரபு! தாங்கள் முதலில் கொடுத்த ஐந்நூறு பொன்னில் நார்வாங்கின பத்துப்பொன் போக மிகுதி நானூற்றுத் தொண்ணூறு பொன் இந்தக் கந்-

தைத்துணியிலும், இரண்டாவது கொடுத்த ஐந்நூறு பொன் இந்தத் தவிட்டுப் பானையிலும் இருக்கின்றன. சரியாய் எண்ணிப் பார்த்துக்கொண்டு தாங்களே எடுத்துக் கொள்ளுங்களென்று சொன்னான். அரசனும் அப்படியே எண்ணி அவைகள் சரியாயிருக்கப் பார்த்து மந்திரியினது ஆப்தவசனத்துக்கும் வர்த்தகனது சத்திய ஒழுக்கத்துக்கும் வியந்து அந்தப்பொன்னை அவ் வர்த்தகனுக்கே கொடுத்துவிட்டான்.

அன்றுமுதல் அவ்வரசன் முயற்சி ஒன்றே காரிய சித்தி உண்டாக்காதென்றும், காலானுகூலமும் தக்கபடி பொருந்தியிருத்தல் வேண்டுமென்றும், காலானுகூலம் சித்தியாகிற வரையில் முயற்சியைக் கைசோராமல் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் கண்கூடாக அறிந்து நடந்துவந்தான்.

---

21. பூர்வீக இந்துக்களும் பெண்கல்வியும்.

ஓர் ஆசிரியருக்கும் வித்தியார்த்திக்கும் நடந்த சம்பாஷணை.

வித்தியார்த்தி. — சுவாமீ! வந்தனம். தங்களைக் கண்டு நெடுநாளாயிற்று. சென்றவருடம் மரக்கறி பதார்த்தம் அந்நியபதார்த்தம் இவற்றின் குணாகுணங்களைக்குறித்துத் தாங்கள் கடல்மடைதிறந்தாற்போலும் செய்த உபந்நியாசத்தால் மிகவும் பயனடைந்தேன். இப்போது தங்களை யான் கேட்டறியவேண்டிய சங்கையொன்றுளது. பூதலட்சண சாஸ்திரங்களிலும் மானதபதார்த்த சொரூபலட்சண சாஸ்திரங்களிலும் ரசாயன சாஸ்திரம் வானசாஸ்திரம் முதலிய

சகலசாஸ்திரங்களிலும் தமக்கு உலகத்தில் எவரும் சமானாதிகமின்றிப் பாண்டித்தியம் பெற்றிருந்தும் பூர்வீக இந்துக்கள் பெண்கல்வியை ஏன் மிகவும் அலட்சியம் செய்துவந்தார்கள்?

> "தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறு மறிவு."

மணலினிடத்தே கேணியானது தோண்டிய அளவாகச் சுரப்பதுபோல் மாந்தர்க்கும் அறிவானது கற்ற அளவாகும் என்று பொருள்படப் பொதுமறைவாக்கியம் பிறந்திருக்கிறதே. இக்குறட்பாவில் மாந்தர்க்கு என்னும் பதம் ஆண்பாலவர்க்குத்தான் பொருந்துமோ? பெண்பாலவர்க்கு அது பொருந்தாதோ? ஒரு தேசம் நாகரிகம் பெற்றிருக்கவேண்டுமானால் அதிலுள்ள பெண்கள் கல்வி பயில்வது அத்தியாவசியமல்லவா! முன்னொரு காலத்திலே தமக்கு நாகரிகத்தில் ஒப்புயர்வு வேறொருவரும் இல்லையென்று சொல்லும்படி சிறந்திருந்த இந்துக்கள் தம்முடைய ஸ்திரீகளைக் கேவலம் ஆண்பிள்ளைகளுக்கு முறிகளாக்கி அவர்களுடைய ஸ்வயேச்சை வாழ்க்கையைக் கெடுத்து அவர்களை அஞ்ஞானமென்னும் அந்தகாரத்தில் அழுத்திவைத்திருந்தார்களே, இது என்ன அநியாயம்? ஒவ்வொருவனும் உலகத்தில் உற்பவமானவுடனே பிரதமத்தில் தான் கற்றுக்கொள்ளும் நடையுடைபாவனை முதலிய யாவற்றிற்கும் அவனுடைய மாதாவே பிரதமபோதினியாயிருக்கின்றாள். அவள் நன்றாய்க்கற்றுணர்ந்தவளாயிருந்தால் மேற்கூறிய குறட்பாவின் கருத்தின்படி அவளுடைய அறிவு விசாலப்பட்டிருக்கும். அதற்கேற்றபடியே அவளுடைய நடையுடைபாவனைகளும் அமைந்-

திருக்கும். அவைகளெல்லாம் அவ்வன்னையின் முலைப்பாலை அருந்திக்கொண்டுவரும் குழந்தையின் மனதில் படிந்துவிடும். இளமைப்பருவத்தில் அந்தப்படி மனதிற்பதிந்த தோற்றங்களும் நடையுடைபாவனைகளும் நன்றாய் வேரூன்றிவிடும். இது மனோதத்துவ லட்சண சாஸ்திரிகள் யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்கதொரு சித்தாந்தம்.

ஆசிரியர்.—அப்பா! நீர் பேசிக்கொண்டு வருவதெல்லாம் எனக்குப் பெருநகைப்பை உண்டாக்குகின்றது.

வித்தியார்த்தி.—சுவாமீ! சற்றே பொறுத்திருமின். நான் சொல்லவேண்டிய யாவற்றையும் சொல்லி முடிக்கின்றேன். பிறகு தாங்கள் அவற்றை இஷ்டமிருந்தால் ஆக்ஷேபிக்கலாம்.

ஆசிரியர்.—நல்லது அப்படியே ஆகட்டும்.

வித்தியார்த்தி.—உலகத்தில் குணவான்களென்று பெயரெடுத்த சீமான்களுக்குள் அநேகர் கல்விகேள்விகளிற் சிறந்து குணபூஷணிகளாயிருந்த மாதுசிரோன்மணிகளுடைய மணிவயிற்றில் உதித்தவர்களென்பதை நாம் சரித்திர பூர்வகமாக அறிந்துகொள்ளலாம். மகா அலெக்ஸாந்தர்-மகா ஆல்பிரட் (Alfred) முதலிய கனவான்களெல்லாம் நன்றாய்க் கற்றுணர்ந்த வனிதாரத்தினங்களின் புத்திரர்கள். இவ்வுண்மையை அறியாமலோ இந்து தேசத்து நம்முன்னோர் பெண்களைக் கல்வி பயிலச்செய்யவில்லை? இதுவரையிலும் எடுத்துச்சொல்லிய விஷயங்களைக்குறித்துத் தாங்கள் சமாதானங் கூறுவீராகில் இது விஷயமாய் எனக்குள்ள ஏனைய சங்கைகளையும் பிறகு தெரிவிக்கின்றேன்.

ஆசிரியர்.—அப்பா! நீர் சொல்லிக்கொண்டுவந்த விஷயம் யாவும் என் செவிக்கு நாராசம் போன்றிருக்கின்றது. இந்து தேசத்து நம்முன்னோருடைய ஸ்திதியை, நன்றாய் நீர் அறிந்துகொள்ளாமையினால்தான் இவ்வளவு அதிகமாய்ச் சொல்மாரிபொழியலாயிற்று. நாகரிகம் பெற விருப்பமுடைய ஒவ்வொரு தேசத்தவரும் முக்கியமாய்த்தங்களுடைய பெண்களைக் கல்வி பயில்விக்க வேண்டுமென்பதையும், ஒவ்வொருவனும் தான் பிரதமத்தில் கற்றுக்கொள்ளவேண்டிய யாவற்றிற்கும் அன்னையாகிய பெண்பாலே தனக்குப் போதினியாயிருக்கிறாளென்பதையும் நம் புராதன இந்துக்கள் உணர்ந்த அவ்வளவு நன்றாய் உலகத்தில் வேறு எந்தத் தேசத்தவர்களும் அறிந்திலர். இதற்கு அனேக பிரமாணங்களுள. உலகத்திலுள்ள பூதபௌதிக சம்பந்தமான யாவற்றின் இயக்கத்துக்கும் ஒவ்வொரு அதி தேவதை இருக்கிறதென்னும் சித்தாந்தத்தை நம்முன்னோர் பூர்வந்தொட்டு அனுஷ்டித்து வருகிறார்கள், உதாரணமாக:— ஜலத்தின் இயக்கத்துக்கு வருணபகவானும், காற்றின் இயக்கத்துக்கு வாயுபகவானும், தீயின் இயக்கத்துக்கு அக்கினிபகவானும், காமத்தின் இயக்கத்துக்கு மன்மதனும், இவ்வாறே மற்றவைகளுக்கு ஏனையோரும் அதிதேவதைகளாயிருப்பதாக நம்முன்னோர் கருதிவந்தார்கள். நாமும் அவ்வாறே எண்ணிவருகிறோம். அந்த சித்தாந்தப்படி கல்விக்கு அதிதேவதையாயிருப்பவர் இன்னாரென்பது உமக்குத் தெரியுமா?

வித்தியார்த்தி.—ஐயா! கலைமகள் அல்லது சரஸ்வதி என்று கேள்வி.

ஆசிரியர்.—ஆம். பெண்பாலாகிய சரஸ்வதியே கல்விக்கு அதி தேவதை. ஆண்பாலாகிய எந்தத் தெய்வமும் அதற்கு அதிதேவதையல்ல. ஆகவே உலகத்திலுள்ள மன்னுயிர்களுக்குப் பிரதமத்தில் கல்வி கற்றுக்கொடுப்பது பெண்பாலேயன்றி ஆண்பாலன்று என்னும் சித்தாந்தம் நம் முன்னோருக்கு வெகு நன்றாய்த் தெரிந்தேயிருந்ததென்றறிக. நீர் சொல்லியபடி அன்னையாகிய பெண்பாலே ஒவ்வொருவனுடைய ஆதி ஞானத்துக்கும் போதினியாயிருக்கின்றாள் என்பதைப் புராதன இந்துக்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அறிந்தனர். இதை அறிந்த காரணத்தினால் அவர்கள் பெண்கல்வியை அதிகமாய் விருத்திசெய்துவந்தார்கள். அது நிற்க.

"அன்னை தயையு மடியாள் பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவிப்பொறையும் வன்னமுலை
வேசி துயிலும் விறன் மந்திரி மதியும்
பேசி லிவையுடையாள் பெண்."

ஒருவனுக்கு அன்பில் தாயைப்போலவும், பணிவிடை செய்வதில் அடியாளைப்போலவும், அழகில் இலட்சுமியைப்போலவும், பொறுமையில் பூதேவியைப்போலவும், போகத்தில் வேசியைப்போலவும், புத்தியில் மந்திரியைப்போலவும் இருப்பவளே மனையாட்டி என்று பொருள்பட மேலோர் மனைவிக்கிருக்கவேண்டிய ஆறு குணங்களைக் கூறியிருக்கின்றார்கள். கணவனுக்குக் கிரகாச்சிரம தர்ம விஷயங்களில் யுக்தாயுக்தத்தைச் சொல்லுவதிலே மந்திரியைப்போன்ற புத்தியை மனையாள் பெற்றிருக்கவேண்டுமென்று மேலோர் கூறியிருப்பாரேயாயின், அவள் கல்வித் தேர்ச்சியுடையவளா

3418

யிருத்தல் வேண்டுமென்றும், ஒருவனுக்கு மனையாட்டியாயிருக்கவேண்டிய ஒவ்வொரு பெண்ணும் அவசியம் கல்விபயின்றிருத்தல் வேண்டுமென்றும் நம்முன்னோராகிய மேலோர் அபிப்பிராயங்கொண்டார்களென்பதற்கு ஐயம் யாது ? வடநூலாரும் குலதர்மபத்தினியின் ஷட்குணங்களைக்குறித்து "கார்யேஷு தாஸீ கரணேஷு மந்திரீ ரூபேசலட்சுமீ க்ஷமயாதரித்திரீ புக்தேஷு மாதா சயனேது வேச்யா ஷட்கர்மநாரீ குலதர்ம பத்னீ." என்று மேலெடுத்துரைக்கப்பட்ட வெண்பாவின் கருத்துக்கிணங்கக் கூறியுளார். கணவனுக்கு மனையாட்டி மந்திரியைப்போலிருந்து யுக்தாயுக்தங்களைச் சொல்லிவருவதானால், அவள் எவ்வளவு கல்வி பயின்றவளாயிருத்தல் வேண்டுமென்று நினைக்கின்றீர் ? ஆகவே நம்முன்னோர் பெண்கல்வியை விசேஷமாகக் கொண்டு அதைப் பாராட்டிவந்தன ரென்பது பிரசித்தமாக விளங்குகிறது.

வித்தியார்த்தி.—தாங்கள் சொல்லுவது வாஸ்தவம் தான். ஆதியில் நம்முன்னோர் பெண்கல்வி கூடா தென்று அபிப்பிராயங் கொண்டிருந்தார்கள் என்பதற்கு நான் சில வாக்கியங்களை எடுத்துக்காட்ட வல்லேன். "பேதைமையென்பது மாதர்க்கணிகலம்." என்று பிரமாணமிருக்கிறதே. பேதைமையென்பது அறியாமை யல்லவா ? அறியாமை யென்பது கல்வியின்மையின் காரியமல்லவா ? பேதைமை மாதர்க்கு அணிகலமாயின் கல்வி பயிலாமல் அறிவிலியாயிருத்தல் அவர்களுக்குப் பூஷணம் என்று பொருள்படும் மேலைய பிரமாணத்தைக்கொண்டே, நம்முன்னோர் பெண்கல்வியைத்திரஸ்காரஞ்செய்து வந்தனரென்று ஏன் சொல்லக்கூடாது?

ஆசிரியர்.—நன்குவினவினாய். உத்தம ஸ்திரீகளுக்கு இருக்கவேண்டிய நால்வகைக் குணங்களாகிய நாணம்-மடம்-அச்சம்-பயிர்ப்புஎன்பவற்றுள் மடம்என்பது நீர் சொல்லும் பேதைமையாகும். அது இயற்கை அவிவேகம் அன்று. எல்லாவிஷயங்களையும் தெரிந்திருந்தும் கணவன் முன்னிலையில் மரியாதை பாராட்டி, அவன் தன்னை ஆலோசனை கேட்கும்வரையில் ஒன்றும் அறியாதவள் போல் சும்மா இருத்தலேபதிவிரதாதருமமென்பது நம்மனோர் சித்தாந்தம். மடம் என்பதற்கு இதுவே பொருளென்பதை பரிமேலழகியார்-நச்சினார்க்கினியார் முதலிய உரையாசிரியர் தத்தம் அகல் உரைகளில் வெள்ளிடை மலைபோல் விளக்கிக்காட்டியுளார். சிலபுராணங்களில் "உமை கேள்விச் சுருக்கம்" என்று தலைப்பெயர்சூட்டி அந்தச்சருக்கத்திலே மஹாதேவியார் ஈஸ்வரனைத் தமக்குத் தெரியாததுபோல் சில வினாக்கள் கேட்பதையும் அவற்றிற்கு அப்பெருமான் விடையளிப்பதையும் நீர் வாசிக்கவில்லையா? "தங்கணாயகரிற் றெய்வந் தவம்பிறி திலவென் றெண்ணு மங்கைமார் சிந்தைபோலத் தூயது மற்றுங்கேளாய்." என்னும் கம்பர் வாக்கின்படி, உத்தம ஸ்திரீக்குத் தன் பர்த்தாவே தெய்வமென்பதும், அவனை வழிபடுதலன்றி அவளுக்கு வேறு தவமுதலியவை கிடையாவென்பதும் நம்மனோர் சித்தாந்தமாகையால் கணவன் முன்னிலையில் தெரிந்தும் தெரியாதவளைப் போலிருத்தலே உத்தம மனைவியின் குணமாதலின் மஹாதேவியாரும் பகவான் முன்னிலையில் ஒன்றும் தெரியாதவரைப் போல் இருப்பதாக அலங்கரிக்கப் பட்டிருக்கின்றதேயன்றிப் பிறிதன்று. அன்றியும்,

"குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகு மழகல்ல— நெஞ்சத்து
நல்லம் யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு."

என்னும் வெண்பாவில் குஞ்சி (ஆண்மயிர்) அழகும், கொடுந்தானைக் கோட்டழகும் (கோடிய ஆடையின் கொய்சகத்தின் அழகும்) ஆண்பாலார்க்கே உரித்தாயினும், மஞ்சளழகு என்பது பெண்பாலார்க்கே சிறப்புவகையால் உரித்தானதென்பதற்கு யாதொரு ஐயமும் இல்லை. இத்தியாதி பிரமாணங்களினாலும் நியாயங்களினாலும் பெண்கள் அவசியம் கல்வி பயில வேண்டுமென்பதே நம்முன்னோருடைய சித்தாந்தமா யிருந்ததென்பது கரதலாமலகம்போல் விளங்குகின்றது. இப்போது காலாதீதமாகிறது.

வித்தியார்த்தி.—இன்னும் இந்த விஷயத்தைக் குறித்து எனக்கு அனேக சங்கைகளுள. அவற்றிற்கும் தக்க சமாதானம் கூறும்படி தங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். சிரமத்துக்காக மன்னித்தருள்வீராக.

ஆசிரியர்.—அப்படியே ஆகுக. மறுபடியும் நாம் சந்திக்க நேரிடும்போது என்னால் இயன்றவரையில் நியாயங்களை எடுத்துக்காட்டுகிறேன்.

வித்தியார்த்தி.—சுவாமி! வந்தனம்.

ஆசிரியர்.—அப்பா! நல்லது. போய்வாரும்.

வித்தியார்த்தி.—சுவாமி! வந்தனம். தங்களைக்காண யான் அதிக ஆவல் கொண்டிருந்தேன். பூர்வீக இந்துக்கள் பெண்கல்வியை அபிவிருத்தி செய்துவந்தன ரென்பதற்கு ஒரு தேசம், நாகரிகம்பெற்று ஓங்குவதற்குப்

பெண்கல்வி அத்தியாவசிய மென்பதை நம் புராதன இந்துக்கள் பூரணமா யறிந்திருந்தார்க ளென்பதற்கும் தாங்கள் சென்ற மாதங் கூறிய சில நியாயங்கள் என் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்தன. அப்போது காலாதீதமாய் விட்டபடியினால் நம்முடைய சம்பாஷணையை நிறுத்தவேண்டியதாயிற்று. இன்னும் அந்த விஷயத்தைக் குறித்து ஏதேனும் கூறத் தங்களுக்கு விருப்புளதேல் தங்கள் சித்தமே என்பாக்கியமாகும்.

ஆசிரியர்.—முற்காலத்தில் பெண்கள் இந்தியாவிலே கல்விபயின்று வந்தார்களென்பதை விளக்குவதற்குச் சென்றமாதம் உதாரணங்களை எடுத்து யான் காட்டவில்லை. இப்போது சில உதாரணங்களை எடுத்துக் காட்டுகிறேன். கேட்பீராக. திருவள்ளுவருடன் பிறந்த உப்பை—உறுவை—வள்ளி என்னும் பெண்களும் ஔவையாரும் தமிழ்க் கடலைக் கரைகண்டு உணர்ந்தவர்களென்பதை அவர்களுடைய பாசுரங்களே நன்கு விளக்குகின்றன.

வித்தியார்த்தி.— இவர்கள் தெய்வீகம் விளங்கப் பெற்றவர்கள். உப்பை - உறுவை - வள்ளி என்பவர்கள் பிறந்தபோதே தம்பெற்றோரை நோக்கிப் பாடியதும், ஔவையார் என்னும் ஒரு பெண்பால் சில நீதிநூல்களை இயற்றியதும் ஏகதேசமேயன்றி மற்றப்படி பெண்கள் சாதாரணமாய் முற்காலத்தில் கல்வி பயின்றவர்களா யிருந்தார்களென்பதைக் காட்டமாட்டா.

ஆசிரியர்.—நியாயந்தான். பொறுமையுடன் கேளும். இன்னும் சில உதாரணங்களை எடுத்துக் காட்டுகிறேன். இத்தென் இந்தியாவில் சேர-சோழ-பாண்டிய ரென்னும் மூன்று அரசர்கள் முற்காலத்தில் அரசாண்டு

வருகையில் ஏகம்பவாண ரென்றொருவர் இருந்தார். அவர் வேளாண் குலத்திற்பிறந்தவர். வரையாது கொடுக்கும் வள்ளலென்னும் பெயரெடுத்து மேற்படி மூவேந்தர்களும் அதிசயிக்கும்படி பெருங்கொடையாளராயிருந்தார். அம்மூவேந்தரும் இவருடைய செல்வப் பெருக்கத்தையும் ஈகையையுங்கண்டு பொறாமைப்பட்டு அவரைப் போய்ப்பார்ப்போமென்று அவர் வீட்டுக்குச் சென்றார்கள். அத்தருணத்தில் அவர் வீட்டிலிராமையால் அவருடைய மனைவி அம்மூவேந்தரையும் நோக்கி முதலியார் கழனிக்குப் போயிருக்கிறாரென்று வினயத்துடன் சொன்னாள். அதைக்கேட்ட அம் மூவேந்தரும் அதிக இறுமாப்புடன், முதலியார் நாற்று முடி நடப்போனாரோ! என்று ஏளனமாய்க்கேட்க, அதற்கு முதலியார் மனைவி,

“சேனை தழையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி
யானை மிதித்த வருஞ்சேற்றின் - மானபரன்
பாவேந்தர் போற்றப் பறித்துநட்டா னேகம்பன்
மூவேந்தர் தங்கண் முடி.”

என்று அவர்கள் நாணும்படி கூறினாள். பிறகு ஏகம்பவாணர்வீட்டுக்கு வந்தவுடன் மூவேந்தர் தம்மைத் தேடிவந்ததையும், அவர்கள் ஏளனமாய்ப் பேசியதையும் மனையாட்டிகூற, அவருக்குக் கோபம்பிறந்து, தமக்கு நெடுநாளாய் வசியமாயிருந்த ஓர் பூதத்தைப் பார்த்து, அம்மூவேந்தரையும் தூக்கிக்கொண்டு, வரும்படி உத்தரவு செய்ய, அது சேரனையும் சோழனையும் தூக்கிக்கொண்டு, பாண்டியன் வேப்பமாலை யணிந்தவனானபடியினால் அவனிடத்துப் போக அஞ்சித் திரும்பிவிட்டது. இதைக்கண்ட ஏகம்பவாணர் தம் ஊரிலிருந்த

நான்கு தாசிகளை அழைத்து, அப்பாண்டியனது வேப்பமாலையைக் கொண்டுவருபவருக்குத் திரளான திரவியம் பரிசளிப்பதாகச் சொல்லவே, அந்தத் தாசிகளில் ஒவ்வொருவரும் பாண்டியனிடத்துச் சென்று மாலையைப் பெறுவதற்காக அற்புதமான பாக்களைப் பாடினார்கள். அவர்களுக்குள் கடைசியாக ஒருத்தி

"இலகு புகழாறை யேசம்ப வாண
னலகை வரும் வருமென் றஞ்சி யுலகறிய
வானவர்கோன் சென்னிமிசை வன்கை வளையெறிந்த
மீனவர்கோன் கைவிடான் வேம்பு."

என்று பாடிய வெண்பாவைக்கேட்டு அப்பாண்டியன் மாலையைத்தந்தனன். இந்தப் பாசுரங்களும் ஏகம்பவாணர் மனைவிபாடிய பாசுரமும் அக்காலத்துப் பெண்கள் அடைந்திருந்த கல்வித்தேர்ச்சியின் அளவை வெள்ளிடைமலைபோல் காட்டவல்லன.

வரதுங்க பாண்டியர் கடவுளைச் சகளீகரித்த கோலமாய்ப் பாடிய பாசுரத்தைவிட ஆயிரமடங்கு அதிக சொன்னயம் பொருணயம் மிகும்படி அவர் மனைவியார் பாடிய

"ஆக்கையெனும்புழுக்குரம்பை யணைந்தணையாப் பொருளை
யருளொளியைப் பராபரத்துக் கப்புறமாமறிவை
நீக்கமறமயிர் முனைக்குமிடமற வெங்கெங்கு
நிறைந்துநின்றமுழுமுதலை நினைவிலெழுஞ்சுடரைப்
பாக்கியங்கள் செய்தனந்தந்தவக் குறைகண்முடிக்கும்
பழவடியார் தமக்குதவும் பசுந்துணர்க்கற்பகத்தை
வாக்குமன விகற்பத்தா லளவுபடாவொன்றை
மாசற்ற வெறுவெளியை மனவெளியிலடைப்பாம்."

என்கிற பாசுரம் உலகத்தையெல்லாம் விலைமதிக்கத் தக்கதாயில்லையா?

கொம்மி-உந்தியார்-அம்மானை முதலிய பெயர்களால் பாடப்பட்டுள்ள அனேக பாசுரங்கள் அக்காலத்துப்பெண்கள் பாடியதாகவே தெரியவருகிறது. ஆண்பாலார் வித்துவான்களென்று பெயரெடுத்துக் கிரந்தங்களை உலகத்தில் வெளிப்படுத்தியதுபோல் பெண்பாலார் விசேஷமாகக் கிரந்தங்களை இயற்றி வெளிவந்திலர் என்பது மெய்யே. ஏனெனில், கணவனுக்கு முன் மரியாதை பாராட்டவேண்டியதென்கிற மரபுபற்றி அக்காலத்துப் பெண்கள் விசேஷமாகக் கல்வியில் பாண்டித்தியம் பெற்றிருந்தும் பண்டிதர்களென்று வெளிவந்திலர்.

வித்தியார்த்தி.—இதுநிற்க. ஆங்கிலேயர்கள் இப்போது தம்முடைய பெண்பாலார்க்குச் செய்துவரும் மரியாதை முதலிய நாகரிக சின்னங்கள் நம்முன்னோரிடத்திருந்தனவா? நம்மனோர் ஸ்திரீகளைக் கேவலம் முறிகள்போலல்லவா நடத்திவருகிறார்கள்! அவர்களுக்கு எவ்வளவும் சுவயேச்சையான வாழ்க்கை கிடையவே கிடையாதல்லவா? இது என்ன அநியாயம். இந்தப்படியே பூர்வகாலத்தும் அவர்களுடைய நிலைமையிருந்ததோ?

ஆசிரியர்.—ஸ்திரீகளுக்கு மரியாதை பாராட்டுவது என்றால் என்ன?

வித்தியார்த்தி.—ஸ்திரீகளும் புருஷர்களும் ஒருங்கு கூடிய மஹா சபையைநோக்கிப் பேசத்தலைப்படும் ஒவ்வொருவரும் "சீமாட்டிகளே! சீமான்களே!" என்று முதலில் பெண்பாலார்க்கு மரியாதைபாராட்டிப் பிறகு ஆண்பாலார்க்கு மரியாதைசெய்யும் வழக்கம் ஆங்கிலேயர்க்குள் இப்போது இருக்கிறது. மனிதர்களுக்-

குரிய சகல சுகங்களுக்கும் பெருந்துணைவியராய் நின்று அவர்களுக்கு வாழ்க்கைத்துணைநலத்தை உண்பிக்கும் பெண்பாலாரை நமக்கு அடிமைகளாக நினைத்துத் திரஸ்காரம் செய்யாமல் அவர்களை ஆடவரைப்போலவே நன்குமதிப்பதும், புருஷர்களைவிட அவர்கள் பெரும்பாலும் இயற்கையில் பலஹீனர்களானபடியால் அவர்களுக்கு அதிக மரியாதை பாராட்டுவதும் மானுஷீக தருமமென்று நாகரீகமடைந்த ஆங்கிலேயர் முதலிய ஒவ்வொரு தேசத்தவரும் இப்போது ஒப்புக்கொண்டு அந்தப்படியே நடந்துவருகிறார்கள். நம்முன்னோருடைய செய்கை எப்படியிருந்தது!

ஆசிரியர்.—பெண்பாலார்க்கு நம்முன்னோர்பாராட்டிய அவ்வளவு மரியாதை வேறு எந்த தேசத்தவர்களும் பாராட்டியே யிராரென்று நினைக்கிறேன். இதை யான் விரிவாய்க்கூறவேண்டிய அவசியமில்லை. சில சொற்றொடர்களை மாத்திரம் இப்போது எடுத்துக் காட்டுகிறேன். அவற்றைக்கொண்டு பூர்வீக இந்துக்களின் நோக்கத்தையும் அபிப்பிராயத்தையும் தெளிவாய் உணரலாம். "சீமாட்டிகளே! சீமான்களே!" என்று கூறி இப்போது பெண்களுக்கு முதல் மரியாதை செய்வது ஆங்கிலேயருடைய வழக்கமாயிருக்கிறதென்றல்லவோ நீர் வியந்துகூறுகின்றீர். சத்திசிவம், மாதா பிதா, தாய்தந்தை, பெண்ணும் பிள்ளையும், பார்வதி பரமேஸ்வரர், லட்சுமி நாராயணர், சீதாராமன், அம்மை அப்பன் என்னும் சொற்றொடர்களை யோசித்துப்பார்க்கையில் பெண்பாலார்க்கே நீர் இப்போது வியந்துரைக்கும் ஆங்கிலேயரைப்போலவே நம்முன்னோர் தக்க மரியாதை நடத்திவந்தனரென்று தெரியவில்லையா? பெண்-

களுக்கு ஆதியில் சுவயேச்சை கிடையாதென்று நீர் நினைப்பதும் மதிமயக்கமேயாம். சுயம்வரம் என்னும் வழக்கம் முற்காலத்து இந்தியாவிலிருந்ததென்று நைடதம் முதலிய நூல்களால் இனிது விளங்குகிறது. அனேக அரசர்கள் ஒருங்குகூடிய மஹாசபையில் தமயந்தி தனக்கு இஷ்டமான ஒருவனுக்கு மாலையிட்டதாகச்சொல்லப்பட்டிருக்கிற விஷயமும், ஆலோசனைச் சபையில் பாண்டவர்களுடன் துரோபதையிருந்து தன்னுடைய அபிப்பிராயத்தை வெளியிட்டுக் கூறினாளென்று ஸ்ரீ மஹாபாரதத்திற் சொல்லப்பட்ட விஷயமும், கொடுப்பாரும் கேட்பாருமின்றி ஸ்திரீயும் புருஷனும் தனியிடத்து எதிர்ப்பட்டுத்தாமே மணம் செய்துகொள்ளுவதென்னும் காந்தருவவிவாகம் முதலிய வழக்கங்களும் - பூர்வீக இந்துக்கள் பெண்களுக்குச் சுவயேச்சை தந்துவந்தார்களென்பதை நிதரிசனமாகக் காட்டுகின்றன. நீர் ஞாபகத்தில் வைக்கவேண்டியதொன்றுளது. ஆங்கிலேயர்களுடைய நடை-உடை-பாவனை முதலியவைகள் தற்காலத்து இந்துக்களாகிய நம்மனோருடைய நடை-உடை-பாவனைகளைவிட உயர்ந்தன வென்றாவது தாழ்ந்தன வென்றாவது யான் கூறவந்தேனில்லை. இப்போது அவர்களிடத்து இருப்பதாக நீர் வியக்கும் பெண்கல்வி-ஸ்திரீகளின் சுவயேச்சை வாழ்க்கை முதலியன நம்முன்னோரிடத்தும் அமையாமற் போகவில்லையென்பதை யான்காட்டி உமக்குத் திருப்தியுண்டாக்க இவ்வளவு தூரம் பேசிக் கொண்டு வந்தேனேயன்றி மற்றப்படி, இவ்விரண்டு ஜாதியாருடைய நடை - உடை - பாவனையாகிய இவற்றின் யுக்தாயுக்தத்தைக் குறித்தேனும் உயர்வு தாழ்-

வைக்குறித்தேனும் யான் எவ்வளவும் சொல்லவந்தவனல்லன்.

வித்தியார்த்தி.—இப்போது காலாதீதமாகிறது. தாங்கள் கூறிவந்த விஷயங்கள் எனக்குத் திருப்தியுண்டாக்கின. மொத்தத்தில் பெண்கல்வி நம் தேசத்தவர்க்குத் தற்காலத்தில் நன்மையைப் பயக்குமா? பயக்காதா? என்பதைக்குறித்து இன்னும் ஒரு சமயத்தில் பேசவேண்டியது நேரிடும்.

ஆசிரியர்.—நல்லது, இன்னும் ஒருவேளை அதைப் பற்றி வசனிக்கலாம். போய்வாரும்.

---

22. நிலக்காற்று கடற்காற்று உண்டாவது எப்படி?

காலைப்பொழுதிலும் பகற்காலத்திலும் நிலத்திலிருந்து சமுத்திரத்தைநோக்கி அடிக்குங்காற்றுக்கு நிலக்காற்று என்றுபெயர். மாலைப்பொழுதில் சமுத்திரத்திலிருந்து நிலத்தை நோக்கி அடிக்குங்காற்றுக்குக் கடற்காற்று என்றுபெயர். இவ்விருவகைக்காற்றும் தினம் மாறி மாறிவருவது ஒவ்வொருவருக்கும் அனுபவசித்தம். கடற்காற்று தேகத்துக்குமிகவும் ஆரோக்கியத்தைத் தரத்தக்கது. பகற் காலத்திலே சூரிய உஷ்ணமிகுதியினால் வாடித்துன்பப்படும் உயிர்வர்க்கங்கள் மழையை எதிர்பார்த்து நிற்கும் பைங்கூழ் போல் கடற் காற்றை எதிர் பார்த்து நிற்கின்றன. நிலக்காற்று அவ்வளவாக தேகத்துக்கு ஆரோக்கியமானதல்ல. மாறி மாறி வீசும் மேற்கண்ட இருவகைக் காற்றுகள் உண்டாவதற்குக் காரணங்களை அடியில் காட்டுகிறோம்.—

பகற்காலத்திலே சூரியோதயகாலமுதல் நிலத்திலுள்ள கல் மண் முதலிய திண்ணிய பதார்த்தங்கள் யாவும் சூரிய உஷ்ணத்தினால் வெகு சீக்கிரம் அதிக வெப்பமாய் விடுகின்றன. அப்படி உஷ்ணக்கொதிப்பு ஏறிய பொருள்களுக்குச் சமீபமாயுள்ள *நிச்சல வாயுவும் வெகு சீக்கிரத்தில் வெப்பமாய் விடுகின்றது. அந்தப்படி அங்குள்ள வாயு வெப்பமானவுடனே அது நுண்ணியதாகி மேலெழும்பி வெளிப் பரப்பில் போய்விடுகின்றது. அதே காலத்தில் சமுத்திரத்திலுள்ள தண்ணீரும் சூரிய உஷ்ணத்தினால் வெப்பமாகிக்கொண்டு வருகிறது. ஆனால், கல் மண் முதலிய கனத்தபொருள்கள் உஷ்ணத்தை எவ்வளவு சீக்கிரத்தில் கிரகித்துக்கொண்டு வெப்பமாகின்றனவோ அவ்வளவு சீக்கிரத்தில் சமுத்திரத்தி லுள்ள தண்ணீர் உஷ்ணத்தைக் கிரகிக்கிறது மில்லை, ஆகையால் வெப்பமாகிறதுமில்லை. இதற்குத் திருஷ்டாந்தமாகக் கொஞ்சம் மணலையாவது சில கற்களையாவது ஒரு புறத்திலும், தண்ணீரை ஒரு பாத்திரத்தில் வார்த்து மற்றொருபுறத்திலும் வெய்யிலில் ஒரு மணிநேரம் வரையில்வைத்துப் பார்ப்போமாயின், அந்தக் கற்களுக்கும் மணலுக்கும் உண்டாய்விடுகிற உஷ்ணக்கொதிப்பு எவ்வளவோ அதில் ஆயிரத்திலொருபங்குகூட அந்தப் பாத்திரத்திலுள்ள தண்ணீருக்கு உண்டாகாமலிருப்பதை நாம் அறிந்து கொள்ளலாம். அந்த ஒரு மணி

* வாயு எங்குமுள்ள பொருள். அது அலைமோதி இடம் விட்டுப் பெயருகையில் அதற்குக் காற்று என்றுபெயர்; அங்ஙனமின்றி இயக்கமற்று நின்ற நிலையில் இருக்கும்போது அதற்கு நிச்சலவாயு (air) என்று பெயர்.

நேரத்துக்குள்ளாகவே மேற்படி தண்ணீரின் உஷ்ணத்தையும் அதுவார்க்கப்பட்டிருக்கிற பாத்திரத்தின் உஷ்ணத்தையும் தொட்டு ஒத்திட்டுப் பார்க்கையில், தண்ணீரைவிடக் கனத்த பொருளாகிய அந்தப் பாத்திரம் அதிகவெப்பமாயிருப்பதை நாம் பிரத்தியட்சமாய் அறியலாம். ஆகையால், சமுத்திரத்திலுள்ள ஜலத்தைவிட நிலத்திலுள்ள கல் மண் முதலிய திண்ணிய பதார்த்தங்கள் சீக்கிரம் வெப்பமாய் விடுகின்றன. அப்படி வெப்பமாய்ப்போகும் நிலத்திலிருந்து மேலெழும்பிச் செல்லும் நிச்சலவாயு இருந்த இடத்தை நிரப்பும்படி சமுத்திர ஜலத்தின் மேற்புறமாயுள்ள குளிர்ச்சியான நிச்சல வாயு நிலத்தைநோக்கி அடிக்க ஆரம்பிக்கின்றது. இந்தப்படி சமுத்திரத்திலுள்ள நிச்சலவாயு நிலத்தை நோக்கி மோதும்போதுதான் அதற்குக் கடற்காற்று என்று பெயர்.

உஷ்ணத்தை எவ்வளவு சீக்கிரமாய் நிலத்திலுள்ள கல் மண் முதலிய திண்ணிய பொருள்கள் கிரகித்து வெப்பமாகின்றனவோ அவ்வளவு சீக்கிரமாய் அவை உஷ்ணத்தை வெளிவிட்டுக் குளிர்ந்துபோய் விடுகின்றன. அந்தப்படி அவைகள் சூரிய அஸ்தமனத்துக்குப் பின்பே குளிர ஆரம்பிக்கின்றபடியால் வெகு சீக்கிரத்தில் அவைகள் குளிர்ந்து ஜில்லென்று போய்விடுகின்றன. சமுத்திரத்திலுள்ள ஜலம் சூரிய உஷ்ணத்தை எவ்வளவு மெதுவாய்க் கிரகிக்கின்றதோ அவ்வளவு மெதுவாகவே அந்த உஷ்ணத்தை வெளிவிட்டுக் குளிருகிறது. ஆகையால், சூரிய அஸ்தமனத்துக்குப்பிறகு மறுநாள் சூரியோதயம் வரையில் நிலத்திலுள்ள மண் கல் முதலிய திண்ணிய பொருள்கள் யாவும் குளிர்ந்து

போயிருக்கும் காலத்தில் சமுத்திரத்திலுள்ள ஜலம் உஷ்ணமாகவே இருக்கின்றது. இரவிலும் பிராதக் காலத்திலும் சமுத்திரத்திலாவது தடாகங்களிலாவது ஸ்நானஞ்செய்ய இறங்கும்போது தண்ணீர் உஷ்ணமா யிருப்பதை நாம் அனுபவ சித்தமாய்க் காண்கிறோம். உஷ்ணமாயிருக்கும் பகற்காலத்தில் சீதளமா யிருக்கும்படியாகவும், சீதளமாயிருக்கும் இராக்காலத்திலும் பிராதக்காலத்திலும் உஷ்ணமா யிருக்கும்படியாகவும் தண்ணீருக்கு லட்சணத்தை அமைத்துவைத்த ஜகதீசரது கருணையே கருணை!

'வாவியுறை நீரும் வடநிழலும் பாவகமும்
... .
மென்சீத காலத்து வெம்மைதரும் வெம்மைதனி
லின்பாருஞ் சீதளமா மே.'

தடாகத்து நீரும் ஆலமர நிழலும் பாவுகல் போட்ட கருங்கற் கட்டடமும் சீதளகாலத்தில் வெப்பமாயும் உஷ்ணகாலத்தில் சீதளமாயும் இருக்கின்றன என்று தமிழ்ப்பண்டிதர்கள் இவ்வுண்மையை நெடுங்காலத்துக்கு முன்பாக அறிந்து கூறியுளார்.

இந்தப்படி கடவுள் அமைத்து வைக்காவிட்டால் உஷ்ணகாலமாகிய பகற்பொழுதில் வேறு சீதளஸ்தானம் இல்லாமையாலும், சீதளகாலமாகிய இராக்காலத்திலும் பிராதக்காலத்திலும் வேறு உஷ்ணஸ்தானம் இராமையாலும் உயிர்வர்க்கங்கள் என்ன பாடுபடும்! இராக்காலத்திலும் பிராதக்காலத்திலும் நிலத்திலுள்ள கல் மண் முதலிய யாவும் குளிர்ந்துபோயிருக்கும் போது சமுத்திர ஜலம் உஷ்ணமாகவே யிருக்கிறபடியால் அங்குள்ள உஷ்ணமான நிச்சலவாயு முன்னே நிலத்திலிருந்து மேலெழும்பிப் போகிறதென்று சொன்-

னதுபோல் மேலே கிளம்பிப் போய்விடுகின்றது. அந்த இடத்தை நிரப்புவதற்காக அப்போது நிலத்தின் மேற்புறமாயுள்ள சீதளமான நிச்சலவாயு சமுத்திரத்தை நோக்கி அடிக்க ஆரம்பிக்கின்றது. இந்தப்படி நிலத்திலுள்ள குளிர்ச்சியான நிச்சலவாயு சமுத்திரத்தை நோக்கி மோதும்போதுதான் அதற்கு நிலக்காற்று என்றுபெயர்.

---

23. ‘கொடிது கொடிது வறுமை கொடிது.’

மனிதர்களுக்கு இல்வுலகத்தில் நேரிடும் பல கொடுமைகளிலும் மிகச் சிறந்தது வறுமையேயாம். வறுமைக்குத் தரித்திரம், கலி, இன்மை, நல்குரவு, இலம்பாடு, மிடி என்னும் பற்பல பெயர்கள் உள. அவைகளெல்லாம் அதன் கொடுமையை விளக்குங் காரணப் பெயர்களாகவே இருக்கின்றன. வறுமை என்னும் துன்பம் ஒன்றுமாத்திரம் ஒருவனுக்கு நேரிடுமாயின் அது எவ்வகைப்பட்ட தீமையைச் செய்யவும் அவனைப் பிரேரேபிக்கவல்லது. வறுமை ஒருவனுக்கு நேர்ந்த காலத்து அவனது சரீர அழகு, செல்வம், மனோதிடம், சாந்தகுணம், நற்குடி, உயர்குலம் இவைகளெல்லாம் கெட்டுப்போகின்றன. இக்கருத்தை யமைத்தே,

‘வடிவும் தனமும் மனமும் குணமும்
குடியும் குலமும் குடிபோ கியவா
அடியந் தமிலா அயில்வே லரசே
மிடியென் றொருபாவி வெளிப் படினே.’

என்று பெரியோர் வறுமையின் கொடுமையை வியந்து உரைத்திருக்கின்றனர்.

'இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி
னின்மையே யின்னா தது.'

ஒருவனுக்கு வறுமைபோல் துன்பஞ்செய்வது யாது என்று வினவின், வறுமைபோல் துன்பம் செய்வது வறுமையேயாம். எனவே, துன்பம் செய்வதில் அதற்கு ஒப்பும் உயர்வும் வேறில்லை என்று பொருள்பட நாயனார் கூறியதைவிட விசேஷமாக அதைக் குறித்துச் சொல்ல ஒருவராலும் முடியாது.

முற்காலத்தில் ஒரு நாள் சோழராஜன் சமுகத்தில் நமது ஔவையார் எழுந்தருள, அதை அறிந்த சோழன் எதிர் சென்று அழைத்து வந்து ஆசனத்திலிருக்கச் செய்து, சாட்சாத் ஜகன்மாதாவாய் விளங்கும் அம்மையே, இவ்வுலகத்தில் கொடியவைகளிலெல்லாம் கொடியது எது! என்று கேட்க, அப்போது அம்மாது சிரோமணி,

'கொடிது கொடிது வறுமை கொடிது.'

என்று அவ்வறுமை என்னும் பதத்திற்குமுன் இரண்டு விசையும் அதற்குப் பின் ஒரு விசையுமாக மூன்றுதரம் கொடிது என்னும் பதத்தைப் பிரயோகித்து உலகத்திலுள்ள நம்மனோர் அவ்வறுமையின் தன்மையை அறிந்து உய்யும்பொருட்டுத் திருவாய்மலர்ந்தருளினர். இவ்விதமான கொடுமையிற் சிறந்த வறுமையால் பசி நேர்ந்தபோது அது, கடந்த ஞானியும் கடத்தற்கரிய புத்திர வாஞ்சையையும் ஒரு நிமிஷத்திற் போக்கவல்லது. எல்லாவாஞ்சையிலும் விசேஷமானதாயும் எத்தகையோராலும் விடக்கூடாததாயும் உள்ள புத்திர வாஞ்சையையே ஒரு நிமிஷத்திற் போக்கவல்ல அவ்

வறுமை இன்னும் எவ்வித கொடுமையைத்தான் புரியாது? இதற்குத் திருஷ்டாந்தமாக ஒரு சிறு சரித்திரம் அடியில் எழுதப்படுகின்றது:—

ஓர் ஊரில் கலிநேசன் என்னும் ஓர் ஏழை மிடிமித்துரு என்னும் மனைவியுடன் தினந்தோறும்கூலிக்கு நெற்குற்றி, அதனாற் கிடைக்கும் அதிசொற்பவரும்படியால் வெகு கஷ்ட ஜீவனம் செய்துவந்தான். இவ்வாறு ஜீவித்து வருகையில் கடவுள் அருளால் மூன்று பிள்ளைகள் பிறந்தன. அவர்களில் முதற்குமாரனுக்குச் சிங்கநாதன் என்றும், இரண்டாங் குமாரனுக்குக் குயுக்திவீரன் என்றும், மூன்றாங் குமாரனுக்குப் பவித்திரன் என்றும் அவன் பெயரிட்டான். இப்படி அம்மூன்று பிள்ளைகளையும் தங்கள் சொற்ப வரும்படியைக் கொண்டே அத் தாய் தந்தையர்கள் இருவரும் போஷித்து வருகையில், முன்னினும் அதிககஷ்டம் நேரிட்டதால் அவர்களால் சகிக்கக்கூடாமல் அதிக மனவருத்த முற்று, அக்கலிநேசன் என்னும் ஏழை தன் மனைவியாகிய மிடிமித்துரு என்பவளைப் பார்த்து,'பெண்ணே, எத்தனை நாளைக்கு இவ்வூரில் இவ்வாறு கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பது ! சில நாளைக்கு வேறே எந்த ஊருக்காகிலும் போய் ஜீவனம் செய்வோம்' என்று சொல்ல, அவளும் அப்படியே செய்வோம் என்று ஒப்புக்கொண்டவுடன், அவ்விருவரும் தம்முடைய மூன்று குமாரர்களையும் அழைத்துக்கொண்டு அவ்வூர்க் கருகாமையிலிருக்கும் தமனியபுரம் என்னும் ஓரூருக்குச் சென்று அன்றிராத்திரி பட்டினியாய் அவ்வூர்ச் சத்திரத்துத் திண்ணையில் படுத்துக்கொண்டிருந்தார்கள். அப்போது அச்சத்திரத்தின் எதிர்த் திண்ணையில் படுத்துக்-

கொண்டிருந்த வழிப்போக்கர்களிருவர், 'இவ்வூர் அரசன் தனக்குள்ள ஏதோ ஒரு கோரிக்கை நிறைவேறுவதற்காக இவ்வூர்க்காளிக்கு வருடந்தோறும் ஒரு குழந்தையைப் பலிகொடுத்துக்கொண்டு வருகின்றானாம்; அதற்காகக் குழந்தையைக் கொடுப்பவர்களுக்கு வேண்டிய பரிசு அளிக்கின்றானாம்' என்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண் டிருப்பதை கலிநேசன் கேட்டுத் தனது மனைவியாகிய மிடிமித்துருவைப் பார்த்து, 'பெண்ணே இவ்வூர் அரசன் காளிக்கு வருஷந்தோறும் ஒரு குழந்தையைப் பலியாகக் கொடுப்பது வழக்கமாம். அப்படி அப்பலிக்காகக் குழந்தை கொடுப்பவர்க்கு வேண்டிய திரவியம் கொடுக்கின்றானாம். ஆகையால், நாமும் நமது குழந்தைகளில் ஒரு குழந்தையைக் கொடுத்துவிட்டு வேண்டியதிரவியம் பெற்றுக்கொண்டு இவ்வறுமையினின்றும் நீங்கி நமது ஆயுள்வரையில் சுகஜீவிகளாயிருப்போமென்றுசொன்னான். அதைக்கேட்டமனைவி, 'பிராண நாதா, அப்படியே செய்யலாம், ஆனால் மூன்றாம் குமாரனாகிய பவித்திரனைமாத்திரம் நான்கொடுக்கமாட்டேன்' என்றாள். அதற்கு அக்கலிநேசன், 'மூத்தகுமாரனாகிய சிங்கநாதனை நான் தரமாட்டேன்' என்றான். பிறகு இருவர்களும் ஒருமித்து இரண்டாவது குமாரனாகிய குயுக்திவீரனைக் கொடுத்து விடலாம் என்று தீர்மானித்தார்கள். இவ்வாறு தாயும் தந்தையுமாகிய இருவரும் பேசிக்கொண்டிருந்ததை விழித்துக் கேட்டுக்கொண்டிருந்த குயுக்திவீரன் சரேலென்றெழுந்து தாய்தந்தையர் பாதங்களைச் சாஷ்டாங்கமாகவணங்கி, 'என்னை ஈன்ற இருமுதுகுரவர்களே, தாங்கள் தீர்மானித்தது நல்ல தீர்மானமே; எனக்கும் பூரணமாய் விருப்பமிருக்கின்-

றது. தாங்கள் இதற்கு எவ்வளவும் பின்னிடவேண்டாம். ஏனென்றால் நானிருந்து என்ன சாதிக்கப் போகிறது ? ஒன்று மில்லை, இப்போது தாங்கள் செய்த யோசனைப்படி நடத்தினால் அரசனுடைய பிரார்த்தனையும் நிறைவேறுகின்றது. தங்களுடைய வறுமையும் நிவாரணமாகின்றது. நானும் காளிகா தேவிக்குப் பிரீதியாகின்றேன், ஆதலால் இதனினும் மேம்பட்டகாரியம் எனக்கென்ன இருக்கிறது ? எப்போது பிறப்புண்டோ அப்போதே இறப்புண்டு என்பது நிச்சயம், எத்தனை நாளிருக்கினும் ஒருநாளைக்கு இறக்கவேண்டும், ஆகையால் தாங்கள் யோசித்ததற்கு யாதொன்றும் ஆக்ஷேபமில்லை, அவ்வாறே செய்யலாம்' என்றான். அந்தப்படி அத் தாய் தந்தையர் இருவரும் காலையில் அக்குயுக்தி வீரனை அரசனிடத்துக்குக் கொண்டுபோய், 'மகாப் பிரபு, இக்குழந்தையை விற்று விடுகின்றோம்' என்றார்கள். அரசன் பார்த்து, 'அப்படியா ? நல்லது, இதற்காக எவ்வளவு திரவியம் வேண்டும் ?' என்று கேட்டான். அவர்கள், 'ஐயாயிரம் வராகன் வேண்டும்' என்றார்கள். அரசன் அதற்குச் சம்மதித்து அவர்கள் ஐவரையும் அப்பலியிடுங்காலம் வரும் வரையில் போஷித்து வருகையில், அப்படி பலியிடப் போகிற குழந்தை கேட்கின்றபடியெல்லாம் அரசன் செய்யவேண்டியதென்னும் நியமமிருந்தபடியால், அக்குயுக்திவீரன் ஒருநாள் அரசனைப் பார்த்து, 'மகாப்பிரபு, தங்கள் சிங்காசனத்தின் மீது ஒரு முகூர்த்தநேரம் இருந்து அரசாட்சி செய்ய எனக்கு உத்தரவளிக்க வேண்டும்' என்றனன். அதற்கு அரசன் உடன்பட்டு அவ்வாறே யளித்தனன். அக்குயுக்திவீரன் சிங்காசன மேறி அம்முகூர்த்த நேரத்-

திற்குள் அவனரசாட்சிக் குட்பட்ட சிப்பந்திகள் யாவருக்கும் சம்பளத்தை விருத்திசெய்தும், நிலத்தீர்வை முதலியவைகளைக் குறைத்தும், இன்னும் குடிகளுக்கு வேண்டிய நன்மைகள் பலவற்றையும் குறைவற முடித்து ஆனபிறகு அச்சிம்மாசனத்தைவிட்டு இறங்கிப் பழையபடி அவ்விடத்திலேயே இருந்தான். அப்போது குடிகள் அடைந்த மனக்களிப்புக்கு அளவில்லை. இப்படியிருக்கப் பலிகொடுக்கும் நாள் வந்தது. அன்று காலையில் அக்குயுக்திவீரனை நீராடச்செய்வித்துச் சர்வ ஆடையாபரணாலங்கிருதனாக்கி அரசன் அவனுடைய தாய் தந்தைகளுடன் மந்திரி பிரதானி முதலிய பரிஜனங்கள் புடை சூழ அவனை அழைத்துக் கொண்டுபோய், காளிகாதேவிக்கு எதிரில் நிறுத்தி வாளாயுதத்தைக் கையிலேந்தி நிற்கையில், அக்குயுக்திவீரன் காளிகா தேவியைப் பார்த்துக் கலகலவென்று நகைத்தான். இதைப் பார்த்துக் காளிகாதேவி பிரத்தியட்சமாகி, ‘ஓ பிள்ளாய், என்ன ஆச்சரியத்தைக் கண்டு நீ சிரித்தனை!’ என்று கேட்டாள். அதற்கு அப்பிள்ளை, ‘அம்மே, உலகத்தில் ஒரு பிள்ளையைத் தாய் அடித்தால் தந்தை அணைப்பதும், தந்தை அடித்தால் தாய் அணைப்பதும், அவரிருவரும் விரோதித்தால் அரசன் ஆதரிப்பதும், அரசன் பகைத்தால் தெய்வம் காப்பதும் வழக்கமென்று பெரியோர் கூறுவார்கள்; அதற்கு மாறாக இப்போது தாயும் சத்துருவாயினாள் தந்தையும் வைரியாயினான், ‘அரசனே வெட்டும்படி வாளேந்தி நிற்கின்றான், தெய்வமாகிய நீயே பலியேற்க எதிரில் நிற்கின்றாய், வேறே எனக்குப் புகலிடந்தான் யாது? தஞ்சமளிக்கத்தக்க யாவரும் எனக்கு விரோதிகளானார்-

களே, இதைவிட ஆச்சரியம் என்ன இருக்கின்றது? இவ் வாச்சரியத்தைக் கண்டுதான் நான் சிரித்தேன் என்னும் பொருள்பட

'மாதா சத்ரு: பிதா வைரி
ராஜா சட்கதர: பு::
தைவே பலிஸமாஸக்தே
கிமாச்சரியமத: பரம்.'

என்னும் ஸ்லோகத்தைச் சொன்னான். அதைக் காளிகாதேவிகேட்டு ஆச்சரியமும் வெட்கமும் அடைந்து அன்றுமுதல் பலி தனக்கு வேண்டாமென்று நிக்கிரகித்து அரசனுடைய கோரிக்கையை நிறைவேற்றிவிட்டாள். அரசன் புத்திரப் பேறற்றவனாகையால், அக் குயுக்தி வீரனுக்கே தன் அரசாட்சியைக்கொடுத்தான். அதுமுதல் அவன் மாதாபிதாக்கள் சகோதரர்களோடும் சுகஜீவியாய் வாழ்ந்திருந்தான்.

வறுமை மஹா கொடியதாயினும் அதையும் பரம பிதாவாகிய கடவுள் பின்வரும் சம்பத்துக்கு ஓர் ஹேதுவாக உலகத்தில் அமைத்துவைத்திருக்கிறார் என்பது இதனால் விளங்குகிறது. 'சிறுமை கண்டவர் பெருமைகண் டல்லது தேறார்.' என்று ஆன்றோர் கூறிய வாக்குக்கு இது உதாரணமாயிற்று.

---

24. இந்துக்களின் சங்கீதசாஸ்திரம்

அகன்று பரந்திருக்கும் இப்பிரபஞ்சம் இசையினால் உயிர்வாழ்ந்துகொண்டு இருக்கின்றதென்று தெளிவாய் நமக்குப் புலப்படுகின்றது. இப்பூலோகமும் அதிலுள்ள சமஸ்தவஸ்துக்களும் நிலைநிற்பது நாதப்

பிரமத்தின் விகற்பங்களாலென்றே தத்துவசாஸ்திரிகள் ஸ்தாபித் திருக்கிறார்கள். நாதங்கள் நாநாவிதமாய்க் கலந்து ஸமஸ்த ஜீவகோடிகளின் கவனத்தையும் கவர்ந்து அவற்றிற்குப் பேரானந்தத்தை விளைவிப்பது-தான் சங்கீதம் என்பது.

‘செவிச்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்.’

என்றார் திருவள்ளுவ நாயனார். இதற்குத் திருட்டாந்தமாக, சிசுவானது தொட்டிலில் அழுது கொண்டிருக்கையில் நல்ல பாட்டுக்களைப் பாடித் தாலாட்டினால் அழுகையைவிட்டு அசைவின்றிக் கானரசத்தைப் பானம் பண்ணி ஆனந்திக்கிறதைப் பார்த்திருக்கின்றோமல்லவா? அன்றியும் மிகுந்த உக்கிரம்கொண்டு விஷத்தைக் கக்குகின்ற சர்ப்பமானது பாம்பாட்டி குழலூதினமாத்திரத்தில் அதின் இசையைக் கேட்டு உக்கிரமாய் ஆட்டின படத்தை ஒடுக்கிக்கொண்டு மிகுந்த களிப்படைவதைப் பாராதவர் யார்? வனத்தில் புல்லைத் தின்றுவாழும் மிருகங்கள்கூட தங்கள் சத்துருவாகிய வேடன் பாடினால் அதைக் கேட்டுக்கொண்டு அயர்ந்து பிராணனைக் கொடுத்து விடுகின்றனவே. வசந்தகாலத்தில் பூரணசந்திரோதயமாயிருக்கும்போது ஒரு தடாகத்தின் கரையிலுள்ள நந்தவனத்தினின்று யாழ் வாசித்தால் அசுணம் முதலான பட்சிகள் அந்தரத்தில் நின்றுகொண்டு யாழ் நாதத்தைக் கேட்டு இன்பமுற்றிருக்குமென்று சொல்வோமாகில் மற்றவைகளைப்பற்றிக் கூறல் வேண்டுமோ? இதை ‘யாழ், நறையடுத்த வசுணநன் மாச்செவி.’ என்று கம்பநாட்டாழ்வார் இராமாயணத்தின் அவையடக்கத்தில் சொல்லுகிறார். ஆகையால், சங்கீதத்தின்

சக்தியானது மனிதனுடைய உள்ளத்தைக் கவர்ந்து உருகும்படி செய்யச் சாமர்த்திய முள்ள தென்பதை இப்பூமண்டலத்திலுள்ள ஒவ்வொரு பிராணியுமறிந்த விஷயமே. அயர்ந்து நித்திரையி லிருப்பவர்களைக்கூட இனிமையான பாடலோசை காதில் பட்டமாத்திரத்தில் அவர்கள் மனதை யாக்கிரஷித்து நித்திரையைவிட்டு எழுப்பிவிடுமென்று முன்னோர் கூறியிருக்கிறார்.

‘ தெள்விளி சிறியாழ்ப் பாணர் தேம்பிழி நறவு மாந்தி
வள்விசி கருவி பம்ப வயின்வயின் வழங்கு பாடல்
வெள்ளிவெண் மாடத் தும்பர் வெயில்விரி பசும்பொற் பாளி
எள்ளருங் கருங்கட் டோகை யின்றுயி லெழுப்பு மன்றே.’

என்று பிரமாணமிருக்கிறது.

கீதவாத்தியங்கள் அநாதியாய்த் தொன்றுதொட்டுக் கிளைத்துள்ளனம் என்றும், புகழ்புரந்த இத்தேசத்தில் சங்கீதத்தின் வல்லமை இவ்வளவு சிறப்புடையதாயிருந்த தென்றும் நன்றாய் அறியாதவர் வெகுசிலர். பூர்வகாலந்தொடங்கி சங்கீதம் ஓர் சிறந்த சாஸ்திரம் என்றும் தெய்வத் தன்மையுள்ளதென்றும் இந்து தேசத்தில் எல்லாராலும் மதிக்கப்பட்டுவந்தது. சிறந்த நமது பூர்வீகர்களும், நம்மால் பூஜிக்கப்பட்டு வனங்களிலும் பர்வதங்களிலும் வாசஞ்செய்துகொண்டிருந்த மகாரிஷிகளும், அர்க்க, காத, சாமமாகிற தேவகானங்களைப் பாடிக்கொண்டு தங்கள் தேவதைகளைப் பிரார்த்தனை செய்துவந்தார்களென்று நாம் படித்திருக்கிறோம். வான்மீகி மகாரிஷியின் ஆச்சிரமத்தில் ராஜகுமாரர்களான குச லவர்கள் ஜகதீசனான தசரதராமன் சரித்திரத்தையும் பராக்கிரமங்களையும் யாழில் இசைத்துக் கிரமமாயும் சுத்தமாயும் பாடும்படி கற்பிக்கப் பட்டார்களென்-

றும், இந்த சாஸ்திரவிஷயமாய் அனேக கிரந்தங்களைச் செய்து சிறந்தவனான இராவணேசுவரன் தன் அந்தப்புரவாசிகளான இராக்ஷஸிகள் சந்தோஷகாலத்தில் செய்த நிருத்த கீதங்களைக்கண்டு கேட்டு அகமகிழ்ந்து ஆனந்தித்தார்களென்றும் சரித்திரங்களால் நாம் அறிகிறோம்.

யமுனாநதிக்கரையில் கோபிகள் நடுவில் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியானவர் மிகுந்த களிப்புடன் உள்ளம்பூரிக்க அதி மதுரமாய் வேணுகானம் பண்ணினாரென்றும், அது தேவர்களையும் கந்தர்வர்களையும் நரமனிதர்களையும் வயலில் மேய்ந்துகொண்டிருந்த பசுக்களையும் பர்வதங்கள் பள்ளத்தாக்குகள் நீரோட்டங்கள் முதலானவற்றையுங்கூட நிருத்தனம்பண்ணும்படி செய்வித்ததென்றும் சொல்லுகிற சரித்திரத்தை நோக்குமிடத்துச் சங்கீதத்தினால் விளையும் பிரம்மானந்தத்தை என்னென்று கூறலாம்! பூர்வீக கிரந்தங்களைப்படிக்கிற எவனாவது தெய்வ லோகத்தில் கானம் பண்ணுகிறதாகச் சொல்லப்படுகிற கந்தர்வ, அப்சரசுக்கள் தேவேந்திரனுக்கெதிரில் இன்பமான இசைகளைப்பற்றிக் கூறியிருப்பதைப் பார்த்துச் சந்தோஷப்படாதிருப்பானோ? பிரம்மாவின் பத்தினியாகிய சரஸ்வதி, நாரதர், தும்புரு, ஹாஹா, ஹூஹூ முதலிய எண்ணிறந்த தேவதைகள் சங்கீதத்தின் வல்லமை பொருந்திய மாயையில் அகப்பட்டவர்களே. முற்காலத்தில் சங்கீதத்தை மிகுந்த பக்தி சிரத்தையுடன் தேவலோகங்களில் ஆதரித்துவந்தார்கள். அந்த சாஸ்திரத்தில் அவர்கள் வைத்த பக்தியும் சிரத்தையும் பூலோகத்தில் நரபதிகளை அதன் வலைக்குட்படுத்தின. ஆகவே ராஜகுமாரர்கள் தங்கள் நித்தியகடமைகளில் அதை ஒன்றாகப்பாவித்து சங்கீத சாஸ்திராப்பியாசம்

செய்துவந்தார்கள். ஆகையால் பூர்வீகத்தில் இச்சாஸ்திரவிஷயமான கிரந்த கர்த்தர்களில் பெரும்பாலார் அரசர்களென்றே அறியலாம்.

தற்காலத்துக்குக் கொஞ்சம் முன்வரையில் யாதொருதடங்கலுமின்றி அதே நிலையில் அந்த சாஸ்திரம் அபிவிருத்தியாகி விளங்கிற்று. பிற்காலத்தில் சுதேச ராஜாக்களின் நிலைமை குன்றிப்போகப்போக அச்சாஸ்திரத்தின் நிலைமையும் குன்றியது. மைசூர் மகாராஜா கிருஷ்ண ராஜா உடையார் காலத்திலும் தஞ்சாவூரில் சரபோஜிமகாராஜா காலத்திலும் சங்கீதசாஸ்திரம் விசேஷமாய்க் கிளைத்து விருத்தியானதையும், அத்தேசங்களில் அது இப்போதிருக்கிற நிலைமையையும் விசாரித்தறிகிற ஒவ்வொருவருக்கும் மேற்சொன்ன விஷயம் விளங்காமற் போகாது. நிலைமை குன்றின போதிலும் ஒவ்வொரு ராஜக்கிரகத்திலும் சாத்தியமானவரையில் இந்த சாஸ்திரம் ஆதரிக்கப்பட்டு வந்ததென்று தோன்றுகிறது.

ராஜக்கிரகத்திலிருப்பது போலவே பிற்காலங்களில் கவுரவமான நிலைமையி லுள்ளவர்களுடைய பிரதி கிருகத்திலும் இந்த சாஸ்திராப்பியாசத்தை அத்தியாவசியகமென்று நினைத்து, அங்கங்கே சிலர் அதை அப்பியாசம் செய்து வந்தார்கள். வரவர காலதேச வர்த்தமானங்கள் மாறி ராச்சியவேறுபாடுகள் உண்டாகி, சிரத்தை குறைந்து ஸ்திரீகளும் புருஷர்களும் வெகு நாளாய்த் தங்கள் முன்னோர்களா லாதரித்துவந்த சாஸ்திரத்தைக் கைவிட்டுவிட வேண்டியவர்களானார்கள். அந்தக்காலம் முதல் இந்துக்கள் கர்ணாமிருதமான பாடல்களை இனிமையான சுரத்துடன் மற்றவர்கள்

பாடக் கேட்டுத் திருப்தியடைய வேண்டியவர்களானார்களேயன்றித் தாமே பாடும் சக்தி எய்தப்பெற்றிலர். பாடுபவர்களோ சங்கீதம் பொருளுக்குக் காரணமாயிருப்பதை உத்தேசித்துத் தங்கள் தொழிலாக அதை வைத்துக்கொண்டு முயன்றுவந்தார்களேயொழிய வேறன்று. இவ்விதமாய் இச்சாஸ்திரம் உச்சஸ்தானத்தினின்று அதிக தாழ்ந்த ஸ்திதிக்கு வந்துவிட்டது. பிறகு அது நாளடைவில் ஒளிமழுங்கி மலினப்பட்டு அநாதரவடைந்து போயிற்று. தற்காலத்தில் சுத்தமாய் நல்ல லக்ஷணங்களுடன் இதை அப்பியசித்து வருபவர்கள் ஒருவருமில்லை யென்றே சொல்லவேண்டிய நிலைமையில் சங்கீத சாஸ்திரம் வந்துவிட்டது.

சங்கீத சாஸ்திரத்தின் சரித்திரம் முன்னொரு சஞ்சிகையில் ஒருவாறு சொல்லி முடிந்தபடியால், இனி வேதப்ரவசன காலம் முதல் தற்காலம் வரையில் நம்மவர்களிடத்தி லுண்டாயிருந்தபடி அதன் முறைகளைச் சங்கிரகித்துச் சொல்வோம். நமது முன்னோர்களான ரிஷிகள் ஆதிகாலத்தில் வேத கீதங்களை இசைப்படுத்திப் பாடிக்கொண் டிருந்தார்களென்றும், ருக் வேதத்தில் அர்ச்சினோ காயந்தி, கந்தினோ காயந்தி, ஸாமினோகாயந்தி என்று அர்க்க, காத, ஸாம தேவதைகள் பாடுவதாக அடிக்கடி சொல்லப்பட்டிருக்கிறதென்றும் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றது. பின்னால் பாணினி முதலான வித்தியாசாரியர்களாலும் சாஸ்திர முறைகள் கிரந்தங்களில் எழுதப்பட்டு வந்தன. அர்க்கமுறையாவது—ஒரு சுவரத்தை ஆதாரமாக வுடையது. காதிக முறைக்கு இரண்டு சுவரமும், ஸாமிக முறைக்கு மூன்று சுவரமும் ஆதாரமா

யுள்ளன. பிறகு நான்கு சுவரத்தை அனுசரித்திருக்கிற சுவராந்தரம் என்று மற்றொரு முறை இதனுடன் சேர்க்கப்பட்டது. ரிஷிகளா லனுசரிக்கப்பட்ட முறைக்கும், ஆசாரியர்கள் அனுசரித்த முறைக்கும் முக்கியமான வித்தியாசம் உண்டாயிருந்தது. பாணினியானவர் தாம் செய்த வியாகரண சூத்திரங்கள் உதாத்த, அநுதாத்த, சுவரித மென்று மூன்று சுவரங்கள் எடுத்திருந்தபோதிலும், சிக்ஷை என்கிற கிரந்தத்தில் மூன்று சுவரங்களாலான முறைக்கும் சப்த சுவரங்களாலான முறைக்கும் சம்பந்தம் அடியில் வருமாறு காட்டியிருக்கின்றனர். அதாவது-உதாத்தத்தில் நி, கா என்கிற இரண்டு சுவரங்கள் சேர்ந்தன என்றும், அநுதாத்தத்தில் ரி, தா என்கிற இரண்டு சுவரங்கள் கூடின என்றும், சுவரிதத்தில் ஸா, மா, பா என்கிற மூன்று சுவரங்கள் சேர்ந்தன என்றும் அவர் சொல்லுகிறார்.

ஷட்ஜசுவரத்தின் குறிப்பு ஸா என்றும், ரிஷபவரத்தின் குறிப்பு ரீ என்றும், காந்தாரசுவரத்தின் குறிப்பு கா என்றும், மத்தியம சுவரத்தின் குறிப்பு மா என்றும், பஞ்சமசுவரத்தின் குறிப்பு பா என்றும் தைவத சுவரத்தின் குறிப்பு தா என்றும், நிஷாதசுவரத்தின் குறிப்பு நி என்றும் காட்டுகிறது. இவ்விதமான சப்த சுவரங்களில் ஷட்ஜசுவரம் நாதமாத்திரையாக வைத்துக்கொள்ளப் பட்டது. ஏனெனில், மற்ற ஆறு சுவரங்களும் அதினின்று புறப்பட்டு அதன் மாத்திரையை உயர்த்தி நீட்டுவதால் உண்டாகின்றன. நிஷாதமும் காந்தாரமும் சேர்ந்து ஒன்றாய் உதாத்தமென்றும், ரிஷபம்-தைவதம் இரண்டும் சேர்ந்து அநுதாத்தமென்றும், ஷட்ஜ பஞ்சமங்கள் கூடி ஸ்வரித

மென்றும் எண்ணவேண்டியது. மத்தியமமானது பஞ்சமத்துடன் கலக்கிறதுமன்றி எல்லா சுவரங்களுடனும் கலக்கிறபடியால் அது தனியாயிராமல் அவற்றுடன் கூடினதாகக் கொள்ளவேண்டியதாயிற்று. இதனால் அர்ச்சிக, காதிக, ஸாமிக கீதங்கள் மூன்று சுரங்களால் பாடப்பட்டன என்றும், இம்மூன்றும் பிற்காலத்திய சப்த சுவரங்களின் கலப்பென்றும் கொள்ளவேண்டியது. இவ்வாறு பாணினி முதலான ஆசாரியர்கள் காலத்தில் ஸாமமுறையை அனுசரித்து, சப்த சுவரங்களால் பாடப்பட்ட சங்கீதம் நான்கு பாகமுடையது. அதாவது:—பிரஸ்தாவம், உத்கீதம், பிரதிஹாரம், நிதானம் ஆகும். தற்காலத்திய துருவபதமுறையும் அஸ்தாயி, அந்தரம், ஸஞ்சாரம், அபோகம் என்று நான்கு பிரிவுகளுள்ளன. இதனால் இவ்விரண்டு முறையும் ஒன்றென்றும், பின்சொன்ன முறைக்கு ஆதிகர்த்தாவாகிய தனசேனன் வேத முறையை நன்றாய் அறிந்தவரென்றும தோன்றுகிறது. துருவபத முறை ஏற்படுவதற்கு முன் சங்கீத சாஸ்திரமடைந்த மேற்சொன்ன நானாவித படிகளெல்லாம் ஒருங்கு கூடியதைத்தான் சமஸ்கிருத கிரந்த கர்த்தர்கள் 'மார்க்கம்' என்கிற முறையென்று வகுத்திருக்கிறார்கள். சம்ஸ்கிருத கிரந்த கர்த்தர்கள் இச்சாஸ்திரத்தின் அபிவிருத்தி காலத்தில் ஏற்படுத்தி வகுத்திருக்கிற முறைகளைப் படிப்படியாய் அறியவேண்டியது அவசியமானது. ஆனால் எண்ணிறந்த கிரந்தங்கள் இந்தச்சாஸ்திர சம்பந்தமாய் ஏற்பட்டிருந்தன என்றும், இந்நூலின் ஒழுங்கு தக்க முறையுடன் உண்டானது என்றும், இந்து தேசத்தில் தற்காலத்தில் கிடைத்த கிரந்தங்களின் பிரதம பாகத்திற்

கூறியிருப்பதால் தெரியவருகிறது. மேற்சொன்ன பெயர்களையும் கிரந்தங்களையும் தவிர மற்றப்படி அவர்களின் சரித்திரம் சிறிதேனும் தெரியாது. கிரந்த கர்த்தர்களின் பெயர்களில் முக்கியமானவைகள் அடியில் வருமாறு காட்டப்பட்டன:—

சதாசிவன், சிவன், பிரம்ஹா, பரதன், காசியபர், மதங்கன், பார்ஷிங்கன், துர்க்கை, சக்தி, சார்த்தூலன், கோஹலன், விசாகிலன், தந்திலன், கம்பலன், அச்வதரன், வாயு, விசுவாவசு, ரம்பை, அர்ச்சுனன், நாரதன், தும்புரு, ஆஞ்சநேயன் (ஹநுமான்), மாத்ருகுப்தன், வருணன், நந்திகேசுரர், சுவாதிர்க்கணன், தேவராஜன், க்ஷேத்திரஜன், ராஹலன், துர்ஜயபூபாலன், போஜன் என்கிற பூவல்லபன், பரமந்தி, சோமேசன்.

மேற்சொன்னவர்களால் செய்யப்பட்ட கிரந்தங்களைப் பிரவர்த்திப்பித்து அவற்றிற்கு வியாக்கியான முதலானவைகள் செய்து விளக்கினவர்கள்: லோல்லடன், உதபடன், சங்குகன், பத்திராபிநவகுப்தன், கீர்த்திதரன், ஹா ஹா, ஹூ ஹூ, இராவணன், வாணாசுரன் பெண்ணாகிய உஷை, ஆதிசேஷன் முதலானவர்களாம். சார்ங்கதேவனால் செய்யப்பட்ட சங்கீத ரத்னாகரம் என்கிற கிரந்தந்தான் இப்போது சங்கீத சாஸ்திர விசாரஞ்செய்கிற வித்தியார்த்திக்கு மிக முக்கியமானது. இச்சாஸ்திர விஷயமாய் இந்து தேசத்தில் அகப்படும் கிரந்தங்கள் பலவற்றிற்கும் இதுவே ஆதாரமானது. இந்தப் புராதன கிரந்தத்தில்தான் மேற்சொன்ன பெயர்கள் காணப்படுகின்றன. பிற்பட்ட கிரந்தங்கள் எல்லாம் ரத்னாகரத்தைத்தொடர்ந்து

எழுதப்பட்டது அல்லது அதன் சங்கிரகமாயிருக்கின்றனவே யன்றி வேறன்று.

சம்ஸ்கிருத கிரந்த கர்த்தர்கள் எல்லாரும் சங்கீதம் மூன்றுபாகுபாடுடையதென்பதில் ஒரேவித அபிப்பிராயங் கொண்டிருக்கிறார்கள். அவையாவன: 1-வது கீதம் அல்லது வாயினாற்பாடுவது; 2 வது வாத்தியம் அல்லது ஆயுதங்களால் நாதம் எழுப்புவது; 3-வது நிருத்தனம் அல்லது இசைக்குத் தக்கபடி நடனஞ் செய்வது. அவற்றின் தன்மையையும் ஒன்றற்கொன்றுள்ள சார்பையும் யோசித்தே இவ்வரிசைக்கிரமும் ஏற்பட்டதாக இருக்கிறது. இம் மூன்று பாகுபாடுடைய நூல், மார்க்கம் என்றும், தேசி என்றும் இரண்டு முறைப்பாடுள்ளதாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

இதில் 'மார்க்க' முறை பிரதமத்தில் பிரமாவினால் அப்பியசிக்கப்பட்டு பரதனுக்கு உபதேசம் பண்ணப்பட்டது. பிறகு பரதர் தாம் அப்பியசித்ததைக் கந்திருவர்களைக் கொண்டு ருத்திரனுக்கு முன்னே பிரகாசிப்பித்தார். இதுதான் ரிஷிகளாலும் கந்திருவர்களாலும் முதல் முதல் ஏற்பட்டு வரன்முறையாய் ஆரியர்களிடத்தில் வழங்குகிறமுறை. இவ்வாறு 'மார்க்க' முறையின் ஆரம்பமும் சரித்திரமும் சொன்னபடியால் 'தேசி' முறை என்பது இப்படிப்பட்டதென விசாரிக்கப்புகுவது அத்தியாவசியமானதெனத் தோன்றுகிறது. இந்தமுறை நானா தேசங்களிலுள்ள நானா வர்ணத்தாரும் தங்கள் தங்களுக்கு ஏற்றபடி செவிக்கு இனிப்பாய் பலருக்கும் சுகமுண்டாகும்படி ஏற்படுத்திக்கொண்டது. இது இடத்தைப் பொருந்தின தானபடியால் அங்கங்குள்ள ஜனங்களின் நடக்கைக்கும், வழக்கங்க-

ளுக்கும், ஆசாரங்களுக்கும், உல்லாசத்துக்கும், ஒத்து அவரவர்களுக்கு ஏற்றபடி கர்ணானந்தம் விளைவிப்பது. மார்க்கமுறை சமஸ்கிருத கிரந்தங்களில் விவரித்துக் காட்டி யெழுதப்பட்டிருந்தபோதிலும், அப்பியாசமின்மையாலும், ராச்சியாதரணை குன்றினதாலும், மற்றுமுள்ள அனேக மாறுதல்களினாலும், வெகுசாய் வழக்கத்தினின்று நீங்கிவிட்டதென்றே சொல்லவேண்டியதாயிருக்கிறது. இந்து தேசத்தில் தற்காலத்திலே வழங்குகிற முறை தேசியந்தான். மார்க்கமுறை 'நிபத்தம்' என்றும் 'அநிபத்தம்' என்றும் இரண்டு விதமானது. நிபத்தமானது-கீதம், வர்ணம் என்று ஏற்பட்டு, பெரியவர்களாலே குறிக்கப்பட்ட மெட்டுக்கு உட்பட்டுப்பாடுவது. அநிபததமாவது - கீதவர்ணங்களைத்தொடர்ந்து மனத்துக்குச் சுகமானபடி ஏற்படுத்திப் பாடுவது.

தேசிமுறை முதல் முதல் புத்தசமயத்துப் பாடகர்களால் உண்டாக்கப்பட்டு, ஹிந்துஸ்தானி பாஷை பேசும் துருஷ்கர்களால் விசேஷ விருத்திக்குக்கொண்டுவரப்பட்டது. ஹிந்துக்கள் ஏற்படுத்திய துருவபத முறையிலிருந்தெடுத்து துருஷ்கர்கள் 'கியால்' என்று ஒருவிதமும், அதினின்று 'டப்பா' என்னும் விதமும் உண்டாக்கினார்கள். இது தவிர தென் இந்தியாவில் 'கர்னாடகம்' என்று மேற்சொன்னவற்றிற்கு வேறான மற்றொருபாகம் சங்கீத சாஸ்திரத்தில் பிரிவுபட்டிருக்கிறது. ஆலாபனை செய்வதில் ஹிந்துஸ்தானி முறையில் வழக்கத்திலுள்ளவைகள் - துருவபதம், தில்லானா, சுரவர்த்தனம், கியால், டப்பா, தம்பாரி, கஜ்ஜல், ஹோரி, ரிக்தா, தாதிரா, சத்திரநாக், லாவணி என்பவைகள்.

கர்னாடகத்தில் வழங்குகிறவைகள்-பல்லவி, கீர்த்தனை, பதம், தான வர்ணம், சவுக்கவர்ணம், ஜாவளி, கீதை, ராகமாலிகை என்பவையாம்.

நமது தேசத்தில் ஆதிகாலம் முதற்கொண்டே வாத்தியங்களைக்கொண்டு இசை மீட்டுவது வழக்கமாயிருந்தது. யாகஞ் செய்யும் காலங்களில் இரண்டு பிராமணர்கள் வீணையை மீட்ட ஒருவர் வாயினாற் பாடிக்கொண்டு இருந்தாலல்லது பலனில்லை யென்று கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாறு மூன்றுபிராமணர்கள் வாத்தியங்களில் இசை மீட்டிக் கொண்டும், வாயினாற் பாடிக் கொண்டு மிருந்தால்தான் (தர்ம, அர்த்த, காம, மோக்ஷம்) அறம் பொருள் இன்பம் வீடு என்கிற புருஷார்த்தங்களைப் பெறலாமென்றெண்ணப்பட்டிருந்தது. பரமசிவனுக்கு மிகப்பிரியமான வாத்தியம் வீணைதான். நாரதர், சரஸ்வதி, தும்புரு முதலானவர்களும் யாழ் நறை யடுத்து கானம் பண்ணினார்கள். திருமதுரையில் வீற்றிருக்கும் சோமசுந்தரக்கடவுள்செய்த திருவிளையாடல்களுக்குள்ளே விறகுவிற்ற படலத்தில் சிவபெருமான் ஒரு விறகுக்கட்டைத் தூக்கிக்கொண்டுவந்து அதை இறக்கிவிட்டுத் தெருத்திண்ணைமீது அமர்ந்து இளைப்பாறி இன்னிசை தொடுத்துப் பாடினதாயும், ஏமநாதன் என்னும் பெயருள்ள இசைவல்லான் ஒருவன் விறகு விற்பவன் கோலங்கொண்ட சிவபிரானை சுருதி மடுத்துப் பாடும் நீர் யார் என்று கேட்கத் தான் 'பண்டரு விபஞ்சி பாண பத்திர னடிமை' என்று சொல்லவும் பாடின இசையை மற்றொருகால் கேட்கவிரும்புகிறேன் என்று ஏமநாதன் கூற, சுந்தரேசர் பாடினதாயும், அது அனைவருக்கும் கர்ணானந்தத்தையும் நயத்தையும் உண்-

டாக்கிப் பெரும்வியப்பை விளைவித்ததாயும் சொல்லப்பட்டிருக்கிறது.

இனி, தாளம், பரதம் ஆகிய இவ்விரண்டையும் பற்றி ஒருவாறு கூறிமுடிப்பது நலமெனத் தோன்றுகிறது. தாளம் என்பது யானையை அடக்குவதற்கு உபயோகமான இரும்புத்துண்டென்று காத்தியாயனராற் சொல்லப்பட்டிருக்கிறது. பிறகு தாளம் என்பது கையைத் தட்டுவதால் காலத்தை நிர்ணயிக்கிறதென்று பொருள்படும்.

இசையாரம்பமுதல் முடிகிறவரையில் தாளத்துக்கு ஆதார பூதமாயுள்ள மாத்திரையின் ஏற்பாட்டுக்குட்பட்டு சந்தஸ்ஸை யொத்து நடக்கும் அளவுக்கு லயம் என்று பெயர். இது மூன்று விதமானது. அதாவது-விளம்பிதம், மத்தியம், துரிதம். நாலுமாத்திரை என்பது நிர்ணயமாக வைத்துக்கொள்ளப்பட்ட அளவு. அதற்குக் குறைவா யிருப்பதில் லயம் தோன்றாது. காலம், கிரியை, மானம் (நிறுத்துதல்) இவைகலந்து உண்டாகும் செய்கைக்குத்தான் தாளம் என்று சம்ஸ்கிருத சாஸ்திரங்களில் கூறியிருக்கிறது. கீதம், வாத்தியம், நிருத்தம் இவைகளெல்லாம் தாளத்தினாற்றான் குறிக்கப்பட்டிருக்கின்றன.

பரத சாஸ்திரமாவது பிரமாவினால் பாரதரிஷிக்கு முதலில் கற்பிக்கப்பட்டுப் பரமேசுவரன் நிருத்தம்பண்ணுங் காலத்தில் அவர்க்கு எதிரில் தெரிவிக்கப்பட்டது. பிறகு, சிவன், தன் சிஷ்யராகிய நந்திகேசுவரருக்குப் போதித்தார். பரதர் பிறகு நந்திகேசரிடத்திலிருந்து புருஷர்கள் அப்பியசிக்கும் தாண்டவம் என்னும் வித்தையைக் கற்று ரிஷிகளுக்கு உபதேசித்தார்.

ரிஷிகளால் மனிதர்களுக்கு கற்றுக்கொடுக்கப்பட்டது. ருத்திரனால் பார்வதி தேவிக்கு ஸ்திரீகள் அப்பியசிக்கும் பாகம் போதிக்கப்பட்டது. அந்தப் பாகத்திற்கு லாஸ்யம் என்று பெயர். தாண்டவம் என்பது ஆண்மையும் சௌரியமும் உள்ளது. லாஸ்யம் என்பது மிருதுவும் நயமும் உள்ளது. பார்வதி தேவியானவள் வாணாசுரன் பெண்ணாகிய உஷைக்குக் கற்பித்தாள். லாஸ்யமானது உஷையினால் துவாரகாவாசிகளான கோபிகளுக்குப் போதிக்கப்பட்டு அவர்களால் துவாரகைக்கு வெளியிலிருந்தவர்களுக்குக் கற்பிக்கப்பட்டுப் பின்னால் எங்கும் பரவிற்று. இப் பரத சாஸ்திரம் நாட்டியம், நிருத்தம், நிருதம் என்று மூன்று பிரிவினையுடையது. இவைகளின் பேதங்களை விவரித்து அந்தந்த சாஸ்திரங்களிற் கண்டுகொள்ளலாம்.

அறுபத்து மூன்று நாயன்மார்களுக்குள்ளே ஆனாய நாயனார் என்பவர் வேய்ங்குழலைக்கொண்டு வாசித்தபோது சராசரங்கள் யாவும் இயக்கமற்று அவ்வினிய ஓசை யென்னும் தேனையுண்டு தியங்கிய பிரமரங்கள் போல் சலனமற்று நின்றுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. சங்கீதத்துக்கு உருகாதகன்னெஞ்சமுடையான் மானிட இயல்புடையவன் அல்லனென்றும் சகல துர்க்குணங்களுக்கும் அவன் மனம் இலேசாய் இணங்குமென்றும் இங்கிலாந்து தேசத்தின் காளிதாசரென்று பெயர் பெற்ற ஷேக்ஸ்பியர் என்னும் நாடகக்கவி கூறுகின்றனரென்றால் சங்கீதத்தின் பெருமையை இன்னும் என்னென்று வியப்பது!

25. இந்துதேசத்துப் பூர்வீக அரசர்களும் அவர்களுடைய நீதியும்

பூர்வத்திலிருந்த இந்து அரசர்கள் மன்னுயிரைத் தம்முயிர்போலப் பாவித்து மநுநீதி முறை வழுவாமல் செங்கோல் செலுத்திவந்தனர். அவர்கள் தங்கள் குடிகளுக்குவரும் சுகத்துக்காகச் சந்தோஷித்தும், துக்கத்துக்காக மனங்கவன்றும் வாழ்ந்துவந்தார்கள். அவர்கள் புவியை அரசாண்டு பிரஜைகளைப் பரிபாலித்து வருவது பாவகாரியமென்றே துணிவு கொண்டிருந்தனர். ஏனெனில் தம் குடிகளிடத்தே நிகழும் நல்லன தீயன யாவையும் அறிந்து அவற்றிற்குத் தக்கபடி நடத்துவது அசாத்தியமாகையால், புத்தி பூர்வகமாயும் அபுத்தி பூர்வகமாயும் தமக்குப் பாவம் சம்பவிக்கும் என்றும், அதனால் மீளாநரகத்துக்கு ஆளாகவேண்டியிருக்கும் என்றும் அவர்கள் மிகவும் பயந்து, அரசுபுரிவது பலவிதத்திலும் பெருந் துக்கத்துக்கு இடமென்றே நிச்சயித்திருந்தார்கள். ஆகையால்,

'எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில்.'

என்னும் திருக்குறள் வாக்கியத்தின்படி அவ்வரசர்கள் தம் பிரஜைகளிடத்து நிகழ்வன எல்லாவற்றையும் அவர்கள் வாய்மொழியைக்கொண்டே உண்மை கண்டு நீதிசெலுத்துவது கூடாமையென்றுணர்ந்து, நம்பிக்கையுள்ள ஒற்றர்களை விடுத்து அல்லும் பகலும் அங்கங்கு நடக்கும் அந்தரங்க விஷயங்களையும் தெரிந்து, தக்கவாறு நடத்திவந்தார்கள். அவ்வொற்றர்களை நம்பாமல் அவ்வரசர்கள் தாமும் ஒவ்வொருநாள் அர்த்தராத்-

திரியில் மாறுவேடம்பூண்டு தனியேபோய் ஊரில் நிகழ்வனவற்றைக் கண்டறியும்படி நகர்சோதனை செய்துவந்தார்கள். இவ்வாறு பல உபாயங்கள் செய்தும் சில விஷயங்களில் உண்மை யறிவது மிகவும் துர்லபமா யிருந்தபடியால், பாவத்துக்கே பல வழியிலும் இடமாயுள்ள ராஜ்யபாரம் முற்றிலும் வேண்டுவதில்லையென்றே புத்திமான்கள் அரச வாழ்க்கையை வெறுத்துவந்தார்கள். சேரமான் பெருமாள் நாயனார் என்பவர் இளவரசராயிருக்கையில் அவரது தந்தை நெடுநாள் ராஜ்யபரிபாலனஞ் செய்துவந்து பின்னர் தேகவியோகமடைய, மந்திரி முதலாயினோர் இளவரசரை நோக்கி அவ்வரசுரிமையைக் கைக்கொள்ளவேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். அவ்விளவரசர் பாவத்துக்குப் பயந்தவரும், தெய்வபக்தியுள்ளவருமாகையால், பிரஜைகளிடத்தில் நடக்கும் நல்லன தீயன கண்டுணர்ந்து நீதிசெலுத்துவது கூடாமை யென்றும், குடிகள் சொற்சாதுரியத்தால் மெய் பொய்யாகவும் பொய் மெய்யாகவும் விளங்க, அதனால் தனக்குப் பெரும் பாவம்- சித்திக்குமென்றும் பயந்து அவர்கள் வேண்டுகோளுக் கிசையாது மறுத்தனர். பிறகு ஈசுவரன், 'குடிகள் அங்கங்குப் பேசுவனவெல்லாம் நீ இருந்தவிடத்தில் அறியுமாறு உனக்கு அனுக்கிரகஞ்செய்தோம், நீ அரசைக் கைக்கொள்' என்று உறுதிமொழி கூறியபிறகு அச்சேரமான் ராஜ்யத்தைக் கைக்கொள்ளலாயினார். ஆகையால் அவருக்குக் கழறிற்றறிவார் நாயனார் என்னும் பெயர் உலகில் வழங்கிவருகிறது; கழறிற்றறிவார் என்பதற்கு, தன் அரசாட்சிக்குட்பட்ட உயிர்வர்க்கங்கள் அங்கங்கு இரகசியமாய் (கழறிற்று) பேசிக்கொண்-

டன அனைத்தும் அறியும் சக்தி எய்தப்பெற்றவரென்பது பொருள். இவ்வளவுபயந்து அவ்வரசர்கள் அரசுபுரிந்து வந்தமையாலேதான் ஈசுவரனும் அவர்களுக்கு முன்னின்று உதவிசெய்துவந்தார். குடிகளோ அரசனைத் தெய்வமாகப்பாவித்து அவனையன்றித் தங்களுக்கு வேறே புகலிடமில்லையென்றே கருதிவந்தார்கள். 'அனைவோர்க்குந் தெய்வம் இறைமுகப் பைம்பூணிறை.' என்னும் பிரமாணமே இவ்வுண்மையை நாட்டவல்லது. அவ்வரசர்கள் நீதிவழுவாமல் செய்துவந்த அரசும், அது விஷயமாக ஈசுவரன் அவர்களுக்கு முன்னின்று புரிந்த அற்புதமும் அடியில்வரும் சரித்திரங்களால் நன்கு விளங்கும்:—

பூர்வம் மதுராபுரியை அரசாண்டுவந்த பாண்டிய வமிசத்தரசர்களிலொருவன் தன் நாட்டிலுள்ள பிரஜைகளின் சுகதுக்கங்களைத் தன்னவாகப்பாவித்து மநுநீதிமுறை வழுவாமல் ராஜ்யபரிபாலனம் செய்துவந்தனன். அவன் தன் பட்டணத்தில் நடக்கும் சகல சமாசாரங்களையும் ஒற்றர்களால் அறிந்துகொள்வதுமல்லாமல் அவர்களை நம்பாமலே தானும் ஒவ்வோர் நாள் அர்த்தராத்திரியில் மாறுவேடம் பூண்டு ஒருவருக்குந் தெரியாமல் அப்பட்டணத்தில் ஆங்காங்கு நடக்கும் அந்தரங்கமான விஷயங்களை அறியும்பொருட்டு நகர்சோதனை செய்துவந்தான். அவ்வாறு அந்தப் பாண்டியன் செய்து வருகையில் ஒரு நாள் அர்த்தசாமத்தில் அப்பட்டணத்திலுள்ள ஒரு பிராமணன் வீட்டிற்குள்ளுண்டான பேச்சுக்குரல் அவன் செவியிற்புகுந்தது. அவ்விஷயம் யாதென்று பாண்டியன் அவ்வீட்டின் சுவர்க்குச் சமீபத்தில் ஒன்றியிருந்து கேட்டனன். அப்போது அங்கு

நடந்தது என்னையெனின்—அவ்வீட்டுப் பிராமணனுடைய கற்பிற்சிறந்த மனையாளானவள், காசிக்குப்போக உத்தேசித்துச் சர்வபிரயத்தனத்தோடு சித்தமாயிருக்கும் தன் நாயகனை நோக்கி, ‘நாயகரே, தேவரீர் காசி யாத்திரைபோக இருக்கின்றீரே, உம்மையன்றி எனக்கு வேறோர் ஆதரவும் துணையுமில்லையே, நானெங்ஙனம் உம்மைவிட்டுத் தனித் துயிர்வாழ்வேன்? இக்குழந்தைகளை எவ்வாறு பாதுகாப்பேன்?’ என்று மிக்க மனோதுக்கத்துடன்கூற, அந்தணன்-‘பெண்ணே, நீ ஏன் மனக் கவலை யுறுகின்றனை? இப்பட்டணத்திலுள்ள ஜனங்கட்கெல்லாம் பாண்டியனே தாயும் தந்தையுமாகையால், அவன் உனக்கு யாதும் குறைவுவாராமல் காப்பாற்றுவான், நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்’ என்று மனையாட்டிக்கு வேண்டிய சமாதானங்கள் கூறிக் காசிக்குப் போய்விட்டான். பாண்டியன் அங்கு நிகழ்ந்த யாவற்றையும் கேட்டுக்கொண்டு தன் அரண்மனைபோய்ச் சேர்ந்தான். அன்று மறுநாள்முதல் பாண்டியன் அந்தப் பார்ப்பன மாதுக்கு அன்னவஸ்திரம் முதலானவை குறைவறக் கொடுத்து, சம்ரக்ஷணை செய்துவரவேண்டும் என்றும், அவ்வாறு அவள் ஒருத்திக்குமாத்திரம் அவைகளை நடப்பித்துவருவதனால் தன் பட்டணத்திலுள்ளார் யாவருக்கும் தன்னிடத்தில் துர்ப்பாவம் ஜனித்து அதனால் தனக்கு அபகீர்த்தியுண்டாகுமென்றும் அவ்வாறு சம்பவிக்காவண்ணம் அப்பட்டணத்திலுள்ள பிராமணர்களுக்கெல்லாம் அதுபோலவே உபகரித்து வரவேண்டுமென்றும் தனக்குள் தீர்மானித்து அவ்வூர்ப் பிராமணர்கள் யாவருக்கும் ஓரேபடித்தாக அன்னவஸ்திரம் முதலானவற்றை நடத்திக்கொண்டு

வந்தான். மேலும் அந்தப் பாண்டியன் நகர் சோதனைக்குப் புறப்பட்டு வரும்போதெல்லாம் மேற்கூறிய பார்ப்பனக் குலமாதின் வீட்டண்டை தவறாமல் வந்து நின்று சோதித்துக்கொண்டு போவான். இங்ஙனம் நிகழும் காலத்தில், ஒரு நாள் இரவில் பாண்டியன் அவ்வீட்டண்டை சோதனைக்கு வந்தபோது, முன் காசியாத்திரைக்குச் சென்ற அந்தணன் அன்றுதான் திரும்பி வந்து நெடுங்காலமாய் மனைவி மக்களைப் பிரிந்திருந்த ஆராமை மிகுதியால் அர்த்தஜாமமாகியும் நித்திரைவாராமல் இல்லாளுடன் வீட்டுக்குள் பேசிக்கொண்டிருந்தான். அந்தப் பிராமணன் காசியினின்றும் திரும்பி வீடுவந்து சேர்ந்த சங்கதி பாண்டியனுக்குத் தெரியாதாகையால், மனத்தில் ஆசங்கையுற்று, 'இவ்வீட்டில் புருஷர் குரலொலிகேட்கின்றதே, ஈதென்ன அதிசயம், இப்பார்ப்பனமாதின் நாயகன் காசிக்குப் போயிருக்கின்றனனே, நம்முடைய நீதி தவறிப்போய்விட்டதுபோலிருக்கின்றதே, நம்மையே பெருங்காவலாக நம்பிப் பிராமணன் தன் மனையாளை வீட்டில் தனியே விட்டகன்றானே, நாமிதற் கென்செய்வோம்' என்று தீராக்கவலைகொண்டவனாய், 'நல்லது, இதன் உண்மையையறிவோம் என்று' அவசரப்பட்டு அவ்வீட்டுக்கதவைத் தட்டினான். அப்போது பிராமணன், 'அங்கே யார்?' என்று தீரமாய்க் கேட்டதுமல்லாமல், தன் மனையாட்டி மீது அனுமானமுங் கொண்டான். உடனே பாண்டியன், குரலொலியால் முன் காசியாத்திரையின் பொருட்டுச் சென்ற பிராமணனே யென்று ஐயமறத் தெரிந்துகொண்டு மனந்திடுக்கிட்டு, 'நாம் என்னகாரியம் செய்தோம் மோசம்வந்துவிட்டதே, நாம் கதவை இப்பாதிராத்திரி

யில் இடித்ததனால் பிராமணனுக்குத் தன் மனையாளிடத்தில் சந்தேகம் உண்டாகுமே, இப்பெருஞ் சங்கடத்திற்கு நாமல்லவோ காரணமாய் நின்றோம், நாம் தீர யோசித்துச் செய்யாமல் அவசரப்பட்டமையாலன்றோ இப்போது மனக்கிலேசமடையவேண்டி நேரிட்டது?

'எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு.'

என்னும் தெய்வப்புலமைத் திருவள்ளுவர்மொழி நமக்கே அனுபவமானது' என்று சஞ்சலமுற்று, இத்தப்பிதஞ்செய்தற்குக் கருவியாயிருந்தது இக்கையேயாதலால் இதனை இனிவைத்திருத்தல் கூடாது என்று உடனே தன் முன்கையை வாளினால் வெட்டி அவ்விடத்திலேயே எறிந்துவிட்டு, அவ்வீதியிலுள்ள மற்ற வீட்டுக்கதவுகளையும் தட்டிக்கொண்டே தன் அரண்மனைபோய்ச்சேர்ந்தான். மறுநாள் பாண்டியன், இராத்திரி நிகழ்ந்த விஷயங்களை மந்திரி முதலானவர்களுக்குத் தெரிவித்தான். அவர்களால் அந்தப் பிராமணன் தன் மனையாளிடத்திற்கொண்ட சந்தேகந் தீர்ந்து மிகவும் ஒற்றுமையாய் வாழ்ந்திருந்தனன். பிறகு அப்பாண்டியன் பொன்னால் கைசெய்வித்துக்கொண்டான். அன்றுமுதல் அப்பாண்டியனுக்குப் 'பொற்கைப் பாண்டியன்' என்னும் பெயர் வழங்கிவந்தது.

குலோத்துங்க பாண்டியன் தன் குடிகளுக்குத் தன்னாலும் தன் பரிவாரத்தாலும் பகைவராலும் கள்வராலும் பிற உயிர்களாலும் வரத்தக்க ஐந்துவகையான பயத்தையும் நீக்கி, மன்னுயிரைத் தன் இன்னுயிர் போலப்பாவித்து, மநுநீதி முறை வழுவாமல் மதுரா நகரில் அரசியற்றி வரும் நாளில், பாண்டி நாட்டிலுள்ள

திருப்புத்தூர் என்னும் நகரிலிருந்து ஒரு பிராமணன் கைக்குழந்தையோடுங்கூடிய தன் மனைவியை அழைத்துக்கொண்டு மதுராபுரியிலுள்ள தன் மாமன் வீட்டுக்குப் போகும்பொருட்டுப் பிரயாணப்பட்டான். வரும் வழியில் அவன் மனையாள் தாகவிடாய் கொண்டு ஜலம் கேட்டமையால் அவளை அக்காட்டிலுள்ள ஒரு பெரிய ஆலவிருக்ஷ நிழலில் இருத்தி, நீர் தேடிக்கொண்டுவரப் போனான். அப்போது அந்த ஆலமரத்தில் நெடுநாளைக்கு முன்னர் எவனோ வேடுவனால் எய்யப்பட்டு தைத்துக்கொண்டிருந்த ஓர் அம்பானது காற்றால் அலைப்புண்டுவீழ்ந்து அம்மரத்தடியிலிருந்த பிராமண மாதின் வயிற்றில் தைத்துருவ, அவள் உயிர் துறந்தாள். அச்சமயத்தில் ஒருவேடன் அம்பேறிட்ட வில்லையுடையவனாய் வெயிலுக்கு இளைப்பாறும் பொருட்டு அந்த ஆலமரத்தடியில் ஒரு புறத்து வந்து நின்றான். முன்னே தண்ணீர் தேடிக்கொண்டுவரப்போன பிராமணன் திரும்பி வந்து உதிரவெள்ளத்தில் வீழ்ந்து மாண்டு கிடக்கும் தன் பத்தினியைக் கண்ணுற்று, திடுக்கிட்டு, 'ஆ! ஆ! என் இன்னுயிர்க் காதலியே! என் கண்மணியே! கற்பகத்தின் பூங்கொம்பே! மாதரரசே! வனிதாரத்னமே! உனக்கு இவ்வாபத்து எவ்வாறு சம்பவித்தது? நான் இக்கொடுஞ்செயலைக்கண்டு எவ்வண்ணம் மனஞ்சகிப்பேன்?' என்று மத்தினால் அலைப்புண்ட தயிர்போல் கலங்கி மனந்தளர்ந்து, 'ஐயோ! ஐயோ! இப்பெண்பழிக்குக் காரணமயிருந்தவர் யாவர்?' என்று அலறி, நான்கு புறத்திலும் சுற்றிப் பார்க்கையில், வில்லேந்தி அருகில் நிற்கும் வேடனைக் கண்டு, 'இவனே நிரபராதியாகிய என் மனையாட்டியைக்கொன்று பழியேற்றவன்' என்று

தனக்குள் நிச்சயித்து, அவ்வேடனை நோக்கி, 'அடா வேடா, மஹாபாபி, நீயே என் இல்லாளைக் கொலைபுரிந்தனை, அவ்வாறு செய்தும் ஒன்றும் அறியாதவன்போல் நாடகங்காட்டி வாய் பேசாதிருக்கின்றனை, முறையோ! முறையோ!' என வாய்விட்டுக் கூவினான். 'அம்மா! அம்மா!' என்று அலறித் தாய்முகத்தை நோக்கி விம்மி விம்மி யழும் குழந்தையைப் பலகாலும் முத்தமிட்டு, 'தெய்வமே! தெய்வமே! இப்படியும் செய்வாயா?' என்று அவ்வந்தணன் மேன் மேலும் கதறிக் கூவித் துயரக்கடலிலாழ்ந்தனன். பிறகு பால் வேண்டியழும் தன் குழந்தையைச் சுற்றத்தாரிடஞ் சேர்க்கும்படி அவ் வழியே சென்ற சிலரிடத்தில் ஒப்பித்துவிட்டு, இறந்த மனையாளைத் தன் முதுகிலெடுத்துக்கொண்டு, வேடுவனை மடிபிடித்திழுத்துக்கொண்டே பாண்டியன் அரண்மனை வாயிலை அடைந்து பிரேதத்தை எதிரேயிட்டு,

'சோமுறை கோடாக் கொற்றவரேறே முறையேயோ
தாமரை யாள்வாழ் தண்கடி மார்பா முறையேயோ
மாமதி வானோன் வழிவரு மைந்தா முறையேயோ
தீமைசெய் தாய்போற் செங்கைகுறைத்தாய் முறையேயோ.'

என்று பலருங் கேட்கும்படி ஓவென்று அலறி, முறையிட்டு, 'கோல் கோடாமல் அரசு செய்யும் பாண்டியன் இரவில் துயிலுங்காலத்திலும் அவனுடைய ஆக்ஞாசக்கரமானது நீதிவழுவாமல் பிரஜைகளை யெல்லாம் காக்கும் வல்லபமுடையது என்னும் உண்மை என்மட்டில் பொய்த்தது யாது காரணமோ?' என்று கூக்குரலிட்டு அழுதான். அங்கு இருந்த காவலாளர்கள் பாண்டியனிடம்போய், 'மண்டலேசுவரா, ஒரு வேதியன், தன் மனையாளைக் கொலைசெய்தானென்று ஒரு வேடனைக்கொண்டு

வந்து நம் அரண்மனைவாயிலில் கூக்குரலிட்டழுகின்றான்' என்று கூறினர். அதுகேட்ட குலோத்துங்க பாண்டியன் உள்ளம் நடுநடுங்கி, 'நான் செய்யும் அரசு மிகவும் நன்று! நன்று!' என்று சிந்தாகுலனாய் வெளியே வந்து, பிராமணனை நோக்கி, 'உனக்குற்றதுயர் யாது?' என்று வினவினான். அப்போது பிராமணன், பாண்டி வேந்தே, இன்று நான் இந்த என் மனையாளை அழைத்துக்கொண்டு வருகையில் வழியிலே தாகவிடாய்க்கு நீர் கொண்டுவரும்பொருட்டு இவளை ஓர் ஆலமரத்தடியில் நிறுத்திப்போனேன், திரும்பிவருவதற்கு முன் இவ்வேடன் இவளைக்கொன்று பக்கத்தே நின்றிருந்தான் என்று கூறினான். பாண்டியன் வேதியனுடைய வாய்மொழியை உட்கொண்டு வேடனை நோக்கி, 'நீ விளைந்ததை ஒன்றும் ஒளிக்காமல் கூறுக' என்ன, 'ஐயே! எம்மரசே, அடியேன் இன்று இளைப்பாறும் பொருட்டு அந்த ஆலமரத்தின் ஒருபுறம் வந்து நின்றேன், அவ்வளவேயல்லாமல் நான் இம்மாதைக் கொன்றேனல்லேன், கொன்றவர்களையும் பார்த்திலேன்' என்று வேடன் சொன்னான். அங்கிருந்த மந்திரிமுதலானோர் வேடனைநோக்கி, 'அப்படியாயின் இம்மாதின் சரீரத்தில் அம்பேறுண்டவகை எப்படி?' என்று வினவ, 'அம்புந் தைத்து உருவியது மெய்யே, ஆனால் நான் அது விஷயத்தைக்குறித்து ஒன்று மறியேன்' என்று வேடன் கண்ணீர்சோர மொழிந்து நின்றான். 'இப்படிப்பட்ட கொடுங்கொலைபுரிந்த ஒருவன், "செய்தவன்நானல்லேன்" என்று சொல்லாமல், "நானேதான்" என்று ஒப்புக்கொள்வானோ? அங்ஙனஞ் சொல்லானாகையால் இவனை நன்கு தண்டித்தாலன்றி உண்மைவெளிப்படமாட்டாது என்று

மந்திரிகள் யாவரும் ஓரே அபிப்பிராயமாகச் சொன்னார்கள். பாண்டியன், 'அவ்வாறே தண்டித்து உண்மைதேருங்கள்' என, அவர்கள் தண்டஞ்செய்து கேட்டும், அவ் வேடன் முன் சொன்னவண்ணமே சொன்னான். தண்டஞ்செய்வோர் பின்னும் அதிகமாகத் தண்டஞ்செய்து கேட்டும், வேடன் முன் மொழிக்கு மாறுபாடில்லாமலே மொழிந்துவந்தான். பின்பு, பாண்டியன் இலேசமுற்று ஒன்றுந் தோன்றாதவனாய், 'இவ்வேடனோ மிகுதியாகச் செய்யும் தண்டத்துக்கும் அஞ்சாமல் ஓரே மொழி கூறுகின்றான், கொன்ற குறிப்பும் இவன் முகத்தில் தோன்றவில்லை, இந்த மாதைக் கொன்றவன் இவனோ? வேறு பிறரோ? அல்லது யாரேனும் வேடுவர் மிருக வேட்டையாட எய்த அம்பானது குறிப்பில் தப்பி இவள்மீது பாய்ந்ததனால்தான் இவள் இறந்தனளோ? வேறு எவ்வகையோ?' என்று பலபலவாக யோசித்தும் உண்மையறியக் கூடாதவனாய் நீதிநூல் வல்லோரைப் பார்த்து, 'நீங்கள் நூல்களை ஆராய்ந்து இதற்கு ஏதாவது ஒரு சூழ்ச்சி சொல்லுங்கள்' என்று கூறினான். அவ்வாறே அவர்கள் பல நூல்களையும் தீர ஆராய்ந்து பார்த்து, 'அரசர் பெருமானே, இது நூல்களால் ஆய்ந்து அறியத்தக்கதன்று, தெய்வத்தாலேதான் தெளியவேண்டும், வேறு உபாயம் ஏதும் இல்லை' என்று சொன்னார்கள். அப்போது பாண்டியன் பிராமணனைப் பார்த்து, 'நான் இதைத் தீர ஆராய்ந்து உன் மனக்கவலையை ஒழிக்கின்றேன், நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம், உன் மனையாளுக்கு ஈமக்கடன்களை முடித்து வருக' என்று அவனை அனுப்பிவிட்டு, வேடனைச் சிறையில் அடைத்துத் தங்கள் குடிக்குக் குலதெய்வமாகிய

சொக்கலிங்கப் பெருமான் ஆலயத்தை யடைந்து வணங்கி, 'சர்வக்ஞனாகிய எம்பெருமானே, எம்மரபு தலையப் பாண்டியனாய் வந்து ஆதியில் அரசுபுரிந்த கருணா நிதியே, இவ்வேடுவனோ பிராமணமாதைக் கொன்றானோ? அல்லது பிறர்தாம் வதைசெய்தார்களோ? சாட்சிகளில்லையென்று வழக்கைத் தள்ளிவிடுவது ஒரு பெருங் காரியமன்றே? உண்மையைக் கண்டறிவதன்றோ அரசனுடைய கடமை? இது எவ்வகையாலும் தெளிதற்குக்கூடாமையாயிருக்கின்றது, தேவரீர் திருவுளத்தில் கருணைகூர்ந்து என் மனக்கவலையை ஒழித்தருளல் வேண்டும்' என்னும் பொருள்படும்படி,

'மன்றாடு மணியேயிம் மறவன்றான் பார்ப்பனியைக்
கொன்றானோ பிறர்பிறிதாற் கொன்றதோ இதுவறநூல்
ஒன்றாலும் அளப்பரிதாக் கிடந்ததால் உன்னருளால்
என்றாழ்வு கெடத்தேற்றாய்.....................'

என்று பிரார்த்தித்தகாலையில், சொக்கலிங்கப்பெருமான், 'அன்பனே, இம்மதுரா நகரத்துக்குப் புறத்திலுள்ள வணிகவீதியிலே ஒரு கலியாணம் நடக்கப்போகின்றது, அங்கு நீ மனைவியிழந்த பிராமணனோடு வருவாயானால் உன்மனத்திலுள்ள ஐயத்தை நிவர்த்தி செய்கின்றோம்' என்று அசரீரியாகச்சொல்லியருளினார். பாண்டியன் அந்தத் திருவாக்கைக்கேட்டு மனமகிழ்ந்து அரண்மனையடைந்து, மனைவிக்கு ஈமக்கடன் முடித்து வந்த அந்தணனை யழைத்துக்கொண்டு, மாறுவேடம் பூண்டு, இரவில் புறப்பட்டு அந்தக் கலியாண வீட்டுக்குப்போய் ஒரு புறம் இருந்தான். அந்த மணமகனுக்கு அளவிட்ட வாழ்நாள் முடிந்தமையால், அவனுயிரைக் கவர்ந்துவரும்படி காலன் அனுப்பிய தூதரிரு-

வரில் ஒருவன் மற்றவனை நோக்கி, 'தோழனே, இன்று இம்மணமகன் ஆவியைக் கொண்டுவரும்படி நம்மிறைவனாகிய யமதருமன் நம்மை அனுப்பினானே, இவன் சரீரத்தில் பிணியொன்று மில்லாதிருக்க, நிஷ்காரணமாய் இவனுடைய உயிரைக்கொள்வது எவ்வாறு?' என, மற்றொருவன், 'நண்பனே, ஈதோர் பெருங்காரியமா! ஆலமரத்தில் நெடுநாள் முன்னர் ஏறுண்டிருந்த கணையைக் காற்றால் வீழ்த்தி எவ்வாறு சுகசரீரியாயிருந்த பிராமண மாதின் உயிரை யாம் கவர்ந்தேமோ அதுபோல், நாளைக்கு உண்டாகும் கலியாணவாத்திய ஆரவாரத்தால் இங்கு கட்டியிருக்கின்ற பசு கயிற்றை அறுத்துக்கொண்டு வெருண்டு இம்மணமகனைப் பாயும்படி அதை விடுத்து அப்போது இவனுயிரைக் கவர்வோம்' என்று, ஜகதீசன் அருளால் பாண்டியனும் பிராமணனுமாகிய இருவர்மாத்திரம் கேட்கும்படி [illegible]னான். அதைக்கேட்ட யமதூதன், 'ஆம், அப்படியே செய்யலாம்' என்று சம்மதித்தான். அவ்விரண்டு காலதூதரும் வசனித்துக் கொண்டிருந்ததைக் கேட்ட பாண்டியன், 'பிராமணனே, இப்போது இங்கு நடந்த சம்பாஷணையைக் கேட்டனையோ?' என, வேதியன் இம்மணமகன் அவ்வாறேயிறந்தால் என்மனையாள் இறந்ததும் மெய்யேயாம், இதனைப்பார்ப்போம்' என்று கூறி, பாண்டியனோடு அங்கிருந்தனன். மறுநாள் காலையில் அவ்வீட்டில் மணமகன், சுற்றத்தார் முதலியயாவரும் திரண்டுவந்து கலியாணச்சடங்கு தொடங்குகையில், கொட்டிய பலவாத்திய முழக்கத்தால் அங்கிருந்த பசு வெருண்டு, கட்டியிருந்த தாம்பை அறுத்துக்கொண்டு விரைந்தோடி, மாப்பிள்ளையை முட்டியதால், அவன் உயிர் நீங்கினான். உடனே,

'மணமகனே பிணமகனாய் மணப்பறையே பிணப்பறையாய்
யணியிழையார் வாழ்த்தொலிபோ யழுகையொலி யாய்க்கழிய'

அந்தணன் கண்டு, 'ஐயோ, என் மனைவியிறந்தது அவ்வளவாக எனக்குத் துயரத்தை உண்டாக்கவில்லையே! இந்த மணமகன் உயிர்மாய்ந்தது எனக்கு அதிக துன்பத்தை உண்டாக்குகின்றதே! அந்தோ தெய்வமே!' என்று சொல்லித் தன் மனைவியின் மரணத்தாலுண்டான துக்கத்திலும் அதிக துயரெய்தினன். பாண்டியன் அவனை அழைத்துக்கொண்டு தன் அரண்மனை போய்ச் சேர்ந்து, மந்திரி முதலாயினோர்க்கு இச் சங்கதிகளைத் தெரிவித்து, வேதியனை வேறோர் விவாகம் செய்துகொள்ளும்படி வேண்டியபொருள் அளித்து அனுப்பிவிடச், சிறையில் அடைத்த வேடனைக் கால்விலங்கு நீக்கி, 'நான் தெரியாமல் செய்த கொடுந் தண்டத்தை மன்னிக்க' என்று அவனிடத்து அன்பு பாராட்டி அவனுக்கு வேண்டிய பொருள்தந்து, அவனை அவனிருப்பிடம் போகச் செலுத்தினன்.

சாக்ஷிகளில்லா இத்தகைய வழக்கைத் தெய்வபலத்தாலன்றி, வாதிபிரதிவாதிகள் வாய்மொழியைக்கொண்டாவது வேறு எவ்வகைப்பிரமாணங்களாலாவது அறிதல் சிற்றறிவுடைய மானிடர்க்கு முக்காலத்தும் அசாத்தியமாம். இந்துதேசத்துப் பூர்வீக அரசர்கள் தெய்வத்தையே பெருந்துணையாக நம்பி, நீதிவழுவாமல் அரசுசெய்து வந்தமையால் தெய்வமும் அவர்களுக்கு முன்னின்று அப்போதைக்கப்போது துணைசெய்து வந்தது.

சோழமண்டலத்திலே சூரிய வம்சத்தரசர்களுக்கு உரிய இராஜதானிகள் ஐந்தனுள் ஒன்றாகிய திருவா-

ரூரில் இருந்து அரசியற்றிய சோழராஜாக்களுக்குள்ளே மநுநீதிகண்டசோழர் என்பவர் ஒருவரிருந்தார். அவர் மன்னுயிரைத் தன்னுயிர்போல் பாவித்து, செங்கோல் நடாத்தி அரசியற்றிவரும் நாளில், அவர் செய்த புண்ணிய மிகுதியினாலே அவருக்கு ஒரு நல்ல புத்திரன் பிறந்தான். அவன் பல கலைகளையும் கசடறக் கற்று வல்லவனாகி அறிவொழுக்கங்களிற் சிறந்து, இளவரசு ஆவதற்குத் தக்க பருவத்தை யுடையவனாய் வாழு நாளில் ஒரு நாள் இராஜமாளிகையினின்றும் புறப்பட்டு அரசிளங்குமரரும் சேனைகளும் சூழ்ந்துவரத் தேரில் ஏறி வீதியிற் சென்றான். அவ்வாறு செல்லும் பொழுது, வீதியிலே ஒரு பசுக்கன்று துள்ளிக்கொண்டு போய் அந்தத் தேர்ச்சகடத்தின் அடியில் அகப்பட்டு இறந்தது. அதுகண்ட தாய்ப்பசுவோடிவந்து, அலறி, உடல் நடுங்கிச் சோர்ந்து கீழேவிழுந்து புரண்டு பெருங் கூச்சலிட்டது. சோழபுத்திரன் அதுகண்டு, 'ஓ! ஓ! அபாயம் வந்துவிட்டதே!' என்றுமனந்தடுமாறி, பெருந்துயரில் மூழ்கி, அறிவழிந்து தேரினின்றும் கீழே அடியற்ற பனைபோல் வீழ்ந்தான். அலறுகின்ற தாய்ப்பசுவைப் பார்த்து உயிர் பதைத்துச் சோர்ந்தான். இறந்து கிடக்கின்ற இளங்கன்றைப் பார்த்து பெருமூச்சுவிட்டு இரங்கினான். 'நான் பிறந்தது என்னுடைய தந்தையாருக்கு இப்பெரும்பழி தேடிவைப்பதற்கோ!' என்று கலுழ்ந்தான். 'பிறந்த குலத்துக்குப் பெரும்புகழ் சம்பாதித்து வைப்பதற்குப் பிரதியாக, நான், என்றும் அழியா அபகீர்த்தி தேடிவைத்தேனே!' என்றான்.

'எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.'

என்னும் முதியோர் வாக்குக்கு மாறாக நடந்து பெரும் பாவத்துக்குள்ளானேனே!' என்றான். மகன் தந்தைக்குச் செய்யும் உபகாரமாவது, 'இவனைப் பெறுதற்கு இவன் தந்தை யாது தவஞ்செய்தானோ' என்று உலகத்தார் கொண்டாடும்படி நடந்து கொள்ளுவதன்றோ? இவ்வாறு பலபலவாக யோசித்து மனந்தளர்ந்து 'இனிச் சிந்தித்து நைவதில் யாதும்பயனில்லை, அபுத்தி பூர்வகமாகச் செய்த இப்பாவத்திற்குப் பிராயச்சித்தம் ஏதேனும் உளதாயின் என் தந்தையார் அறியுமுன்னமே பிராமணர் விதிக்கும் பிரகாரஞ் செய்து கொள்ளல் வேண்டும்' என்று தீர்மானித்துப் பிராமணரிடத்தே சென்றான். தன் கன்றையிழந்த தாய்ப்பசு அத்துயரத்தைச் சகிக்கமாட்டாது கண்ணீர் ஒழுகச்சென்று ராஜ மாளிகை வாயிலிற் கட்டியிருக்கும் ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் அடித்தது. அதுகேட்ட மநுநீதிகண்ட சோழர் திடுக்கிட்டு சிங்காசனத்தினின்றும் இறங்கி விரைந்துவந்து கடைவாயிலை யடைய, வாயிற் காவலாளர்கள் எதிர்வந்து வணங்கி, 'மஹாராஜாவே, இங்கே ஒருபசுவந்து ஆராய்ச்சிமணியைத் தன் கொம்பினால் அடித்தது' என்று விண்ணப்பம் செய்தார்கள். மநுநீதிகண்டசோழர் அதுகேட்டு வருந்தி யலறுகின்ற பசுவைப்பார்த்து, 'இதற்கு யாது இடையூறு சம்பவித்தது! என்று மந்திரிகளைக் கோபித்துப்பார்க்க, அம்மந்திரிகளுள் ஒருவன் வணங்கிநின்று, 'பூமண்டலேசுவரா,! உம்முடைய புத்திரன் தேர்மேலேறி வீதியிற் போம்பொழுது ஒரு பசுக்கன்று துள்ளி யோடிவந்து அத்தேர்க்காலில் அகப்பட்டிறந்தது, அதன் தாயாகிய இப்பசு இங்குவந்து ஆராய்ச்சி மணியை அடித்தது

என்று விண்ணப்பஞ் செய்தான். அதுகேட்ட மநுநீதி கண்டசோழர் பெருந்துயரங்கொண்டு இரங்கி ஏங்கி, கன்றையிழந்த தாய்ப்பசுவின் முகத்தைப்பார்த்து உள்ளம் பதைத்து, 'என் செங்கோன் முறைமை நன்று! நன்று!' என்றார். 'இது யாது செய்தாற்றீரும்!' என்றார்.

'ஆடுங் கடைமணி நாவசை யாம லகிலமெல்லாம்
நீடுங் குடையைத் தரித்தபிரான்.'

என்று உலகத்தோர் போற்றும்படி இதுவரையில் அரசு செய்துவந்த எனக்கு இன்று ஒரு பிள்ளையால் அபகீர்த்திவந்து சம்பவித்ததே! என்று மனந்தளர்ந்தார்.

'அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.'

என்னும் சான்றோர் வாக்கின்படி, 'அரசன் நீதிவழுவாமல் முறைசெய்யாதபடியால், குடிகள் துன்பப்பட்டு அதனைப் பொறுக்கமாட்டாமல் அழுதகண்ணீர் அரசன் செல்வத்தைத் தேய்க்கும் படையாயிற்றே!' என்றார். இவ்வாறு துக்கக்கடலில் மூழ்கி ஒன்றுந் தோன்றாமல் தியக்கமடைந் திருக்கும் சோழமஹாராஜாவை மந்திரிகள் நோக்கி, 'எம்மரசே, மனந்தளர்ந்து ஏக்கமுறுவது இதற்குப் பரிகாரமாகாது, கோவதைக்குத் தரும நூல்களில் விதிக்கப்பட்ட பிராயச்சித்தத்தை உம்முடைய புத்திரனைக்கொண்டு செய்விப்பதே தருமம்' என்றார்கள். அதற்கு மநுநீதிகண்டசோழர், 'நீங்கள் கூறும் பிராயச்சித்தம் கன்றை யிழந்தலறும் இப்பசுவின் துக்க நோய்க்கு மருந்தாகுமா! நான் ஏகபுத்திரனை இழக்கின்றேன்' என்று கருதி, 'நீங்கள் எல்லோரும் சொல்லிய இவ்வார்த்தைக்கு நான் இசைந்தேனாயின் நடுவுநிலைமை தவறாதா! உயிர்களுக்குத் தன்னாலும், தன் பரிவாரத்தாலும், பகைவராலும், கள்வராலும் ஏனைய உயிர்களா-

லும் வரத்தக்க ஐந்து பயத்தையும் நீக்கி அவைகளைக் காப்பவனன்றோ அரசனெனப்படுவான்? நான் என் புத்திரன்செய்த பாவத்தின்பொருட்டுப் பிராயச்சித்தஞ் செய்வதற்கு உடன்பட்டுப் பிறனொருவன் செய்தபாவத்திற்கு அவனைக்கொல்வேனாயின், பூர்வம் மநுவினால் செய்யப்பட்ட தருமநூல்விதி என்னால் கடக்கப்பட்டதென்னும் பழிமொழி உலகில் என்றும் நிலைபெறாதா?' என்றார். அப்போது, மந்திரிகள் சித்தங்கலங்கி, 'மஹாராஜாவே, இவ்வுலகில் இதுபோல் முன்னும் நடந்திருக்கின்றதே, இக் குற்றத்தின்பொருட்டு உம்முடைய புத்திரனைக் கொல்லுதல் முறையன்று, தருமநூலில் விதிக்கப்பட்ட பிராயச்சித்தஞ் செய்வதே பண்டுதொட்டு மேலோர் வழங்கிய கொள்கை' என்றார்கள்' அதற்கு மநுநீதிகண்டசோழர், 'நீங்கள் தரும நெறியின் உண்மையைச் சிறிதும் சிந்தியாது பேசுகின்றீர்கள். எந்தக் காலத்திலே எந்தப் பசு கன்றை யிழந்த துயரத்தினால் வந்து ஆராய்ச்சி மணியை அடித்தது சொல்லுங்கள்; ஆதலால், என் புத்திரனைக் கொல்வதே துணிபொருள்' என்று சிந்தியுங்கள், நான் இப்பசுவின் துயரத்தை நீக்க வல்லவனல்லேன்; ஆகையால், இப்பசு தன் கன்றை யிழந்து துயருறுதல்போல், நானும் என் புத்திரனை இழந்து துக்கப்படுதலே நீதி' என்று கூறி, எவ்விடத்தும் எக்காலத்தும் யாவராலும் செய்தற்கரிய செய்கையைச் செய்யத்துணிந்தார். உடனே மந்திரிகள் அஞ்சி அவ்விடத்தினின்றும் நீங்கினார்கள். பின்னர் மநுநீதிகண்டசோழர் தம்முடைய புதல்வனை அங்கு வரவழைத்து, ஒரு மந்திரியைப் பார்த்து, 'நீ இந்தப் பிள்ளையை வீதியிலேகிடத்தி மேலே தேரைச்

செலுத்தக் கடவாய்' என்று கட்டளையிட்டார். அந்த மந்திரிபோய் அவ்வாறு செய்ய மனஞ்சகியாமல் தன் உயிரை விடுத்தான். அதனை உணர்ந்து மநுநீதிகண்ட சோழர் தம்முடைய அருமைப் புத்திரனைத் தாமே கொண்டு வீதியிற்சென்று, தம் குலத்துக்கு ஒருபுத்திரனே இருக்கின்றான் என்பதைச் சிந்தியாது, தரும வழி நடத்தலொன்றையே உறுதியாகக்கொண்டு, அவனைக் கீழேகிடத்தி, அவன் மார்பிலே தேருருளை அழுந்தும்படி நடத்தினார். சோழர்செய்த இச்செயற்கருஞ் செய்கையைக் கண்டு அங்கு சூழ்ந்திருந்த மனிதர்யாவரும் மனம் சகியாதவர்களாய்க் கண்மாரி பொழிந்தார்கள். அப்போது சர்வஜீவ தயாபரராகிய கடவுள் அங்கு எழுந்தருளிவந்து முன்னின்றார். சோழர் அவரைத் தரிசித்து, 'சர்வலோகநாதனே! சர்வாந்திரியாமியே! சகல கல்யாணகுணபரனே! அன்பர்கள் வைப்பே! அருட்பெருங்கடலே! ஆனந்தப் பொருளே!' என்று மனமுருகித் துதித்து வணங்கிப் பேரானந்தப் பெருங்கடலில் மூழ்கிப் பரவசப்பட்டு நின்றார். அப்பொழுதே பசுக் கன்றும் இராஜ குமாரனும் மந்திரியும் உயிர்பெற்றெழுந்தனர். அதுகண்ட சோழர் அற்புதமடைந்து தாம் இத்தன்மையினரென்று அறியாதவராயினார். அவர் தமது பாதத்தில் வந்து வணங்கிய புத்திரனைத் தழுவி மனமகிழ்ந்தார். பசு தன் கன்றைக் கண்டு அடங்காப் பெருமகிழ்ச்சிகொண்டு உடல் பூரித்துத் தன் கன்று உண்ணும்படிக்குப் பாலைச் சுரந்து துயர் நீங்கிற்று. அங்கெழுந்து காட்சிதந்த ஜகதீசன் மநுநீதிகண்ட சோழருக்கு மேற்கண்டபடி கிருபைசெய்து மறைந்தருளினார்.

'யார்க்கு முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ' ஆகவே, முற்காலத்தில், இந்துதேசத்து அரசர்கள் எவ்வகைப்பட்டஉயிர்களையும் ஒருபடித்தாய் மதித்து வந்தனரேயன்றி உயர்வு தாழ்வு பாராட்டி வந்திலரென்றும் சுயப்பிரயோசனத்தை எவ்வளவும் கருதிலரென்றும், குடிகள் அவ்வரசர்களைத் தெய்வமாகப் பாவித்துவந்தார்களென்றும், அவ்வரசர்கள் நீதிசெலுத்துகையில் அவர்களுக்குப் பூரணமாய்த் தெய்வானுகூலம் இருந்ததென்றும் தெளிவாய் விளங்குகின்றது.

---

26. லிபியின் பூர்வ உற்பவமும் அதன் அபிவிருத்தியும்

உலகத்தில் மானிடர் தத்தம் கருத்தைப் பிறரறிய வெளியிடுவதற்கு ஆதியில் அவர்களுடைய அவயவக் குறிகளே முக்கியமான கருவியாயிருந்தன. பிறகு நாளாவர்த்தியில் பாஷை உண்டாயிற்று. இது சப்தஸ்வரூபமாகமாத்திரம் நெடுங்காலம் வரையில் நடைபெற்று வந்தது. ஆனால், இது சமீபத்திலுள்ளார்க்கு மாத்திரம் பயன்படத் தக்கதேயன்றித் தூரத்திலுள்ளவர்களுக்குப் பயன்படத்தக்கதன்று. அன்றியும் நிகழ்காலத்தவர்க்கு மாத்திரம் அதனால் பயனுண்டாகுமேயன்றி எதிர் காலத்தவர்க்கு அது எவ்வளவும் பயன்தாராது. நிகழ்காலத்தவரும் ஒருவிஷயத்தைச் சப்தஸ்வரூபமாயுள்ள பாஷைமூலமாய்ப் பிறருக்கெடுத்துச் சொன்னாலும் பிறரிடத்தில் தாம் கேட்டாலும் அது தமக்குள்ள ஞாபகசக்திக் குறைவினால் மறந்துபோகக்கூடும். இத்தி-

யாதி பிரதிகூலங்களை யோசித்து ஆதியில் மனிதர்கள் தம் கருத்தை எழுதிவைப்பதற்காகப் பற்பல உபாயங்களைத் தேடினார்கள். அவற்றை முறையே எடுத்துக் காட்டுவோம்:

சொற்களுண்டாவதற்கு இன்றியமையாதனவாகிய அசைகள் ஒலிப்பதற்கு அத்தியாவசிகமாயுள்ளவைகள் லிபிகளாகிய எழுத்துக்களேயாம். அந்த லிபிகள் உண்டாவதற்கு முன்னே படங்களில் சித்திரமெழுதியும் சிலைகளில் உருவங்கள் செதுக்கியும் ஜனங்கள் தத்தம் கருத்தை வெளியிட்டுவந்தார்கள். ஒருவன் மற்றொருவனை ஈட்டியினால் கொன்றான் என்னும் கருத்தை வெளியிட வேண்டுமானால் கீழே ஒருவன் படுத்துக்கொண்டு அவன் உதிரம் நாற்புறமும் பரவும்படி கிடப்பது போலவும், மற்றொருவன் கையில் ஈட்டியை வைத்துக்கொண்டு குத்துவதுபோலவும் எழுதியாவது உருவத்தைச் செதுக்கியாவது காட்டுவது வழக்கம். பெரும்பாலும் இப்படிப்பட்ட சித்திரங்களும் உருவக்காட்சிகளும் மனிதருடைய புறத்துறுப்பைப்பற்றிய செய்கைகளைக் காட்டுவதற்காக மாத்திரம் உபயோகமாகிவந்தனவேயன்றி மனத்தில் நிகழ்வதாகிய கோபம், பொறுமை, துக்கம், சந்தோஷம், அகங்காரம், தைரியம், பயம் முதலிய தோற்றங்களைக்காட்டுவதற்கு அனுகூலமானவைகளா யில்லை. ஆகவே ஜனங்கள் இப்படிப்பட்ட மனத்தோற்றங்களையும் மேற்படி சித்திரங்கள், உருவங்கள் மூலமாகத் தெரிவிக்க எண்ணி, மிகவும் வருந்திப் பாடுபட்டு வந்தபடியால், சித்திர வேலையிலும் கல், மரம் முதலியவற்றில் உருவங்களைச் செதுக்குவதைப்பற்றிய வேலைகளிலும் பாண்டித்தியம்

அடையப்பெற்றார்கள். ஆகையால் லிபி அல்லது எழுத்துக்கள் உண்டாயிராத காரணத்தினாலேயே ஆதியில் சித்திரவேலைகளும் உருவம் செதுக்கு வேலைகளும் அபிவிருத்தியாயின என்று சொல்லலாம். இந்த வேலைகளில் பூர்வகாலத்திலே ஜனங்களுக்கிருந்த சிரத்தை இப்போது கிடையாது; ஏனெனில் அவ்வேலைகளில் இப்போது பயில்வது அவர்களுக்கு அவசியமாகத் தோன்றவில்லை. எழுத்துக்கள் ஏற்பட்டிருக்கிறபடியால் அவற்றைக் கொண்டு அசைகளையும் சொற்களையும் உண்டாக்கி அதிசீக்கிரத்தில் வெகு சுலபமாய் ஜனங்கள் தம்முடைய சகல கருத்துக்களையும் இப்போது வெளியிடக்கூடியவர்களாயிருப்பதே அதற்குக் காரணம்.

ஆதியில் சிலர் சித்திர வேலைகளிலும் உருவம் செதுக்கும்வேலைகளிலும் பயின்றுவர மற்றும் சிலர் குழூஉக் குறிகளாகச் சில அடையாளங்களை ஏற்படுத்திக்கொண்டு அவற்றின் மூலமாகத் தங்கள் கருத்தை வெளியிட்டுவந்தார்கள். உலகத்திலுள்ள சகல திரிசியப்பொருள்களையும் நாம் அறிவதற்குக் கண் கருவியாயிருப்பதுபோல் சூட்சுமப் பொருள்களாயுள்ள யாவற்றையும் அறிவதற்கு விவேகமே கருவியாயிருக்கிறபடியால் கண்ணின் உருவத்தை விவேகத்துக்கும், இன்ன தருணத்தில் ஆரம்பித்தது இன்ன தருணத்தில் முடியப்போகிறது என்று வரையறை ஏற்படுத்த முடியாதபடியால் விருத்தாகாரத்தைக் காலத்துக்கும், இதைப்போலே பிறவற்றை மற்றவைகளுக்கும் தீர்க்க ஆலோசனை செய்து ஜனங்கள் சங்கேதச் சின்னங்களாக வழங்கிவந்தார்கள். இப்படிப்பட்ட பரிபாஷையை

உண்டாக்கி வழங்கிவந்தவர்கள் முக்கியமாய் ஈஜிப்ட் தேசத்தவர்கள். விலங்கு, புள், ஊர்வன முதலிய பிராணிகளின் குணாகுணங்களைக் கண்டறிந்து அவற்றின் உருவங்களை மனிதருடைய குணாகுணங்களைக் காட்டுவதற்கு ஈஜிப்ட் தேசத்தவர்கள் அறிகுறிகளாக உபயோகித்துவந்தார்கள். நன்றியின்மைக்கு விரியன் பாம்பின் உருவத்தையும், விவேகமின்மைக்கு ஈயின் உருவத்தையும், விவேகத்துக்கு எறும்பின் உருவத்தையும், விடாமுயற்சிக்குத் தேனீயின் உருவத்தையும், ஜெயத்துக்குக் கருடனையும், இதேமாதிரி மற்றக் குணாகுணங்களுக்கு மற்றப் பிராணிகளின் உருவங்களையும் அறிகுறிகளாக வழங்கிவந்தார்கள். சில சந்தர்ப்பங்களில் மேற்கண்ட பிராணிகளுக்குள் இரண்டு அல்லது பலவற்றின் அவயவங்களை ஒன்றாகக் கலந்து ஓர் உருவம் அமைத்து, அதை ஒரு விஷயத்துக்கு அறிகுறியாக வழங்கிவந்தார்கள். கருடனுடைய தலையையும், பாம்பினுடைய உடலையும் ஒன்றாகச்சேர்த்து ஓர் உருவமாக எழுதி அதைக் கடவுளுக்கும் அவருக்கு ஐக்கியப்பட்டுள்ள இப்பிரபஞ்சத்துக்கும் அறிகுறியாக வழங்கிவந்தார்கள். இப்படிப்பட்டசின்னங்கள் அவற்றை ஏற்படுத்தின ஈஜிப்ட் தேசத்துக் குருக்கள்மாருடைய மனோவிகற்பத்திற் கேற்றபடி அமைந்துவந்தன. அப்படிப்பட்ட சின்னங்களை அந்தக் குருக்கள்மார்கள் பிறருக்குத் தெரிவித்தாலன்றி மற்றப்படி அவற்றைச் சாதாரண ஜனங்கள் அறிந்துகொள்வதற்கு இடமில்லாமற் போயிற்று. அன்றியும் அவைகள் இரண்டு மூன்று அல்லது பல அர்த்தபேதம் கொள்ளுவதற்கு இடமாயுமிருந்தன. ஆகவே நூறுவருஷத்துக்கு முன் ஒருவர்

எழுதிப்போன ஒரு சிறு கருத்தை அறிவதற்கு நூறு லட்சஜனங்கள் ஒன்றாகக்கூடி அவரவர்களுக்கு ஏற்றபடி அர்த்தம்பண்ணி ஒருவரோடொருவர்சண்டையிட்டு அல்லற்பட வேண்டியதாயிருந்தது. பரிதாபம்! இங்கிலாந்தில் இப்போதுள்ள பார்லமெண்ட் என்னும் மகா மந்திராலோசனை சபையிலுள்ள ஒருவர்செய்த உபந்நியாசமானது அச்சபை கலைந்து அவர் வீதியில் வருவதற்குமுன்னே உலகமெங்கும் பரவும் விசித்திரத்தை யுடைய இக்காலத்துக்கும், லிபிகளே ஏற்படாமல் பற்பல குழூஉக்குறிகளை வைத்துக்கொண்டு மானிடர் அல்லற்பட்ட அக்காலத்துக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது!

பொருள்களின் குணகுணங்களுக்கு ஏற்றவாறு குழூஉக் குறிகளாகச் சில சின்னங்களை உபயோகித்து வந்த பின்னர், ஜனங்கள், உலகத்திலுள்ள பதார்த்தங்களுக்கும், மனிதனுடைய மனத்திலெழுகின்ற தோற்றங்களுக்கும், அவனுடைய செய்கைகள் முதலியவற்றிற்கும் அச்சின்னங்கள் போதாமையா யிருப்பதைக் கண்டு தங்களுக்குத் தோன்றியவாறு பற்பல குறிகளை யாதொரு சங்கேதமுமில்லாமலே சிலகாலம் உபயோகித்து வந்தார்கள். இதைப் பெருவியா தேசத்தவர்கள் பெரும்பாலும் அப்பியசித்துவந்தனர். சிறுசிறு அட்டைகள்பலவற்றைச் செய்து, அவற்றிற்குப் பற்பல வர்ணபேதத்தையமைத்து, அவற்றில் சிறிதும் பெரிதுமாக நானாவிதக் குறிகளைப் பலவாறாக எழுதி, ஜனங்கள் அவற்றின் மூலமாகச் சங்கேதமாய்த் தங்களுடைய கருத்தைப் பிறருக்கு வெளியிட்டுவந்தார்கள். முன்னே எடுத்துக் காட்டிய பல வகைகளிலும் இது அதிக

கலவரத்தை யுண்டாக்கத் தக்கதாயிருந்தது. ஆயினும், 'சப்பாணிக்கு முடவன் சண்டப்பிரசண்டன்.' என்பது போல் கருத்தைப் பிறருக்கு வெளியிட வேறு எவ்வித வகையும் இல்லாத காலத்து இது மிக்கதோர் சகாயமாகத்தானிருந்தது. நாளைக்கும் சைனாதேசத்தவர்கள் உபயோகித்துவரும் எழுத்துக்கள் யாவும் அளவிறந்த கருத்துக்களை வெளியிடுவதற்கான சங்கேதக்குறிகளாகவே இருக்கின்றன. சைனாதேசத்தவர்களுக்கு நெடுங்கணக்கு கிடையவே கிடையாது; எனவே, அவர்களுடைய பாஷை நடைபெறுவதற்கு மூல அட்சரங்களாகிய உயிரெழுத்துக்களாகிலும் மெய்யெழுத்துக்களாகிலும் கிடையவே கிடையா. ஆனால், அவர்கள் எழுத்து என்று வழங்கிவருகின்ற ஒவ்வொரு குறியும் ஏதோ ஒரு அபிப்பிராயம் அல்லது ஒரு பதார்த்தத்துக்கு அடையாளமாக இருக்கின்றது. சைனாதேசத்தவர்களுடைய பாஷையை ஒருவன் கற்று அதில் வசனிக்கவேண்டியதாகவாகிலும் அதை வசனிக்கிறவர்களுடைய கருத்தை அறிந்துகொள்ளவேண்டியதாகவாகிலும் இருந்தால் அவன் குறைந்தது எழுபதினாயிரம் குறிகளாகிய லிபிகளை வாசித்தறிந்துகொள்ள வேண்டிவரும். சைனாதேசத்துப் பாஷையைக் கற்கத் தலைப்படுகிறவர்கள் சற்றேறக்குறையத் தங்கள் வாழ்நாள் முழுவதும் அது விஷயமாய்ப் பிரயாசைப்பட வேண்டியவர்களாயிருக்கிறார்கள். பாஷையைக்கற்றுக்கொள்வதற்கே இவ்வளவு கஷ்டமும் காலவிரயமும் இருக்குமானால் அதைக்கொண்டு எந்த சாஸ்திர உண்மையை அறிதல் சாத்தியமாகும் ? இப்போது ஆங்கிலேயர் உபயோகித்துவரும் 1, 2, 3, 4 முதலிய இலக்கங்களெல்லாம் ஆதி-

யில் அரேபியா தேசத்தவர்கள் சங்கேதச் சின்னங்களாக வழங்கினவைகள்.

மேற்கண்ட முகாந்தரங்களெல்லாம் கருத்தைச் சரியாய் வெளியிடுவதற்கு உதவியற்றனவாயும், பெருத்த சங்கடங்களையும் இரண்டு அல்லது பல அர்த்தங்களையும் கொடுத்துக்கொண்டும் வந்தபடியால், எந்தெந்தப் பொருள்களுக்கு என்னென்ன வார்த்தைகளை உபயோகித்துக்கொண்டுவந்தார்களோ அந்த வார்த்தைகள் அமைவதற்கு அத்தியாவசியமாய் வேண்டிய அசைகளை உண்டாக்குவது யுக்தம் என்று சில புத்திமான்கள் அபிப்பிராயப்பட்டார்கள். ஏற்கெனவே அவர்கள் அசைகள் ஒலிப்பதற்கான சில சின்னங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். அட்சரவரிசையான நெடுங் கணக்கு ஏற்படாததற்கு முன்னர் அசை வரிசையான நெடுங்கணக்கு உண்டாகி உலகத்தில் வழங்கிவந்தது. அவர்களைவிடச் சில புத்திமான்கள் பிற்காலத்தில் தோன்றி, அசைகள் இயங்குவதற்கு இன்றியமையாதனவாகிய எழுத்துக்களை உண்டாக்கித், தத்தம் பாஷையை வசனிக்கும் தேசத்தவர்களுடைய சப்த பேதங்களைப் பாகுபடுத்தி அவற்றிற்கு ஏற்க அவ்வெழுத்துக்களை உயிரெழுத்துக்களாகவும் மெய்யெழுத்துக்களாகவும் உயிர் மெய்யெழுத்துக்களாகவும் சார்பெழுத்துக்களாகவும் வரையறுத்தார்கள். இந்த உபாயத்தினால் ஜனங்கள் இப்போது எழுத்துக்களை மாத்திரம் வாசித்துக்கொண்டு, பிறகு சுலபமாய் அசைகளையும் சொற்களையும் உணர்ந்து, தங்களுடைய எவ்வகைப்பட்ட அருமையான கருத்தையும் வெகு நன்றாய் எழுதக்கூடியவர்களானார்கள்.

இதுவரையிலும் சொல்லிக்கொண்டு வந்த விஷயங்கள் யாவும் உலகத்திலுள்ள இங்கிலாந்து, ஜெர்மெனி, இட்டெலி முதலிய தேசங்கள் யாவற்றிற்கும் பொதுவாய்ச் சம்பந்தப்படத்தக்கதாக இருக்கினும், இந்தியா தேசத்தின் பூர்வீக சரித்திரத்தையும் பார்க்குமிடத்து வேறுவிதமான விருத்தாந்தத்தைச் சொல்லவேண்டியதாயிருக்கிறது. ஜகதீசன் ஆன்மவர்க்கங்களுக்குத் தனு கரண புவன போகங்களைக் கொடுப்பிக்கும்பொருட்டு மானிடர் முதலிய ஜீவராசிகளாக உருவெடுக்கும்படி ஆக்ஞாபித்துத் தமது திருக்கரத்திலிருந்த தமருகத்தை அசைத்தனரென்றும், அப்போது அதிலிருந்து அகார உகார மகாரங்கள் என்னும் மூன்று அட்சரங்களின் சமூகமான ஓம் என்னும் பிரணவநாதம் உதித்ததென்றும், அதிலிருந்தும் சமஸ்கிருத பாஷையை உண்டாக்கினரென்றும், அதைப் பாணினி என்னும் தவமுனிக்கு உபதேசித்தருளினரென்றும், அந்த மூன்று அட்சரங்களைக்கொண்டே தமிழ்ப்பாஷையை உண்டாக்கி அகத்தியமுனிவருக்கு உபதேசித்தருளினரென்றும் சில தமிழ்ப்புலவர்கள் கூறுநிற்பர். இக்கருத்தை யமைத்தே தமிழ்க்கடலைக் கரைகண் டுணர்ந்த சிவ ஞானமுனிவரென்பவர்.

'வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியையுலகமெலாந் தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப்பாகர்.'

என்று கூறியுளார்.

3418.

அறிவிப்பு

இப் பத்தொன்பதாம் சம்புடத்திலுள்ள விஷயங்கள் சுமார் 24 பாரங்கள் ஆகின்றமையால். இச்சம்புடத்தை இரண்டாகப் பிரிக்க எண்ணி இதுவரையில் முதற் பாகமாக முடிக்கின்றோம்.

இரண்டாம் பாகம் இதைத் தொடர்ந்து விரைவில் வெளிவரும்.

3418.

PRINTED AT THE INDIA PRINTING WORKS, MADRAS—1922.